வெளியீடு 30-11-2005 Issued 30-11-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, செப்டம்பர் 26, 2005—தொகுதி 85—எண் 1

**Monday, the 26th September, 2005—Volume 85—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
·islative Assembly Secretariat, Chennai - 600 009

V211, 31 P05
P05. 85. 1.

[Price Rs. 3.00

559
21-2-06

C

**26–9–2006**

**உள்ளடக்கம்**

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii-vii

Governor and Council of Ministers ix-xii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xiii-xv

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xvii-xxvii

1. **வினாக்கள்–விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 1-35

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 7 மற்றும் 8) 36-172

2. **தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 172

3. **கவன ஈர்ப்பு—**

திருப்புவனம் பேருந்து நிலையம்--போக்குவரத்து நெரிசலால் நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள நிலை 173-176

4. **ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை** 176-177

5. **அறிக்கைகள் அளித்தல்—**

மனுக்கள் குழு 177

| | பக்கங்கள் |
|---|---|
| **6. அறிவிப்பு—** | |
| கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, மொழிதல் (ஆ.செ.) | 178 |
| **7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—** | 178-271 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 178,195,197, 198,200-204, 207-209,211-213,226,252 |
| டாக்டர் க. பொன்முடி | 198-199, 201-205, 208-209, 211-213, 226,228 |
| திரு. லா. சந்தானம் | 229-232, 243-250 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 252-256, 260-264, 269-271 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 271-272 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் :**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185242
சென்னை-600 008



10. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

V2M,3'P05
POS.85.1

17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

19. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

21. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

22. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works; Prohibition & Excise and Revenue** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. | **Minister for Finance** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. | **Minister for Law and Information Technology** | .. **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. | **Minister for Food and Co-operation** | .. **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non- conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

20. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Labour** .. **The Hon. Thiru P. Annavi:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

24. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள்#

*திரு. ப. இராஜரெத்தினம்*

*திரு. அ. அன்வர் ராஜா*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*முனைவர் செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

# 22-9-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (பொறுப்பு) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. | .. சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்.சி.,பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. ரேவதி, எம்.ஏ. | .. செயலாளரின் தனிச் செயலர் (சார்புச் செயலாளர் நிலை) |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |

19. ஆண்டிவேல், திரு. ப. - வேடசந்தூர்
20. ஆறுமுகம், திரு. கே. - செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
50. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
51. கணேசன், திரு. வி. - மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
71. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
89. சாமி, திரு. ஆர். .. மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்



91. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
102. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
103. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
104. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
105. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
106. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
107. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
108. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
109. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
110. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
111. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
112. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
113. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
114. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
117. தமிழரசன், முனைவர் செ.கு. - நன்னிலம் (செ.வ.)
118. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
119. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
120. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
121. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
122. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
123. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
124. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
125. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
126. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. பேராவூரணி
127. துரைமுருகன், திரு. - காட்பாடி
128. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
129. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
130. நடராசன், திரு. வது. - இளையான்குடி
131. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
132. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
133. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
134. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
135. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
136. நளினி மனோகரன், திருமதி - போளூர்
137. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
138. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு



139. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
140. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
141. பச்சைமால், திரு. கே.டி. - குளச்சல்
142. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
143. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
144. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
145. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
146. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
147. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
148. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
150. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
151. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
152. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
153. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
154. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
157. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
158. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
159. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
160. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி

161. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
162. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
163. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
164. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
165. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
166. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
167. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
168. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
169. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
170. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
171. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
172. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
173. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
178. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
179. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
180. மில்லர், திரு. அ. .. கூடலூர்
181. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
182. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
183. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
184. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்



185. மைதிலி, திருமதி தி. .. காஞ்சிபுரம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
204. ரோகிணி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
205. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். .. வாணியம்பாடி

| | | |
|---|---|---|
| 208. | வளர்மதி, திருமதி பா. | - ஆலந்தூர் |
| 209. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | - மதுரை மேற்கு |
| 210. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 211. | வாசுதேவன், திரு. பெ. | - மதுராந்தகம் |
| 212. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 213. | வில்வநாதன், திரு. இரா. | - சோளிங்கர் |
| 214. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - பூங்கா நகர் |
| 215. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 216. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - புதுக்கோட்டை |
| 217. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | - பனமரத்துப்பட்டி |
| 218. | வீரபாண்டியன், திரு. ஜெக. | - மயிலாடுதுறை |
| 219. | வெங்கடாசலம், திரு. அ. | - ஆலங்குடி |
| 220. | வெங்கடாஜலம், திரு. செ. | - சேலம்-1 |
| 221. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 222. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 223. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 224. | வேல் முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 225. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | - தாம்பரம் |
| 226. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 227. | ஜீவானந்தம், திரு. இரா. | - நாகப்பட்டினம் |
| 228. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | - ஆரணி |
| 229. | ஜெயக்குமார், திரு. கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 230. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |



| | | |
|---|---|---|
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | - மதுரை மத்தி |
| 234. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - திருவட்டாறு |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | - (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புரட்டாசி 10, பார்த்திப – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 செப்டம்பர் 26, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"

விடா முயற்சியும், நிறைந்த அறிவும் என்ற இரண்டினையும் கொண்டு ஓய்வில்லாமல் ஒருவர் செய்கின்ற செயலால் அவரது குடியானது உயர்வடையும்.

### 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண்கள் 41 மற்றும் 42, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 43, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**43—**

**நீதிமன்றம்**

***19435—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

*(அ) சங்கராபுரத்தில் ஒரு நீதிமன்றம் நடப்பாண்டில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 44, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**44—**

**மென்பொருள் பூங்கா**

***71510—திரு. கு. பிச்சாண்டி:***

*மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை நகரில் மென்பொருள் பூங்கா தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகம் தகவல் தொழில்நுட்பப் புரட்சியிலே இந்தியாவிலே முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே சென்னையிலே மட்டும் அதனுடைய வளர்ச்சி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு நகரங்களிலே வளர்ச்சி வருகின்ற வகையிலே இதுபோன்ற மென்பொருள் பூங்காக்களை, திருவண்ணாமலை போன்ற நகரங்களிலேயும் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 26]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மிகப் பெரிய உண்மையை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தகவல் தொழில்நுட்பவியல் துறையைப் பொறுத்தவரையிலே சென்னை ஒரு மிக அபார வளர்ச்சி பெற்றிருக்கின்ற அந்தத் தன்மையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு முதலிலே அவருக்கு என்னுடைய நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை என்று சொல்லும்போது, Chennai is the destination of choice. 5 ஆண்டுகளுக்கு முன்பாக என்ன நிலைமை என்று சொல்லும்போது, ஒன்றுமே இல்லாத ஒரு சூழ்நிலையில், இன்றைக்கு ஏறக்குறைய ஒரு mark-ஐ, 90, 98 சதவீதம் அளவிற்கு மதிப்பெண்களை சென்னை அடைந்திருக்கிறது என்று சொல்லும்போது, நிச்சயமாக இன்னும் சில ஆண்டுகளில் 100 சதவீதம் அளவிற்கு software, hardware—மென்பொருள், வன்பொருள்—போன்றவற்றில் நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற சென்னை ஒரு மிக அபார வளர்ச்சி பெறும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. Technology என்பது inevitable என்று சொல்வார்கள். வளர்ந்து வருகின்ற விஞ்ஞானச் சூழ்நிலையில், விஞ்ஞானம் வேகமாக வளர்ந்து, மூலைமுடுக்குகளில் எல்லாம், கிராமங்களில் எல்லாம் நிச்சயமாகப் பரவும் என்பது எல்லோருடைய கருத்து. எனவே, சென்னையைக் கவனிக்கின்ற அதே சூழ்நிலையில், மற்ற பெருமாநகரங்களையும்கூட கவனித்து அதற்கு வேண்டிய முன்னுரிமையெல்லாம் கொடுக்கப்பட்டு, Tier-II cities-அடுக்குகளாக—இரண்டாம் அடுக்கு நிலைகளாக, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி போன்ற மாநகரங்கள் எல்லாம்கூட உருவாக்கப்பட வேண்டும்; கோயம்புத்தூர் போன்றவையெல்லாம்கூட உருவாக்கப்பட வேண்டும் என்ற ஒரு முனைப்போடு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவின் பேரிலே இன்றைக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, இவை வளர்ச்சி பெற்ற பிறகுதான், மூன்றாம் நிலை நகரங்களாக இருக்கின்ற திருவண்ணாமலை மற்றும் பல்வேறு தாலுகாக்களில் எல்லாம், வரும் காலத்தில் மென்பொருள்—software parks நிச்சயமாக உருவாக்குகின்ற ஒரு நிலைமை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞருடைய 1996 ஆம் ஆண்டு ஆட்சிக்குப் பிறகுதான் மென்பொருள் துறையிலே மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டு,

அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு வளர்ச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. அதிலேயும் குறிப்பாக, இன்றைக்கு சென்னையிலே 10 இலட்சம் சதுர அடி பரப்பளவு இடத்தில் மென்பொருள் பூங்காக்களை உருவாக்குவதைவிட, மதுரை, கோயம்புத்தூர், போன்ற பல்வேறு நகரங்களிலே—சென்னை போன்ற இடங்களிலே மட்டும் கவனத்தைச் செலுத்தாமல்—பல நகரங்களின் வளர்ச்சிக்கும், அங்கே இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற வகையிலேயும், பல அடிப்படை வசதிகளை வழங்கக்கூடிய வகையிலேயும், சென்னையிலே நெருக்கடி மிகுந்து, எப்படி பெங்களூரை விட்டுப் பல்வேறு நிறுவனங்கள் சென்னையை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனவோ, அப்படி நெருக்கடி இல்லாமல் இருக்கின்ற வகையில் இந்த நிலையைப் பல்வேறு நகரங்களிலே உருவாக்கினால், இன்றைக்குத் தகவல் தொழில்நுட்பத்தில் மத்திய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள்மூலம் எல்லா இடங்களிலும் optic fibre பொருத்தப்பட்டு, சிறப்பாக எல்லா நிலைகளிலேயும் signal கிடைக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், எல்லா நகரங்களிலும் அவை வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நடந்த நிகழ்வுகளை இங்கே குறிப்பிட்டார்கள், சாதனை என்றுகூடச் சொல்லமாட்டேன், நிகழ்வுகள். ஆனால் இந்தியாவிலேயே முதன்முதலாக மென்பொருள் பூங்கா என்ற ஒன்று அமைக்கப்பட்டது என்று சொன்னால் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்து, உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவினுடைய முதல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்று சொன்னால், ELNET City—ELNET Cityதான் உருவாக்கப்பட்டது. அதன் பிறகுதான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 5 ஆண்டு காலத்திலே எந்த ஒரு வளர்ச்சியும் இல்லாத சூழ்நிலையில், 2000–2001 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே மொத்தம் 3,115 கோடி ரூபாய் அதற்கு முன்பாக இருந்த ஒரு சூழ்நிலையில், 2001–2002 ஆம் ஆண்டில், அதாவது 52.23 சதவிகிதம் உயர்வு பெற்று, 2002–2003 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், 63.15 சதவிகிதம் உயர்வு பெற்று, 2003–2004 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையிலே, 76.21 சதவிகிதம் உயர்வு பெற்று, 2004–2005 ஆம் ஆண்டு 10,730 கோடி ரூபாய், அதாவது, 107.30 சதவிகிதம்





இன்றைக்கு உயர்வு ஆன நிலையில் இருக்கிறது என்றால், நம்முடைய அம்மாவினுடைய தெளிவான கொள்கையின் காரணமாக, அம்மாவினுடைய நடவடிக்கையின் காரணமாக இந்த ஓர் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, number of units—நிறுவனங்கள் என்று சொல்லும்போது, 2000 ஆம் ஆண்டுக்கு முன்பாக 700-க்குக் குறைவான நிறுவனங்கள், 2001–2002–ல் 865 நிறுவனங்கள், 2002–2003–ல் 936 நிறுவனங்கள், 2003–2004–ல் 866 நிறுவனங்கள்; 2004–2005 ஆம் ஆண்டில் 1,266 நிறுவனங்கள் மென்பொருள் ஏற்றுமதி செய்கின்றதென்றால் நல்லதொரு திடமான அரசு, முழுமையான அளவுக்கு அம்மா அவர்கள் அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தியதன் காரணமாக, இன்றைக்கு பெங்களூர் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கின்ற, உலகத்தில் இருக்கின்ற அத்தனை top ten companies-ம் சென்னையை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. எனவே, இந்தியாவிலேயே இன்றைக்கு தலைசிறந்த ஒரு மாநிலம் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம். சமீபத்தில்கூட டெல்லியிலே Secretary ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். இந்தியாவிலே மிக வேகமாக வளர்ச்சி பெறுகின்ற நகரமென்று சொன்னால், தகவல் தொழில்நுட்பத்திலே, அது சென்னைதான் என்று, தமிழ்நாடுதான் என்று ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இது பெரிய அளவுக்கு வளர்ச்சியுறும்; நிச்சயமாக மூலைமுடுக்குகள் எல்லாம் அம்மாவினுடைய கொள்கையின் காரணமாக நல்லதொரு வலுப்பெறும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மென்பொருள் மூலமாக, சென்னையைப் பொறுத்தளவுக்கு பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். பொதுவாக மென்பொருள் தயாரிக்கப்பட வேண்டுமென்றால் Engineers தேவைப்படுகிறார்கள். Engineer-களைப் பொறுத்தளவுக்கு, தமிழ்நாட்டிலே பரவலாகப் பல்வேறு கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் பொறியாளர்களை உருவாக்குகிறார்கள். Affiliated body என்று சொல்லப்படுகிற அண்ணா பல்கலைக்கழகத்திலேகூட அந்த Engineer-களை உருவாக்குவதற்குப் பல்வேறு பகுதிகளாக, zone வாரியாக பிரித்திருக்கிறார்கள். 1 ஆம் zone, 2 ஆம் zone என்று பிரித்து இருக்கிறார்கள். சென்னையைச் சுற்றியிருக்கிற 2 zones போக

எஞ்சியிருக்கிற zones எல்லாம் வெளிப் பகுதிகளிலேதான் இருக்கின்றன. எனவே, மென்பொருள் உற்பத்தி பண்ணுவதற்குத் தலையானவர்கள் பொறியாளர்கள். அந்தப் பொறியாளர்களைத் தமிழகம் முழுவதும் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே, சென்னையிலேயே தொடர்ந்து மென்பொருள் உற்பத்திக்கு Software Centre உருவாக்குவதன்மூலமாக, சென்னையிலே போக்குவரத்து நெரிசல்கள், அதேபோன்று மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருக்கிற இடங்களில் உற்பத்தி செய்கின்ற பல்வேறு இடர்பாடுகள், road வசதிகள், light வசதிகள், இப்படி எல்லாம் நெருக்கடிகள் சென்னையைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. Software உற்பத்தி செய்வதற்கு Engineers தேவைப்படுகிறார்கள், கட்டடங்கள் தேவைப்படுகின்றன, சுற்றுப்புறச்சூழல் தேவைப்படுகிறது. இவற்றை எல்லாம் மாவட்டத் தலைநகரங்களிலே, வெளியிலே இருக்கின்ற மாநகராட்சிகளிலே செய்து தரமுடியும். இன்றைக்கு மென்பொருள் மூலமாகத்தான் இந்தியாவுக்கு அதிகமான வருமானம் வந்து கொண்டிருக்கிறது என்று ஒரு கணக்கீடு இருக்கிறது. ஏனென்றால், வெளிநாட்டுப் பணம் இங்கே வந்து, இந்தியாவினுடைய பொருளாதாரத்தை அதிகம் மேம்படுத்துவதற்கும், சுற்றுப்புறச் சூழ்நிலைகள் சிறப்பாக வெளிப் பகுதிகளிலே இருக்கின்ற காரணத்தினாலும், மென்பொருளை உருவாக்குகிற Engineers எல்லாம் சென்னையைவிட வெளிப் பகுதிகளிலே அதிகமாக இருக்கிற காரணத்தினாலும், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருவண்ணாமலை போன்ற மாவட்டத் தலைநகரங்களாக இருக்கின்ற பகுதிகள் எல்லாம் Engineer-களை அதிகமாக உற்பத்தி செய்கின்ற காரணத்தால், அரசாங்கம் அதற்கு முன்னுரிமை கொடுத்து—ஏனென்றால், இதை நான் ஆளுங்கட்சியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். ஏனென்றால், rural பகுதியிலேயிருந்தும் பல சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கின்றார்கள். எனவே, மென்பொருளை உற்பத்தி செய்கிற Engineer-கள், சென்னையைவிட அதிகமாக வெளியிலே இருக்கிற காரணத்தினால், அதுபோன்ற தலைநகரங்களுக்கு இந்த அரசாங்கம் முன்னுரிமை அளித்து—மென்பொருள் பூங்காக்கள்— Software Parks-ஐ உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்குமா, அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளுமா, அல்லது சிந்திக்குமா, அல்லது பரிசீலிக்குமா என்று அமைச்சர்மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கேள்வியையே என்னால் புரிந்துகொள்ள



முடியவில்லை. *(சிரிப்பு)* Engineering Colleges இப்போது அதிகமான அளவிற்கு இருக்கிறது என்று அவர் சொல்கின்றாரா? அல்லது, வெளியே இருக்கின்ற Engineer–களை எல்லாம் இங்கே கொண்டு வரவேண்டும் என்று சொல்கின்றாரா என்று தெரியவில்லை. தயவுசெய்து கேள்வியைத் தெளிவாகச் சொல்லவும்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன்.

**திரு. எ.வ. வேலு:** இல்லை, நானே சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள், திரு. வேலு. உங்களுக்காகப் பொழிப்புரையை நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடு)* உட்காருங்கள், வேலு. அதாவது, அந்தப் பொறியாளர்கள், மென்பொருள் தொடர்பான பொறியாளர்கள் மற்ற இடங்களிலேயுள்ள கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் பயிலுகின்ற காரணத்தால், அவர்களைப் பயன்படுத்தக்கூடிய வகையில் ஆங்காங்கே ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்கிறார்.

**திரு. எ.வ. வேலு:** அது மட்டுமல்ல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் college-லே படிக்கின்ற ஆட்களுக்கு ஏதாவது இங்கே வேலை கொடுப்பீர்களா என்று கேட்கிறார்.

**திரு. எ.வ. வேலு:** இல்லை. அது கிடையாது. இதிலே சுயநலம் எல்லாம் ஒன்றும் இல்லை. *(குறுக்கீடு)* அதைத்தான் நானும் சொன்னேன். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சேர்த்துத்தான் நான் சொன்னேன். அண்ணா பல்கலைக்கழகம், affiliated body–லே இருக்கிற Engineering கல்லூரிகள், அரசாங்கக் கல்லூரிகள், அரசாங்க உதவி பெறும் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் இவையெல்லாம் சென்னையைவிட வெளிப் பகுதிகளிலேதான் அதிகமாக இருக்கின்றன. மென்பொருளை உற்பத்தி செய்வதற்கு Engineer-கள் தேவைப்படுகிறார்கள். அந்த Engineer–கள் எல்லாம் சென்னையைவிட வெளிப் பகுதிகளிலே அதிகமாக இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

[2005 செப்டம்பர் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், உட்காருங்கள். அவர் சொல்லி முடிக்கட்டும். திரு. வேலு, சொல்லி முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** அதோடு மட்டுமல்ல. சென்னையிலே வந்து உற்பத்தி பண்ணும்போது, இங்கே road வசதி, light வசதி மற்றும் pollution control, இவை எல்லாவற்றுக்கும் அதிகத் தேவை ஏற்பட்டு, ஜன நெரிசல் ஏற்பட்டு—ஜனங்கள் எல்லாம் சென்னையையே நோக்கி வந்துகொண்டிருந்தால் எப்படி சென்னையில் சமாளிக்க முடியும்? எனவே, அரசாங்கம் முன்னுரிமை அளித்து, மாவட்டத் தலைநகரங்களிலே கொடுப்பதன்மூலமாகப் பல்வேறு இடங்களிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள். அதைத்தான் நானும் சொன்னேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டினுடைய சிறப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய literacy rate என்று சொல்லும்போது, கல்வி கற்றவர்கள் நிலை 73.5 சதவீதம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே skilled, technical and manpower, அதிலே பார்த்தால் முதலிலே இருக்கின்ற ஒரு சூழ்நிலை. I.I.T.-ஐப்பொறுத்தவரையிலும் 282 Engineering Colleges, 210 Polytechnics, 600 Industrial Training Institutes, கிட்டத்தட்ட ஒவ்வோர் ஆண்டும் 79,800 பொறியாளர்கள் படித்து விட்டு வெளியே வருகின்றார்கள். 56,000 Diploma holders, அதாவது பட்டயப் படிப்பு முடித்தவர்கள் கல்லூரியை விட்டு வெளியே வருகின்றார்கள். Darwin ஒரு theory-ஐச் சொல்லியிருக்கின்றார்— 'Survival of the Fittest'—வலிமை உள்ளது வாழும். எனவே, உங்களுடைய கல்லூரியிலே அதுபோன்ற Computer—EEE-யோ அல்லது Computer Science, B.Tech., Information Technology-யோ அல்லது Electronics and Communication-னோ, அவற்றை நீங்கள் international அளவிற்கு, நல்லதொரு knowledge தருகின்ற அளவிற்குச் சொல்லிக் கொடுத்தால், நிச்சயமாக எந்த ஒரு மென்பொருள் நிறுவனமாக இருந்தாலும், உங்களுடைய கல்லூரிக்கே வந்து Campus Interview செய்து தாராளமாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால், நாம் top ten companies-இடம், இவருடைய கல்லூரிக்குச் சென்று நீங்கள் போய் எடுக்கவேண்டும் என்று யாருமே நிச்சயமாக நிர்ப்பந்திக்க முடியாது. எனவே, தகுதி, திறமையை வளர்த்துக்கொண்டால் அவர்களுக்கு வேலை என்பது நிச்சயமாக தானாகத் தேடி வருகின்ற ஒரு நிலைமை இருக்கிறது.



2005 செப்டம்பர் 26]

இப்போதுகூட மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக சிறுசேரி தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா பகுதியில் சுமார் 600 ஏக்கர் நிலமும், மகேந்திரா தொழில்நுட்பவியல் பூங்கா பகுதியில் சுமார் 250 ஏக்கர் நிலமும், அறிவுசார் தொழில் நகரியப் பகுதியில் 150 ஏக்கர் நிலமும், தகவல் தொழில்நுட்பவியல் வளாகங்கள் உருவாக்குவதற்காக மிகப் பெரிய தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நிலங்களில் தகவல் தொழில்நுட்பவியல் வளாகங்கள் கட்டி முடிக்கப்படுகின்ற ஒரு நிலையில், வருங்காலத்தில் ஒரு ஏக்கருக்கு சுமார் 200 நபர்கள் வீதம், சுமார் 2,06,000 நபர்கள் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் நேரடி வேலைவாய்ப்புகள் பெறுகின்ற ஒரு நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கின்றார்கள். எனவே, 2 இலட்சம் பேருக்கு வருங்காலத்திலே வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கின்றது. உங்களுடைய கல்லூரியிலே படிக்கின்ற, இதுபோன்ற course-கள் எடுக்கின்றவர்களுக்கு, நல்ல பாடங்களை, international standard அளவிற்கு நீங்கள் உயர்த்திக் கொடுத்தால் நிச்சயமாக மற்ற நிறுவனங்கள் எல்லாம் உங்களுடைய கல்லூரிக்கே வந்து recruit செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, ஒழுங்காகச் சொல்லிக் கொடுங்கள். திரு. எச்.எம். ராஜு. (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification. வாய்ப்புக் கொடுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடம் clarification கேட்கவேண்டும். ஒன்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு அருமையான...

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. எச்.எம். ராஜு:** மென்பொருள் பூங்கா. இந்தப் பொருளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதனுடைய முக்கியத்துவம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் தெரியும். முதன்மையாக ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த மென்பொருள் பூங்கா அமைப்பது மிகவும் அவசியம். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோத்தகிரி, குன்னூர், ஊட்டி, கூடலூர் போன்ற பகுதிகள் இயற்கையாகவே

[2005 செப்டம்பர் 26

natural A.C. என்று சொல்வார்கள்; அவ்வாறு அமைந்திருக்கின்றன; Artificial A.C. எங்களுக்குத் தேவையில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், அமைக்கும் செலவும் மிகக் குறைவான அளவில் ஆகும். ஆகவே, நீலகிரி மாவட்டத்திற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து, அங்கு இந்தப் பொருளையே படித்த மாணவர்கள் அதிக அளவிலே இருக்கிறார்கள். வேலைவாய்ப்பும் அதிகமாக இருக்கும். A.C.–ம் இருப்பதால்--natural A.C. என்று நாங்கள் அழைக்கிறோம்—செலவும் குறைவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து நீலகிரி மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, ஒரு மென்பொருள் பூங்கா அமைப்பதற்கு—எந்தெந்த நிலம் வேண்டுமோ, எவ்வளவு வேண்டுமானாலும் நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்—எங்கள் மாவட்டத்தில் ஒரு மையம் கண்டிப்பாக வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு நிராகரிக்கவில்லை. நான் ஏற்கெனவே சொன்ன பதிலில் உள்ளதுபோல, எல்லா மாவட்டங்களிலும் காலத்தினுடைய கட்டாயம், நிச்சயமாக மென்பொருள் ஏற்றுமதி செய்கின்ற நிறுவனங்கள் வந்தாக வேண்டும். இது காலத்தினுடைய கட்டளை. இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனவே, infrastructures—முதலில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இப்போது பெருவாரியான அளவிலே அம்மா அவர்களுடைய உத்தரவின் பேரிலே எல்லா மாவட்டங்களிலும் செய்து கொடுக்கப்படுகின்றன. எனவே, அவற்றையெல்லாம் முழுமையான அளவிற்கு நிறைவு செய்யும்போது—நிறுவனங்களை அரசே ஆரம்பிப்பது என்பது இப்போதெல்லாம் முடியாத காரியம். எனவே—தனியார்கள், top ten companies, அதேபோன்று கிட்டத்தட்ட நம்முடைய தமிழ்நாட்டை நோக்கி நிறைய நிறுவனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே, அவர்களிடத்திலே உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிச்சயமாக அரசு வைப்பதற்குத் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. அரசன்.



2005 செப்டம்பர் 26]

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வீட்டிலே நோஞ்சான் பிள்ளைகள் இருந்தால் அதற்கு போஷாக்கான உணவு கொடுத்து அதை வளர்ப்போம். அதைப்போல, புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். தமிழகத்திலே 5, 6 மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள் என்றால், அதிலே புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். ஆகவே, புதுக்கோட்டையில் மென்பொருள் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதேனும் உண்டா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு அவர்கள் குறிப்பிடும்போது, கோயம்புத்தூரிலே அதிக வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால், நீலகிரிக்கு விரைவிலே வாய்ப்பு வரும் என்ற ஒரு கருத்தைச் சொன்னேன், நீலகிரி மாவட்டத்திற்கு. புதுக்கோட்டையைப் பொறுத்தவரையிலே, ஆராய்ந்தறிந்துதான் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது மென்பொருளைப் பற்றி அதிகமாக இந்த அவையிலே கூறியிருக்கிறார்கள். முதலிலே இந்த அவை உறுப்பினர்களுக்கு, வன்பொருள் என்றால் என்ன, மென்பொருள் என்றால் என்ன என்ற விளக்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிக்க...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும்.

*(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை. ஒரு நிமிடம். கேள்வியைக் கேட்டுவிடுகிறேன், கேள்விக்கு வந்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் வேலூரிலே ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது, 5 ஏக்கர் நிலத்தை மாநில அரசு மத்திய அரசுக்குக் கொடுத்தால், I.T. Park–ஐ நாங்களே develop செய்து, நிச்சயமாக வேலூரிலே ஒரு பெரிய அளவிலே ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதற்கு, மத்திய அரசு தயார் என்று

[2005 செப்டம்பர் 26

அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் *5* ஏக்கர் நிலத்தை—தங்களுடைய துறையின்மூலமாக வருவாய்த் துறையைத் தொடர்புகொண்டு, வேலூரிலே ஐந்து ஏக்கர் புறம்போக்கு நிலத்தை இதற்குக் கொடுப்பதற்கு மாநில அரசு தயாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெறும் கையிலே முழம் போடக் கூடாது என்று சொல்வார்கள். உண்மையிலேயே அப்படி மத்திய அரசினுடைய உதவியைப் பெற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் நிச்சயமாக அதற்கு ஏற்பாடு செய்வாரேயானால், மாநில அரசு முழுமையான அளவிற்கு, *5* ஏக்கர் நிலம் அல்ல; *50* ஏக்கர் நிலம்கூட கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றது, வேண்டிய அளவிற்கு உதவி செய்யவும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கேள்வியையும் அவர்கள் இங்கே கேட்டார்கள், மென்பொருள், வன்பொருள் பற்றி. மென்பொருள் என்பது Software; வன்பொருள் என்பது Hardware. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, மென்பொருள் ஏற்றுமதியிலே *10,730* கோடி ரூபாய்—அதாவது, ஒரு கணினி இருக்கிறது என்றால், Computer. Computer என்பது, Input Process Output, I.P.O. என்று சொல்வார்கள். எனவே, வெறுமனே அது ஒரு இரத்தம் இல்லாத உடம்பு என்று சொல்லக்கூடிய அளவிற்கு, ஒரு உடம்பு என்று சொல்லலாம், கணினியை. எனவே, அதற்கு ஒரு உயிரோட்டம் தேவையென்றால், மென்பொருள் அவசியமாக இருக்கின்றது. எனவே, ஒவ்வொரு வகையான மென்பொருள் இருக்கின்றது. இப்போது நம்முடைய அம்மா அவர்களுடைய உத்தரவின் பேரிலே துபாய் சென்றபோதுகூட, ஒரு மென்பொருளை அங்கே உருவாக்கியிருக்கிறார்கள்; தொலைபேசியிலே—அங்கே terrorist activities-ஐ control செய்வதற்கு. எந்தவிதமான ஒரு தீவிரவாதச் செயலும், அந்த word-ஐச் சொன்னாலே போதும், automatic-ஆக control room-க்கு வந்து transfer ஆகிவிடும் அந்த phone. அந்த மாதிரி ஓர் அபூர்வ வகையான மென்பொருளைக் கண்டுபிடித்து அங்கே அது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த மென்பொருள், Software-ஐ Computer-ல் பயன்படுத்தினால் மட்டுமே, அது சம்பந்தமான வேலையை அது நிச்சயமாகச் செய்யும். அதிலேதான், இன்றைக்குக் கிட்டத்தட்ட *10,730* கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்த *10,730* கோடி ரூபாய்க்கு break-up என்னவென்று சொன்னால், Application Software, நீங்கள் கேட்டீர்களே அது 61 சதவிகிதம், System Software *12* சதவிகிதம்,



2005 செப்டம்பர் 26]

other I.T. software 10 சதவிகிதம். Business Process Outsourcing; Business Process Outsourcing என்றால், வெளிநாட்டிலே இருக்கின்றவர்கள், அங்கே அவர்களுக்குத் தேவையான வேலையை நம்முடைய நாட்டிலே, இங்கே செய்து, அவர்களுக்கு நம்முடைய Computer, Satellite மூலமாக அனுப்பி வைக்கப்படுவது Business Process Outsourcing. Product Development 3%, others 9%; இது மொத்தத்திலே *10,730* கோடி ரூபாய். Hardware என்று சொன்னால், நாம் வைத்திருக்கின்ற Computer, Laptop, Cell Phone, இவ்வெல்லாம் Hardware என்று சொல்லிக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *45*, திரு. லா. சந்தானம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**45—**

### திருக்கோயில் திருப்பணி

***20934—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், தனுஷ்கோடி செல்லும் வழியிலுள்ள கோதண்டராமசாமி கோயில் கட்டடத்தைச் செப்பனிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்:

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில் திருப்பணியை சுமார் *9* இலட்சத்து *70* ஆயிரம் ரூபாய் திருக்கோயில் திருப்பணி நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, டெண்டர் அங்கீகாரமும் வழங்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயிலின் பழுதடைந்த R.C.C. பிரகார மண்டபம் முழுவதும் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு, செங்கல் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டு, *80* சதவீதப் பணிகள் நிறைவுற்றுள்ளன என்பதைத் தங்கள்மூலம் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 26

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வினாவானது நீண்ட நாட்களுக்கு முன்னால் எழுப்பப்பட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் நல்லதொரு பதிலினைத் தெரிவித்திருக்கிறார்கள். இது மிகப் பழமையான கோயில். பல்வேறு சுற்றுலாப் பயணிகளும் வந்து பார்க்கின்ற அளவில் இருக்கின்ற அந்தத் திருக்கோயில் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினால், அதற்குத் திருப்பணி செய்ய வேண்டும் என்கின்ற கேள்வியை நான் எழுப்பியிருந்தேன். இப்போது அமைச்சர் அவர்கள் அதற்குண்டான ஆயத்தப் பணிகள் எல்லாம் நடந்து, 80 சதவிகிதம் முடிந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவாக முழுமையாக நிறைவு செய்து, அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளெல்லாம் கண்டு களிப்புறுகின்ற அளவிற்குச் செய்து தரவேண்டும் என்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொண்டு, இதைச் செய்தமைக்கு இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், தனுஷ்கோடி செல்லும் வழியில் அமைந்துள்ள அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலின் உப கோயில்களுள் ஒன்றாகும். இத்திருக்கோயில் உப கோயில் என்பதால், பிரதானத் திருக்கோயிலுடன் சேர்த்து ஒரு கணக்காகப் பேணப்படுகிறது. இத்திருக்கோயில் தனுஷ்கோடி செல்லும் சாலையில் 18 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் நான்கு புறமும் கடல் சூழ்ந்துள்ள இடத்தில் அமைந்துள்ளதால், தற்போது குறுக்குச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீராமபிரான் இலங்கையில் இராவணனை வதம் செய்து விட்டுத் திரும்பி வரும் வழியில் மேற்படி கோயிலில் விபீஷணருக்கு ஸ்ரீராமபிரானால் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை மாதத்தில் இத்திருக்கோயிலில் விபீஷணர் பட்டாபிஷேகம் நடைபெற்று வருகிறது. அதன்பின், இத்திருக்கோயில் உருவான வரலாற்றை நினைவுகூரும் வகையில் இராமலிங்க பிரதிஷ்டை உற்சவம் நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயில் திருப்பணிகளுக்காக 9 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பிரகார மண்டபம், மேல்தளத்தில் தட்டோடு பதித்தல், தடுப்புச் சுவர் கட்டுதல், விபீஷணர் மண்டபம் கட்டும் பணி போன்ற திருப்பணி வேலைகள் துவக்கப்பட்டு, 80 சதவீத வேலைகள் முடிந்துள்ளதாலும், மீதமுள்ள 20 சதவீதப் பணிகளும் மிகக் குறுகிய காலத்தில் முடிக்கப்பட்டு சம்ப்ரோக்ஷணம் மிக விரைவில் நடத்தப்பட



2005 செப்டம்பர் 26]

வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் உடனடியாக வேலைகளை முடித்து, திருப்பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள்மூலம் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலுள்ள அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் உலகப் பிரசித்தி பெற்றதாகும். அங்கே ஒவ்வொரு நாளும் தமிழகத்திலிருந்தும், பல்வேறு மாநிலங்களிலிருந்தும், இன்னும் வெளிநாடுகளிலிருந்தும்கூட பயணிகள், பக்தர்கள், ஏராளமாக வந்து செல்கிறார்கள். அந்தக் கோயிலில் இருக்கக்கூடிய பொற்றாமரைக் குளம் மிகவும் புகழ்பெற்ற குளமாகும். அங்கே தேங்கியிருக்கக்கூடிய நீர் இப்போது மிகவும் அசுத்தமடைந்து, துர்நாற்றம் வீசுகிற நிலையில் இருக்கிறது என்று பக்தர்களிடமிருந்து நிறையப் புகார்கள் வருகின்றன. பொற்றாமரைக் குளத்தில் இருக்கின்ற நீர் அசுத்தம் அடைந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதை அப்புறப்படுத்தி, மீண்டும் தூய நீர் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எங்களுக்கு எதுவும் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கான தகுந்த விடையளிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 46, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**46—**

**கோயில் சிற்பங்கள்**

***73161—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், உலகப் புகழ்பெற்ற தாரமங்கலம் ஈஸ்வரன் கோயில் சிற்பங்களைப் பாதுகாப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இத்திருக்கோயில் கருங்கற்களால் கட்டப்பட்டது. இத்திருக்கோயிலின் தூண்கள் மற்றும் மேல் விதானத்தில் கலைநயம் மிக்க சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கோயிலுக்கு வரும் பக்தர்கள் சிற்பங்களைத் தொடாமல் பார்க்க வேண்டுமென்று அறிவிப்பு வைக்கப்பட்டுள்ளது. தொடுவதற்கு ஏதுவாக இருக்கும் தூண்களில் உள்ள சிற்பங்களைப் பாதுகாப்பதற்கு அத்தூண்களைச் சுற்றித் தடுப்புக் கம்பி வலை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாரமங்கலத்தினுடைய சிற்பங்கள் உலக வரலாற்றில் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டான சிற்பங்கள். அந்தத் தாரமங்கலத்தினுடைய கோயிலினுடைய முழுப் பாகம் ஒரு தேர் வடிவாகவும், அந்தத் தேரை இழுத்துச் செல்ல யானைகளும், குதிரைகளும் கொண்ட, தமிழ் இலக்கியத்திலே வந்த ஓர் அற்புதமான கோயில். அந்தக் கோயிலினுடைய சிற்பங்களைப் பார்க்க, துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மனிதனுக்கும் ஆயிரம் கண்கள் தேவை. அவ்வளவு அற்புதமான சிற்பங்கள். அங்கு ரதியினுடைய சிலை வடிக்கப்பட்டிருக்கும். ரதியின் தலையிலே நாம் தலை வைத்துப் பார்த்தால் மன்மதன் மட்டும் தெரிவார். ஆனால் மன்மதன் இருக்குமிடத்திலே நாம் பார்த்தால் ரதி தெரியமாட்டார். அவ்வளவு அற்புதமான கலைநயம் மிக்க சிற்பங்கள். நம்முடைய சட்ட அமைச்சர் வேண்டுமென்றால், தயவுசெய்து அந்தக் கோயிலைப் பாருங்கள். ரதியினுடைய சிறிய இடையும், விரிந்து பரந்து அற்புதமாக இருக்கும் ஆபரணங்களும், நீண்ட கூந்தலும், கூந்தல் நுனியிலே குஞ்சமும், அந்த அழகைப் பார்க்க எத்தனை கண்கள் தேவை? அதுபோல, இராமாயணத்திலே வரக்கூடிய வாலி, சுக்ரீவனுடைய போர்க் கோலம் அங்கே வைக்கப்பட்டிருக்கும். அந்தப் போர்க் கோலத்திலே இராமர் தலையிலே வைத்துப் பார்த்தால், வாலியினுடைய உருவம்தான் தெரியும். சுக்ரீவனுடைய உருவம் தெரியாது. அதுபோல அவ்வளவு



அற்புதமான கோயில் சிற்பங்கள். இன்னும் பல்வேறு சிற்பங்கள் எல்லாம் அழிந்துவிட்டன. அதைப் பாதுகாப்பது இந்த அரசினுடைய கடமை. நம்முடைய இலக்கியத்திலே வரக்கூடிய அற்புதமான சிற்பங்கள் அங்கே செதுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சிற்பங்களைப் பாதுகாக்க இந்த அரசு எடுத்த முயற்சி போதுமானதாக என்னைப் போன்றவர்களால் உணர முடியவில்லை. ஆகவே, இன்னும் சிறப்பான முறையிலே, அமைச்சர் அவர்கள் ஒரு முறை அந்தக் கோயிலுக்கு வந்து, அந்தச் சிற்பங்களுடைய கலை நுணுக்கங்களையெல்லாம் பார்த்து, அதைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மன்மதன் இருக்கின்ற இடத்தில் நிச்சயமாக அங்கிருந்து ரதியைப் பார்த்தால் ரதி தெரியமாட்டார். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இத்திருக்கோயில் கருங்கற்களால் கட்டப்பட்டது. இத்திருக்கோயிலின் தூண்கள் மற்றும் மேல் விதானத்தில் கலைநயம் மிக்க சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தூண்களில் 41 சிற்பங்கள் மிகவும் கலைநயத்துடன் செதுக்கப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் இச்சிற்பங்களைக் காண ஆவலுடன் வருகை புரிகின்றனர். இத்திருக்கோயிலிலுள்ள சிற்பங்கள் சுத்தம் செய்யப்பட்டு, தற்சமயம் நல்ல நிலையில் உள்ளன. கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் சிற்பங்களைத் தொடாமல் பார்க்குமாறு அறிவிப்பு வைக்கப்பட்டுள்ளது. எனினும், திருக்கோயிலில் உள்ள தூண்களில் உள்ள கலைநயம் மிக்க சிற்பங்களை, கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகள் தொட்டு, சேதம் ஏற்படுத்திவிடாமல் இருப்பதற்கு இரும்பு வலையால், ஒவ்வொரு தூணைச் சுற்றியும் இரும்புக் கம்பி வலையால் தடுப்பு அமைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. மேற்படி கோயிலின் கருவறை முன்பாக குதிரைக்கால் மண்டபம் என்று அழைக்கப்படும் முன் மண்டபத்தில் ஆறு தூண்களில் தாங்கள் சொல்லிய அளவிற்குச் சிற்பங்கள் உள்ளன. இந்த ஆறு தூண்களைச் சுற்றியும் இரும்பு வலையால் தடுப்பு வலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 25–9–2005 அன்று மாலை வரை இரண்டு தூண்களில் இரும்பு வலை

பொருத்தப்பட்டு விட்டது. தொடர்ந்து மீதியுள்ள நான்கு தூண்களுக்கும் இரும்பு வலை பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. இன்று—26–9–2005, அனைத்துத் தூண்களுக்கும் இன்றோடு இரும்பு வலைகள் பொருத்தப்பட்டு முடிக்கப்பட்டுவிடும் என்பதை இம்மாமன்றத்திற்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–30*

அது மட்டுமல்ல. இந்த அழகிய ஆலயத்திலேதான், கடந்த 2001 ஆம் ஆண்டு, சேலம் மாவட்டம், தாரமங்கலம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில், தாங்கள் சொல்லியபடி, திடீரென்று தீ விபத்து ஏற்பட்டு, அந்தத் தேரெல்லாம் சேதம் அடைந்துவிட்டது. அதற்கு நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உடனடியாக 25 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி, உடனடியாக அந்தத் தேரைப் புதுப்பிக்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அந்த ஆணையின் அடிப்படையில், தேர் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்படி புதிய தேர் செய்யப்பட்டு, கடந்த 11–2–2005 அன்று தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. அச்சமயத்தில் கூடியிருந்த பக்தர்கள், திருக்கோயிலுக்குப் புதிய தேர் செய்து கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்ததோடு, செய்து கொடுக்கப்பட்ட அந்தத் தேரை மழை மற்றும் வெயிலிலேயிருந்து பாதுகாக்க, உடனடியாக ஒரு பாதுகாப்புக் கூடம் அமைத்துத்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதை மாண்புமிகு புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அதற்காகவும் 5 இலட்சம் ரூபாய் செலவில், பாதுகாப்புக் கூடாரம் அமைக்க ஆணையிட்டதன் அடிப்படையில், இப்போது கூடாரம் அமைப்பதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, கூடிய விரைவில் அந்தக் கூடாரம் அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தாங்கள் சொல்லியதைப்போல, 4 தடவை, அன்பிற்குரிய அண்ணன் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலேயும், இப்போது அமைச்சராக இருக்கின்ற காலத்திலேயும், அண்ணன் செம்மலை அவர்கள் இருந்த காலத்திலேயும், அவர்களால்தான் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. உடனடியாக நேரிலே சென்று, அதற்கு வேண்டிய வேலைகளையெல்லாம் செய்தோம். இப்போதும் நம்முடைய அமைச்சர் அவர்களோடு சென்று, அந்தப் பணிகளைப் பார்த்திருக்கிறோம். அந்த ஆலயத்தைப் பொறுத்தளவிற்கு, பாதுகாப்பதற்கு வேண்டிய அனைத்து



ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எரிந்து போன தேர் புதுப்பிக்கப்பட்டது பற்றி மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். நான் சொல்வது, அந்தக் கோபுரமே தேர் வடிவிலே அமைக்கப்பட்ட ஓர் அற்புதம். தமிழகத்தில் எங்குமே பார்க்க முடியாத ஓர் அற்புதமான கோயில் என்ற முறையிலே சொன்னேன். அதிலே அமைச்சர் அவர்கள் ஒன்றை விட்டுவிட்டார்கள். அங்கு ஒரு பாதாள லிங்கம் இருக்கிறது. சுரங்கப் பாதை வழியாக உள்ளே சென்றால், அங்கே பாதாள லிங்கம், பவளக் கற்களாலான பாதாள லிங்கம் உள்ளது. அந்தப் பாதாள லிங்கத்தைத் தரிசிப்பவர்கள், வாரத்தில் ஒரு நாள், செவ்வாய்க்கிழமை, பச்சைக் கற்பூரம் மற்றும் பன்னீரோடு அதற்கு அபிஷேகம் செய்தால், அவர்களுடைய குறை போவது மட்டுமல்ல, தடைப்பட்ட திருமணம் நடக்கும்; குழந்தை இல்லாதவர்களுக்குக் குழந்தை பாக்கியம் என்று, பக்தர்கள் மிகப் பெரிய அளவிலே நம்பி, மிக நீண்ட queue-விலே நின்று, ஒவ்வொரு வாரமும் மிகப் பிரமாதமாக, அந்த நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்கள். பல்வேறு காலகட்டங்களில் கோயிலினுடைய சிற்பங்கள், கொஞ்சங்கொஞ்சமாக அழிக்கப்படுகின்றன. மத்தியிலே இருக்கக்கூடிய சேர, சோழ, பாண்டியனுடைய சின்னங்களெல்லாம் இப்போது அழிந்துவிட்டன. அதைப் புதுப்பிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அனைத்துப் பணிகளும் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, அம்மா அவர்களுடைய அனுமதியோடு புதுப்பிக்கப்படும், பாதுகாக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம், கைலாசநாதர் கோயில் 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மிகப் பழைமை வாய்ந்த கோயிலாகும். அந்தக் கோயிலிலே அனைத்து தெய்வங்களும் நிறுவப்பட்டு, நாயன்மார்கள் உட்பட அனைத்து தெய்வங்களும் அந்தக் கோயிலில்தான் இருக்கின்றன. மேலும், அந்தக் கோயில் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பிலே இருக்கிறது.

அதேபோல, அந்தக் கோயிலிலே ஓர் அதிசயம் என்னவென்று சொன்னால், வருடத்திற்கு இரண்டு நாட்கள், மூன்று நாட்கள், சூரிய ஒளி அந்த லிங்கத்தின்மீது விழுகிறது என்பது யாருக்குமே தெரியாது. அந்த அளவிற்கு ஓர் அற்புதமான கோயிலாகும். மேலும், அந்தக் கோயிலைப் பராமரிப்பதற்கு இப்போது பணியாட்கள் இல்லை. E.O. கிடையாது. In-charge E.O. தான் இருக்கிறார். அங்கு வேறு Clerk–களும் கிடையாது. Temporary–ஆக ஒரு சிலரைத்தான் போட்டிருக்கிறார்கள். அங்கு permanent–ஆக இன்னும் ஆட்களைப் போட்டு, இரண்டு, மூன்று பேர்களை நியமிக்க வேண்டும். அமைச்சர் அவர்கள்கூட அங்கே வந்து, புதிய தேரைப் பார்வையிட்டு, வெள்ளோட்டம் விட்டார்கள். எனவே, அங்கே பணியாளர்களை இன்னும் நியமிக்க வேண்டும். அதேபோல, இன்னும் பல்வேறு சிற்பங்கள் மண்ணிலே புதைந்து கிடக்கின்றன. ஒவ்வொரு தூணும் கிட்டத்தட்ட 10 இலட்சம் ரூபாய் ஆகும். அந்த அளவிற்கு கலைச் சிறப்பு வாய்ந்த தூண்கள், கிட்டத்தட்ட 15 தூண்கள் நிலத்திலே மறையவிடப்பட்டிருக்கின்றன. எனவே, அவற்றையெல்லாம் எடுத்துப் பராமரிக்க அரசு முன்வருமா, அந்தக் கோயிலைப் பராமரிக்க இன்னும் அதிகப்படியான நிதியை ஒதுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அனைத்துக் கோரிக்கைகளுக்கும் இணங்க, மறைக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கல்தூண்களையெல்லாம் உடனடியாகத் தேடுவதற்கு, ஆராய்ச்சிகள்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்தில், அங்கே பணியாளர்கள் இல்லையென்று சொன்னார்கள். அந்த ஆலயத்திற்கு இப்போது அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அங்கே என்னென்ன பணிகள் வேண்டும் என்பதைச் சொன்னார்கள். செயல் அலுவலர் இல்லை என்று சொன்னார்கள். இப்போது செயல் அலுவலர் பற்றாக்குறையின் காரணமாக, இரண்டு சிறிய ஆலயங்கள், பெரிய ஆலயங்களையெல்லாம் ஒன்றாகப் பார்க்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, கூடிய விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலயத்திற்கும் தனியாக செயல் அலுவலர் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியில் எனது மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய ஆலயங்களில் எல்லாம் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் கண்டு ஒரு தெய்வீக மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், எனது தொகுதியிலுள்ள திருக்கோயில் இடத்தை, பேருந்து நிலையம் அமைக்க நான் கேட்டிருந்தேன். கடந்த நான்கு ஆண்டு காலமாக முடியாமல், தற்போது அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, இந்த அரசு எங்களுக்கு ஒதுக்கி இருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துகொண்டு, இந்தக் கோயில் சிற்பங்களைப் பாதுகாக்கின்ற நிலையிலே திருப்பணிகள் செய்கிறபோது, எண்ணெய்க் கறை படிந்த சிற்பங்கள் எல்லாம், machine மூலமாக—இயந்திரம் மூலமாக, மணல்மூலம் spray செய்து, அந்தக் கறையை அகற்றுகிறார்கள். கொஞ்சம் அழுத்தமாக spray செய்தால் சின்னச் சின்னக் கற்சிலைகளுக்கு, கண், மூக்கு போன்ற பகுதிகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகையால், கோயில் சிற்பங்களைச் சுத்தப்படுத்துகின்றபோது, அதற்கு இயந்திரங்களைப் பயன்படுத்துவது தொடரக் கூடாது என்பது என்னுடைய கருத்தாக இருக்கிறது. இதுதொடர்பான கருத்துகளை அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், மயிலாடுதுறையில் பேருந்து நிலையம் கட்டுவதற்காக அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தைக் கேட்டிருந்தார்கள். ஆனால் பல்வேறு காலகட்டங்களில் அதனைக் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்--மயிலாடுதுறையிலே இருக்கின்ற மக்களினுடைய நன்மையைக் கருதி, அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயத்தின் நிலத்தை, அங்கே இருக்கின்ற மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி நிர்ணயிக்கின்ற

[2005 செப்டம்பர் 26

விலைக்கு, அவர்கள், அந்த நகர்மன்றம் எடுத்துக்கொள்கின்ற காரணத்தினாலே, அந்த இடத்தைக் கொடுத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியுடன்தான் கொடுக்கப்பட்டது என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்டிருந்த ஏழையெளிய மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்காகக்கூட, நாகை மாவட்டம், சீர்காழி வட்டம், அருள்மிகு சட்டநாத சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு முல்லைவனநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம், அரசு நிர்ணயம் செய்த விலைக்கு, 24 ஏக்கர் 81 சென்ட் நிலத்தையும் வழங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் வடக்கு பொய்கைநல்லூர் நந்திகேசுவரர் கோயில் இடத்தை, 1 ஏக்கர் 98 சென்ட் நிலத்தையும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்குத் தர ஆணையிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அந்தணப்பேட்டை என்ற இடத்தில் அண்ணாமலைநாதர் சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 13 ஏக்கர் 67 சென்ட் நிலத்தை வழங்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். சில ஆலயங்களில், அங்கே அந்த ஆலயங்களுடைய சிற்பங்கள் எல்லாம் பழுதடைந்திருப்பதாகச் சொன்னார்கள். இப்போதுகூட, திருநாகேஸ்வரத்தில், கும்பகோணத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின் அடிப்படையில் 7 கோபுரங்கள், ஏறக்குறைய 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றிருக்கிறது என்பதையும் இங்கே பெருமையோடு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**47—**

## கைவினைப் பொருட்கள் உற்பத்தி மையம்

***20489—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

பெரணமல்லூர் தொகுதி, தேவியாபுரத்தில் கைவினைப் பொருட்கள் உற்பத்தி மையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிறு தொழில்களை வளர்க்க புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே செயல்படுத்தி, தமிழகத்தில் ஒவ்வொரு ஒன்றியங்களில் ஒரு கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலைகள் பல நிறுவி, தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, தமிழகத்திலே தொழில் வளம் பெற சாதனை படைத்த தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, உழவர் பாதுகாப்புத் திட்டத்தினைக் கொண்டு வந்து ஏழைகளின் வீடுகளில் ஒளியேற்றி வைத்துள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். கைவினைப் பொருட்கள் உற்பத்தி மையம் அமைத்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு மாற்றுத் தொழிலாக, சிலை, கல் சிற்பங்கள் செய்வதற்காக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் வழங்கும் புதியதோர் திட்டத்தினைக் கோரியிருந்தேன். 'இல்லை' என்ற பதில் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பு இல்லாமல் மிகுந்த அவதிப்பட்டிருக்கிறோம் என்பதைக் கருத்தில் கொண்டு, அந்த மக்களுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய இயலுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆசியோடு, பெரணமல்லூர் தொகுதியிலே தேவியாபுரத்தில், உற்பத்தி நிலையம் அமைப்பது தொடர்பாக, தமிழ்நாடு கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், பெரணமல்லூர் தொகுதியில் எத்தகைய கைவினைப் பொருட்களையும் உற்பத்தி செய்வதற்கான திறன் படைத்த கைவினைஞர்கள் அந்தப் பகுதியிலே வசிக்கவில்லை என்றும், அவர்கள் தொழில் மையம் ஏற்படுத்துவதற்கு முன்வரவில்லை என்றும் ஆய்விலே பதில் தெரிவிக்கப்பட்டது. எனவேதான், தேவியாபுரத்திலே புதிதாக உற்பத்தி நிலையம் அமைக்கும் திட்டம் இதுவரையில் செயல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள், இதுபோன்று கைவினைஞர்கள் அந்தப் பகுதியிலே

இருப்பதாகக் கண்டறியப்பட்டுத் தெரிவிப்பாரேயானால், அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவியாபுரம் அருகிலேயுள்ள முடையூர் பகுதியிலே பச்சைக் கற்கள் கிடைக்கின்றன. அவற்றை வைத்து, சிலை சிற்பங்கள் செய்யக்கூடிய பல கைவினைஞர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களை மையமாக வைத்து அந்தப் பகுதியிலே இருக்கிற அந்தத் தொழிலை வளர்ப்பதற்கு ஏதாவது வாய்ப்புள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**48—**

## சிறு தொழில்களுக்கான பயிற்சி

***28068—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் சுய உதவிக் குழுவிலுள்ள பெண்களுக்குச் சிறு தொழில்கள் துறைமூலம் அப்பளம், ஊறுகாய், ஊதுவத்தி, மெழுகுவர்த்தி தயாரிக்கும் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், தமிழக முதல்வர், தங்கத் தாரகை அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, ஐம்பதாண்டு கால வரலாற்றில், செஞ்சி மாநகரிலே, மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்காக ரூ. 50 இலட்சத்தை ஒதுக்கிக் குடிநீரைத் தந்து, குடிகாத்த புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களுக்கு, என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்து,



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, மகளிர் சுய உதவிக் குழுக்கள், அரசினுடைய உதவி பெற்றுத் தொழில் தொடங்கினாலும்கூட, இன்றையதினம் அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்வதிலே பெரும் கஷ்டம் இருக்கின்றது. ஏனென்றால், அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக, N.G.O. மூலமாக ஒரு மாதத்திற்குப் பயிற்சி அளித்தாலும்கூட, வளர்ந்து வருகின்ற இந்த வியாபார உலகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்வதிலே மிகுந்த சிரமம் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, ஊரக சிறு தொழில் துறையின்மூலமாக முறையான பயிற்சி அளித்து, அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்ற மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர், எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 5 இலட்சம் மகளிர் தொழில் முனைவோருக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்கிற உத்தரவை மேற்கொண்டு, அதன் அடிப்படையிலே, தொழில் வணிகத் துறையின் மூலமாக, வருடத்திற்கு இருபத்தையாயிரம் மகளிர் வீதம் என்று, ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் பேருக்கு இதுவரை தொழில் செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களே தொழில் தொடங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பயிற்சி என்பது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால்—சமூக நலத் துறையின் கீழே செயல்படுகின்ற மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற தொண்டு நிறுவனங்கள், பயிற்சி நிலையங்கள் மூலமாகத்தான் பயிற்சியளிக்கப்படும். அதுபோன்ற தொண்டு நிறுவனங்களின் மூலமாகப் பயிற்சி மேற்கொள்ள வேண்டுமென்று மகளிர் மேம்பாட்டுக் கழகத்தை அணுகினால், நிச்சயமாக பயிற்சி அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பளம், ஊறுகாய், ஊதுவத்தி, மெழுகுவர்த்தி போன்ற பொருட்களை உற்பத்தி செய்யத் தேவைப்படுகின்ற மூலப்பொருட்கள் மானிய விலையில் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2005 செப்டம்பர் 26

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கக்கூடிய மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு மானியத்திலேதான் கடன் வழங்கப்படுகிறது. அப்படிக் கடன் வழங்குகின்றபட்சத்திலே—அதுவே அவர்களுக்குச் செய்யக்கூடிய ஒரு உதவியாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின் பேரில்—சிறு தொழில் துறையின் மூலமாகத் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்படக்கூடிய அந்த மானியச் சலுகையை வைத்துக்கொண்டு, மூலப்பொருட்களைப் பெற்று அவர்கள் பொருட்களைத் தயார் செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே இல்லாத அளவில், மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ள மிகப் பெரிய பொறுப்புகள் வரை பெண்களை நியமனம் செய்து, அவர்களின் ஆற்றலை, திறமையை வெளிப்படுத்திய ஆற்றல் மிக்க ஒரே தலைவர் தங்கத் தாரகை அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வங்கி உயர் அதிகாரிகளையெல்லாம் நேரில் அழைத்துப் பேசி, மகளிர்க்குத் தாராளமாகக் கடன் கொடுக்கச் செய்து, அவர்கள் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தியவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அத்தகைய ஆற்றல் மிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மகளிரே முழுக்க, முழுக்கப் பயன்பெறும் வகையில், மகளிரைக் கொண்டு சிறிய அளவில் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே சுய உதவிக் குழுக்களை 1992-ல் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தருமபுரி மாவட்டத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) மைராடா என்கிற தொண்டு நிறுவனத்தின் மூலமாகத் தொடங்குவதற்கு அம்மா அவர்கள் போட்ட விதை, இன்றைக்கு ஆலமரம் போல வளர்ந்திருக்கிறது. மகளிர்களுக்குத் தொழிற்பூங்கா குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் இந்தக் கேள்வியைத்



2005 செப்டம்பர் 26]

தொடுத்திருக்கிறார். ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் 2 ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று உத்தரவு போட்டு, அதன் அடிப்படையிலே 5 மகளிர் தொழிற்பூங்காக்கள் SIDCO நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு, சென்னைக்கு அருகிலே திருமுல்லைவாயில், திருச்சி அருகே வாழவந்தான்கோட்டை, சேலம் அருகே கருப்பூர் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் முடிவு செய்யப்பட்டு ஒதுக்கீடுகள் நடைபெற்று வருகின்றன. மீதம் இருக்கிற மதுரை மாவட்டம் கப்பலூர், கோயம்புத்தூரிலே தொழிற்பூங்கா அமைவதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அப்பளம், ஊறுகாய் முதற்கொண்டு ஏராளமான பொருட்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் உற்பத்தி செய்த பொருட்களை விற்பதற்கான ஏற்பாடு என்பது இல்லை. ஆகவே, மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய இந்த மகளிர் குழுக்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை மாநில அரசே கொள்முதல் செய்து வெளி மாநிலங்களுக்கு அல்லது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விற்பனை செய்வதற்கு ஏதாவது அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து சரியாகக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த சுய உதவிக் குழுப் பெண்களுக்காக 2 ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே இதே அவையிலே, அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை விற்பனை செய்வதற்குப் பல வாய்ப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய வாரச் சந்தை, அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, ஒன்றாக ஒன்றிய அளவிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய சந்தைகள், எல்லாவற்றுக்கும் மேலாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திலேயே சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கென்று தனியாக stall வைத்துக்கொள்வதற்கு, அங்கே வரக்கூடிய மக்கள் அதை வாங்கிப் பயன் பெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, அதன்

[2005 செப்டம்பர் 26

அடிப்படையிலே எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயும் இதுபோன்ற விற்பனை மையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகரத்திலே இதே கோட்டை வளாகக் கட்டடத்திலேகூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட்டு, அங்கேயும் விற்பனை மையம் உருவாக்கப்பட்டிருக்கிறது. சென்னை மயிலாப்பூரிலே அன்னபூரணி என்கிற பெயரிலே விற்பனை மையம் உருவாக்கப்பட்டு, அங்கேயும் இதுபோன்ற விற்பனைப் பொருட்கள் சுய உதவிக் குழுப் பெண்களுக்கு மாநகரத்தின் மையப் பகுதியிலேயே, இதுபோன்ற வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கின்றன. அதை வாங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு உதவியாக நீங்களும் விழிப்புணர்ச்சி பிரச்சாரத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுவினைச் சார்ந்த பெண்களுக்கு அப்பளம், ஊறுகாய், ஊதுவத்தி, மெழுகுவர்த்தி ஆகியவற்றைத் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அடுப்படியில் இருந்த மகளிர் எல்லாம் இன்றைக்குப் பீடுநடை போட்டு, அதிரடிப் படைக்கு வந்திருக்கின்ற காலம் இது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர்களை மீண்டும் அப்பளம், ஊறுகாய் என அடுப்படியிலே அடைத்து வைக்கத் தேவையில்லை என நான் கருதுகிறேன். இது கணினி யுகம். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, காலத்திற்கு ஏற்ற கோலமாக...

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊதுவத்தி, மெழுகுவர்த்தி எல்லாம் இருக்கும்மா.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** பேரவைத் தலைவர் அவர்களே, இது கணினி யுகம். ஆகவே, காலத்திற்கு ஏற்ற கோலமாக இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த மகளிர்களுக்கு வன்பொருள், மென்பொருள் தயாரிப்பிலே, அவர்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களை அந்தத் துறையிலே ஈடுபடுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 செப்டம்பர் 26]

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்பொருள், மென்பொருள் என்பது, Engineering படித்திருக்கக்கூடிய பெண்கள், அவர்கள்தான் இந்தத் தொழிலில் உடனடியாக ஈடுபடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், முழுக்க முழுக்க சுய உதவிக் குழுக்கள் என்பது கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய பெண்கள், சொந்தக் காலிலேயே நிற்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணம், ஆசை. ஆகவே, அவர்கள் சுயமாகச் சம்பாதிக்க வேண்டும், ஆண்களைச் சார்ந்து இருக்கக் கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட குழுக்கள் அவை. அவர்கள் தயாரிக்கக்கூடிய பொருட்கள், இன்றைக்கு நம்முடைய மாநிலம் மட்டுமல்ல, வெளி மாநிலங்களுக்கு எல்லாம் செல்லக்கூடிய சூழ்நிலையிலே இருக்கின்றன. வேண்டுமானால், சுய உதவிக் குழுக்களிலே இடம் பெற்றிருக்கக்கூடிய பெண்கள், அவர்களுடைய குழந்தைகள், இதுபோன்ற Engineering படிப்பிலே முதல் நிலைக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்குமேயானால், மாண்புமிகு அம்மா அவர்கள் கருணையோடு அதை ஆய்வு செய்து முடிவெடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Engineering படிப்பு தேவை இல்லை; bolt, nut, screw —இதுபோன்ற சின்னச் சின்னப் பொருட்களை உருவாக்குவதற்கு உரிய பயிற்சியைப் பெண்களுக்குக் கொடுத்தால், நிச்சயமாக அவர்கள் அதைப் புரிந்துகொண்டு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் குறிப்பிட்டவாறு அத்தகைய பயிற்சி ஏற்கெனவே பெண்களுக்கு அளித்து வரப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு, ஒரு இலட்சம் பெண்களுக்கு, 5 ஆண்டுகளுக்கு 5 இலட்சம் பெண்களுக்கு இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்த இலக்கை எய்தி விட்டு, கூடுதலாக 1.25 இலட்சம் பெண்களுக்கு இந்த ஆண்டு. மேலும் இத்தகைய பயிற்சிகள் அளிக்கவுள்ளோம். அதே நேரத்தில், அப்பளம் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல் ஒன்றும் கேவலமான தொழில் அல்ல. எல்லோரும் அதைச் சாப்பிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற உணர்வோடு நாம் செயல்பட்டால், எந்தத் தொழிலும் மதிப்பிற்குரிய தொழில்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

[2005 செப்டம்பர் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **(மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தவறான ஒரு தகவலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 49, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. இ. புகழேந்தி:** தவறான தகவல் தருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கே இதைக் கேள்வி நேரத்தில் எழுப்பி, பதில் சொல்லி முடித்தாகிவிட்டது. (குறுக்கீடு) வினா எண் 49, திரு. வெங்கடாஜலம். (குறுக்கீடு) அன்றைக்கே சொல்லி, அன்றைக்கே அமைச்சர் எல்லாம் பதில் சொல்லி முடித்துவிட்டார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் அன்றைக்கே பதில் சொல்லி முடித்துவிட்டார்கள். (குறுக்கீடு)

வினா எண் 49, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**49—**

## இலவசப் பயிற்சி மையம்

***40887—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் I.A.S./I.P.S. பணித் தேர்வுகளில் பங்குபெற பெண்களுக்கான பிரத்தியேக இலவசப் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2005 செப்டம்பர் 26]

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் சிசுக் கொலையைத் தடுத்து தொட்டில் குழந்தைத் திட்டத்தை உருவாக்கியது அம்மா அவர்கள். பெண் குழந்தைகளைப் பாதுகாக்க பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கியது அம்மா அவர்கள். மகளிருடைய இன்னல்களைக் களைய மகளிர் காவல் நிலையங்களை உருவாக்கியது அம்மா அவர்கள். ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்களும் என்பதை நிரூபிக்க மகளிர் commando படைகளை உருவாக்கியது அம்மா அவர்கள். மாணவியர்கள் தொடர்ந்து கல்வி பயில இலவச சைக்கிள்களை வழங்கியது அம்மா அவர்கள். மகளிர் பொருளாதாரத்தில் உயர வேண்டும் என்று மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கியது அம்மா அவர்கள். ஆண்களுக்கு நிகரானவர்கள் பெண்களும் என்பதை நிரூபித்து, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக விளங்கும் அம்மா அவர்களே, பெண்கள், அரசின் உயர் பதவிகளான I.A.S. / I.P.S. போன்ற பட்டங்களைப் பெற பயிற்சி வகுப்பு கொடுத்தால், பெண்கள் மேலும் சிறப்படைவார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, எதிர்வரும் ஆண்டுகளில் பயிற்சி வகுப்பு நடத்த மையம் அமைக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி மற்றும் இதர அகில இந்தியப் பிரிவு-I (Class–I) பணிகளுக்கான முன்தேர்வு மையம் ஒன்று சென்னையில் 1966 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தில் ஆதி திராவிட மாணவ, மாணவியர் 98 பேர்களும், பழங்குடியின மாணவ, மாணவியர் 2 பேர்களும், ஆக மொத்தம் 100 பேர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மாணவர் சேர்க்கை, நுழைவுத் தேர்வு மற்றும் நேர்காணல்மூலம், மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது. அனைவருக்கும் தங்கும் இட வசதி இலவசமாக வழங்கப்படுகிறது. பயிற்சிக்காகும் செலவு 50 சதவிகிதம் வரை மைய அரசிடமிருந்து மானியமாகப் பெறப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் ஐம்பதாயிரத்து தொள்ளாயிரத்து இருபதுக்குள் இருந்தால் உணவும் இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போது இந்தப் பயிற்சி மையம் 2000 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும்

[2005 செப்டம்பர் 26

பிற்படுத்தப்பட்டோருக்கான பயிற்சி மையத்துடன் இணைக்கப்பட்டு, சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டு, செயல்பட்டு வருகிறது. எனவே, புதிய பயிற்சி மையம் ஆரம்பிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த பெண்கள் உயர் பதவிகளுக்கு வருவதற்காக, I.A.S., I.P.S. பதவிகளை, பட்டங்களைப் பெறுவதற்காகப் பயிற்சி மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களே மீண்டும் பரிசீலனை செய்ய ஆவன செயவார்களா என்பதை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்புதான் பெண்களுக்கு முதுகலைப் பட்ட மேற்படிப்பு வரை இலவசமாகக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலே எந்த மாநில அரசும் இதுபோன்ற திட்டத்தைக் கொண்டு வரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை அம்மா அவர்களுடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

**50—**

### மாணவர் விடுதி

***69644—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, புத்தனாம்பட்டி ஊராட்சி, நேரு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.



2005 செப்டம்பர் 26]

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி என் வினாவைத் தொடங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்களால் கிடப்பில் போடப்பட்டிருந்த புலிவலம் அரசு உயர்நிலைப் பள்ளியையும், திருபைஞ்ஞீலி அரசு உயர்நிலைப் பள்ளியையும் தரம் உயர்த்தி மேல்நிலைப் பள்ளியாக ஆக்கியமைக்கும், அந்தப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டட வசதியைச் செய்து தந்தமைக்கும், முசிறி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கும், முசிறி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கும் NABARD திட்டத்தின்மூலமாகக் கட்டட வசதியைச் செய்து தந்தமைக்கும், மண்ணச்சநல்லூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு அரசின் அனைத்துத் திட்டங்கள்மூலமாக 1 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட நிதியை ஒதுக்கீடு செய்து, 1 கோடி ரூபாய்க்குக் கட்டட வசதியைச் செய்து தந்து, அந்தப் பள்ளியானது அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியா அல்லது ஒரு கல்லூரியா என்று வியக்கத்தக்கவகையில் பெரிய கட்டடத்தை ஏற்பாடு செய்து தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், அந்தப் பள்ளி 10 ஆம் வகுப்பில் 100 சதவிகிதமும், 12 ஆம் வகுப்பில் 98 சதவிகிதமும் தேர்ச்சி பெற்று, திருச்சி மாவட்டத்திலேயே ஒரு சிறப்பான பள்ளியாக இன்று திகழ்ந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணம் என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, முசிறி ஒன்றியத்தில், புத்தனாம்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ளது நேரு மேல்நிலைப் பள்ளியாகும். இந்தப் பள்ளி 12-8-1947 ஆம் ஆண்டு தொடக்கப் பள்ளியாகத் தொடங்கப்பெற்று, பின்னர் உயர்நிலைப் பள்ளியாகி, 1978 ஆம் ஆண்டு மாண்புமிகு மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, இன்று வரை கல்விப் பணியில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளியில் தற்சமயம் மொத்தம் 734 மாணவச் செல்வங்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். ஆதி திராவிட வகுப்பைச்

[2005 செப்டம்பர் 26

சார்ந்த 112 மாணவர்களும், 78 மாணவிகளும் கல்வி பயின்று வருகின்றார்கள். புத்தனாம்பட்டியில் அமைந்துள்ள இம்மேல்நிலைப் பள்ளியைச் சுற்றியுள்ள எதுமலை, வெள்ளக்கல்லுப்பட்டி, அபினிமங்கலம், கோட்டாத்தூர், சாத்தனூர், நடுவலூர், தின்னனூர், ஓமாந்தூர் மற்றும் கரட்டாம்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட சுமார் 20–க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கக்கூடிய ஏழை, எளிய, அடித்தளத்தில், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த மாணவச் செல்வங்கள்... *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இக்கேள்விக்கான மாண்புமிகு அமைச்சரின் பதில் முடிகின்ற வரை பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகின்றது.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** தங்கி, கல்வி பயிலப் போதுமான விடுதி வசதி இல்லாமல், இம்மாணவர்களின் கல்வி நலன் பெரிதும் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பள்ளிக்குச் சொந்தமான விடுதிக் கட்டடம் தனியார்மூலம் இயங்கி வந்தது. அது சரிவர பராமரிக்கப்பட முடியாமல், அவ்விடுதி மூடப்பட்டது. ஆனால், அவ்விடுதிக் கட்டடம் தற்பொழுது பழுதுபார்த்து, பராமரிக்கக்கூடிய சூழ்நிலையில் உள்ளது. மேலும், அரசே இவ்விடுதி மாணவர்களின் நலன் கருதி இயக்குமேயானால், இப்பள்ளிக்குச் சொந்தமான விடுதிக் கட்டடம் கட்டத் தேவையான சுற்றியுள்ள இடத்தை, பள்ளித் தாளாளர் அரசுக்கே இலவசமாகக் கொடுக்கத் தயாராக இருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மல்லிகா, விடுதிக்குக் கட்டடம் வேண்டுமா? *(குறுக்கீடு)* விடுதிக்குக் கட்டடம் வேண்டும், அவ்வளவுதானே? *(குறுக்கீடு)* சரி.

**திருமதி மல்லிகா சின்னசாமி:** கல்வித் துறையின் கலங்கரை விளக்கமாகத் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கிராமப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த மாணவர்களின் கல்வி நலன் கருதி, புத்தனாம்பட்டியில் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிதாக ஆதி திராவிடர் மாணவர் விடுதி ஏற்படுத்த அரசு மீண்டும் பரிசிலனை செய்யுமா என்பதைத் தாங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



2005 செப்டம்பர் 26]

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நேரு மேல்நிலைப் பள்ளி மாணவர் விடுதி தொடங்குவதற்கு, மாணவர்களின் நலன் கருதி, தேவை ஏற்படின், கருத்துரு அரசுக்கு வரப்பெறுமாயின் அம்மா அவர்களின் அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மல்லிகா அவர்கள் கோரியவாறு, ஆதி திராவிடர் மாணவச் செல்வங்களுக்கான விடுதி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் நேரம் மகிழ்ச்சியாக முடிவுற்றது.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (பட்டியல்கள் 7 மற்றும் 8)

### பட்டியல் 7 @

1—

### வாய்க்கால் சட்டர்ஸ் சீர்செய்தல்

**வினா எண் 39641—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியிலுள்ள பழவஞ்சி வாய்க்காலின் சட்டர்களைச் சீர்செய்து கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

---

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் விடையளித்த நாளன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, பழவஞ்சி வாய்க்கால் சட்டர்களைப் புதுப்பிக்கும் பணி மார்ச் 2004-ல் முடிக்கப்பட்டுள்ளது.

2—

## வாக்காளர் அடையாள அட்டை

**வினா எண் 21175—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாக்காளர்களுக்குப் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்குவதால், ஒரு நபருக்கு எவ்வளவு ரூபாய் செலவு ஆனது?

(ஆ) இத்திட்டத்திற்குத் தமிழக அரசு எவ்வளவு ரூபாய் செலவு செய்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 17-1-2005 அன்று உள்ளபடி மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 4.72 கோடி ஆகும். இவர்களில் 3.55 கோடி வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இது மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் 75.17 சதவீதமாகும். இப்பணி மூன்று கட்டங்களில் 5 முகவர்களால் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைபெற்றது:—

| கட்டம் | நிறுவனம் | அட்டை எண்ணிக்கை | விலை (ஒன்றிற்கு) |
|---|---|---|---|
| முதல் | எல்காட் | 2,74,13,961 | ரூ.15.00 |
| இரண்டு | மேகாலேசர்ஸ் | 17,91,987 | ரூ.10.00 |
| | ஸ்டார்டேட்டா | 32,99,514 | ரூ.9.79 |
| | கெல்ட்ரான் | 15,32,379 | ரூ.14.00 |
| மூன்று | சிஎம்சி | 14,44,412 | ரூ.9.79 |



2005 செப்டம்பர் 26]

(ஆ) இத்திட்டத்திற்கு 1995 ஆம் ஆண்டு முதல் 1-3-2005 வரையில் ஆன மொத்தச் செலவு ரூ.95.94 கோடி ஆகும். இதில் நிர்வாகச் செலவும் சேரும். இத்திட்டத்திற்கு இதுவரை தமிழக அரசு ரூ.47.97 கோடி செலவு செய்துள்ளது.

3—

## மென்பொருள் பூங்கா அமைத்தல்

**வினா எண் 73608—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—தென்—திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தொகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் மென்பொருள் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை—தென்—திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தொகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை. தனியார் தொழில் முனைவோர் முன்வந்தால் அதனை அரசு ஊக்குவிக்கும்.

4—

## ஊழியர்கள் நியமனம்

**வினா எண் 79047—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் தொடங்கப்பட்ட உயர் நீதிமன்றக் கிளைக்கு ஊழியர்களை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளைக்குத் தேவையான பணியாளர் இடங்களைத் தோற்றுவித்து ஏற்கெனவே அரசு ஆணை (நிலை) எண் 394, உள் துறை, நாள் 1-3-2004-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**5—**

**சட்டக் கல்லூரியில் மண்டலவாரி மாணவர் சேர்க்கை**

**வினா எண் 80497—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளில் மணடலவாரி மாணவர் சேர்க்கை முறையை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளில் மண்டலவாரி முறையில் மாணவர் சேர்க்கை நடைபெறவில்லை.

**6—**

**கடன் வழங்குதல்**

**வினா எண் 69029—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின்மூலம் கடன் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுகளில் எதற்கு எவ்வளவு தொகை கடனாக வழங்கப்பட்டது?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். கோவில்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின்மூலம் கடன்கள் வழங்கப்படுகின்றன.

(ஆ) கோவில்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டுகளில் கீழ்க்கண்ட இனங்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன:—

| வ. எண் | காரியங்கள் | 2003-2004 (ரூபாய் இலட்சத்தில்) | | 2004-2005 (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | எண் | தொகை | எண் | தொகை |
| 1. | சிறு பாசனத் திட்டம் | 1 | 0.12 | .. | .. |
| 2. | கால்நடை | .. | 2.93 | .. | .. |
| 3. | பண்ணை இயந்திரமாக்குதல் | 2 | 5.62 | .. | .. |
| 4. | பண்ணைசாராக் கடன்கள் | 4 | 3.73 | .. | .. |
| 5. | கிராம வீட்டுக் கடன்கள் | 45 | 38.24 | .. | 1.28 |
| | கூடுதல் .. | 52 | 50.64 | .. | 1.28 |

**7—**

**கடன் வழங்குதல்**

**வினா எண் 69950—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்மூலம் கடன் வழங்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், 2001-2004 ஆம் ஆண்டுகளில் என்னென்ன தொழில்களுக்கு எவ்வளவு தொகை கடனாக வழங்கப்பட்டு உள்ளது?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள உறுப்பினர்களுக்கு திருப்பத்தூர் தொடக்கக் கூட்டுறவு மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மூலம் நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

(ஆ) நாட்ராம்பள்ளி தொகுதியில் திருப்பத்தூர் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலம் 2001 முதல் 2004 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட கடன்கள் இனங்கள் வாரியாக கீழே தரப்பட்டுள்ளன:—

| வ. எண் | கடன் வழங்கப்பட்ட காரணம் | 2000–2001 | | 2001–2002 | | 2002–2003 | | 2003–2004 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண் | தொகை | எண் | தொகை | எண் | தொகை | எண் | தொகை |
| 1 | ஆடு வளர்ப்பு | 36 | 14.94 | 17 | 5.95 | 28 | 10.16 | 17 | 6.64 |
| 2 | மாடு வளர்ப்பு | 16 | 10.44 | 17 | 11.22 | 29 | 20.38 | 11 | 6.39 |
| 3 | பண்ணை சாராக் கடன் (ஊதுபத்தி) | 8 | 1.20 | – | – | – | – | – | – |
| | கூடுதல் | 60 | 26.58 | 34 | 17.17 | 57 | 30.54 | 28 | 13.03 |

**8—**

## கோயில் திருப்பணி

**வினா எண் 36616—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் அருள்மிகு அனந்தீஸ்வரன் கோயில் திருப்பணிப் பணிகள் நடைபெறுகின்றனவா?

(ஆ) ஒதுக்கீடு செய்த நிதி எவ்வளவு?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் அருள்மிகு அனந்தீஸ்வரன் திருக்கோயில் திருப்பணிக்கு, பின்வருமாறு ரூ.14,95,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருப்பணிகள் முடிவுபெற்று 23-8-2004 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது:—

நிதி ஒதுக்கீடு விவரம்

| | | |
|---|---|---|
| 1. | அரசு மானியம் | ரூ.2,00,000/- |
| 2. | ஆணையர் பொது நல நிதி | ரூ.2,00,000/- |
| 3. | நன்கொடை/உபயம் | ரூ.10,95,000/- |
| | கூடுதல் | ரூ.14,95,000/- |

**9—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 56717—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி-திருநகரி ஊராட்சியிலுள்ள அருள்மிகு ரெங்கநாதர் திருக்கோயில் பொய்கைக் குளத்திற்குத் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுத்து தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருநகரி அருள்மிகு கல்யாண ரெங்கநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான புல எண் 379/2-ல் பொய்கை புஷ்கரணி உள்ளது. இதனைச் சுற்றி மனைப் பகுதிதாரர்கள் குடியிருந்து வருகிறார்கள். இதில்

[2005 செப்டம்பர் 26

ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. இத்திருக்குளத்தின் மேற்பகுதி சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டு, படிகள் ஏற்கெனவே உள்ளன. மற்ற மூன்று பகுதிகளிலும் கரைப் பகுதிகளில் மரங்கள் உள்ளதால், மண் அரிப்பு ஏற்பட வாய்ப்பில்லை. எனவே, சுற்றுச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**10—**

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 56762—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி—தாண்டவன்குளம் ஊராட்சி, என்.ஓ.சி. தெருவிலுள்ள ஸ்ரீவீரமாகாளியம்மன் கோயிலைப் புதியதாகக் கட்டி முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தாண்டவன்குளம் ஊராட்சி, என்.ஓ.சி. தெருவிலுள்ள ஸ்ரீவீரமாகாளியம்மன் திருக்கோயில் ஆதி திராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராமப் பொது மக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்குத் தலா ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6000 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள்மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள



2005 செப்டம்பர் 26]

அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ள திருக்கோயில்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியுள்ள நிலையில், மேற்காணும் திருக்கோயிலுக்குத் தற்போது நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**11—**

## தங்கும் விடுதி

**வினா எண் 66803—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, திருப்பஞ்ஞீலியில் அமைந்துள்ள அருள்மிகு நீளவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு விடுதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருப்பஞ்ஞீலியில் அருள்மிகு நீளவனேஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்க ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் தங்கும் விடுதி கட்டும் பணி சுற்றுலாத் துறைமூலமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**12—**

## சத்துணவு மையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 24347—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி சத்துணவு மையத்திற்கு அரிசிபாளையம் புறம்போக்கு நிலத்தில் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி சத்துணவு மையத்தில் ரூ.11,000/- மதிப்பீட்டில் பழுதுகள் சரிசெய்யப்பட்டுள்ளன. எனவே, இதற்கென அரிசிபாளையத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் புதிய சத்துணவு மையம் கட்டத் தேவை ஏதும் ஏற்படவில்லை.

**13—**

## சத்துணவு வழங்குதல்

**வினா எண் 27112—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு நிதியுதவி பெறாத தனியார் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவ, மாணவியருக்கும் சத்துணவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிதியுதவி பெறாத தனியார் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவ, மாணவியருக்கும் சத்துணவு வழங்க அரசின் பரிசீலனையில் கருத்துரு உள்ளது.

**14—**

## குழந்தைகள் நல மையம் அமைத்தல்

**வினா எண் 32007—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், திருத்தலையூர் ஊராட்சி, கீழக்கொட்டம், பெரமங்கலம் ஊராட்சி, மணியம்பட்டி ஆகிய இடங்களில் குழந்தைகள் நல மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி, முசிறி வட்டம், திருத்தலையூர் ஊராட்சிக்குட்பட்ட கீழக்கொட்டம் கிராமத்தில் மக்கள் தொகை 434 மட்டுமே உள்ளது. அரசு விதிமுறைகளின்படி மக்கள் தொகை 1,000 இருந்தால் மட்டுமே புதிய குழந்தைகள் நல மையம் தொடங்க முடியும் என்பதால், கீழக்கொட்டம் கிராமத்தில் புதிய குழந்தைகள் நல மையம் தொடங்க இயலவில்லை. பெரமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட மணியம்பட்டியில் புதிய மையம் 1-4-2004 முதல் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

**15—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 41413—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியிலுள்ள அறிஞர் அண்ணா பட்டு மாளிகைக் கட்டடத்தின் முன் பகுதி ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் அறிஞர் அண்ணா பட்டு மாளிகைக் கட்டடம் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்திற்கு உரிமையான கட்டடமாகும். இக்கட்டட வளாகத்தின் உட்புறம், முன்புறத் திறவிடத்தில், தனியார் கடைகள் வைத்துள்ளனர். முன்புறப் பகுதியில் வாரியத்தின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்களிடமிருந்து மேற்படி இடத்திற்குரிய வாடகை பெறப்பட்டு வருகிறது. கட்டட வளாகத்தின் வெளியே சாலை நிலத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

**16—**

## மனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 10691—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, உச்சிமேடு கிராமத்தில் வசித்து வரும் ஆதி திராவிடர்களுக்குக் குடியிருப்பு மனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி, உச்சிமேடு கிராமத்தில் வசித்து வரும் ஆதி திராவிட மக்களுக்கு 2004 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**17—**

## கடன் வழங்குதல்

**வினா எண் 27792—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், புதுகாலனி, டி.பச்சேரி பகுதியில் டயர் வண்டி மற்றும் மாடு கடன் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், டி.பச்சேரியில் 5 ஆதி திராவிடர்களுக்கு டயர் வண்டி மற்றும் மாடு வாங்குவதற்காக தாட்கோ மானியமாக ரூ.50,000-ம், பயனாளியின் பங்குத் தொகையாக ரூ.5,000-ம் வங்கிக் கடனாக ரூ.45,000-ம், மொத்தம் ரூ.1,00,000/- (ஒரு இலட்சம்) கடனுதவி வழங்கி டயர் வண்டி மற்றும் மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**18—**

## மாணவ/மாணவியர் தங்கும் விடுதிகள்

**வினா எண் 37445—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள கூட்டாத்துப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ/மாணவியர் தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**19—**

## ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி

**வினா எண் 56017—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கிழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**20—**

## முதியவர்கள் காப்பகம்

**வினா எண் 62697—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை ஆதி திராவிடர் நலத் துறை சார்பாக தாழ்த்தப்பட்ட, முதியவர்கள் காப்பகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக தாழ்த்தப்பட்ட, முதியவர்கள் காப்பகம் ஏற்படுத்தும் திட்டம் ஆதி திராவிடர் நலத் துறையில் நடைமுறையில் இல்லை.

**21—**

## ஆதி திராவிடர் மாணவர் விடுதி

**வினா எண் 64086—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆயங்குடி பள்ளத்தில் ஆதி திராவிடர் நலத் துறையின்மூலம் மாணவர்களுக்கு விடுதி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



**22—**

## சுய உதவிக் குழுக்கள்

**வினா எண் 65357—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண்கள் பயன்பெற சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், தாட்கோமூலம் கடனுதவி எவ்வளவு வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மகளிர் பயன்பெறும் வகையில் நான்கு சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களுக்கு தாட்கோ மானியமாக ரூ.4,44,000/-ம், வங்கிக் கடனாக ரூ.8,88,000/-ம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆறு சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி தாட்கோ மானியமாக ரூ.90,000/-ம் வங்கிக் கடனாக ரூ.1,50,000/-ம் வழங்கப்பட்டுள்ளது.

**23—**

## எரிவாயு அடுப்புடன்கூடிய சமையலறை

**வினா எண் 69868—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் செயல்பட்டு வரும் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதிகளில் எரிவாயு அடுப்புடன்கூடிய சமையலறை கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது புதியதாகக் கட்டப்படும் அனைத்து விடுதிகளிலும் எரிவாயு இணைப்பு வசதிகளுடன்கூடிய சமையலறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

24—

## உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 70973—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட மாணவர்கள் தங்கும் அரசு விடுதிகளில் உடற் பயிற்சிக் கூடம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

25—

## மாணவர் விடுதிக்கு புதிய கட்டடம்

**வினா எண் 71011—திரு. க. பாரமலை:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு மாணவர் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் மாணவர் விடுதியின் பழுதடைந்த கட்டடத்தை இடித்து விட்டு புதிய கட்டடம் கட்ட அரசு கடித எண் 52, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்: 31-3-2005-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

26—

## ஆதி திராவிடர் மாணவர்களுக்குத் தங்கும் விடுதி

**வினா எண் 71460—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதியில் ஆதி திராவிட மாணவர்களுக்காகத் தங்கும் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மதுரை கிழக்கு தொகுதியில் ஆதி திராவிட மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்டுவதற்கான கருத்துரு எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

27—

## உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 83073—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எம்.ஆர்.பாளையத்தில் ஆதி திராவிடர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதியில் உள்ள எம்.ஆர்.பாளையம் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, 25-5-2005 நாளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, அரசாணை (நிலை) எண் 78-ன்படி மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

28—

## சர்க்கரை ஆலைகள்

**வினா எண் 70507—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியார் மற்றும் வேட்டைக்காரன்புதூர் பகுதிகளில் சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் தனியார் துறையில் பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. இவ்வாலையின் நாளொன்றின் அரைவைத் திறன் 2,500 டன்களாகும். இந்த ஆலையின் முழு அரைவைத் திறனுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.4.30 இலட்சம் கரும்பு தேவைப்படும். இந்த ஆலையின் கரும்பு எல்லை பகுதிக்குட்பட்ட வால்பாறை தொகுதியில் தற்போது சுமார் 90 (தொண்ணூறு) ஏக்கர் பரப்பளவில் மட்டுமே கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் மேற்காணும் சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மற்ற கிராமங்களான கோட்டூர், கோ.மலையாண்டிபட்டணம், பொங்காளியூர், சோமத்துறை, சித்தூர், தென் சங்கம்பாளையம், மயிலாடுதுறை, பழனியூர், வேடசந்தூர், தேவிப்பட்டணம், நரிக்கல்பதி ஆகியவற்றில் தென்னை சாகுபடி அதிகமாக உள்ளதால் கரும்பு சாகுபடி செய்ய வாய்ப்பு இல்லை. மழை நன்றாக பெய்து ஆழியார் அணைக்கட்டுமூலம் பாசனம் பெறும் பழைய ஆயக்கட்டு வாய்க்கால்களான அரியாபுரம் மற்றும் புள்ளிவினங்கால் வாய்க்கால்களில் வருடம் முழுவதும் நீர்ப்பாசனம் செய்து கொடுத்து, போக்குவரத்திற்குப் பாதை வசதி ஏற்படுத்திக் கொடுத்தாலும், ஆண்டுக்கு சுமார் 200 முதல் 250 ஏக்கர் வரை மட்டுமே கரும்பு சாகுபடி செய்ய இயலும். பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலைக்குப் போதுமான கரும்பு வால்பாறை தொகுதியிலிருந்து கிடைக்காத நிலையில், இத்தொகுதியில் உள்ள ஆழியார் மற்றும் வேட்டைக்காரன்புதூர் பகுதிகளில் புதியதாக சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**29—**

## சிமெண்ட் நெற்களம் அமைத்தல்

**வினா எண் 32933—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அச்சாள்புரம் ஊராட்சியில் உள்ள கீழ அகரம் கிராமத்தில் நெல் காய வைக்கும் சிமெண்ட் களம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதிநிலைக்கு ஏற்றவாறு சீர்காழி தொகுதி, கீழ அகரம் கிராமத்தில் வேளாண்மை விற்பனைக் குழுமூலமாக நெல் காய வைக்கும் சிமெண்ட் களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**30—**

## சுய உதவிக் குழுக்கள்

**வினா எண் 44043—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் எத்தனை ஏழை எளிய விவசாயிகள் சுய உதவிக் குழுக்கள் அமைத்து தரிசு நிலத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்?

(ஆ) அவர்களில் எத்தனை குழுக்களுக்கு அரசு தரிசு நிலங்கள் வழங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் எந்தவொரு சுய உதவிக் குழுவும் அரசு தரிசு நிலத்திற்குக் குத்தகைக்கு விட வேண்டி விண்ணப்பிக்கவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**31—**

## கடன் உதவி வழங்குதல்

**வினா எண் 72818—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில், கல் உடைக்கும் தொழிலாளர்களுக்குக் கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2005 செப்டம்பர் 26

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கல் உடைக்கும் தொழிலாளர்கள் கடன் உதவி பெறுவதற்குத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு மனுச் செய்து, தகுதி மற்றும் விதிகளின் அடிப்படையில் கடன் பெற்றுக்கொள்ளலாம்.

**32—**

**நிலம் வாங்கக் கடன்**

**வினா எண் 73024—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு நிலம் வாங்கக் கடன் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோருக்கு நிலம் வாங்கக் கடன் வழங்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

**33—**

**கடன் வழங்கும் திட்டம்**

**வினா எண் 73030—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கு வீடுகள் கட்ட மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2005 செப்டம்பர் 26]

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோருக்கு வீடுகள் கட்ட மானியத்துடன்கூடிய கடனுதவி வழங்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

**34—**

**இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்குதல்**

**வினா எண் 73072—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு 2005-2006 ஆம் ஆண்டில் இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, தென்சித்தூர், சோமந்துறை, தென்சங்கம்பாளையம், வேட்டைக்காரன்புதூர் ஆகிய ஊராட்சிகளில் இலவச சலவைப் பெட்டிகள் கோரி மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

**35—**

**இலவச சலவைப் பெட்டி**

**வினா எண் 73081—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

(அ) வால்பாறை தொகுதி, புலிசின்னம்பாளையம் ஊராட்சி, கரியஞ்செட்டிபாளையம் ஊராட்சிகளில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு 2005-2006 ஆம் ஆண்டில் இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, புலிசின்னம்பாளையம், கரியஞ்செட்டிபாளையம் ஆகிய ஊராட்சிகளில் இலவச சலவைப் பெட்டிகள் கோரி மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை.

**36—**

## பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதி

**வினா என் 73606—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதிக்கு உட்பட்ட சென்னீர்குப்பத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பெண்கள் விடுதியும், ஆவடியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆண்கள் விடுதியும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.



2005 செப்டம்பர் 26]

**37—**

## பிற்படுத்தப்பட்டோர் இனப் பட்டியல்

**வினா என் 76577—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குரும்பர் இனத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இனப் பட்டியலில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள அரசாணைகளின்படி குரும்பா வகுப்பு மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. குரும்பர் வகுப்பினையும், குருபா, குரும்பா, குரும்பன் போன்ற ஒத்த பெயருடைய வகுப்புகளையும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குறித்து ஆய்வு செய்து பரிந்துரை வழங்குமாறு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆணையத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றதும், பிற வகுப்புகளுடன் குரும்பர் வகுப்பினையும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.

**38—**

## மாணவ, மாணவியர் விடுதிகள்

**வினா என் 78144—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2004 ஆம் ஆண்டில் தமிழகத்தில் பிற்பட்டோர் மாணவ/ மாணவியர் விடுதிகள் எத்தனை புதிதாகக் கட்டப்பட்டன?

(ஆ) இதற்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியது?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2003-2004-ல் 100 விடுதிகள் மற்றும் 2004-2005-ல் 100 விடுதிகள், ஆக மொத்தம் 200 விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்ட ஆணை வெளியிடப்பட்டு, பொதுப் பணித் துறையின்மூலம் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் 30-6-2005 வரை 91 விடுதிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்ற பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

(ஆ) இதற்காக ரூ. 63.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**39—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 50632—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மாதானம், எடமணல், வள்ளுவக்குடி ஊராட்சிகளில் துணை கால்நடை மருத்துவமனையில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதானம், எடமணல் ஆகிய ஊராட்சிகளில் உள்ள கால்நடை கிளை நிலையங்களில் 2003-2004 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 13-5-2004-ல் அமைக்கப்பட்டுள்ளன. வள்ளுவக்குடியில் கால்நடை கிளை நிலையம் ஏதும் செயல்படாததால், அங்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.



2005 செப்டம்பர் 26]

**40—**

## கால்நடை ஆய்வாளர்கள் நியமனம்

**வினா எண் 62235—திரு. கே. எஸ். தென்னரசு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு கோட்டத்தில் 33 கால்நடை கிளை நிலையங்களில் ஆய்வாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் 125 நபர்களுக்குக் கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிப்பதற்கான கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இப்பயிற்சி முடிந்தவுடன் ஈரோடு மாவட்டத்தில் உள்ள கால்நடை கிளை நிலையங்களில் கால்நடை ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

**41—**

## வான்கோழி வளர்ப்புப் பிரிவு

**வினா எண் 65765—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூரிலுள்ள அரசு கோழி வளர்ப்புப் பிரிவில் வான்கோழி வளர்ப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2003-2004 ஆம் ஆண்டில் அதன்மூலம் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூரிலுள்ள அரசு கோழி வளர்ப்புப் பிரிவில் வான்கோழி வளர்ப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

(ஆ) 2003-2004 ஆம் ஆண்டில் வான்கோழி வளர்ப்பின்மூலம் பெறப்பட்ட வருமானம் ரூ. 3,74,889/- ஆகும்.

**42—**

## கால்நடைப் பண்ணையைப் பராமரித்தல்

**வினா எண் 68362—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் இயங்கி வரும் கால்நடைப் பண்ணையைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணை, அரசாணை எண் 1564, அபிவிருத்தித் துறை, நாள் 9-4-1951 மூலம், 5-6-1951-ல் இருந்து அரசுக் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் 440 பசு இனங்களும், 245 செம்மறி ஆடுகளும், 210 வெள்ளாடுகளும், 53 பன்றிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பசு இனங்களின்மூலம் இப்பண்ணையில் 2004-2005 ஆம் ஆண்டு 1,30,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பண்ணையில் துணை இயக்குநர் முதல் கால்நடை பராமரிப்பு உதவியாளர் வரை மொத்தம் 133 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். எனவே, தொடர்ந்து தமிழக அரசால் புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணை பராமரிக்கப்படுகிறது.





**43—**

## கால்நடை மருத்துவமனை மருந்து அலுவலர் நியமனம்

**வினா எண் 69405—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்டவும், மருந்து அலுவலர் நியமனம் செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கவும், மற்றும் மருந்து அலுவலர் நியமனம் செய்யவும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**44—**

## எக்ஸ்ரே கருவி வழங்குதல்

**வினா எண் 69413—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* பொதுவாக, கால்நடை மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்படுவதில்லை. பிரதம மருத்துவமனை மற்றும் பன்முக மருத்துவமனைகளில் இந்த வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆதலால், சீர்காழி நகரிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவி வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

*(ஆ)* எழாது.

**45—**

**கால்நடை மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 69627—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விருத்தாசலம் ஒன்றியம், விஜயமாநகரம் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனையைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

*(ஆ)* அம்மருத்துவமனைக்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* விருத்தாசலம் ஒன்றியம், விஜயமாநகரம் கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் அரசால் ஒப்பளிக்கப்படவில்லை. இத்துறைக்கு எவ்விதத் தகவலுமின்றிக் கட்டப்பட்ட கால்நடை துணை மையக் கட்டடத்தைச் செயல்படுத்த இயலாது.

*(ஆ)* கால்நடை நிலையமே ஒப்பளிப்பு செய்யப்படாத நிலையில் கால்நடை .மருத்துவர்கள் நியமிப்பது குறித்து கேள்வி எழாது.





**46—**

**கால்நடை முகாம்கள் நடத்துதல்**

**வினா எண் 70227—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெண்ணாகரம் தொகுதியில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்கள் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* வருடந்தோறும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மாதம் ஒரு முறை பெண்ணாகரம் உட்பட கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த வருடமும் நடத்தப்படும்.

*(ஆ)* நடப்பு நிதியாண்டில் (2005-2006) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின்கீழுள்ள திக்கம்பட்டி, ஊட்டமலை பி.அக்ரகாரம், அய்யாத்தப்பட்டி, பள்ளிப்பட்டி, கோரியகவுண்டம்பட்டி, சரம்பள்ளி, ஜக்கம்பட்டி, சிகரலப்பள்ளி, எரிகோட்டப்பட்டி, மாக்கனூர், அத்திமார அள்ளி மற்றும் பூதநத்தம் ஆகிய கிராமங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடைபெற உள்ளன. 4-7-2005 வரை தருமபுரி மாவட்டத்தில் 18 முகாம்கள் நடத்தப்பட்டு, 20,366 கால்நடைகள் பயனடைந்துள்ளன.

**47—**

**மானிய விலையில் கோழித் தீவனங்கள்**

**வினா எண் 70976—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

(அ) கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குக் கோழித் தீவனங்கள் மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கோழித் தீவனங்கள் கால்நடை பராமரிப்புத் துறையில் உற்பத்தி செய்யப்படவில்லை. எனவே, கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குக் கோழித் தீவனங்கள் மானிய விலையில் வழங்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**48—**

**கால்நடை கிளை மருத்துவமனை**

**வினா எண் 71018—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செல்லம்பட்டி ஒன்றியம், ஆரியப்பட்டி ஊராட்சி, கன்னியம் பட்டிக்குக் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடை கிளை நிலையம் புதியதாகத் தோற்றுவிப்பதற்குத் தடை இன்னமும் அமலில் உள்ளதால், செல்லம்பட்டி ஒன்றியம் ஆரியப்பட்டி ஊராட்சி, கன்னியம்பட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.



2005 செப்டம்பர் 26]

**49—**

**கால்நடை கிளை மருத்துவமனை**

**வினா எண் 71022—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, வகூரணி ஊராட்சி, வகூரணி பகுதிக்குக் கால்நடை கிளை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதிய கால்நடை கிளை நிலையங்களைத் துவக்கிட வழங்கப்பட்ட தடை உத்தரவு இன்னும் அமலில் உள்ளதால், தற்போது கிளை நிலையம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**50—**

**சுற்றுச்சூழல் பாதிப்பு**

**வினா எண் 55649—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2003-2004 ஆம் ஆண்டில் எந்தெந்தத் தொழிற்சாலைகள்மீது சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை கீழே வைக்கப்பட்டுள்ளது:

[2005 செப்டம்பர் 26

## விவர அறிக்கை

*2003-2004* ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்—ஏப்ரல் *2003.*

| வ. எண் | தொழிற்சாலைகளின் விவரம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சரஸ்வதி பிளாஸ்டிக், சுந்தரம் பிள்ளை நகர், சென்னை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 2. | கணபதி பிளாஸ்டிக் டிரேடர்ஸ், கருங்கல்பாளையம், ஈரோடு | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 3. | ஈரோடு பைன் லெதர் டானரீஸ், பி.பி. அக்ரகாரம், ஈரோடு | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 4. | அருள் ராசி டையிங் ஒர்க்ஸ், வெங்கள் ரோடு, கரூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 5. | மஹிந்திரா டார் மிக்ஸிங் பிளான்ட், கே.பி. ஊத்துப்பாறை, மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |

*2003-2004* ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்—மே *2003.*

| வ. எண் | தொழிற்சாலைகளின் விவரம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | விஜை கார்த்திக் இண்டஸ்ட்ரீஸ், வில்லிவாக்கம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது |
| 2. | பிபேர் டுபாஸ், வில்லிவாக்கம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 3. | கவிதா பிளீச்சிங் பாக்டரி, வீரப்பன்பாளையம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 4. | ஆறுமுக டெக்ஸ், செல்லூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 5. | சரவணன் டையிங், செல்லூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |



2005 செப்டம்பர் 26]

| வ. எண் | தொழிற்சாலைகளின் விவரம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6. | நாகஜோதி டெக்ஸ்டைல்ஸ் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 7. | கயல்விழி டெக்ஸ்டைல்ஸ் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 8. | பழனிச்சாமி சாய சாலை, சுபாஸ் நகர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 9. | எஸ்.கே.எம் கலர்ஸ், மாமரத்தோட்டம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 10. | சூட்டல் பாலிப்ரோ லிமிடெட், அம்பத்தூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 11. | வென்னா கெமிகல் இண்டஸ்ட்ரீஸ், ஆர்காட் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 12. | மனோ சா மில், ஆற்காடு | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |

*2003-2004* ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்—ஜூன் *2003.*

| வ. எண் | தொழிற்சாலைகளின் விவரம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஸ்ரீவெங்கடேஸ்வரா டிம்பர் அண்ட் சா மில், சூளை, சென்னை | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 2. | பிமல் ஜெயின், சூளை, சென்னை | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 3. | மதன்லால் ஸ்டீல் அண்ட் போர்ஜிங்ஸ் லிமிடெட், ஆலந்தூர், காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 4. | எ.எ. லெதர் பிராடக்ஸ், நாகல்கேணி, காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 5. | ஸ்ரீ கண்ணா கலர்ஸ், பள்ளிப்பாளையம், நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |

[2005 செப்டம்பர் 26

| வ. எண் | தொழிற்சாலைகளின் விவரம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 6. | அம்மன் கலர்ஸ், கொமாரபாளையம், நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 7. | ஸ்ரீ ஈசன் டெக்ஸ்டைல்ஸ் பிராஸசர்ஸ், கொமாரபாளையம், நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 8. | விஜயலட்சுமி சலவை சாலை, பள்ளி பாளையம், நாமக்கல் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 9. | பிரகாஸ் புளூ மெடல், கோடங்கிபட்டி, தேனி | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 10. | சரவணா புளூ மெட்டல்ஸ், நாகாலாபுரம், தேனி | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| 11. | கங்கை புளூ மெட்டல்ஸ், கெங்குவார்பட்டி வில்லேஜ், தேனி | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 12. | வில்சன் அரோமாடிக் கம்பெனி, அம்பத்தூர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 13. | ஸ்ரீபால முருகன் பிராஸஸ், நல்லூர் வில்லேஜ், திருப்பூர், கோவை மாவட்டம் | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |

*2003-2004* ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்—ஜூலை *2003*.

| வ. எண் | தொழிற்சாலைகளின் விவரம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஆலவடு பார்மா மற்றும் உணவு (பி) லிமிடெட், சென்னை | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 2. | ராதா நான்கு வீலர் கிளினிக், திருவான்மியூர், சென்னை | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 3. | ஹென்றி பேக்ரி, வேளச்சேரி, சென்னை | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |



2005 செப்டம்பர் 26]

| வ. எண் | தொழிற்சாலைகளின் விவரம் | தற்போதைய நிலவரம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 4. | பாபுலால் பிளாஸ்டிக் மெல்டிங் யூனிட், கொடுவிலார்பட்டி சாலை, சென்னை | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 5. | அரிஷ் வேஸ்ட் பிளாஸ்டிக் மெல்டிங் யூனிட், கோனவைகால், சென்னை | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 6. | பாலாஜி வால்வுகள் பிரைவேட் லிமிடெட், பாலவாக்கம், காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 7. | பாரதி கலர்ஸ், திருவான்மியூர், கரூர் | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |
| 8. | ஸ்ரீ அருள் கலர்ஸ், திருவான்மியூர், கரூர் | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |
| 9. | பேஷன் சின்கோடெக்ஸ் (பி) லிமிடெட், நல்லூர் கிராமம், கரூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 10. | உஷா புளூ மெட்டல், கரூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 11. | ரோனுக் எலக்ட்ரோபிளேட்டிங், நாகர்கோவில், பி.டபிள்யூ.டி ஆபீஸ் ரோடு, கன்னியாகுமரி | விலக்கப்பட்டது. |
| 12. | ஸ்ரீ மீனாட்சி ஏஜென்சீஸ் மாப்பிள்ளையூரணி, கன்னியாகுமரி | மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. |
| 13. | ரோனுக் எலக்ட்ரோபிளேட்டிங், இந்து காலேஜ் ரோடு, கன்னியாகுமரி. | விலக்கப்பட்டது. |
| 14. | ஜெபின் எலக்ட்ரோபிளேட்டர்ஸ், செட்டிக்குளம் ஜங்ஷன், கன்னியாகுமரி | இசைவாணை வழங்கப்பட்டுள்ளது |
| 15. | மோகன் பிரிவரிஸ் மற்றும் டிஸ்டிலரிஸ் லிமிடெட், வேதநாராயணபுரம், காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |
| 16. | ஓட்டல் மற்றும் லாட்ஜ்கள், மணி லாட்ஜ், ஓசூர், தருமபுரி | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது |

[2005 செப்டம்பர் 26

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 17. | சங்கவி லாட்ஜ், ஓசூர், தருமபுரி | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது |
| 18. | சிகாமணி லாட்ஜ், ஓசூர், தருமபுரி | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது |
| 19. | சி.எம். ஓட்டல், ஓசூர், தருமபுரி | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது |
| 20. | செல்வலஷ்மி பிளிச்சிங் மற்றும் டையிங், பள்ளிப்பாளையம், நாமக்கல் | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |
| 21. | உஷா புளூ மெட்டல், அலங்காநல்லூர் மதுரை | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது |
| 22. | பட்டேல் மற்றும் பிரதர்ஸ், மேலப்பசலை கிராமம், மதுரை | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது |
| 23. | பாலாஜி அசோசியேட்ஸ், மேலப்பசலை, மதுரை | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது |
| 24. | சந்தியா சார்கோல், மேலப்பசலை, மதுரை | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 25. | பிரபு இண்டஸ்ட்ரீஸ் ஸ்டார்ச் பேக்டரி, சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 26. | அருள் முருகன் ஸ்டார்ச் இண்டஸ்ட்ரீஸ், மாரியப்பன் தோட்டம், சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 27. | நல்லியப்ப சாகோ பேக்டரி, அம்மாபாளையம், சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 28. | சங்கர் சாகோ பேக்டரி, ஆத்தூர், சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 29. | சென்னிமலை சாகோ பேக்டரி, ஆத்தூர், சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |



2005 செப்டம்பர் 26]

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 30. | கங்கை புளூ மெட்டல், பெரியகுளம், தேனி | மூடுதல் ஆணை விலக்கப்பட்டுள்ளது. |
| 31. | பிரகாஷ் புளூ மெட்டல், பெரியகுளம், தேனி | மூடுதல் ஆணை விலக்கப்பட்டுள்ளது. |
| 32. | சரவணா புளூ மெட்டல், கொடூர்விலார்பட்டி சாலை, தேனி | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |
| 33. | சேகர் பவுண்டரி சர்வீஸஸ், (எம்.கே. வெங்கட் இண்டஸ்ட்ரீஸ்) சாத்துமா நகர், திருவள்ளூர். | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 34. | சாந்தி பாட்டில் சப்ளையர்ஸ், ஆலப்பாக்கம், திருவள்ளூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 35. | முத்து பேக்கேஜிங் ஒர்க்ஸ், மாரியம்மாள் நகர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 36. | வெஸ்ட் கோஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் (எக்ஸ்போர்ட்ஸ்) பிரைவேட் லிமிடெட், தோட்டிப்பாளையம் கிராமம், திருப்பூர். | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 37. | இந்து பிராஸஸ், சின்னகரை, திருப்பூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 38. | நிம்பஸ் பிராஸஸ், சின்னகரை, திருப்பூர் | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 39. | கலர் கிங் பிராஸஸ், சின்னத் தோட்டம், திருப்பூர் | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 40. | அம்பாள் பிராஸஸர்ஸ், திருப்பூர் டவுன், திருப்பூர் | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 41. | மேட்ச் பாயின்ட், மண்ணரை கிராமம், திருப்பூர். | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |

[2005 செப்டம்பர் 26

2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்— ஆகஸ்ட் 2003.

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 1. | பிரபா இண்டஸ்ட்ரியல் ஸ்டார்ச் பாக்டரி, ஓட்டம்பாறை, சேலம். | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 2. | சங்கர் சேகோ பாக்டரி, காட்டுக்கோட்டை, சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 3. | ஸ்ரீ சென்னைமலை சேகோ பாக்டரி, வடசென்னிமலை, சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 4. | அருள்முருகன் சேகோ பாக்டரி, வடசென்னிமலை, சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 5. | நெல்லையப்பா சேகோ பாக்டரி, காந்திபுரம், சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 6. | முதுரம் டையர்ஸ், அம்பத்தூர் எஸ்டேட், திருவள்ளூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 7. | ஐ.எம்.டி. அலாஸ், மாதவரம், திருவள்ளூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 8. | ஜெய் பவானி ஸ்டீல் எண்டர்பிரைஸஸ், பொன்னேரி, திருவள்ளூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 9. | பி.எம். அம்மாகண்ணு அண்டு கம்பெனி, சோளிங்கர், வேலூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 10. | ஈஸ்வரி இண்டஸ்ட்ரீஸ், ராகவேந்திரபுரம், திருச்சி | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |



2005 செப்டம்பர் 26]

2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்— செப்டம்பர் 2003.

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 1. | ஏ.பி.ஆர். ஓட்டல் (பி) லிமிடெட், அரும்பாக்கம், சென்னை | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 2. | லஷ்மி பேவர் பிளாக்ஸ், சிங்காநல்லூர், கோயம்புத்தூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 3. | கே.எஸ். சுப்பிரமணியன் பிளாஸ்டிக் மெல்டிங் கம்பெனி, ஈரோடு | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 4. | டைமண்ட் புளூ மெட்டல் ஓர்க்ஸ், மேலவளம்பேட்டை, காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 5. | சி.எஸ். இண்டஸ்ட்ரீஸ், கோச்சடை, மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 6. | பவானி சா மில், மயிலாடுதுறை, நாகப்பட்டினம். | நீதிமன்ற வழக்கு |
| 7. | வேல்முருகன் புளூ மெட்டல்ஸ், மாடமங்கலம், நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 8. | தமிழ்நாடு பேப்பர் மற்றும் போர்டு, மாடமங்கலம், நாமக்கல் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 9. | ஸ்ரீ துர்கா டையிங், வேம்பாடிதலம், சேலம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 10. | சூப்பர் பிராஸஸ், காரைப்புதூர் கிராமம், திருப்பூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 11. | வி.டி.டையர்ஸ் மற்றும் ஸ்க்ரீன் பிரின்டர்ஸ், அம்பத்தூர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை தற்காலிகமாக விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 12. | கோவை கலர்ஸ், திருவெங்கிமலை, திருச்சி | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |

[2005 செப்டம்பர் 26

2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்— அக்டோபர் 2003.

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 1. | ரேப்டகாஸ் பிரட் மற்றும் கம்பெனி, வேளச்சேரி, சென்னை | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 2. | மதினா பைபர்ஸ், ஊத்துக்குளி, கோயம்புத்தூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 3. | இராதாகிருஷ்ணா மல்டிபில் இண்டஸ்ட்ரீஸ், மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 4. | மகாத்மா காந்தி ஜாயின்ட் புட் கூட்டுறவு சொசைட்டி, மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 5. | பாஸிடான் கெமிக்கல்ஸ், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 6. | குமரேஷ் சாய சாலை, குமாரபாளையம், நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 7. | ராலிஸ் இந்தியா லிமிடெட், சந்திநல்லா, உதகமண்டலம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |

2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்— நவம்பர் 2003.

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 1. | மொகமது மொஹிதீன் டேனர்ஸ், மதுரை ரோடு, திண்டுக்கல் | மூடப்பட்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 2. | ஏ. அப்துல் ஹமீது மற்றும் டாட்டர்ஸ் டேனரி, மதுரை ரோடு, திண்டுக்கல் | மூடப்பட்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 3. | எஸ். மொகமது இம்ரான் டேனர்ஸ், பேகம்பூர், திண்டுக்கல் | மூடப்பட்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 4. | எஸ். மொகமது இஸ்மாயில் மற்றும் கம்பெனி, பேகம்பூர், திண்டுக்கல் | மூடப்பட்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 5. | ஆதித்யா பேக்ட் குடிநீர், போயக்கரைப்பட்டி, மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 6. | ஜே.ஜே. இண்டஸ்ட்ரீஸ், கலன்திரி கிராமம், மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 7. | வெங்கடேஸ்வரா பைபர்ஸ் படகு கம்பெனி, மரக்காணம், விழுப்புரம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 8. | மாருதி பைபர்ஸ் படகு, மரக்காணம், விழுப்புரம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 9. | ஸ்ரீகடல் ராஜா பைபர்ஸ் படகு, மரக்காணம், விழுப்புரம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 10. | இறைவன் பைபர் படகு கம்பெனி, மரக்காணம், விழுப்புரம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 11. | ஸ்ரீ ஜெயம் பைபர் படகு கம்பெனி, மரக்காணம், விழுப்புரம் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 12. | வி.என்.எஸ். ஹெல்த் கேர் (பி) லிமிடெட், ஆழ்வார்திருநகர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 13. | விக்னேஸ் இன்ஜினியரிங், கொரட்டூர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |



2005 செப்டம்பர் 26]

[2005 செப்டம்பர் 26

*2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்— டிசம்பர் 2003.*

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 1. | ரவி டையிங் பேக்டரி, சித்தோடு, ஈரோடு | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 2. | தேவி டையிங் கம்பெனி, பாஸியாபுரம் மதுரை | மூடுதல் ஆணை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. |
| 3. | கரலி டையர்ஸ், மதுரை | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 4. | கே.எஸ். ரவிந்திரன் டையிங், மதுரை | மூடுதல் ஆணை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. |
| 5. | சுந்தர் சர்வீஸ் ஸ்டேஷன், மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 6. | எம். சேகர் ஷார்க்லிங் பிராஸஸிங் யூனிட், குப்புசாமி நகர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. தொழிற்சாலை அந்த இடத்தைக் காலி செய்து விட்டது. |
| 7. | ஆர். பரஞ்சோதி ஷார்க்லிங் பிராஸஸிங் யூனிட், கண்ணப்பசாமி நகர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 8. | வி. செந்தில் ஷார்க்லிங் பிராஸஸிங் யூனிட், கண்ணப்பசாமி நகர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 9. | வி. சித்திக் ஷார்க்லிங் பிராஸஸிங் யூனிட், கண்ணப்பசாமி நகர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 10. | ஜானி ஷார்க்லிங் பிராஸஸிங் யூனிட், கண்ணப்பசாமி நகர், திருவள்ளூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 11. | நியூ கோவை கலர்ஸ், திருமலையூர், திருச்சி | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |



2005 செப்டம்பர் 26]

*2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்— ஜனவரி 2004.*

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 1. | மாரீஸ் டை மற்றும் டை, வீரப்பன் பாளையம், ஈரோடு | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 2. | அண்ணமர் டையிங் பேக்டரி, ஈரோடு | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 3. | கோமதி பிரின்டர்ஸ் டை மற்றும் டை, பள்ளக்காட்டுத் தோட்டம், ஈரோடு | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 4. | எப்.ஆர்.வி. இண்டஸ்ட்ரீஸ் (எலக்ட்ரோபிளேட்டிங் பிரிவு), மாடம்பாக்கம், காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 5. | ஸ்ரீ மீனாட்சி இண்டஸ்ட்ரீஸ், மதுரை | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 6. | தினேஷ் க்ரீஸஸ், மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 7. | வள்ளிமெரின் கெமிக்கல்ஸ், மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 8. | விக்னேஸ் ரப்பர்ஸ், அனுப்பானடி, மதுரை | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 9. | உமா ராணி புளு மெட்டல், சிவகங்கை | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 10. | ஜெயலஷ்மி சாகோ பேக்டரி, ராசிபுரம், நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 11. | ஜே.ஜி. பிளீச்சிங் மற்றும் டையிங், மண்ணரை கிராமம், திருப்பூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 12. | ஸ்ரீ பாக்கியம் ஆட்டோ டை காஸ்டிங், அவினாசி சாலை, திருப்பூர் | மூடுதல் ஆணை விலக்கிக்கொள்ளப் பட்டது. |
| 13. | ஜே.பி. மெட்டல் மார்ட், எடமலைப்பட்டிபுதூர், திருச்சி, | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 14. | கிருஷ்ணா மெட்டல் ஸ்டோர்ஸ், எடமலைப்பட்டிபுதூர், திருச்சி | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 15. | ராக்ஃபோர்ட் இண்டஸ்ட்ரீஸ், திருச்சி | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 16. | குளோரைடு கம்பைன் பிரைவேட் லிமிடெட், சிட்கோ, அம்பத்தூர், திருவள்ளூர் | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 17. | ஜிங்க் 'என்' கெமிக்கல்ஸ், கே.எஸ். ரோடு, திருவள்ளூர் | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 18. | கே.எஸ். கோபால் டையிங் பேக்டரி, பனப்பாக்கம், வேலூர் | மூடுதல் ஆணை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |

2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்—பிப்ரவரி 2004.

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 1. | ஸ்ரீமுருகன் ரைஸ் மில், தாராபுரம், ஈரோடு | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 2. | விக்காஸ் இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்ஸ், மணப்பாக்கம் கிராமம், காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |





| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 3. | ராதா இண்டஸ்டீரீஸ், மணப்பாக்கம் கிராமம், காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 4. | ஏ.கே. சந்திரசேகரன், முத்தியால்பேட்டை, காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |
| 5. | வினாயகா புளூ மெட்டல், அக்காலப்பட்டி, நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 6. | பழனிச்சாமி பவர்லூம், சீராப்பள்ளி, நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 7. | கலைமான் சாகோ, ஆர். புதுப்பட்டி, நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 8. | எஸ்.டி. மாரியம்மாள் மெட்டல்ஸ், எஸ். வேலன்குடி, சிவகங்கை | மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. |
| 9. | சக்திகுமார் சாகோ பேக்டரி, ஓட்டம்பாறை, சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 10. | நல்லகுமார் சாகோ பேக்டரி, அன்னதானப்பட்டி, சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |
| 11. | ஷங்கர் சாகோ பேக்டரி, சேலம் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டது. |

2003-2004 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக தொழிற்சாலைகளின்மீது வாரியம் மேற்கொண்ட நடவடிக்கைகள்—மார்ச் 2004.

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 1. | லியோ ப்ரைம் கம்பெனி (பி) லிமிடெட், லஷ்மணா நகர், காஞ்சிபுரம் | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |

[2005 செப்டம்பர் 26

| வ. எண் (1) | தொழிற்சாலைகளின் விவரம் (2) | தற்போதைய நிலவரம் (3) |
|---|---|---|
| 2. | ஏ.ஆர். மெட்டலார்ஜிக்கல்ஸ் ப்ரைவேட் லிமிடெட், நல்லகானாகோதம்பள்ளி, சேலம் | மூடுதல் ஆணை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. |
| 3. | இளையராஜா சாகோ பேக்டரி, மீனம்பட்டி, நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 4. | செல்லம் சாகோ பேக்டரி, மீனம்பட்டி, நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 5. | அன்பு வினாயகா ஸ்டார்ச் மற்றும் சாகோ பேக்டரி, நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 6. | ஸ்ரீ பழனி முருகன் சாகோ பேக்டரி, முத்துகாளைப்பட்டி கிராமம், நாமக்கல் | மூடுதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 7. | ஆர்.ஆர். மில்க் (தற்பொழுது ஆர்.இ. டைரி) உத்தமபுரம், தேனி | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |
| 8. | ஆர்.ஜி. புளூ மெட்டல்ஸ், தீவட்டிபட்டி, சேலம் | மூடுதல் ஆணை விலக்கப்பட்டது. |

51—

## இயற்கை வன வேளாண்மைத் திட்டம்

**வினா எண் 62883—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்ட வனப் பகுதி தமிழ்நாடு இயற்கை வன மேலாண்மைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தக் கிராமங்களில் சேர்க்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2005 செப்டம்பர் 26]

(ஆ) இயற்கை மேலாண்மைத் திட்டப் பணிகள், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை 2-ல், 2005-2006 முதல் செயல்படுத்தப்பட உள்ளன. இத்திட்டத்தின்கீழ் கோவை மாவட்டம், உடுமலை வட்டத்தில் பின்வரும் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன:

1. சின்னக்குமாரபாளையம்
2. கொங்குரார்குட்டை (லிங்காபுரம்)
3. திருமூர்த்திமலை
4. வல்லகுண்டாபுரம்
5. ராவணாபுரம்
6. மருத்தியூர்

மேற்படி கிராமங்களில் சின்னக்குமாரபாளையம் மற்றும் கொங்குரார்குட்டை (லிங்காபுரம்) ஆகிய இரண்டு கிராமங்கள் 2005-2006 ஆம் ஆண்டில் திட்டக் கிராமங்களாகத் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், நிலை 2-ன்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ஏனைய கிராமங்களில் அடுத்து வரும் நிதி ஆண்டுகளில் மேற்படி திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன.

52—

## மரங்கள் நடும் திட்டம்

**வினா எண் 71069—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் சாலை ஓரங்களில் நிழல் தரும் மரங்களை நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள் நடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2005 செப்டம்பர் 26

**53—**

## கருவேல் மரங்கள் நடுதல்

**வினா எண் 72060—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, மானம்பள்ளி மற்றும் காடம்பாறை வனப் பகுதிகளிலுள்ள பிரதான சாலைகளின் இரு பக்கங்களிலும் கருவேல் மரங்களை நடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, மானம்பள்ளி மற்றும் காடம்பாறை வனப் பகுதிகளிலுள்ள பிரதான சாலைகளின் இரு பக்கங்களிலும் கருவேல் மரங்கள் நடுவதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**54—**

## கருவேல் மரங்கள் நடுதல்

**வினா எண் 72066—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை பிரதான சாலையில் கருவேல் மரங்களை அதிகமாக நடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, பிரதான சாலையில் கருவேல் மரங்கள் நடவு செய்யும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை. பொதுவாக, தேசிய



2005 செப்டம்பர் 26]

நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் கருவேல் மரம் வளர்ப்பதற்குத் தேர்வு செய்யப்படுவதில்லை. ஏனெனில், இந்த மரத்தில் முள் இருப்பதால் நடைபாதைக்கு ஏற்றதல்ல, மேலும் கருவேல் மரங்கள் சாலை ஓரங்களில் நிழல் தருபவை அல்ல. பெரும்பாலும் சாலை ஓரங்களில், சிறிய இலையுள்ள வேம்பு, புளி, போன்ற பழ மரங்கள்தான் தேர்வு செய்யப்படுகின்றன. இம்மரங்கள்தான் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாசினை அறவே அகற்றுவதற்கும், நிழல் தருவதற்கும் உகந்ததாக இருக்கும்.

(ஆ) வினா எழவில்லை.

**55—**

## நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி

**வினா எண் 36657—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள சென்னேரி நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திலுள்ள சென்னேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 2003-2004-ல் 322 மாணவர்களும், 2004-2005-ல் 298 மாணவர்களும் பயின்றுள்ளனர். இப்பள்ளியில் மூன்று தளத்தினாலான கட்டடங்களும், ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் மங்களூர் ஓட்டிலான இரு கட்டடங்களும் உள்ளன. தற்போது பாராளுமன்ற உறுப்பினர் மத்திய நிதிமூலம் இரண்டு வகுப்பறைக் கட்டடம் கட்டப்பட்டு முடியுந்தருவாயில் உள்ளது. எனவே தற்போதைய நிலையில் போதுமான கட்டட வசதி உள்ளதால், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2005 செப்டம்பர் 26

56—

## கழிப்பிட வசதி

**வினா எண் 38291—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிப் பகுதியில் 2003-2004 ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் கழிப்பிட வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2003-2004-ல் இரண்டு மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளுக்கும், ஒரு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கும் ரூ.60,000/- மதிப்பீட்டில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

57—

## இ.ஆ.ப. தேர்வுப் பயிற்சி மையம்

**வினா எண் 72362—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் இந்திய ஆட்சிப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் துவங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டையில் இந்திய ஆட்சிப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் துவங்கும் எண்ணம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.



2005 செப்டம்பர் 26]

58—

## பால் உற்பத்தியாளர் சங்கம்

**வினா எண் 64504—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அடம்பூர், களபத்து, வேட்டனூர், தொண்டைமானேந்தல், தினையாகுடி மற்றும் இரும்பாநாட்டில் பால் உற்பத்தியாளர் சங்கம் தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அடம்பூர், களபத்து, வேட்டனூர், தொண்டைமானேந்தல், தினையாகுடி மற்றும் இரும்பாநாட்டு கிராமங்களில் நாள் ஒன்றுக்கு 750 லிட்டர் பால் உற்பத்தி செய்து உள்ளூரிலேயே விற்பனை செய்யப்படுகிறது. சுமார் 700 பேரிடம் பசுக்கள்தான் உள்ளன. எருமை இனங்கள் 20 பேரிடம்தான் உள்ளன. இத்தொகுதியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதுமில்லை. சங்கம் அமைக்க அவ்வூரில் உள்ள மக்கள் இதுவரை கோரிக்கை மனு ஏதும் கொடுக்கவில்லை. சங்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டன. இவ்வூர்களில் தேவையான தண்ணீர், மாடுகளுக்கான மேய்ச்சல் நிலம் மற்றும் பால் வழித்தடம் இல்லை. இவ்வூர்களில் உற்பத்தியாகும் குறைந்த அளவு பாலை உள்ளூர்களிலேயே விற்பனை செய்து வருகிறார்கள். பால் வழித்தடம் போன்ற முக்கிய சாத்தியக்கூறுகள் இல்லாததால், சங்கம் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

59—

## மீன் வளர்ப்புப் பண்ணை

**வினா எண் 70310—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் தொகுதி, கொண்டப்பன் நாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள விவசாயிகளுக்கு மீன் வளர்ப்புப் பண்ணை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**60—**

**ஏரிகளில் மீன் வளர்ப்புப் பண்ணை**

**வினா எண் 70311—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து ஏரிகளில் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூரில் உள்ள மீன் பண்ணையில், அனைத்து நீர்நிலைகளிலும் இருப்பு செய்து மீன் வளர்க்கத் தேவையான தரமான மீன் குஞ்சுகள் பெருமளவில் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வருவதால் தனியே அனைத்து ஏரிகளிலும் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**61—**

**மீன் வளர்ப்புப் பண்ணை**

**வினா எண் 70312—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு அடிவாரம், குருவம்பட்டி உயிரியல் பூங்காவில் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு அடிவாரம், குருவம்பட்டி உயிரியல் பூங்காவில் தற்சமயம் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**62—**

**மீன் வளர்த்தல்**

**வினா எண் 70317—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், ஏற்காடு மலையில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள ஏரியில் அரசு சார்பில் மீன் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஏற்காடு மலையில் உள்ள ஏரியில் ஏற்கெனவே மீன் துறைமூலம் மீன் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

**63—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 70928—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மேலமூவர்க்கரை மீனவ மக்களுக்கு சமுதாயக்கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மேலமூவர்க்கரை மீனவ கிராம மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித்தருவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 செப்டம்பர் 26

**64—**

**மீன் அங்காடி கட்டுதல்**

**வினா எண் 72103—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினம் மீனவர்களுக்கு மீன் அங்காடி கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, கோட்டைப்பட்டினம் மீனவர்களுக்கு மீன் அங்காடி கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**65—**

**மீன் அங்காடி**

**வினா எண் 73379—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மீமிசல் மற்றும் கட்டுமாவடி மீனவர்களுக்கு மீன் அங்காடி கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**66—**

**மீன் அங்காடி**

**வினா எண் 73381—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

அறந்தாங்கி தொகுதி, ஜெகதாப்பட்டினம் மீனவர்களுக்கு மீன் அங்காடி கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**67—**

**மீனவர் அங்காடி**

**வினா எண் 73383—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி மற்றும் ஆர்.புதுப்பட்டினம் மீனவர்களுக்கு மீனவர் அங்காடி கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

இல்லை.

**68—**

**மீன் உலர்களம்**

**வினா எண் 73385—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, கோபாலப்பட்டினம் மற்றும் குமரப்பன்வயல் மீனவர் கிராமத்திற்கு மீன் உலர்களம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, கோபாலப்பட்டினம் மற்றும் குமரப்பன்வயல் மீனவர் கிராமத்திற்கு மீன் உலர்களம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 செப்டம்பர் 26

**69—**

### மீன் உலர்களம்

**வினா எண் 73387—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அரசநகரிப்பட்டினம் மற்றும் ஆர்.புதுப்பட்டினம் மீனவர் கிராமங்களுக்கு மீன் உலர்களம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, அரசநகரிப்பட்டினம் மற்றும் ஆர்.புதுப்பட்டினம் மீனவர் கிராமங்களுக்கு மீன் உலர்களம் கட்டித்தரும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**70—**

### மீன் உலர்களம் கட்டுதல்

**வினா எண் 73389—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, முத்துக்குடா மற்றும் பாலக்குடி மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, முத்துக்குடா மற்றும் பாலக்குடி மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**71—**

### மீன் உலர்களம்

**வினா எண் 73391—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

அறந்தாங்கி தொகுதி, ஆலமஞ்சிக்காடு மற்றும் ஜெகதாப்பட்டினம் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஆலமஞ்சிக்காடு மற்றும் ஜெகதாப்பட்டினம் மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித்தரும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**72—**

### மீன் உலர்களம்

**வினா எண் 73393—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, செல்லனேந்தல் (ம) கட்டுமாவடி மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, செல்லனேந்தல் (ம) கட்டுமாவடி மீனவர் கிராமத்தில் மீன் உலர்களம் கட்டித்தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**73—**

### படகு இயக்குதல்

**வினா எண் 65216—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை நகரில் கிளப் மைதானத்தில் படகு இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகரில் கிளப் மைதானத்தில் படகு இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2005 செப்டம்பர் 26

74—

## மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மாற்றம்

**வினா எண் 59513—திரு. நா. சுந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் நகரில் இயங்கி வரும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் மாற்றம் செய்ய அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாவட்ட பெருந்திட்ட வளாகம் உள்ளபோதிலும், அதில் முக்கிய அரசுத் துறைகள் இயங்க போதிய இட வசதி இல்லாததாலும், பல அரசுத் துறை அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதாலும், தனித்தனியாக அலுவலகங்கள் கட்டுவதைத் தவிர்க்கும்பொருட்டு, பல மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டி, வருவாய் மற்றும் பிற துறைகளுக்கும் இட ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டு, அச்செயற்குறிப்பு வருவாய்த் துறையின் பரிசீலனையில் உள்ளது. மேலும், கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடத்தில் இயங்கி வரும் அலுவலகங்களின் பட்டியலில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும் உள்ளது. நாகப்பட்டினம் நகரில் இயங்கி வரும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் மாற்றம் செய்வது குறித்த கருத்துரு ஏதும் அரசு அளவில் இதுவரையில் ஏற்பளிக்கப்படவில்லை. இக்கருத்துரு பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையில் நிலுவையில் உள்ளது.

(ஆ) எழாது.

75—

## வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 71334—டாக்டர் சி. விஜயபாஸ்கர் மற்றும் திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அம்மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கென இடஒதுக்கீடு ஏதும் வழங்கப்படவில்லை. தவிரவும், வருவாய்த் துறைக்குச் சொந்தமான கட்டடங்களோ, அல்லது பொதுப் பணித் துறையினருக்குச் சொந்தமான கட்டடங்களோ ஏதும் காலி இல்லை. எனவே, தொடர்ந்து வாடகைக் கட்டடத்தில் அவ்வலுவலகம் செயல்பட்டு வருகிறது. தற்போது புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்குவதற்கான சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான திட்டம் ஏதும் இத்துறையில் பரிசீலனையில் இல்லை.

76—

## தொழிற்பயிற்சித் திட்டம்

**வினா எண் 75343—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் 2004-2005 ஆம் ஆண்டில் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் எத்தனை பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஒரு தனியார் தொழிற்பயிற்சி மையம் மட்டும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின்கீழ் செயல்பட்டு வருகிறது. அத்தொழிற்பயிற்சி மையத்தில் 2004-2005 ஆம் ஆண்டில் 116 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

77—

## துப்புரவுப் பணியாளர்களுக்குக் காலனி வீடுகள்

**வினா எண் 20628—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

புதுக்கோட்டை நகரில் தொண்டைமான் நகர், ஷூமேக்கர் காலனி ஆகிய பகுதிகளில் வாழும் துப்புரவுப் பணியாளர்களுக்கு அரசு சார்பில் காலனி வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை, தொண்டைமான் நகர், ஷூமேக்கர் காலனி என்பது நகராட்சி வாரச் சந்தையில் ஒரு பகுதியாகும். இதில் சுமார் 5 ஏக்கர் நிலத்தில் 54 துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு மனைகள் ஒதுக்கப்பட்டு, அதில் சொந்த வீடுகள் கட்டிக் குடியிருந்து வருகின்றனர். மேலும், நிதி வசதி மற்றும் இட வசதியின்மையாலும், துப்புரவுப் பணியாளர்களுக்கு அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டும் திட்டம் புதுக்கோட்டை நகராட்சியில் இல்லை.

**78—**

## நவீன உடற்பயிற்சி நிலையம் அமைத்தல்

**வினா எண் 20629—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் அரசு சார்பில் நவீன உடற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்கில் உடற்பயிற்சிக் கூடம் ஒன்று விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பராமரிப்பில் உள்ளது. இந்நகராட்சியின்மூலம் அமைப்பதற்கான திட்டம் ஏதுமில்லை.

**79—**

## கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்துதல்

**வினா எண் 28330—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

சென்னை, ஆர்.கே. நகர் தொகுதியில் கொசுத் தொல்லை அதிகமாக இருப்பதால், கொசு மருந்து அடிக்கும் இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனம் வாங்கித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை நகரில் பரவலாக உள்ள கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்த, வாகனத்தில் பொருத்தப்பட்ட இயந்திரங்கள்மூலம் கொசுக் கொல்லியைப் புகைமூலமாக அடித்து கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

**80—**

## தாய்சேய் நல விடுதிகள்

**வினா எண் 30507—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சியில் உள்ள தாய்சேய் நல விடுதிகள் சரியாகச் செயல்படவில்லை என்பதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சியில் ஆறு தாய்சேய் நல மையங்கள் உள்ளன. இம்மையங்களில் அனைத்து சுகாதாரத் திட்டங்கள் மற்றும் பிற களப் பணிகள் ஆகியவை சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இம்மையங்களில், கருவுற்ற தாய்மார்களுக்கு உரிய பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. மேலும், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தடுப்பூசிகளும் போடப்பட்டு வருகின்றன.

**81—**

## மருத்துவ முகாம்

**வினா எண் 38641—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

*(அ) சேலம் மாநகராட்சி மூலமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் மருத்துவ முகாம் நடத்தும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதி, குடிசைப் பகுதி மற்றும் இதர அனைத்துப் பகுதிகளிலும் வசிக்கும் மக்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நலத் திட்டத்தின் "ஹெல்த் மேளா" மூலம் 40 இடங்களில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

**82—**

## தெரு மின் விளக்குகள்

**வினா எண் 40456—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவொற்றியூர் 25-வது வட்டம், பூங்காவனபுரம், 14-வது தெரு மற்றும் மார்க்கெட் லைன் பகுதியில் தெரு மின் விளக்குகள் எரியாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அவற்றை எரிய வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் 25-வது வட்டம், பூங்காவனபுரம், 14-வது தெரு மற்றும் மார்க்கெட் லைன் பகுதியில் உள்ள தெரு மின் விளக்குகள் தற்போது ஆய்வு செய்யப்பட்டு, நல்ல நிலையில் எரிந்து வருகின்றன.



2005 செப்டம்பர் 26]

**83—**

## குப்பைத் தொட்டிகள்

**வினா எண் 40457—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவொற்றியூர் நகரம், 13-வது வட்டம், திருவொற்றியூர் குப்பம், அப்பர் நகர், கன்னிக்கோயில் தெரு, பட்டினத்தார் கோயில் தெரு, எண்ணூர் எக்ஸ்பிரஸ் தெரு ஆகிய பகுதிகளுக்குக் கூடுதலாகக் குப்பைத் தொட்டிகள் வைக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவொற்றியூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான திருவொற்றியூர் குப்பம், அப்பர் நகர், கன்னிக்கோயில் தெரு, பட்டினத்தார் கோயில் தெரு ஆகிய பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தினசரி வீடு, வீடாகச் சென்று குப்பைகள் சேகரிக்கப்பட்டு, நகராட்சி மற்றும் தனியார் லாரிகள்மூலம் அகற்றப்பட்டு நகராட்சி உரக் கிடங்கில் கொட்டப்பட்டு வருகின்றன. மேலும், இப்பகுதிகளில் தினசரி வீடு, வீடாகச் சென்று குப்பை அகற்றப்பட்டு, நல்ல முறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கூடுதல் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட வேண்டியதில்லை.

**84—**

## பொதுக் கழிப்பிடம் அமைத்தல்

**வினா எண் 40529—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவொற்றியூர் நகரம், 8-வது வட்டத்தில் பொதுக் கழிப்பிடம் அமைத்துத் தரப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் நகராட்சி, 8-வது வார்டு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.2.25 இலட்சம் மதிப்பீட்டில் பொதுக் கழிப்பிடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 2-9-04-ல் பணி உத்தரவு நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

**85—**

## படகு சவாரி

**வினா எண் 43104—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சி, புதுக்குளத்திலுள்ள படகு சவாரி மூலம் நகராட்சிக்குக் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான புதுக்குளத்தில் 19-11-98 முதல் படகு சவாரி நடைபெற்று வருகிறது. தற்போது ஒரு மோட்டார் படகும், 5 பெடல் படகுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சாதாரண நாட்களில் தினமும் குறைந்தது ரூ.100/-ம் பள்ளி விடுமுறை நாட்களில் ரூ.1,000/- வரை நகராட்சிக்கு வருமானம் வருகிறது. ஆண்டுக்கு சராசரியாக ரூ.1.00 இலட்சம் வருமானம் கிடைக்கிறது.

**86—**

## படித்துறைகள்

**வினா எண் 46401—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில், பனங்காட்டாங்குடி சாலையிலுள்ள கழுமலை ஆற்றில் மற்றும் 8-வது வார்டிலுள்ள முதலியார் குளத்தில் படித்துறைகள் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில், பனங்காட்டாங்குடி சாலையிலுள்ள கழுமலை ஆற்றில் மற்றும் 8-வது வார்டிலுள்ள முதலியார் குளத்தில் ஏற்கெனவே, படித்துறைகள் உள்ளன.

**87—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 49058—திரு. கே.எஸ் தென்னரசு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சியில் புதியதாகக் கட்டப்பட்ட பேருந்து நிலையம் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு நகராட்சியால் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம் 12-02-2003 அன்று திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையத்திற்கு அரசு மற்றும் தனியார் பேருந்துகள் வந்து செல்கின்றன.

[2005 செப்டம்பர் 26

88—

## தீப்பிடிக்காத கல்நார் வீடுகள்

**வினா எண் 49455—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் குடிசை வீடுகளில் குடியிருப்பவர்களுக்குத் தீப்பிடிக்காத கல்நார் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

89—

## நவீன மயானம் அமைத்தல்

**வினா எண் 50493—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 10-வது வட்டம், எம்.ஜி.ஆர். நகர், எழில் நகர் அருகில் காலியாகவுள்ள பணக்கார நகர் நிலப் பகுதியில் நவீன மயானம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 10-வது வட்டம், எம்.ஜி.ஆர். நகர், எழில் நகர், அருகில் காலியாகவுள்ள பணக்கார நகர் இடத்தினை



2005 செப்டம்பர் 26]

ஆய்வு செய்ததில், பழைய சுடுகாடு அல்லது இடுகாடு அறிவிக்கப்படவில்லை (Not notified for Burial ground). மேலும், இவ்விடத்தில் புதியதாக மயானம் ஏற்படுத்த அறிவிப்பு வெளியிடப்படவில்லை. இதுபோன்று கருத்துருவும் இல்லை. மேலும், அவ்விடத்திற்குச் செல்ல நேரடி சாலை வசதியுமில்லை. மேற்காணும் காலி நிலம் மாவட்ட ஆட்சியர், வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலம் ஆகும்.

90—

## குடியிருப்புகள்

**வினா எண் 56978—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகராட்சியில் பணிபுரியும் ஆணையர், பொறியாளர் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 185242 சென்னை-600 008

91—

## சூரிய ஒளி விளக்கு

**வினா எண் 59455—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



V 211,31 805 P05.85.1

[2005 செப்டம்பர் 26

(அ) உடுமலைப்பேட்டை ஒன்றியம், களி கிராமம், திருமூர்த்தி நகர் மலைவாழ் மக்கள் பகுதி குடியிருப்பில் சூரிய ஒளி விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2004-2005 ஆம் நிதியாண்டில் சூரிய ஒளி விளக்குகள் அமைப்பதற்காக அரசிடமிருந்து ஒதுக்கீடு ஏதும் பெறப்படவில்லை. ஒதுக்கீடு பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் மேற்படி மலைவாழ் மக்கள் குடியிருப்புப் பகுதியில் சூரிய ஒளி விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**92—**

## திருமண மண்டபம்

**வினா எண் 60106—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரத்தில் திருமண மண்டபம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி நகரத்தில் திருமண மண்டபம் கட்டித்தர போதுமான இட வசதி இல்லை.



2005 செப்டம்பர் 26]

**93—**

## குழந்தைகள் ரயில் வண்டி

**வினா எண் 63255—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு நகராட்சி, வ.உ.சி. பூங்காவில் குழந்தைகள் விளையாடுவதற்காக இயங்கிய ரயில் வண்டி நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வ.உ.சி. பூங்காவில் சிறுவர் பூங்கா பகுதியில் இயக்கப்பட்டு வந்த ரயிலும், ரயில் தண்டவாளமும் மிகவும் பழுதுபட்டுள்ளதால், இந்நகர்மன்றத் தீர்மான எண் 594, நாள் 22-09-1997-ன்படி கழிவு செய்யத் தீர்மானித்து, விதிமுறைகளின்படி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு 20-05-1998 ஆம் தேதி ஏலம் விடப்பட்டது. எனவே, வ.உ.சி. பூங்காவில் மீண்டும் சிறுவர் ரயில் நடத்தும் திட்டம் தற்சமயம் நகராட்சிக்கு இல்லை.

**94—**

## ஆக்கிரமிப்புக்களை அகற்றுதல்

**வினா எண் 63374—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை நகரம் வாரச் சந்தை செல்லும் ராஜேந்திர சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்பு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி வாரச் சந்தை செல்லும் ராஜேந்திர சாலையிலிருந்த சாலையோர ஆக்கிரமிப்புகள் 4-11-2004 ஆம் தேதி நெடுஞ்சாலைத் துறையினரால் அகற்றப்பட்டு விட்டன.

**95—**

**கணினி மற்றும் உபகரணங்கள்**

**வினா எண் 63905—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகராட்சிப் பள்ளிகளுக்குக் கணினி மற்றும் உபகரணங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சி அலுவலக வளாகத்திலேயே கணினிப் பயிற்சி அளிக்க நகர கல்விக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சி அளிக்க, பயிற்சியாளர்களுக்கு ஊதியம் அளித்திட, நகரில் உள்ள தொண்டு நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் நிதியாண்டு முதல் இப்பயிற்சித் திட்டம் தொடங்கப்படும்.

**96—**

**நூலகம் கட்டுதல்**

**வினா எண் 64855—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, சீர்காழியிலுள்ள காந்தி பூங்காவில் நூலகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காந்தி பூங்காவில் நூலகம் கட்ட நூலகத் துறையால் இடம் ஒதுக்க கேட்கப்பட்டது. நகர்மன்றம் அக்கோரிக்கையைப் பரிசீலனை செய்து, நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று, இடம் ஒதுக்கித் தரப்படும் என்று முடிவு செய்துள்ளது. தற்போது பூங்காவை சுற்றுலாத் துறையின் சோழ நாட்டு திருப்பதிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாலும், மேலும், இந்நகரில் உள்ள ஒரே பெரிய பூங்கா இது ஒன்றுதான் என்பதாலும், முந்தைய மாடு அடைக்கும் இடத்தில் உள்ள வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடத்தில் நூலகம் கட்ட மாவட்ட ஆட்சியரை அணுகி முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**97—**

**நவீன கழிப்பிடங்கள்**

**வினா எண் 65500—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் புதிய பேருந்து நிலையம் மற்றும் சேலம் 2-வது தொகுதி புதிய பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பிடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள மத்திய பேருந்து நிலையத்தில் தற்பொழுது செயல்பட்டு வரும் இரண்டு நவீன கட்டணக் கழிப்பிடங்கள் நல்ல நிலையில் பயணியர் பயன்பாட்டில் உள்ளன. எனவே, கூடுதலாக நவீன கழிப்பிடங்கள் புதிய பேருந்து நிலையத்தில் கட்டப்படத் தேவையில்லை.*

**98—**

## சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 66596—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோவை மாநகர 60-வது டிவிசன் வேலாண்டிபாளையம் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது செப்பனிடப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாநகராட்சி 60-வது டிவிசன் வேலாண்டிபாளையம் சாலை (தடாகம் சாலை)-யில் நெடுஞ்சாலைத் துறைமூலம் தார்ச் சாலை புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது.*

**99—**

## கழிப்பிடங்கள் பராமரித்தல்

**வினா எண் 66729—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) சேலம் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பிடங்களைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் 2 நவீன கட்டணக் கழிப்பிடங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.*

**100—**

## தனியார்மூலம் குடிநீர் விநியோகம்

**வினா எண் 70943—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சி, குடிநீர் விநியோகம் தனியார்மூலம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் குடிநீர் விநியோகம் தனியார்மூலம் செய்யும் திட்டம் ஏதும் இல்லை.*

[2005 செப்டம்பர் 26

**பட்டியல் 8 @**

**1—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 2351—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் இலவச வீட்டுமனைப் பட்டா கோரி வந்துள்ள மனுக்கள் 2000-2001-ல் எத்தனை?

(ஆ) அதில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது எத்தனை?

(இ) மீதம் உள்ள மனுக்களுக்கு இந்த நிதியாண்டுக்குள் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பூலாம்பட்டி பேரூராட்சியில் இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு 2000-2001-ல் வரப்பெற்ற மனுக்கள் .. 154

(ஆ) அவற்றில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டவை .. 102

(இ) தார்சு வீடு மற்றும் ஓட்டு வீடு கட்டி வறுமைக் கோட்டிற்குக் கீழ் அல்லாமல் வசித்து வரும் நபர்களுக்கு நிலக்கிரயம் செலுத்தும்படித் தெரிவிக்கப்பட்டிருந்தும், அரசு ஆணை எண் 168, வருவாய்த் துறை, நாள் 21-3-2000-ல் வழங்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் (31-3-2001) அரசுக்கு நிலக்கிரயம் செலுத்தாத காரணத்தால், மீதமுள்ள 52 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை.

---

@ இப்பட்டியலிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் விடையளித்த நாளன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.



2005 செப்டம்பர் 26]

**2—**

## இலவசப் பட்டா

**வினா எண் 8119—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி பேரூராட்சி, ச.எண் 238/2-ல் வசித்து வரும் மக்களுக்கு இலவசப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி கிராமம், புல எண்கள் 237/1 & 238/2 மந்தைவெளி புறம்போக்கு எனப் பாகுபாடு செய்யப்பட்ட நிலம், அரசு ஆணை எண் 168, வருவாய்த் துறை, நாள் 27-3-2000-ன்படி நத்தமாக மாறுதல் செய்யப்பட்டு 1.20.0 ஹெக்டேர் நிலத்தில், 0.19.5 ஹெக்டேர் நிலத்தில் வீடுகள் கட்டி அனுபோகம் செய்து வரும் பாகம் உட்பிரிவு செய்யப்பட்டு, அக்காலச் சந்தை மதிப்பின்படி, நிலக்கிரயம் நிர்ணயம் செய்து, நிலக்கிரயம் செலுத்தக் கோரப்பட்டதில் 31-3-01-க்குள் நிலக்கிரயம் செலுத்தியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. மீதமுள்ள சிலர் 31-3-2001-க்குள் நிலக்கிரயம் செலுத்தாததால், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை.

**3—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 23844—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்து வரும் நபர்களுக்கு அரசு பட்டா வழங்க ஆவன செய்யுமா?

[2005 செப்டம்பர் 26

(ஆ) ஆம் எனில், சேலம் மாநகர் பஞ்சந்தாங்கி ஏரியில் குடியிருப்போருக்குப் பட்டா வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேலம் வட்டம், வார்டு ஐ. பிளாக், 11, நகரளவு எண் 35/1எ1, 11.40 ஏக்கர் நிலம் "ஏரி" என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலம் சேலம் மாநகர எல்லைக்குள் அமைந்துள்ளது. மேலும், நீர்நிலைகள், குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள் என வகைபாடு கொண்ட நிலங்களுக்குப் பட்டா வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சி எல்லைப் பகுதிக்குள் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்புலங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

**4—**

## கள்ளச்சாராய விற்பனையைத் தடுத்தல்

**வினா எண் 24658—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யார் தொகுதி, மோராணம் காவல் நிலைய எல்லைகளில் கள்ளச்சாராயம் விற்பனையாவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், மோராணம் காவல் நிலைய எல்லை மற்றும் செய்யார் தொகுதி ஆகிய இடங்களில் 2004 ஆம் ஆண்டு 31-8-2004 வரை தீவிர மதுவிலக்கு வேட்டைகள் நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவால், மோராணம் காவல் நிலைய எல்லையில் கள்ளச்சாராயம் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவை குறித்து மொத்தம் 152 வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஆண், பெண் உள்பட 82 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், குண்டர் சட்டத்தின்கீழ் ஒருவர் கைது



2005 செப்டம்பர் 26]

செய்யப்பட்டுள்ளார். மேற்படி மதுவிலக்கு வேட்டை நடத்தியதன்மூலம் 2,613 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. இக்குற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மொபட் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இதுபோன்று, செய்யாறு தொகுதி மற்றும் செய்யாறு காவல் நிலைய எல்லையிலும் மதுவிலக்கு வேட்டை நடத்தப்பட்டு, முறையே 1,761 மற்றும் 637, ஆக மொத்தம் 2,398 வழக்குகள் போடப்பட்டுள்ளன. ஆண், பெண் உள்பட 1,244 நபர்கள் மற்றும் 332 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 38,034 லிட்டர், 4,404 லிட்டர் கள்ளச்சாராயம் 315 லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. 12 மொபட் மற்றும் 8 மொபட் வாகனங்கள் 12, 18 மிதி வண்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. தொடர்ந்து செய்யார் காவல் நிலைய எல்லை, மோராணம் காவல் நிலைய எல்லை மற்றும் செய்யார் தொகுதி ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட மதுவிலக்கு வேட்டைகள் காரணமாக மேற்படி இடங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**5—**

## குளம் தூர்வாருதல்

**வினா எண் 31882—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னான்டார் கோயில் ஒன்றியத்தின் பெரிய குளத்தைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னான்டார் கோயில் ஒன்றியத்தில் ஐந்து பெரிய குளங்கள் பொதுப் பணித் துறைப் பராமரிப்பில் உள்ளன:

[2005 செப்டம்பர் 26

(1) சென்னயக்குடி பெரிய குளம்

(2) தென்னங்குடி பெரிய குளம்

(3) வித்தனாக்குறிச்சி பெரிய குளம்

(4) பெரம்பலூர் செட்டி குளம்

(5) மின்னத்தூர் பெரிய குளம்

**சென்னயக்குடி பெரிய குளம்**

இக்குளம் சம்பூர்ணா வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூபாய் 4.50 இலட்சம் செலவில் தூர்வாரப்பட்டுள்ளது.

**தென்னங்குடி பெரிய குளம்**

இக்குளம், கண்மாய்கள் தூர்வாரும் திட்டத்தின்கீழ் ரூ.2.40 இலட்சம் செலவில் தூர்வாரப்பட்டுள்ளது.

**வித்தனாக்குறிச்சி பெரிய குளம்**

இக்குளம் கண்மாய்கள் தூர்வாரும் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூ.6,80,000/- செலவில் தூர்வாரப்பட்டு கரை பலப்படுத்தப்பட்டுள்ளது.

**பெரம்பலூர் செட்டி குளம்**

இக்குளம் NABARD வங்கித் திட்டம் நான்காம் கட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**மின்னத்தூர் பெரியகுளம்**

இக்குளம் சம்பூர்ணா வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் செலவில் தூர்வாரப்பட்டுள்ளது.

**6—**

**தூர்வாரும் பணி**

**வினா எண் 39035—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை & வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சியிலிருந்து தாண்டவன்குளம் ஊராட்சி முடவனாறு வரை செல்லும் வாலி ஓடை வடிகாலின் இரு கரைகளையும் பலப்படுத்தி தூர்வாரி சீர்செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சியிலிருந்து தாண்டவன்குளம் ஊராட்சி, முடவனாறு வரை செல்லும் வாலி ஓடை வடிகாலின் இரு கரைகளையும் தூர்வாரி பலப்படுத்தும் பணி ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட்டு, மார்ச் 2005-ல் முடிக்கப்பட்டுவிட்டது.

**7—**

**சட்டர்ஸ் அமைத்தல்**

**வினா எண் 53217—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சி, ரெங்க சமுத்திரம் பட்டகால் வாய்க்கால் வடிகாலில் சட்டர்ஸ் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சி, ரெங்க சமுத்திரம் பட்டகால் வடிகால் அடைப்புப் பலகைகள் புதுப்பிக்கும் பணிகள் மார்ச் 2005-ல் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டன.

[2005 செப்டம்பர் 26

8—

## ஏரிகளை மராமத்து செய்தல்

**வினா எண் 55517—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி பொதுப் பணித் துறை உப கோட்டம் விளத்தூர் ஏரி, சிறுவிளத்தூர் ஏரி, மணலூர் ஏரி, அம்மையன்வயல் ஏரி, சிறுகவயல் ஏரி, குருவாடியேந்தல் ஏரி ஆகிய ஏரிகளைத் தூர்வாரி மராமத்து செய்து தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் :**

**மணலூர் ஏரி :**

இந்த ஏரி 2000-2001 ஆம் நிதி ஆண்டில் ரூ.2.50 இலட்சத்திற்குத் தூர்வாரி மதகுகளைப் பழுதுபார்த்தல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சிறுகவயல் ஏரி :**

இக்கண்மாயில் 2002-2003 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 1.86 இலட்சம் செலவில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விளத்தூர் ஏரி, சிறுவிளத்தூர் ஏரி, அம்மையன்வயல் ஏரி மற்றும் குருவாடியேந்தல் ஏரி ஆகிய நான்கு ஏரிகளும் நிதிநிலைக்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

9—

## ஏரி மராமத்துப் பணி

**வினா எண் 58020—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி பொதுப் பணித் துறை உப கோட்டம், பரனூர் ஏரி, பயமறியானேந்தல் ஏரி, கரகத்திக்கோட்டை ஏரி, பெருந்துறைநாதபுரம் ஏரி, மேலப்பரப்பனூர் ஏரி ஆகியவற்றைத் தூர்வாரி மராமத்து செய்து தர அரசு ஆவன செய்யுமா?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் :**

**பரனூர் ஏரி :**

இக்கண்மாயில் ரூ.3.15 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணியும், மதகுகள் பழுதுபார்த்தல் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பயமறியானேந்தல் ஏரி :**

இக்கண்மாயில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணியும், மதகுகள் பழுதுபார்த்தல் பணியும் 2000-2001 ஆம் ஆண்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**கரகத்திக்கோட்டை ஏரி :**

NABARD வங்கி நிதி உதவி R.I.D.F.-5-ன்கீழ் ரூ.45.01 இலட்சம் மதிப்பீட்டில் ஏரியைத் தூர்வாரி நவீனப்படுத்தும் திட்டப் பணிகள் 8-1-2003-ல் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிக்கான மொத்தச் செலவினம் ரூ.44,73,617/- ஆகும்.

**பெருந்துறைநாதபுரம் ஏரி :**

இக்கண்மாயினைத் தூர்வாரி கரையைப் பலப்படுத்த ரூ. 2.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. நிதிநிலைக்கேற்ப இப்பணி செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மேலப்பரப்பனூர் ஏரி :**

ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ் கண்மாயைத் தூர்வாரி, கரையைப் பலப்படுத்தும் பணி, மதகுகள் மராமத்துப் பணிகள், வருங்கு வாய்க்கால்கள், பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணி--ரூ.5.8 இலட்சம் மதிப்பீட்டில், 2003-2004 ஆம் ஆண்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

10—

## ஏரியைத் தூர்வாருதல்

**வினா எண் 67372—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், கொணலை ஏரியைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், கொணலை ஏரியை கடந்த ஆண்டு 2003-2004-ல் வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.7.00 இலட்சத்திற்குத் தூர்வாரி, கரை பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஏரியில் உள்ள மூன்று மதகுகளும் சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஏரியின் வரத்து வாய்க்கால் 2,900 மீ. நீளத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

**11—**

### விட்டுமனைப் பட்டா

**வினா எண் 70012—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு ராஜாஜிபுரத்தில் வசிக்கும் 100 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஈரோடு டவுன், ராஜாஜிபுரம் கிராமம், வார்டு 'சி', பிளாக் 14, நகரளவு எண் 34. கிராமக் கணக்குகளில் ம.தீ.ப.எண் 4976, ஆணையர், ஈரோடு நகராட்சி எனத் தாக்கலாகி உள்ளது. மேற்படி நிலம் நகராட்சிக்குச் சொந்தமாக உள்ளதால், இந்நேர்வில் குறிப்பிடப்பட்டிருக்கும் 100 பேர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.



2005 செப்டம்பர் 26]

**12—**

### நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள்

**வினா எண் 46161—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற வளாகத்தில் உள்ள நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு அரசின் நிதிநிலைக்கேற்ப தக்க சமயத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**13—**

### விரைவு நீதிமன்றங்கள்

**வினா எண் 76221—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் விரைவு நீதிமன்றங்களை அதிகப்படுத்த அரசிடம் கருத்துரு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் விரைவு நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையிலோ அல்லது அரசின் பரிசீலனையிலோ தற்போது இல்லை.

[2005 செப்டம்பர் 26

14—

## சுய உதவிக் குழுக்களுக்குக் கடன்

**வினா எண் 70818—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் பெற்ற சுய உதவிக் குழுக்கள் கடனைத் திருப்பி செலுத்துகிறார்களா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள மொத்த சுய உதவிக் குழுக்கள் 107. அவற்றில் கூட்டுறவு வங்கிகளின்மூலம் கடன் வசதி பெற்ற குழுக்கள் 31. இவை பெற்ற கடன்களில், 1-4-2004 அன்றைய தேதிப்படி, காசுக் கடன் நிலுவை ரூ.2.06 இலட்சம். 2004-2005-ல் பெறப்பட்ட கடன் தொகை ரூ.0.63 இலட்சம். 2004-2005-ல் திருப்பிச் செலுத்தப்பட்ட கடன் தொகை ரூ.0.43 இலட்சம். இவற்றுள் தவணை கடந்த கடன் ஏதும் இல்லை.

15—

## சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா எண் 10676—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், எம்.என்.பட்டி துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எம்.என்.பட்டி துவக்கப் பள்ளிக்கு 1996-97 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.30,000/- மதிப்பீட்டில் சத்துணவுக் கூடம் கட்டப்பட்டு, தற்போது செயல்பாட்டில் உள்ளது. இச்சத்துணவுக் கூடம் எவ்விதப் பழுதுமின்றி நன்முறையில் உள்ளதால், இதற்கு மீண்டும் சத்துணவு மையக் கட்டடம் கட்டத் தேவையில்லை.

16—

## சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா எண் 32234—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அரசு மண்டபம் ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியத்தைச் சார்ந்த புதுத்துறை மண்டபம் உதவிபெறும் தொடக்கப் பள்ளி சத்துணவு மையக் கட்டடம் பிப்ரவரி 2005-ல் நிர்வாகியால் தீப்பிடிக்காத கூரையாக (ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்) கட்டித்தரப்பட்டு சத்துணவு மையம் செயல்பட்டு வருகிறது.

17—

## அங்கன்வாடிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 59690—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

(அ) சீர்காழி தொகுதி, கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி கிராமத்தில் அங்கன்வாடிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி கிராமத்தில் 1-6-2004 முதல் புதிய அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. இதற்குப் புதிய கட்டடம் கட்டும்பொருட்டு இடம் தேர்வு செய்யப்பட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையர் நிதியிலிருந்து புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**18—**

## இரவுப் புகலிடங்கள்

**வினா எண் 64619—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் மாநில அரசின் சாலையோர சிறார்களுக்கான இரவுப் புகலிடங்கள் திட்டம் செயல்படுத்தப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தினால் பயனடைந்தோர் எத்தனை பேர்?

(இ) காணாமல் போன சிறார்களுக்குத் தகவல் மையம் ஏற்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டத்தில் 300 சிறார்களுக்கான இரவுப் புகலிடம் திருச்சிராப்பள்ளி பல்நோக்கு சமூக நல மையம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் மத்திய அரசின் நிதியுதவியுடன் நடத்தப்பட்டு வருகிறது. இப்புகலிடங்களில் சாலையோர சிறார்கள் 24 மணி நேரமும் வந்து செல்லலாம். இங்கு இவர்களுக்கு இரவில் தூங்கப் பாதுகாப்பான இடமும், நல்ல குடிநீர் வசதி, குளியலறை, கழிவறை வசதிகள், பொழுதுபோக்கு மற்றும் முதலுதவி அளிப்பது கல்வி மற்றும் வாழ்க்கைக் கல்வியுடன் பயனுள்ள தொழிற்கல்வியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள் எனில், அவர்களுக்கு ஏற்ற நிறுவனத்தில் சேர்த்து அவர்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு வழிவகை செய்கிறது. பெற்றோர் உள்ள குழந்தைகளை அவர்களது குடும்பத்துடன் சேர்க்கவும் வழிவகை செய்யப்படுகிறது.



(இ) தற்போது காணாமல் போன சிறார்களுக்கான தகவல் மையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய இடங்களில் மட்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக, அனைத்து மாவட்டங்களிலும் காணாமல் போகும் சிறுவர் பற்றிய தகவல்கள், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம்மூலம் பெறப்பட்டு, காவல் துறையினரால் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, தனியாகத் தகவல் மையம் ஏற்படுத்தபட வேண்டிய அவசியம் எழவில்லை.

**19—**

## அங்கன்வாடி மையங்கள்

**வினா எண் 65806—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, நெரப்பாக்கம் ஊராட்சி அகஸ்தீஸ்வரமங்கல கிராமம் மற்றும் குழிப்பான்தண்டலம் ஊராட்சி, ஆண்டிக்குப்பம் கிராமத்தில் அங்கன்வாடி மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கற்பட்டு தொகுதி, நெரப்பாக்கம் ஊராட்சியில் அகஸ்தீஸ்வரமங்கலத்தில் ஏற்கெனவே 1-12-2004 முதல் புதிய

[2005 செப்டம்பர் 26

அங்கன்வாடி மையம் செயல்படுகிறது. குழிப்பாந்தண்டலம் ஊராட்சியில் உள்ள ஆண்டிக்குப்பம் கிராமத்தில் புதிய மையம் அமைக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்யப்பட்டு, மையம் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**20—**

### சத்துணவுப் பணியாளர் பணி நிரந்தரம்

**வினா எண் 79032—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் சத்துணவுத் திட்டம் நிரந்தரத் திட்டமாக இருப்பதால் சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரமாக அரசுப் பணியாளராகச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்/ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்/உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம் ஆகிய மூன்று வகைத் திட்டங்களில் சுமார் 2 இலட்சம் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அங்கன்வாடி பணியாளர்கள் தவிர மற்றவர்கள் தற்போது உள்ளாட்சி அமைப்புகளின் நிரந்தரப் பகுதிநேரப் பணியாளர்கள் (Part time Permanent Employees of respective local bodies) என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். சத்துணவு அமைப்பாளர்களுக்கு நிலையில்லா ஊதிய விகிதத்தில் (Non Standard time scale) ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு அகவிலைப் படியும் வழங்கப்படுகிறது. தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படி வழங்கும்போதெல்லாம் அவர்களுக்கும் ரூ.20/-, ரூ.10/- தொகுப்பூதிய உயர்வும் வழங்கப்படுகிறது. தற்போது அவர்கள் ஓய்வு பெறும்போது ஒட்டுமொத்த ஓய்வூதியம் ரூ.50,000/-, ரூ.20,000/- வழங்கப்படுகிறது. இவர்கள் அனைவரையும் அரசு ஊழியர்கள் ஆக்கினால், மருத்துவப் படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி, ஈடுசெய்யும் விடுப்பு, மருத்துவ விடுப்பு போன்ற பல்வேறு இதர சலுகைகளையும் வழங்க வேண்டிய கட்டாயமும், அரசுக்கு அதிக நிதிச் சுமையும் ஏற்படும்.



2005 செப்டம்பர் 26]

மேலும், சத்துணவுத் திட்டத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டில் அரசு ரூ.659.39 கோடி ஒதுக்கியது. 2004-2005 ஆம் ஆண்டு ரூ.705.35 கோடி (மத்திய அரசு உதவி உட்பட) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டு ரூ.742.44 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரமாக அரசுப் பணியாளர்களாக அறிவித்தால் அரசுக்குப் பெருத்த நிதிச் சுமை ஏற்படும்.

**21—**

### சத்து மாவு ஏற்றுமதி

**வினா எண் 49608—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்குமூலம் சத்து மாவு தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்குமூலம் சத்து மாவு தயாரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**22—**

### குடிசைத் தொழில் தொடங்குதல்

**வினா எண் 64122—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகை மாவட்டம், சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் ஊராட்சியில் பனை ஓலைகளைப் பயன்படுத்தி மகளிர் சுய உதவிக் குழுமூலம் குடிசைத் தொழில் தொடங்க அரசு முன்வருமா?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

நாகை மாவட்டம், சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் ஊராட்சியில், ஔவை தொண்டு நிறுவனத்தின்கீழ் செயல்பட்டு வரும், மகளிர் சுய உதவிக் குழுமூலம் பனை ஓலைகளைப் பயன்படுத்தி, குடிசைத் தொழில் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

**23—**

## பட்டு நூற்பாலை

**வினா எண் 80630—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், அக்ரகாரம் ஊராட்சியில் பட்டு நூற்பாலையைத் தொடங்கி வெற்றிகரமாக இயக்கி, பணியாளர்களை நிரந்தரமாக்கவும், மேலும், புதிய பணி வாய்ப்பு உருவாக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வடாற்காடு மாவட்டம், நாட்ராம்பள்ளி, தொகுதியில், ஜோலார்பேட்டை ஒன்றியம், அக்ரகாரம் ஊராட்சியில் அமைந்துள்ள பட்டு நூற்பாலை நலிவடைந்துள்ளதைத் தொடர்ந்து, செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லாத நிலை உள்ளது. மேற்படி நூற்பாலையானது, 7-7-1983-ல் பதிவு செய்யப்பட்டு, 1-4-1987-ல் செயல்படத் துவங்கியது. அரசிடமிருந்து பல்வேறு திட்டங்களின்கீழ் கீழ்க்கண்டவாறு ரூ.62.75 இலட்சம் உதவிகள் பெற்றுள்ளது:

| | | |
|---|---|---|
| (1) | மாநில அரசு பங்குத் தொகை | ரூ.55,000/- |
| (2) | மத்திய அரசு சிறப்பு உதவித் திட்டம் (கட்டடம் கட்ட) | ரூ.13,50,000/- |
| (3) | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (இயந்திரம் கொள்முதல்) | ரூ.13,50,000/- |



2005 செப்டம்பர் 26]

| | | |
|---|---|---|
| (4) | மத்திய சிறப்பு உதவித் திட்டம் (குழாய்க் கிணறு அமைத்தல்) | ரூ.18,750/- |
| (5) | தாட்கோ மானியம் (நடைமுறை மூலதனம்) | ரூ.25,00,000/- |
| (6) | தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் (பங்கு மூலதனம்) | ரூ.10,00,000/- |
| | மொத்தம் | ரூ.62,73,750/- |

மேற்கண்ட நிதி உதவிகளின்படி பட்டு நூற்பாலையானது ரூ.12,03,666/- மதிப்பில் சொந்தக் கட்டடம் கட்டி ரூ.15,53,333/- மதிப்பிற்கு 720 கதிர்கள் கொண்ட பட்டு முறுக்கேற்றும் இயந்திரங்கள் மற்றும் 48 பேசின்களை நிறுவியுள்ளது. இந்தப் பட்டு நூற்பாலை உற்பத்தி துவங்கிய ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் நட்டத்திலேயே இயங்கி வந்துள்ளது.

**கடந்த ஐந்து ஆண்டுகளில் பட்டு நூற்பாலையின் செயல்பாடுகள் விவரம் பின்வருமாறு:—**

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை | ஆண்டு | குவிந்த திரண்ட நட்டம் |
|---|---|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | | (ரூ. இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1999-2000 | 59.35 | 46.73 | 5.69 | 28.19 |
| 2000-2001 | 54.81 | 66.60 | 3.58 | 31.77 |
| 2001-2002 | 20.14 | 26.36 | 3.48 | 35.25 |
| 2002-2003 | 14.17 | 15.91 | 11.03 | 36.28 |
| 2003-2004 | 6.99 | 6.88 | 0.72 | 37.00 |
| 2004-2005 | பட்டு நூற்பாலை செயல்படவில்லை | | | 40.00 |

[2005 செப்டம்பர் 26

இப்பட்டு நூற்பாலை மாநிலக் கூட்டுறவு நிறுவனமான TANSILK, காஞ்சிபுரம், நிறுவனத்தில் உறுப்பினராக ஆரம்ப காலத்தில் பட்டு நூற்புப் பணியினையும், பின்னர் பட்டு முறுக்கேற்றும் பணியினையும் மேற்கொண்டு, இணையத்துடன் வியாபார வரவு-செலவுகள் செய்து வந்தது. பட்டு நூற்பாலையின் செலவினங்களுக்கு ஏற்ப வியாபாரம் அதிகரிக்காத காரணத்தாலும், தொழிலாளர்களின் ஒத்துழைப்பின்மை காரணமாகவும், ஒவ்வோர் ஆண்டும் நட்டம் அதிகரித்து குறுகிய காலத்திற்குள் ரூ.40.00 இலட்சம் திரண்ட நட்டம் அடைந்துள்ளது. சங்கத்தின் மேற்காணும் செயல்பாடு காரணமாக மாநிலச் சங்கமான TANSILK நிறுவனமும் இச்சங்கத்திற்குக் கடன் அடிப்படையில் கச்சாப் பட்டு வழங்கி உதவ இயலாத நிலை உள்ளது. பட்டு நூற்பாலை நலிவடைந்து, அனைத்து நிதி ஆதாரங்களையும் இழந்துள்ளதாலும், தற்போது செயல்படாத நிலையில் மீண்டும் உயிரூட்ட வாய்ப்புகள் இல்லாததாலும், பட்டு நூற்பாலையின் தொழிலாளர்களின் ஒத்துழைப்பின்மையால், பட்டு நூற்பாலையைத் தொடங்கி, பணியாளர்களை நிரந்தரம் செய்ய வாய்ப்புகள் இல்லை. நிதி ஆதாரங்கள் அனைத்தும் இழந்த நிலையில் மீண்டும் நிதியுதவி பெற வாய்ப்புகள் இல்லை.

**24—**

## விடுதிகள் பராமரிப்பு

**வினா எண் 61954—திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் மாணவ, மாணவியர் விடுதிகள் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்று தேசிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் ஆணையம் (National Commission for S.C., S.T.,) தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு சில விடுதிகளில் காணப்பட்ட சிறு சிறு குறைபாடுகளைக் களைந்து, அனைத்து விடுதிகளையும் சீராகப் பராமரிக்குமாறு அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



2005 செப்டம்பர் 26]

**25—**

## இட ஒதுக்கீடு

**வினா எண் 70287—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் பணிபுரிய 19 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நடத்தும் பள்ளிகளில் 19% மாணவர் சேர்க்கை மற்றும் பணியாளர் சேர்க்கை பின்பற்றப்படுகிறது. அதேபோல், அரசின் நிதி உதவிபெறும் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்படுகிறது. ஆனால் அரசு உதவிபெறாத தனியார் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை.

**26—**

## 2 ஆம் உலகப் போர் வீரர்களுக்கு ஓய்வூதியம்

**வினா எண் 78125—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இரண்டாவது உலகப் போரில் பாதிக்கப்பட்ட வீரர்களின் குடும்பத்திற்கு எவ்வளவு பேருக்கு அரசு ஓய்வூதியம் வழங்கி வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் இரண்டாவது உலகப் போரில் ஈடுபட்டு பாதிக்கப்பட்ட போர் வீரர்களுக்கு ஓய்வூதியம் ஏதும் வழங்கப்படுவதில்லை. எனினும், தமிழக அரசு தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல நிதியிலிருந்து எவ்வித மாதாந்திர நிதியுதவியும் பெறாத, மாத வருமானம் ரூ.500/-க்கு மிகாமல் உள்ள தமிழகத்தைச் சேர்ந்த இரண்டாம் உலகப் போர்

[2005 செப்டம்பர் 26

வீரர்களுக்கு மாதம் ரூ.700/-ம், அவர்களின் விதவையர்களுக்கு மாதம் ரூ.500/-ம் என நிதியுதவி வழங்கி வருகிறது.

**பயனாளிகளின் விவரம்**

| | | |
|---|---|---|
| முன்னாள் படை வீரர் | — | 3,692 |
| விதவையர் | — | 6,589 |

**27—**

**கணினிமயமாக்குதல்**

**வினா எண் 83866—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் முன்னாள் படை வீரர்கள் நல அலுவலகங்களைக் கணினிமயமாக்கும் பணியின் தற்போதைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

முன்னாள் படை வீரர் நலத் துறையில், சென்னையிலுள்ள முன்னாள் படை வீரர் நல இயக்ககம் மற்றும் 13 மாவட்ட அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. அரசாணை எண் 503, பொது (முன்னாள் படை வீரர்) துறை, நாள் 17-05-2005 மூலம் அனுமதிக்கப்பட்டவாறு, மேலும் 10 மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகங்களில் கணினிகள் நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் இங்கு கணினிகள் அமைக்கப்பட்டுவிடும். இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 2 மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகங்கள் மட்டுமே கணினிமயமாக்கப்பட வேண்டியுள்ளன.

**28—**

**முன்னாள் படை விரர் நல அலுவலகம்**

**வினா எண் 83867—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் முன்னாள் படை வீரர்கள் நல அலுவலகங்களை மாவட்டத் தலைநகரங்களில் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

முன்னாள் படை வீரர் நலத் துறையின் 25 மாவட்ட முன்னாள் படை வீரர் நல அலுவலகங்களில், காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்கள் தவிர, மீதமுள்ள 23 மாவட்டங்களில் மாவட்டத் தலைநகரங்களிலேயே முன்னாள் படை வீரர் நல அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களான திருவாரூர், நாமக்கல், கரூர், பெரம்பலூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் முன்னாள் படை வீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர் எண்ணிக்கை 7,500-க்குக் குறைவாக உள்ளதால், மத்திய இராணுவ அமைச்சக விதி/வழிமுறைகளின்படி, இம்மாவட்ட தலைநகரங்களில் முன்னாள் படை வீரர் நல அலுவலகம் தோற்றுவிக்கப்படவில்லை.

**29—**

**இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்குதல்**

**வினா எண் 73069—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள காளியாபுரம், பெத்தநாயக்கனூர் ஊராட்சி மற்றும் ரமணமுதலிபுதூர் ஊராட்சிகளில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு 2005-2006 ஆம் நிதி ஆண்டில் இலவசமாக சலவைப் பெட்டிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசு சலவைப் பெட்டிகளை வழங்கத் தயாராக உள்ளது. ஆனால், வால்பாறை தொகுதியிலுள்ள, காளியாபுரம், பெத்தநாயக்கனூர் மற்றும் ரமணமுதலிபுதூர் ஊராட்சிகளில் இருந்து இலவச சலவைப் பெட்டிகள் வழங்கக் கோரி மனுக்கள் ஏதும் வரப்பெறவில்லை.

[2005 செப்டம்பர் 26

30—

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 65419—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சங்கராபுரம் தொகுதி, சேராப்பட்டு மலை மற்றும் அரசம்பட்டு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, சேராப்பட்டு மலை மற்றும் அரசம்பட்டு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

31—

## எக்ஸ்ரே கருவிகள்

**வினா எண் 66484—திரு., கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவிகள் வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பொதுவாக, கால்நடை மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவிகள் வழங்கப்படுவதில்லை. பிரதம மருத்துவமனை மற்றும் பன்முக மருத்துவமனைகளில் இவ்வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மேலும்,



2005 செப்டம்பர் 26]

சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப, தேவைப்படும் இடங்களில் இந்த வசதி செய்து தரப்படுகிறது. கோவை மாவட்டம், வால்பாறை டவுன்ஷிப் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது, கால்நடை மருந்தகம் ஆகும். கால்நடை மருத்துவமனை அல்ல. எனவே, இம்மருந்தகத்திற்கு எக்ஸ்ரே கருவிகள் வழங்குவது குறித்து செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

32—

## பன்றி வளர்ப்பு தடை

**வினா எண் 69391—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் பன்றி வளர்ப்பு தடை செய்யப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* கால்நடை பராமரிப்புத் துறையில் பன்றி வளர்ப்புத் திட்டத்திற்கு 1998-99 ஆம் ஆண்டில் 100 விழுக்காடுகள் மைய அரசு மானிய உதவியுடன் ரூ.108 இலட்சம் செலவில் 3 இடங்களில் பன்றிப் பண்ணைகள் நிறுவவும், ஏற்கெனவே செயல்பட்டு வரும் 3 பண்ணைகளை வலுவூட்டவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கேரள மாநிலத்தில் உள்ள பண்ணைகளிலிருந்து சுமார் ரூ.24.00 இலட்சத்திற்குப் பன்றிகள் வாங்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆகையால் தமிழகத்தில் பன்றி வளர்ப்பு தடை செய்யப்படும் உத்தேசம் இல்லை.

*(ஆ)* எழாது.

33—

## கால்நடை பார்வைக் கிளை நிலையம்

**வினா எண் 69920—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

ஈரோடு தொகுதி, கங்காபுரத்தில் செயல்பட்டு வரும் கால்நடை பார்வைக் கிளை நிலையத்தை கால்நடை கிளை நிலையமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஈரோடு தொகுதி, கங்காபுரத்தில் செயல்பட்டு வந்த கால்நடை பார்வைக் கிளை நிலையத்தின் செயல்பாடு திருப்திகரமாக இல்லாததால், அரசாணை (நிலை) எண் 10, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 4-2-2005-ன்படி மூடப்பட்டு, தற்போது பார்வைக் கிளை நிலையம் செயல்படவில்லை. கங்காபுரத்திற்கு மிக அருகில் சித்தோடு மற்றும் நசியனூர் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது DANIDA இணை தம்பதியினர் கங்காபுரத்தில் பணிபுரிந்து, கால்நடைகளுக்குக் கருவூட்டல் பணி செய்து வருகின்றனர்.

மேலும், கால்நடை பார்வைக் கிளை நிலையம்/கிளை நிலையம் தோற்றுவிக்க தடையாணை அமலில் உள்ளதால், ஈரோடு தொகுதி, கங்காபுரத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**34—**

**கால்நடை மருந்தகங்களுக்கு மருந்துகள்**

**வினா எண் 70179—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியிலுள்ள கால்நடை மருந்தகங்களில் மருந்துகள் தட்டுப்பாடு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தட்டுப்பாடின்றி வழங்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள கால்நடை மருந்தகங்களுக்குப் போதிய மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே மருந்துத் தட்டுப்பாடு ஏதும் எழ வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**35—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 71009—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கோணயாம்பட்டினத்தில் கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கோணயாம்பட்டினம் கிராமத்தில் இருந்து 5 கி.மீ. தூரத்தில் திருநகரி கால்நடை கிளை நிலையமும், திருவெண்காடு கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இவைமூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகள் கோணயாம்பட்டினம் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளன. மேலும், தற்பொழுது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கோணயாம்பட்டினம் கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கத் தற்போது வாய்ப்பில்லை.

[2005 செப்டம்பர் 26

**36—**

## துணை கால்நடை மருத்துவமனை

**வினா எண் 71614—திரு. ஆ.கு.சீ. அன்பழகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, வடமாதிமங்கலம் கிராமத்திற்குத் துணை கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர் தொகுதி, வடமாதிமங்கலம் கிராமத்தில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையம் தற்போது ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகையின்றிச் செயல்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் இந்த கிளை நிலையத்திற்கு (SGSY திட்டம்) நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**37—**

## கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள்

**வினா எண் 75695—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கடந்த நான்காண்டுகளில் எத்தனை முகாம்கள் நடைபெற்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தின் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு முகாம்கள் நடைபெற்றன:



2005 செப்டம்பர் 26]

| வ.எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | நடைபெற்ற கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | 2002-03 | 2003-04 | 2004-05 | 2005-06 ஜூலை 05 வரை |
| 1. | திருக்கழுக்குன்றம் | 14 | 14 | 16 | 5 |

**38—**

## கால்நடை கிளை மருத்துவ நிலையம்

**வினா எண் 83066—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி ஒன்றியம், திருத்தலையூரில் கால்நடை கிளை மருத்துவ நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கிட விதிக்கப்பட்ட தடை உத்தரவு இன்னும் அமலிலுள்ள நிலையில், முசிறி ஒன்றியம், திருத்தலையூரில் கால்நடை கிளை நிலையம் தற்போது புதிதாக அமைக்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**39—**

## சந்தன மரங்கள்

**வினா எண் 66470—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

(அ) கோவை மாவட்டம், வால்பாறை மேல் பகுதி மற்றும் டாப்ஸ்லிப் பகுதியில் கடந்த 10 ஆண்டுகளில் வெட்டி எடுக்கப்பட்ட சந்தன மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அதில் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை சரகத்தில் 1995-96 ஆம் ஆண்டு 1,708 சந்தன மரங்களும் 1996-97 ஆம் ஆண்டு 1,348 சந்தன மரங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேற்படி சந்தன மரங்கள் சத்தியமங்கலம் மரக் கிடங்கில் சுத்தம் செய்யப்பட்டதில், 50.057 மெட்ரிக் டன் கிடைக்கப்பெற்றது. விற்பனை செய்ததில் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ.2,10,50,011/- ஆகும். 2003-2004 ஆம் நிதியாண்டில் வால்பாறை சரகம் அட்டகட்டி மின் வாரியக் குடியிருப்பில் இரண்டு சந்தன மரங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு துலக்கம் செய்யப்படாமல் சேலம் அரசு சந்தன மரக் கிடங்கில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சந்தன மரங்கள் இதுவரை இறுதித் துலக்கம் செய்யப்படாததால், ஏலத்தில் வைத்து ஏலம் விடப்படவில்லை.

**40—**

## நூலகக் கட்டடம் பழுதுபார்த்தல்

**வினா எண் 10849—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் நூலகக் கட்டடம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிளை நூலகக் கட்டடத்தின் சுவர்களில் சிறு சிறு வெடிப்புகளும் மேல் தளத்தில் கீறல்களும் இருந்தன. இந்தப் பழுதுகள் அனைத்தும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு, நூலகம் செயல்பட்டு வருகின்றது.

**41—**

## கிராம நூலகம்

**வினா எண் 65843—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தீர்த்தமலை ஊராட்சி, பொய்யப்பட்டி கிராமத்திற்கு கிராம நூலகம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தீர்த்தமலை ஊராட்சி, பொய்யப்பட்டி ஊர்ப்புற நூலகத்திற்கு அவ்வூராட்சிமூலம் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 3-6-2005 முதல் பொய்யப்பட்டி ஊர்ப்புற நூலகம் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

**42—**

## கிராமப்புற நூலகங்கள்

**வினா எண் 70203—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

(அ) பெண்ணாகரம் தொகுதியில் கிராமப்புற நூலகங்கள் புதிதாகத் துவக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 66, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, நாள்: 30-01-1996-ன்படி 625 ஊர்ப்புற நூலகங்களும், அரசாணை (நிலை) எண் 50, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 11-04-2003-ன்படி 867 ஊர்ப்புற நூலகங்களும் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. எனவே, கிராமப்புற நூலகம் திறக்கும் செயற்திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**43—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 71050—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவாலி ஊராட்சியில் நூலகம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் பகுதிநேர நூலகம், 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் ஊர்ப்புற/கிளை நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சீர்காழி தொகுதி, திருவாலி



2005 செப்டம்பர் 26]

ஊராட்சியில் மக்கள் தொகை 3003 ஆகும். மக்கள் தொகையின் அடிப்படையில் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்கலாம். ஆனால், அவ்வூர் மக்கள் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாததால் அவ்வூரில் நூலகம் திறக்க இயலவில்லை.

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்குப் பத்திரப் பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டுச் சந்தா ரூ.5/-ம், ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி, 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ. 2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

**44—**

## வணிக வரி செலுத்துதல்

**வினா எண் 72969—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வணிக வரித் துறையில் பதிவுச் சான்று பெற்று வணிக வரி செலுத்துபவர்கள் எத்தனை பேர்?

(ஆ) பதிவுச் சான்று பெறாமல் வணிகம் செய்ததாக எவ்வளவு பேர்மீது அரசு வழக்குத் தொடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

| | | பதிவுச் சான்று பெற்றவர்கள் | வணிக வரி செலுத்துபவர்கள் |
|---|---|---|---|
| (அ) | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 | 57,017 | 15,824 |
| | மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 | 38,062 | 3,671 |
| (ஆ) | இல்லை | | |

**45—**

## விற்பனை வரி ரத்து

**வினா எண் 74891—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மாணவர்களுக்கென வழங்கப்படும் நோட்டுப் புத்தகங்களுக்கு விற்பனை வரி ரத்துச் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் வரி செலுத்தப்பட்ட காகிதங்களிலிருந்து தயாரிக்கப்படும் நோட்டுப் புத்தகங்களுக்குத் தற்போது முழு வரி விலக்குள்ளது. வரி செலுத்தப்படாத காகிதங்களிலிருந்து தயார் செய்யப்படும் நோட்டுப் புத்தகங்களுக்கு மட்டுமே 4 விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது.





**46—**

## விளைபொருளுக்கு விற்பனை வரி ரத்து

**வினா எண் 74892—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயிரிடும் விளைபொருளுக்கு விற்பனை வரி ரத்துச் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

விவசாய விதைபொருட்கள், இயற்கை உரங்கள், நுண்மவியல் உயிரினங்கள், இவற்றிற்கு ஏற்கெனவே வரி விலக்குள்ளது. அரிசி, நெல், மிளகாய், புளி, தனியா, மஞ்சள் போன்ற பல முக்கிய விவசாய விளைபொருட்கள் வரி விலக்குப் பெற்றுள்ளன.

**47—**

## விற்பனை வரியைக் குறைத்தல்

**வினா எண் 74893—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் பயன்படுத்தும் உரங்கள்மீதான விற்பனை வரியைக் குறைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இயற்கை உரம், நுண்மவியல் உயிரினங்கள் இவற்றிற்கு ஏற்கெனவே வரி விலக்குண்டு. இரசாயன உரம், பூச்சி மருந்து, இவற்றிற்கு 4 விழுக்காடு மட்டும்தான் வரி விதிக்கப்பட்டுள்ளது.

[2005 செப்டம்பர் 26

48—

## புதிய கட்டடம்

**வினா எண் 70306—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள குழந்தைத் தொழிலாளர் திட்டப் பள்ளிகள் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதால் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் ஒரு காலவரையறைக்குட்பட்ட திட்டம் என்பதால், அதற்கெனத் தனிக் கட்டடங்கள் புதிதாகக் கட்டுவது குறித்த செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

49—

## வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 82026—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்குவதற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான திட்டம் ஏதும் இல்லை.



2005 செப்டம்பர் 26]

50—

## உணவு அருந்தும் இடம் அமைத்தல்

**வினா எண் 9266—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கேளப்பன்சேரி சமுதாயக் கூடத்தில் உணவு அருந்தும் இடம் அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கேளப்பன்சேரி சமுதாயக் கூடத்தில் விசேட காலங்களில் உணவு அருந்தும் நிழற் பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது.

51—

## சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 12710—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கருப்பட்டிக்காடு பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கருப்பட்டிக்காடு பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2005 செப்டம்பர் 26

**52—**

**சமுதாயக் கூடம் அமைத்தல்**

**வினா எண் 12713—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிவயல் ஊராட்சியில் சமுதாயக் கூடம் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளுக்காடு ஊராட்சியைச் சார்ந்த ஆண்டிவயல் கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**53—**

**நாடக மேடை அமைத்தல்**

**வினா எண் 19219—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மேக்கிழார்பட்டி ஊராட்சி, சில்லாம்பட்டி, மற்றும் எஸ். புதுப்பட்டிக்கு நாடக மேடை கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மேக்கிழார்பட்டி ஊராட்சி, சில்லாம்பட்டி மற்றும் எஸ். புதுப்பட்டிக்கு நாடக மேடை கட்டித்தரத் தற்சமயம் வாய்ப்பில்லை.



2005 செப்டம்பர் 26]

**54—**

**கிராமச் சாவடி கட்டுதல்**

**வினா எண் 19664—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், வடுகபட்டி பஞ்சாயத்து, கொங்கபட்டிக்கு கிராமச் சாவடி கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, வடுகப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், 2003-2004-ல் ஒரு கிராமச் சாவடி கட்ட ஆரம்பித்து, basement வேலை நடைபெறும்போது, இடப் பிரச்சினை காரணமாக பணி நிறுத்தப்பட்டுவிட்டது. வேறு பொது இடம் மற்றும் அரசுக்குச் சொந்தமான இடம் இல்லாததால் பணி தொடர்ந்து நடைபெறவில்லை. கிராம மக்களிடம் இடம் தேர்வு செய்துதரத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடம் கிடைக்கப்பெறாததால் கிராமச் சாவடி கட்ட இயலவில்லை.

**55—**

**விக்டோரியா வணிக வளாகம்**

**வினா எண் 20342—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியினால் கட்டப்பட்டுள்ள விக்டோரியா வணிக வளாகத்தில் உள்ள கடைகள் முழுவதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளனவா?

(ஆ) இல்லை எனில், அந்தக் காலியிடங்களில் தனியார் வாடகைக் கட்டடத்தில் உள்ள அரசு நிறுவனங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் உலக வங்கித் திட்டத்தின் கடனுதவியுடன் கட்டப்பட்ட விக்டோரியா வணிக வளாகத்தில் அடித்தளம் (ம) தரைதளங்களிலுள்ள 172 கடைகள் பொது ஏலம்மூலம் தனியார் வியாபாரிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. முதல், இரண்டு, மூன்றாம் தளங்களில் உள்ள 800 ச.அடி (ம) 400 ச.அடி பரப்பு கொண்ட 16 அலுவலகக் கூடங்கள் (ம) ஒரு குடோன் ஆகியவற்றை வேலைவாய்ப்புத் துறை, வேளாண்மைத் துறை, நகர் ஊரமைப்புத் துறை (ம) கூட்டுறவுத் துறை ஆகியவை நேரில் பார்வையிட்டு, வாடகைக்கு எடுத்துக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். மேலும், காலியாக உள்ள இவ்வலுவலகக் கூடங்களுக்குத் தேவையான கூடுதல் வசதிகள் செய்ய உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

**56—**

## பொது நூலகக் கட்டடம்

**வினா எண் 24282—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வத்தலாபுரத்தில் பொது நூலகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சி, வத்தலாபுரம் கிராமத்தில் மாவட்ட நூலகம்மூலமாகக் கிளை நூலகம் ஏதும் இயங்கவில்லை. எனவே, இக்கிராமத்தில் நூலகக் கட்டடம் கட்டும் வினா எழவில்லை.



2005 செப்டம்பர் 26]

**57—**

## நிழற்கூடம் அமைத்தல்

**வினா எண் 25795—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, நாகப்பள்ளம் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, நாகப்பள்ளம் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் கட்ட, வரும் ஆண்டுகளில் அரசு ஒதுக்கும் நிதியினைப் பொறுத்து, தேவையினைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**58—**

## நிழற்கூடம் அமைத்தல்

**வினா எண் 25812—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் பிரதான சாலை, கூத்தப்பாடி பிரிவு சாலையின் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் கூத்தப்பாடி குறுக்குத் தெருவில் நிழற்கூடம் கட்ட, வரும் ஆண்டுகளில் அரசு ஒதுக்கும் நிதியினைப் பொறுத்து, தேவையினைக் கருத்தில் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**59—**

## நிழற்கூடம்

**வினா எண் 25813—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, நாகமரை பிரிவு சாலை (கூத்தப்பாடி சாலை) பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, நாகமரை குறுக்குத் தெரு, கூத்தப்பாடி தெருவில் நிழற்கூடம் கட்ட, வரும் ஆண்டுகளில் அரசு ஒதுக்கும் நிதியினைப் பொறுத்து, தேவையினைக் கருத்தில் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**60—**

## நிழற்கூடம் கட்டுதல்

**வினா எண் 25895—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, மாசிகுட்டை பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெணணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சியில் மாசிகுட்டை நிழற்கூடம் கட்ட, வரும் ஆண்டுகளில் அரசு ஒதுக்கும் நிதியினைப் பொறுத்து, தேவையினைக் கருத்தில் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**61—**

## பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம்

**வினா எண் 26147—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளி மாரியம்மன் கோயில் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளி மாரியம்மன் கோயில் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் கட்ட, வரும் ஆண்டுகளில் அரசு ஒதுக்கும் நிதியினைப் பொறுத்து, தேவையினைக் கருத்தில் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2005 செப்டம்பர் 26

62—

## நிழற்கூடம் கட்டுதல்

**வினா எண் 27800—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் பேருந்து நிறுத்துமிடத்தில் ஒரு நிழற்கூடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் பேருந்து நிற்கும் இடத்தில் நிழற்கூடம் 2002-2003 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 36,000/- செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

63—

## சாலை பழுதுபார்த்தல்

**வினா எண் 28175—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் சக்தி எஸ்டேட் தலைநகர் பகுதிகளில் சாலை பழுது அடைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சக்தி தலைநகர் எஸ்டேட் பகுதிக்குச் செல்லும் 11 கிலோ மீட்டர் சாலையில்



2005 செப்டம்பர் 26]

10 கிலோ மீட்டர் சாலை தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 கிலோ மீட்டர் சாலையைச் செப்பனிட ரூ.6.00 இலட்சம் செலவில் பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 9-8-2004 ஆம் தேதி பணி உத்தரவும் வழங்கப்பட்டு, ½ கிலோ மீட்டர் பணி ரூ. 3.00 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ½ கிலோ மீட்டர் சாலைப் பணி நடைபெற்று வருகிறது.

64—

## நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 30764—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள பிலிசின்னம்பாளையம், அங்களகுறிச்சி ஊராட்சிகளில் நிழற்குடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ.35,000/- செலவில் வால்பாறை சாலை மற்றும் சுந்தரம் அரிசி ஆலை அருகில் நிழற்குடை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதனைப் பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

65—

## மணிமண்டபம் அமைத்தல்

**வினா எண் 31592—திரு. கே. எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதியில் ஓடாநிலையில் தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம் கட்டுவது குறித்து அரசு இந்த ஆண்டு அறிவிக்குமா?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மணிமண்டபம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**66—**

## நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 34118—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, வல்லம் வெற்றித் தெரு போகும் வழியில் பயணியர் நிழற்குடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2003-2004 ஆம் ஆண்டு ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், வல்லம் வெற்றித் தெரு போகும் வழியில் 2003-2004 ஆம் ஆண்டு S.G.R.Y. திட்ட நிதியில் ஒரு பயணியர் நிழற்குடை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**67—**

## நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 34340—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், 39. வேட்டங்குடி ஊராட்சி, வாடியில் பயணிகள் நிழற்குடை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், 39. வேட்டங்குடி ஊராட்சி, வாடியில் 2003-2004 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயணிகள் நிழற்குடை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**68—**

## நிழற்கூடம் அமைத்தல்

**வினா எண் 36931—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, திருமல் ஊராட்சி, ஆவரங்காடு, தாலும்பாளையத்தில் நிழற்கூடம் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மோகனூர் ஊராட்சி ஒன்றியம், காளிபாளையம் ஊராட்சியில் காளிபாளையம் பேருந்து நிறுத்தத்தில் நிழற்கூடம் அமைத்திட பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**69—**

## நிழற்குடைகள்

**வினா எண் 37042—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புதுப்பேட்டையில் பிரதான தெருவில் முத்துமாரியம்மன்கோயில் கடை வீதி, காவல் நிலையம் ஆகிய 2 இடங்களில் நிழற்குடைகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிழற்குடை அமைக்கும் பணியை பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் திட்டத்தில் மட்டுமே செய்ய வேண்டியுள்ளது. எனவே, 2005-2006 ஆம் ஆண்டில் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு மேல்புதுப்பேட்டை ஊராட்சியில் நிழற்குடை அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**70—**

## பாலம் அமைத்தல்

**வினா எண் 42434—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி ஒன்றியம், பேரூர் ஊராட்சியில், பேரூர் குடித் தெரு மயானப் பாதையில் குறுக்கிடும் ஏரி வாய்க்காலில் பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, பேரூர் குடித் தெரு மயானப் பாதையில் குறுக்கிடும் ஏரி வாய்க்காலில் பாலம் அமைத்துத்தர தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை. வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றதும், ஏரி வாய்க்காலில் பாலம் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**71—**

## மகளிர் மனமகிழ் மன்றம்

**வினா எண் 43026—டாக்டர். சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை பேரூராட்சியில் மகளிர் மனமகிழ் மன்றம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டையில் பெண்கள் சுய உதவிக் குழுக்கான கட்டடம் மற்றும் பெண்கள் சுகாதார வளாகம், இரண்டும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.

**72—**

## மாட்டிறைச்சிக் கடைகளை அப்புறப்படுத்துதல்

**வினா எண் 44861—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, 33-வது கோட்டம், முகமதுபுறா தெருவிலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி, 33-வது கோட்டம், முகமதுபுறா தெருவிலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**73—**

## அங்காடிக்கு கட்டட வசதி

**வினா எண் 45171—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயில் ஒன்றியம், குன்னூர் ஊராட்சி, முதுவளர்குடி, ஒக்கூர் ஆகிய இடங்களிலுள்ள அங்காடிக்குக் கட்டடம் கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நிதிநிலை சரியில்லாததால், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயில் ஒன்றியம், குன்னூர் ஊராட்சி, முதுவளர்குடி, ஒக்கூர் ஆகிய இடங்களிலுள்ள அங்காடிக்குக் கட்டடம் கட்டித்தர இயலாது.

**74—**

**நிழற்குடை**

**வினா எண் 46063—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்களகுறிச்சி ஊராட்சியில் நான்குமுனை சங்கம் பகுதி, பன்னிமேடு பங்களா பகுதி பேருந்து நிறுத்துமிடம், பிலிசின்னம்பாளையம் ஊராட்சி பிரதான சாலை ஆகிய இடங்களில் நிழற்குடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிலிசின்னம்பாளையம் ஊராட்சி பிரதான சாலையில் 2005-2006 ஆம் நிதியாண்டில் பயணியர் நிழற்குடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2005 செப்டம்பர் 26]

**75—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 48071—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் சிலோன் காலனி, அண்ணா நகர் குடியிருப்புப் பகுதிகளுக்குத் தடுப்புச் சுவர் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிலோன் காலனி மற்றும் அண்ணா நகர் குடியிருப்புப் பகுதிகள் மேடு, பள்ளங்கள் நிறைந்த பகுதிகளாகும். இப்பகுதிகளில் தேவையான அத்தியாவசியமான இடங்களில் நகராட்சி மூலம் தடுப்புச் சுவர்கூடிய நடைபாதைகள் சுமார் ரூ.10 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், தனி நபர் வீட்டுக்குத் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க வழிவகை ஏதுமில்லையாதலால், அவர்களிடம் அவர்களது சொந்தச் செலவில் தடுப்புச் சுவர் கட்டிக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**76—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 48114—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், தேனூர் ஊராட்சி தச்சம்பத்து கிராமத்திலும் மற்றும் வயலூர், மூலகுறிச்சி ஆதி திராவிட மக்களுக்கும் சமுதாயக் கூடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சமுதாயக் கூடம் கட்டும் திட்டம் தற்போது இல்லை. எனவே, இந்த ஊராட்சிகளுக்கு சமுதாயக் கூடம் கட்டித்தர இயலாது.

**77—**

## சீரணி கலையரங்கம்

**வினா எண் 48275—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், பெரமாண்டம்பாளையம் ஊராட்சி, பெரமாண்டம்பாளையத்தில் சீரணி கலையரங்கம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், பெரமாண்டம்பாளையம் ஊராட்சி, பெரமாண்டம்பாளையத்திற்கு சீரணி கலையரங்கம் கட்டுவதற்கு வரும் நிதி ஆண்டில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் மேற்படி பணி நிறைவேற்றப்படும்.

**78—**

## தெரு விளக்கு

**வினா எண் 49815—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, சோலையார் பஜார், சோலையார் முதல் பகுதி 3 நெம்பர் லைன் அருகிலும், கெஜமுடி II டிவிஷன் அருகில் பேருந்து நிலையம் அப்பர்பாரளை பள்ளி, பேருந்து நிலையம், பன்னிமேடு முதல் டிவிஷனிலும் மற்றும் தொனிமுடி முதல் டிவிஷன் சி4 லைன் அருகிலும் தெரு விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட இடங்களில் அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு நகராட்சி மூலம் தெரு விளக்குகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | 4' குழல் விளக்கு | சோடியம் ஆவி விளக்கு |
|---|---|---|---|
| 1 | சோலையார் பஜார் | 3 | 4 |
| 2 | சோலையார் முதல் பிரிவு | 13 | 1 |

மேலும், வால்பாறை நகராட்சிக்குட்பட்ட தோட்டத் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் முதல் கட்டமாக 300 தெரு விளக்குகள் அமைக்க வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து ஒதுக்கீடு பெறப்பட்டவுடன், வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் தெரு விளக்குகள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**79—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 51945—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஊராட்சி, மேலமாத்தூர் கிராமத்திற்கு நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் ஊராட்சி, மேலமாத்தூர் கிராமத்திற்கு நூலகம் அமைத்திட அரசு விதிகளின்படி மக்கள் தொகை 5,000-க்கு மேல் இருக்க வேண்டும். குன்னம் ஊராட்சி, மேலமாத்தூர் கிராமத்தில் சுமார் 500 மக்கள் தொகை மட்டுமே இருப்பதால் நூலகம் அமைக்க இயலாது.

**80—**

## பயணியர் நிழற்குடை

**வினா எண் 51994—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல் ஊராட்சி, மாதானம் சாலையில் முனீஸ்வரர் கோயில் பேருந்து நிறுத்தத்தில் குறுக்குச் சாலையில் காடுவெட்டி பயணியர் நிழற்குடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல் ஊராட்சி, மாதானம் சாலையில் முனீஸ்வரர் கோயில் பேருந்து நிறுத்தத்தில் குறுக்குச் சாலையில் காடுவெட்டி பயணியர் நிழற்குடை அமைத்திட, ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், இப்பணியினைச் செய்துதர இயலாது.

**81—**

## மயானத்தில் நிழற்கொட்டகை

**வினா எண் 52738—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 செப்டம்பர் 26]

(அ) வால்பாறையிலுள்ள மயானத்தில் நிழற்கொட்டகை கட்ட நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் சுமார் 2.00 ஏக்கர் பரப்பளவில் உள்ள மயானத்தைச் சுற்றிலும் முள் வேலி அமைக்கப்பட்டு, நுழைவாயிலின் முன்புறமாக 30 x 15 சதுர அடி அளவில் மயானக் கூரை அமைக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இனி மயானத்தில் நிழற்கொட்டகை அமைத்தால், இட நெருக்கடி ஏற்படும்.

**82—**

## பொதுக் கழிப்பிடங்கள்

**வினா எண் 53660—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, துளசிங்க நகர், காமராஜர் நகர், கக்கன் காலனி, சிலோன் காலனி ஆகிய இடங்களில் பொதுக் கழிப்பிடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, துளசிங்க நகர் மற்றும் காமராஜர் நகர் பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புகளிலேயே கழிப்பிடங்கள் போதுமான அளவிற்கு உள்ளதாலும், குடியிருப்புகள் மற்றும் பொது மக்கள் குறைவாக இருப்பதாலும், வால்பாறை நகராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதுமில்லையாததாலும், வால்பாறை நகராட்சியிலிருந்து கழிப்பிடம் ஏற்படுத்த வாய்ப்பில்லை. கக்கன் காலனி மற்றும் சிலோன் காலனி பகுதிகளில் வால்பாறை நகராட்சியின் பொதுக் கழிப்பிடங்களைப் பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

[2005 செப்டம்பர் 26

83—

## மகளிர் சுகாதார வளாகம்

**வினா எண் 53661—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை ரொட்டிக்கடை பகுதியில் பேருந்து நிறுத்தும் பிரதான சாலை பேருந்து நிறுத்தத்தின் அருகிலும், மற்றும் புதிய பேருந்து நிலையம் அருகிலும் மகளிர் சுகாதார வளாகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, ரொட்டிக்கடை பகுதியில் உள்ள காலியிடம் நெடுஞ்சாலைத் துறை மற்றும் வருவாய்த் துறைக்குச் சொந்தமானதாகும். வால்பாறை, ரொட்டிக்கடை பகுதியில் பேருந்து நிறுத்தும் பிரதான சாலை பேருந்து நிறுத்தத்தின் அருகிலும், மற்றும் புதிய பேருந்து நிலையம் அருகிலும் மகளிர் சுகாதார வளாகம் ஏற்படுத்த இடம் தேர்வு செய்து, நெடுஞ்சாலைத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகியவற்றின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப் பெற்ற உடன், மகளிர் சுகாதார வளாகம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

84—

## கான்கிரீட் மோரி அமைத்தல்

**வினா எண் 54159—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகர் 22-வது பகுதி மனக்காடு அரச மரத்தடியில் உள்ள இணைப்பு சாலையில் கான்கிரீட் மோரி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 செப்டம்பர் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகர் 22-வது பகுதி மனக்காடு அரச மரத்தடியில் கான்கிரீட் மோரி அமைக்க ரூ.50,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் பணி செய்து முடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

85—

## மயானப் பாதை

**வினா எண் 54833—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி முதல் ஜலகண்டாபுரம் பாதையில் உள்ள மயானப் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றி மயானப் பாதையைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜலகண்டாபுரம் சாலையிலுள்ள மயானத்தில் இருந்த விவசாய ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. மயானத்திற்கான பிரதான பாதை, எடப்பாடி-ஜலகண்டாபுரம் சாலை ஏற்கெனவே போக்குவரத்து உள்ள தார்ச் சாலையாகும்.

86—

## மானிய விலையில் குப்பை உரங்கள்

**வினா எண் 54944—திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நன்கு மக்கிய குப்பை உரங்கள் ஏழை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் அமல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகராட்சிகளைப் பொறுத்தவரையில், மக்கிய குப்பைகளிலிருந்து (1) கோவில்பட்டி, (2) கோபிச்செட்டிப்பாளையம், (3) பத்மநாபபுரம், (4) விருதுநகர், (5) சத்தியமங்கலம், (6) சங்கரன்கோவில், (7) ஆத்தூர், (8) மேட்டூர், (9) பட்டுக்கோட்டை, (10) தேனி — அல்லிநகரம், (11) சின்னமனூர், (12) செங்கோட்டை ஆகிய 12 நகராட்சிகளில் உர உற்பத்தி செய்யப்படுகின்றது. இந்த நகராட்சிகளில் உற்பத்தியாகும் உரம் மலிவு விலையில் அந்தந்தப் பகுதி மக்களுக்கு விற்கப்பட்டு வருகிறது. பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், தற்போதுதான் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, மக்கிய குப்பைகள் உரமாக்கப்பட்டு, விவசாயிகளுக்கு அவ்வப்போது வழங்கப்படவுள்ளது. மானிய விலையில் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

**87—**

## தினசரி சந்தைக்குக் கட்டடம்

**வினா எண் 54958—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகராட்சி, வெள்ளாண்டிவலசை பகுதியில் தினசரி சந்தைக்குக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி நகராட்சியின் நிதிநிலை பற்றாக்குறையாக உள்ளதால், வெள்ளாண்டி வலசை பகுதி தினசரி சந்தைக்குக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.



**88—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 55460—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நிம்மேலி ஊராட்சியில் உள்ள கோடங்குடி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, நிம்மேலி ஊராட்சியில் உள்ள கோடங்குடி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 6.50 இலட்சம் ஆகும். தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க வழிவகை இல்லை என்பதால், கட்டிக் கொடுக்க இயலாது.

**89—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 56971—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பச்சைபெருமாநல்லூர் மற்றும் திருவாலி ஊராட்சிகளில் நூலகம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பச்சைபெருமாநல்லூர் ஊராட்சியில் 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,782-ம், சீர்காழி ஒன்றியம்

திருவாலி ஊராட்சியில் மக்கள் தொகை 3,003-ம் உள்ளன. நூலகம் அமைத்திட, விதிகளின்படி குறைந்தது 5,000 மக்கள் தொகை இருந்தால்தான் கிளை நூலகம் அமைக்க இயலும். எனவே, மேற்படி ஊராட்சிகளின் மக்கள் தொகை 5,000-க்கு உட்பட்டு இருப்பதால், நூலகம் அமைக்க இயலாது.

**90—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 59361—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நீலகிரி மாவட்டம், நடுஹட்டி ஊராட்சி, ஸ்ரீ மாகாளியம்மன் கோயில் அருகே, தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நெறிமுறைகளின்படி கோயில் அருகே தற்போது தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அனுமதி ஏதும் இல்லை. எனவே, நீலகிரி மாவட்டம், நடுஹட்டி ஊராட்சி, ஸ்ரீ மாகாளியம்மன் கோயில் அருகே தடுப்புச் சுவர் தற்போது கட்ட இயலாது.

**91—**

## சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 58254—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அனலி எஸ்டேட்டிலுள்ள பழுதடைந்துள்ள சாலையைச் செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வால்பாறை அனலி எஸ்டேட்டில் உள்ள சாலை TATA தேயிலை நிறுவனத்திற்குச் சொந்தமானது ஆகும். அச்சாலை நகராட்சிக்குச் சொந்தமானது இல்லையென்பதால், நகராட்சிமூலம் சீரமைக்க இயலாது.

**92—**

## குடிநீர்க் கிணறு செப்பனிடுதல்

**வினா எண் 58710—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள தாய்முடி என்.சி. குடியிருப்புப் பகுதியில் உள்ள குடிநீர்க் கிணறு இடிந்து விட்டது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அக்கிணறு செப்பனிடப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சிக்குட்பட்ட தாய்முடி என்.சி. பகுதியில் உள்ள குடிநீர்க் கிணறு B.B.T.C. Limited என்ற தனியார் தேயிலைத் தோட்ட நிறுவனத்திற்குட்பட்டதாகும். தேயிலைத் தோட்ட நிர்வாகம் தாய்முடி என்.சி. பகுதி மக்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

**93—**

## வகுப்பறைக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 59246—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 செப்டம்பர் 26

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள ஆரம்பப் பள்ளியில் பழுதடைந்துள்ள வகுப்பறைகள், அவற்றின் சன்னல், கதவுகள் புதுப்பிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வால்பாறை ஆரம்பப் பள்ளி நகராட்சிக்கு சொந்தமான பள்ளியாகும். இப்பள்ளியில் உள்ள கதவுகள் மற்றும் சன்னல்கள் 2004-2005 ஆம் ஆண்டு பழுதுபார்க்கப்பட்டு, வெள்ளை அடித்து வர்ணம் பூசிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**94—**

### மகாத்மா காந்தியடிகளின் உருவச் சிலை

**வினா எண் 59594—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையிலுள்ள 17-வது வார்டு லோயர் ஷேக்கல்முடி எஸ்டேட் எல்-டி குடியிருப்புப் பகுதியிலுள்ள மகாத்மா காந்தியடிகளின் உருவச் சிலையைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை நகராட்சிக்குட்பட்ட 17-வது வார்டு லோயர் ஷேக்கல்முடி எஸ்டேட் எல்-டி குடியிருப்புப் பகுதியில் மகாத்மா காந்தியடிகளின் உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ள இடம் வால்பாறை நகராட்சிக்குச் சொந்தமானது அல்ல. தனியாருக்கு (எஸ்டேட் நிர்வாகம்) சொந்தமானதாகும். எனவே, வால்பாறை நகராட்சியால் நடவடிக்கை எடுக்க இயலாது.



2005 செப்டம்பர் 26]

**95—**

### சமுதாயக் கூடத்தைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 62996—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையார் சமுதாயக் கூடத்தைப் பழுது நீக்கித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஒன்றியத்தின் நிதிநிலை சரியில்லாததால், பழையார் சமுதாயக் கூடத்தை பழுது நீக்கித் தரத் தற்போது இயலாது.

**96—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 63146—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், கோனாப்பட்டு ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சமுதாயக் கூடம் கட்டுவதற்கு அரசின் எந்தத் திட்டத்திலும் தற்போது வழிவகை இல்லை. எனவே, நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், கோனாப்பட்டு ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்ட இப்போது வாய்ப்பில்லை.

[2005 செப்டம்பர் 26

**97—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 64952—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், அத்திவெட்டி அண்ணா நகரில் ஒரு சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அத்திவெட்டி ஊராட்சி, அண்ணா நகரில் சமுதாயக் கூடம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 6.00 இலட்சமாகும். நிதிநிலை கருதி, பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், அத்திவெட்டி அண்ணா நகரில் சமுதாயக் கூடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

**98—**

**பயணிகள் நிழற்குடை**

**வினா எண் 66374—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எண் 2, கரியமாணிக்கம் ஊராட்சிக்குட்பட்ட சேங்குடி, குருவம்பட்டி, கரியமாணிக்கம், வாத்தலை மற்றும் நாமகிரிப்பேட்டை ஆகிய கிராமங்களில் பயணிகள் நிழற்குடை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரியமாணிக்கம் ஊராட்சி எல்லைக்குட்பட்ட குருவம்பட்டி, கரியமாணிக்கம், வாத்தலை ஆகிய கிராமங்களில் ஏற்கெனவே பயணிகள் நிழற்குடை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சேங்குடி, நாமகிரிபேட்டை கிராமங்களுக்கு, பயணிகள் நிழற்குடை வரும் நிதியாண்டில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைத்துத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2005 செப்டம்பர் 26]

**99—**

**மணி மண்டபம்**

**வினா எண் 69387—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இரட்டைமலை சீனிவாசனுக்கு மணி மண்டபம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இரட்டைமலை சீனிவாசனுக்கு மணி மண்டபம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**100—**

**குப்பை மேட்டை அகற்றுதல்**

**வினா எண் 71844—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் கிச்சிப்பாளையம் அருகேயுள்ள குப்பைமேட்டை அகற்றும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 செப்டம்பர் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது சேலம் மாநகராட்சி கிச்சிப்பாளையம் அருகே உள்ள எருமாபாளையத்தில் சேலம் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை சேமிப்புக் கிடங்கு செயல்பட்டு வருகிறது. மேற்படி சேமிப்புக் கிடங்கு நிரம்பி உள்ளதாலும், மேலும், தினந்தோறும் மாநகர்ப் பகுதிகளில் சேகரிக்கப்படும் 350 மெ. டன் குப்பைகளை மேற்கொண்டு சேமிப்புச் செய்ய இயலாத காரணத்தால், எருமாபாளையம் திடக்கழிவு, மேலாண்மைக் கிடங்கினை மாற்றம் செய்ய, தீவிர பரிசீலனையில் உள்ளது.

[**குறிப்பு:** ஓர் உறுப்பினரின் உரையில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள். என்ன, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் செய்தியாளர் தாக்கப்பட்டது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். அறைக்கு வந்து பேசுங்கள். திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. என்னுடைய ஆய்வில் இருக்கின்றது.



2005 செப்டம்பர் 26]

## 3. கவன ஈர்ப்பு

### திருப்புவனம் பேருந்து நிலையம்—போக்குவரத்து நெரிசலால் நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. க. பாரமலை அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் பேருந்து நிலையம் செயல்படாததால் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ள நிலை குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் சிறப்புச் சிற்றூராட்சியில் சிவகங்கை தேவஸ்தானத்தால் சர்வே எண் 16/16—ல் சுமார் 1½ ஏக்கர் இடத்தில் வாரச் சந்தை நடத்தப்பட்டு வந்தது. மேற்படி இடமானது A பதிவேட்டின்படி சந்தைப் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டதன் காரணமாக, அப்போதைய பேரூராட்சி நிர்வாகத்தால் மேற்படி இடத்திலிருந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அந்த இடம் கையகப்படுத்தப்பட்டு, பேரூராட்சி நிர்வாகம்மூலம் தற்காலிகமாகப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு 1–4–2000 முதல் செயல்பட்டு வந்தது.

இந்நிலையில் மேற்படி முன்னாள் திருப்புவனம் பேரூராட்சி நிர்வாகம்மூலம் கையகப்படுத்தப்பட்டு பேருந்து நிலையம் அமைக்கப்பட்ட செயல்பாட்டை எதிர்த்து சிவகங்கை

தேவஸ்தானம்மூலம் W.P.No. 5503/2000 மற்றும் W.M.P.எண் 8997/2000–இன்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், மேற்படி இடத்தினை மீண்டும் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு ஒப்படைக்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி இடம் 30–8–2001 அன்று மீண்டும் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

இந்த இடத்தை மீண்டும் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு ஒப்படைக்க வழங்கப்பட்ட சென்னை உயர் நீதிமன்ற உத்தரவினை எதிர்த்து திருப்புவனம் சிறப்புச் சிற்றூராட்சி நிர்வாகத்தால் W.A.No.1405/2001–ன் W.P.No.5503/2000–ல் மேல் முறையீடு செய்யப்பட்டு, தற்போது வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, பேருந்து நிலையம் தற்பொழுது செயல்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறினைக் கருத்தில் கொண்டு, மாற்று இடம் பரிசீலனையில் உள்ளது.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையை நான் படித்தேன். திருப்புவனம் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர். ஏறக்குறைய 30 ஆயிரம் பேர் அங்கு வசிக்கின்றார்கள். மதுரை–இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலும் அமைந்திருக்கின்ற ஊர். மூன்று அடிகளார்களாலும் பாடல் பெற்ற ஸ்தலம். அருள்மிகு புஷ்பனேஸ்வரர்–சௌந்தரநாயகி அம்மன் திருக்கோயில் அங்கு இருக்கின்றது. பக்கத்திலே மடப்புரத்தில் ஒரு பிரசித்தி பெற்ற கோயில் இருக்கின்றது. அவை இருக்கின்ற காரணத்தால் அந்த ஊருக்கு 50 ஆயிரம் பேர் தினமும் வந்து சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, திருப்புவனத்திற்குப் பேருந்து நிலையம் என்பது மிக மிக அவசியமானது. இது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தத் தீர்ப்பு— தடையாணை வழங்கப்பட்ட பின்னாலே, பேரூராட்சிமூலமாக மேல்முறையீடு செய்யப்பட்டு, அந்தத் தடையாணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இன்றுள்ள நிலவரப்படி இது அரசாங்கத்தினுடைய சொத்து. ஏற்கெனவே இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் 20–3–2000 அன்று அந்த இடத்தைப் பார்வையிட்டு, உடனடியாக அங்கே பேருந்து நிலையம் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி வேலை விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்திருக்கிறது. இந்தத் தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் நடவடிக்கை





எடுப்பதில் எந்தத் தடையும் இல்லை என்று நான் கருதுகிறேன். அதோடு மட்டுமின்றி, அமைச்சர் அவர்கள் பதிலிலே சொல்லியிருக்கிறார்கள். இந்த மக்களுடைய நலன் கருதி வேறு இடத்தில் transfer செய்வதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். வேறு இடமே இல்லை. அந்த இடம் அரசுக்குச் சொந்தமான இடம். ஆகவே, நீதிமன்றத்தில் இருக்கின்ற அந்த வழக்கை விரைவில் முடிப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, அந்த இடத்தைப் பெற்று, மக்கள் எல்லாம் விரும்புகிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றை நான் குறிப்பிட விரும்புவது, பொது மக்கள்... (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரமலை, என்ன? (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒரே ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) பக்கத்திலே இருப்பவரே வருத்தப்படுகிறார்.

**திரு. க. பாரமலை:** ஆகவே, ஏறக்குறைய 20 ஆயிரம் மக்கள் திரண்டு, அங்கு போராட்டம் நடத்தினார்கள். அதிலே ஒரு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை அரசு வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டபோது, அரசு உண்மை நிலையைக் கருதி, வாபஸ் வாங்க வேண்டும் என்று முடிவெடுத்து அதற்குரிய ஒரு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில், ஏற்கெனவே போட்ட F.I.R.–ல், 15 மற்றும் 60 பேர் என்று சொல்வதை அடிப்படையாக வைத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரமலை, மற்ற விவரங்கள் எல்லாம் அமைச்சருக்குத் தெரியும்.

**திரு. க. பாரமலை:** இல்லை, இல்லை. இன்றைக்குக்கூட....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற விவரங்கள் எல்லாம் அமைச்சருக்குத் தெரியும். உங்களுடைய கேள்வி என்ன? கோரிக்கை என்ன?

**திரு. க. பாரமலை:** F.I.R. போடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றையெல்லாம் நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற இடம் சிவகங்கை

தேவஸ்தானம்மூலம் அங்கே தடையாணை பெற்ற பிறகு அந்தத் தீர்ப்பானது இன்னும் பெறப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதி மக்களுடைய தேவையைக் கருத்தில் கொண்டு, இப்போது அந்தப் பகுதியிலே நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் மலைச்சாமி அவர்களால் மூன்று இலட்சம் ரூபாய் அளவிலே அங்கே தினசரி மார்க்கெட் அருகில் பயணிகள் நிழற்குடை ஒன்று அமைப்பதற்காக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்தப் பணியானது கூடிய விரைவிலே தொடங்கப்பட இருக்கிறது. அந்தப் பணி தொடங்கப்பட்ட பிறகு, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு அந்தப் பேருந்து நிலையம்– அதைப் பயன்படுத்துகின்ற நேரத்திலே மாற்று இடத்தைக் கண்டறிந்து, அந்த மாற்று இடத்திலே மீண்டும் பேருந்து நிலையம் அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அமர்கிறேன்.

## 4. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒரு அறிக்கையினை அளிப்பார்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு – கர்நாடக எல்லையில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதி முக்கிய சுற்றுலாப் பகுதியாகும். இங்கு வருகை புரியும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காகவும், வசதிக்காகவும், சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கையின் அடிப்படையில், தமிழக அரசு சில பணிகளை மேற்கொள்ள முற்பட்டது. இப்பணிகள் மேற்கொள்ளப்படும் இடம், கர்நாடக மாநில எல்லைக்குள் இருப்பதாகப் பிரச்சினை எழுப்பப்பட்டது.

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் 16–9–2005 அன்று கர்நாடக மாநிலத்தின் வனத் துறை அலுவலர்களும் மற்றும் தமிழ்நாடு வனத் துறை அலுவலர்களும் கூட்டாக, சம்பந்தப்பட்ட இடத்தைப் பார்வையிட்டனர். அதன் பின்னர், 19–9–2005 அன்று கர்நாடகா மற்றும் தமிழ்நாடு அலுவலர்கள் இணைந்து மேற்கொண்ட நில அளவையின் அடிப்படையில், மேற்படி பணிகள் தமிழ்நாட்டு



எல்லைக்குள்தான் மேற்கொள்ளப்படுகின்றன என்று உறுதி செய்யப்பட்டது என்று தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும், இதனை ஆட்சேபித்து, 20–9–2005 அன்று, கர்நாடக மாநிலம், சாம்ராஜ் நகர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் இப்பகுதிக்கு வருகை தந்து, பணிகள் மேற்கொள்ளக் கூடாது என்று தெரிவித்தனர். மேலும், 25–9–2005 அன்று சாம்ராஜ் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த சில அமைப்புகள் வேண்டுமென்றே இப்பகுதிக்கு வருகை தந்து, இப்பகுதி கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்ததுதான் என்று நிலைநிறுத்த முற்பட்டனர்.

தற்போது கர்நாடகத்தால் ஆட்சேபனை செய்யப்படும் இடம் எப்பொழுதுமே தமிழகத்தின் பகுதியாகவே உள்ளது. தற்போது சுற்றுலாப் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்புக்காக கைப்பிடிக் கம்பிகள் (Railings) அமைக்கப்படவிருந்த பகுதி, வரைபடங்களின் அடிப்படையிலும், உபயோகத்தின் அடிப்படையிலும், திட்டவட்டமாக தமிழ்நாட்டின் எல்லைக்குள்தான் உள்ளன. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் இப்பணிகளுக்கு, தேவையற்ற ஆட்சேபனையை கர்நாடகம் ஏன் தெரிவிக்கிறது என்று தெரியவில்லை. இது தேவையற்ற ஒரு சர்ச்சையாகும். இவ்வாறான தேவையற்ற ஒரு பிரச்சினையை கர்நாடக அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடு) ஒன்றும் இல்லை, உட்காருங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து ஒன்று மற்றும் நூற்று இருபத்து இரண்டாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

*முற்பகல் 11–10*

## 6. அறிவிப்பு

### கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005-2006, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2005–2006* ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 205 read with clause 3 of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2005-2006".

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2005–2006* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2005–2006* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய *23–09–2005* ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் *2005–2006* ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் *489*, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றக் கட்டட வளாகத்தில் துணைச் செயலாளர்களுக்குப்



புதிதாக அலுவலகக் கட்டடங்கள் கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய *1* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,00,000/–*ல் ரூ. *1/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *43*, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் போதிய பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய *1* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,00,000/–*ல் ரூ. *1/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *279*, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய *3* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*2,20,23,000/–*ல் ரூ.*1/–* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *340*, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நீதிமன்ற வளாகத்தில் சுகாதாரமான கழிப்பிட வசதிகள் அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கே.என். சேகரன்] [2005 செப்டம்பர் 26

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/—ல் ரூ.1/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 111, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி.

**திருமதி எ.எஸ். மஹேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொழிலாளர் நீதிமன்ற நீதிபதிகளும் Camp Court-கள் நடத்த வேண்டியுள்ளதால், அவர்களுக்கு ஓட்டுநருடன் கூடிய வாகன வசதி (car) அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/—ல் ரூ.1/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 248, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர்—சத்துவாச்சாரியில் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் ரூ.3½ கோடியில் 'A'டைப் கட்டட வளாகம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/—ல் ரூ.1/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 229, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் நீதித் துறை நடுவர் நீதிமன்றக் கட்டடத்தை விரைந்து கட்டி முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/—ல் ரூ.1/— குறைக்க வேண்டும்."



2005 செப்டம்பர் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7, திரு. எஸ்.கே. வேதரெத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/—ல் ரூ.1/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 36, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடங்கள் விரைந்து கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/—ல் ரூ.1/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 568, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்திற்கு என மாவட்ட அமர்வு நீதிமன்றம் உடனே அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/—ல் ரூ.1/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 74, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதி, சிவகாசியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டட வளாகம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 376, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் தேங்கியுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 449, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 677, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதியில் ஒரு குடும்ப நல நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 840, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் உள்ள பழைய குற்றவியல் நீதிமன்ற வளாகத்தில் குடியிருப்புகள் கட்டுவதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1464, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், காங்கேயத்தில் உள்ள நீதிமன்றங்கள் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதற்கு, துறையின்மூலம் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1473, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குந்தா தாலுகாவில் உரிமையியல், குற்றவியல் நீதிமன்றம் ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,20,23,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 184, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் மாணவர், மாணவியர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு உணவுக்கு வழங்கப்படும் தொகையை அதிகப்படுத்துவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,22,24,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 629, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள ஜவ்வாது மலை பழங்குடியினர் நலத் துறையின் மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ஒப்பனைப் பொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,22,24,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 770, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,22,24,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1093, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1147, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மற்றும் அரசு மானியம் பெறும் அனைத்துப் பள்ளிகளில் பயிலும் 9-வது வகுப்பு படிக்கும் அனைத்து ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் ஏனைய வகுப்பினைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் இலவச சைக்கிள் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,22,24,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1134, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தியில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் மாணவர் இல்லம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,22,24,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1108, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் ஆதி திராவிடர் மாணவியருக்கு அரசு விடுதி தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. சோ. இராசேந்திரன்] [2005 செப்டம்பர் 26

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,22,24,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1301, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பில் உண்டு, உறைவிடப் பள்ளி ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,22,24,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1356, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிட மாணவ, மாணவிகள் தங்கும் விடுதியில் நூல் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.24,22,24,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1205, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணியில், தென்னை விதை நாற்றங்கால் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,31,03,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."



2005 செப்டம்பர் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 876, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள விதைகள் வைக்கும் கிடங்குகள் அனைத்தும் பழுதுபார்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானதை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,31,03,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1202, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டிய தண்ணீரில் கங்கைகொண்டான் பகுதியில் நிறுவப்பட்டுள்ள Coca Cola என்னும் பன்னாட்டு நிறுவனம் தாமிரபரணி ஆற்றிலிருந்து நாள்தோறும் 9,00,000 லிட்டர் தண்ணீரை எடுத்துச் செல்வதற்கு அனுமதித்துள்ளது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,31,03,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 211, திரு. என்.ஆர். ரங்கராஜன்

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தமான பழுதடைந்த வாகனத்தை மாற்றுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,36,07,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,00,00,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1180, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 332, திரு. துரை கி. சரவணன்.

**திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு ஒதுக்கப்படும் மண்ணெண்ணெய் அளவினை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,53,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,53,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,46,70,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 431, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய குடும்ப அட்டைகளுக்கு, பழைய குடும்ப அட்டைகளில் அரிசி, மண்ணெண்ணெய் பெற்ற கார்டுகளுக்கு அரிசிக்கு மட்டும் பதிவு செய்திருப்பதை மாற்றி, பழையபடி அரிசியும், மண்ணெண்ணெயும் சேர்த்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,53,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,53,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,46,70,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 485, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை ஒன்றியம், ஆனந்ததாண்டவபுரம், மன்னம்பந்தல், மல்லியக்கொல்லை கூட்டுறவு வங்கிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.361,53,20,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,53,88,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,46,70,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1276, திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீபெரும்புதூர் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூரில் ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்த பிரசவ மருத்துவமனை தற்போது மூடிக் கிடப்பதால் அதனை மீண்டும் திறக்கச் செய்வது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை பற்றிய 18 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.38,13,71,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற 1,04,00,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 148, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் ஆர்க்கவாடி மற்றும் அரும்பராம்பட்டு கிராமத்திற்கிடையே ஓடும் முசுகுந்தா நதியின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,45,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,07,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 154, திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தியாகராய நகர் தொகுதி, அசோக் பில்லர் அருகில் கடுமையான போக்குவரத்து நெரிசல் உள்ளதால், உடனடியாக மேம்பாலம் கட்டுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,45,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,07,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 353, திரு. எஸ்.ஏ.எம். உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள டாக்டர் பெசன்ட் சாலை, சி.ஐ.டி. காலனி, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டு, குண்டும் குழியுமாக உள்ளதை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நெடுஞ்சாலைகள் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.79,45 000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,00,07,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 143, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மேம்பாலம் கட்டும் பணி குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.78,32,01,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,17,75,00,000/–ல் ரூ.1/– குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. விவாதம், டாக்டர் க. பொன்முடி (குறுக்கீடு)



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று அலுவல் ஆய்வுக் குழுவில் நாம் முடிவெடுத்தது, கட்சிக்கு இரண்டு பேர் பேசலாம்; இன்று ஒருவர் பேசலாம், நாளை ஒருவர் பேசலாம் என்று அன்று முடிவெடுத்தோம். இப்பொழுது கட்சிக்கு ஒருவர்தான் பேச முடியும் என்று சொல்வது எப்படி முறையாக இருக்கும் என்று தெரியவில்லை. எல்லோரும் அங்கே இருந்தார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் அங்கு இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் துரைமுருகன் அவர்கள் இருந்தார்கள். அதேபோல, கோ.க. மணி அவர்கள் இருந்தார்கள். ஹேமச்சந்திரன் இருந்தார்கள். மற்றவர்களும் இருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி அப்போது இல்லை. (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, மணி இல்லையென்றால் மற்றவர்கள் எல்லாம் இருந்தோம். இருந்தபோது நாம் எடுத்த முடிவு தெளிவான முடிவு. இரண்டு நாட்கள் என்பது—இரண்டு பேர் பேசலாம் என்பதற்காகத்தான் இரண்டு நாள் என்று முடிவெடுத்தோம். மூன்று நாள் கேட்டோம், நான்கு நாள் கேட்டோம். இரண்டு நாள், இரண்டு பேர் பேசுங்கள்; மூன்றாவது நாள் நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார் என்றுதான் அன்றையதினம் முடிவெடுக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது திடீர் என்று ஒருவர் மட்டுமே ஒரு கட்சியின் சார்பிலே பேச முடியும் என்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்க முடியும்? எப்படி நியாயமாக இருக்க முடியும்? யார்தான் பேசுவார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரதான எதிர்க்கட்சியிலே இரண்டு பேர் பேசுகிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பிரதான எதிர்க்கட்சி என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள்தான் எதையும் initiate, அதாவது அவர்கள்தான் துவக்க வேண்டும்; விவாதத்தைத் துவக்கி வைக்க வேண்டும். அவர்கள்தான் விவாதத்தைத் தொகுத்து முடிக்க வேண்டும். அதேபோல, காங்கிரஸ் கட்சி அங்கீகரிக்கப்பட்ட சட்டமன்றக் கட்சி. 25 உறுப்பினர்கள் கொண்ட ஒரு கட்சி. நாங்களும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கட்சி. எங்களுக்கும் இரண்டு பேர் பேசலாம் என்று சொல்லி, நாங்கள் இரண்டு பேர் வந்த பிறகு, நீங்கள் ஒருவர்தான் பேசலாம் என்று சொன்னால், எப்படி முறையாக இருக்க முடியும்? அது சரியல்ல. கட்சிக்கு இரண்டு பேர் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இரண்டு பேர்

பேசவில்லை என்று சொன்னால், இந்த விவாதத்திலே பங்கேற்பதிலே எந்த அளவிற்குப் பொருள் இருக்க முடியும் என்பதை நாங்கள் பரிசீலிக்க வேண்டி வரும். இரண்டு பேர் பேச நீங்கள் ஏற்கெனவே ஒப்புக்கொண்டதைப்போல, இரண்டு பேர் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். இதுபோன்று ஒரு ஜனநாயகத்திலே வாய்ப்பூட்டுப் போடுவது முறையல்ல. ஜனநாயகம் என்று சொன்னால் விவாதங்கள், விரிவான விவாதங்கள், எந்த ஒளிவு மறைவும் இல்லாத விவாதங்கள், அனைத்தையும் எடுத்துப் பேசுகின்ற சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அந்த வகையிலே, எங்கள் கட்சியின் சார்பிலேயும் இரண்டு பேர் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகின்றேன். அதேபோல, மற்றவர்கள் கேட்டாலும் அவர்களுக்கும் தர வேண்டும் என்று வலியுறுத்தி, இரண்டு பேர் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விவாதத்திற்கு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன, இன்றைக்கும், நாளைக்கும். இன்றைக்கும், நாளைக்கும் விவாதம் என்பது நடைபெறுகிறது. நாளை மறுநாள்தான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். இப்பொழுது நேரம் என்பதுதான் முக்கியம். அதனாலே, எதிர்க்கட்சித் தலைவர்கள், மற்றவர்கள் பேசக்கூடிய நேரம் கடுமையாகக் குறைக்கப்படக்கூடிய சூழ்நிலை வந்தது என்று சொன்னால், முழுமையாகப் பேச முடியாது. தலைவர்கள் பேசும்போது, 10 நிமிடம் அல்லது 5 நிமிடத்திலே பேசி முடியுங்கள் என்று கட்சித் தலைவர்களுக்குக் கட்டளையிட்டால், அவர்கள் பேசி முடிக்க முடியாது. அதை உத்தேசித்துத்தான் ஒரு கட்சிக்கு ஒருவர் என்கின்ற மாதிரி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பிரதான எதிர்க்கட்சியில் இரண்டு பேர் பேசக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவிலே இருந்தவன் என்ற முறையிலே தெரிவிக்கிறேன். அலுவல் ஆய்வுக் குழு என்பது உயர்ந்த குழு. அமைச்சர்களும், பேரவைத் தலைவரும், நாங்களும் உட்கார்ந்து பேசுவது. அதிலே இரண்டு நாள்தான் பேசப் போகிறோம். இரண்டு நாள்—உடனே இரண்டாவது நாளே பேசி அமைச்சர் பதில் சொல்லலாமா என்றால்கூட, இல்லை, நான் அடுத்த நாள் பேசுகின்றேன் என்று சொன்னார். சரி, பரவாயில்லை என்று ஒத்துக்கொண்டோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இரண்டு நாட்களும் நீங்கள்தான் பேசுகிறீர்கள்.



**திரு. துரைமுருகன்:** இல்லை, இரண்டு நாள் என்றால் ஒரு கட்சிக்கு இரண்டு பேர் பேசலாம். முதல் நாள் எல்லோரும் பேசுவார்கள். இரண்டாவது நாள் தலைவர்கள் பேசுவார்கள் என்று சொன்னீர்கள். இதை எல்லாரும் ஒத்துக்கொண்டு வந்து விட்டோம். ஆனால், நம்முடைய status–க்கு verbatim–ஆக எழுதிக் கையெழுத்துப் போடுவது என்பது அலுவல் ஆய்வுக் குழுவில் இல்லாத பழக்கம். ஆனால், இது மாதிரி அடிக்கடி இந்த அலுவல் ஆய்வுக் குழுவின் நிலையை மாற்றுவது நமக்கு நல்லதல்ல. அந்தக் குழுவிற்கும் பெருமை அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அலுவல் ஆய்வுக் குழுதான் எனக்குக் கட்டளையிடுகிறது. அதைப் பற்றி ஒன்றும் இல்லை.

**திரு. துரைமுருகன்:** ஆகையால், பேரவைத் தலைவர் இதய சுத்தியோடு சொல்லுங்கள். அன்றைக்கு இரண்டு பேர் ஒரு கட்சிக்குப் பேசலாம் என்று சொன்னீர்களா, இல்லையா என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இரண்டு நாள் விவாதம்.

**திரு. துரைமுருகன்:** இல்லை என்று சொன்னீர்களேயானால், எங்களுக்கு ஒன்றும் இல்லை. பேசாமல்கூட போகின்றோம். எங்களுக்கு என்ன கிடக்கிறது? நீங்கள் 'ஆம்' என்போர் அதிகம் என்று நிறைவேற்றி விட்டுப் போங்கள், எங்களுக்கு என்ன கிடக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு நாள் என்பது விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறக்கூடிய நாட்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. அதேநேரத்தில், இன்று நாட்டிலிருக்கிற மிக முக்கியமான பிரச்சினைகளைக் குறித்து, கவன ஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானம், நிறைய கொடுத்திருக்கிறோம். அதைப் பேசுவதற்கு, நீங்கள் எடுத்துக்கொள்வதற்கு, நேரம் இல்லையென்று, அதையும் தவிர்த்து விடுகிறீர்கள். அதே நேரத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, மணி. இந்தக் கூட்டத் தொடரே குறுகிய காலக் கூட்டத் தொடர். எப்போதுமே, குளிர்காலக் கூட்டத் தொடர், ஒரு குறுகிய காலக் கூட்டத்

தொடர். எப்போதுமே துணை நிதிநிலை அறிக்கையின்மீது கடந்த ஆண்டு ஒரு நாள்தான் பேசப்பட்டது. ஒரு நாள்தான் விவாதம் எடுத்துக்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு. அதற்கு முந்தைய ஆண்டுகளிலும்கூட ஒரு நாள்தான் விவாதம் என்று நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் அன்றைக்கு ஒத்துக்கொண்டு, இரண்டு நாள் என்று விவாதத்திற்கென்று இப்பொழுது ஒதுக்கியிருக்கிறார்கள். மூன்றாவது நாள்தான் அவர்கள் பதில் சொல்கிறார்கள். ஆக, இன்றைக்கும், நாளைக்கும் நீங்களெல்லாம் பேசக்கூடிய வாய்ப்பிருக்கிறது. நேரம் என்பதுதான் இதிலே முக்கியம். அலுவல் ஆய்வுக் குழு இடக்கூடிய கட்டளையை செயல்படுத்த நான் தயாராக இருக்கிறேன். எனக்கு அதிலே ஒன்றும் ஆட்சேபனை இல்லை. நீங்கள் பேசுவதைப் பற்றியில்லை; நேரத்தை வெகுவாகக் குறைத்துக்கொண்டு, *5* நிமிடங்கள், *3* நிமிடங்கள் என்று பேசி முடிக்க முடியாது. கட்சித் தலைவர்கள் எல்லாம் அப்படிப் பேசி முடிக்க முடியாது. ஆகவே, தலைவர்களுக்கெல்லாம் போதுமான நேரம் தேவை என்கிற வகையிலேதான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

*முற்பகல் 11–20*

**திரு. ஜி.கே. மணி:** இன்றைக்கு நேரத்தைக் குறைத்துக்கொண்டு, நாளைக்குத் தலைவர்கள் பேசலாம். கட்சிக்கு ஒருவர் என்பது ரொம்பக் குறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை *1–30* மணி வரைதானே அவையை நடத்த முடியும்?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். தயவுசெய்து, உங்களை இக்கட்டில் மாட்டவில்லை. ஒரு கட்சிக்கு இரண்டு பேர் பேசலாம் என்று சொன்னீர்களா, இல்லையா? அதை மட்டும் சொல்லுங்கள். சபாநாயகர் சொல்லிவிட்டால் நான் விட்டுவிடுகிறேன் Sir. உங்களை இக்கட்டில் மாட்டவில்லை. மனசாட்சி என்று ஒன்று உண்டு Sir. ஒவ்வொன்றையுமா verbatim–ஆக எழுதுவோம்? நாம் எவ்வளவு பெரிய நிலையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறோம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், நீங்களும்தான் பேசிக்கொண்டிருந்தீர்கள் அது தொடர்பாக.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் எந்த ஆண்டும் முதல் துணை மதிப்பீட்டில் ஒரு கட்சிக்கு இருவர் என்று பேசிய வரலாறு எனக்குத் தெரிந்த வரை இல்லை. அலுவலகத்தில் கொடுத்தது. அப்படி வரலாறே கிடையாது, ஒன்று. இரண்டு தினங்கள் இதை வைத்துக்கொள்ளலாம் என்று கூறியதனுடைய நோக்கம், தலைவர்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டு பேச வேண்டுமென்ற நோக்கோடுதான் அது கூறப்பட்டது. எனக்குத் தெரிந்த வரை இரண்டு பேர் ஒரு கட்சிக்குப் பேசலாம் என்று பேரவைத் தலைவர் அவர்கள் கூறவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு என்ன, அதற்கு முந்தைய ஆண்டு என்ன என்பதல்ல. அன்றைக்குப் பேசப்பட்டது. அதுவும் நீங்கள் இரண்டாம் நாள் பதில் சொல்ல வேண்டுமென்றால், முடியாது என்பதால் மூன்றாவது நாள் பதில் சொல்கிறேன் என்றீர்கள், அதற்கும் ஒத்துக்கொண்டோம். ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொருவர் முன்வரிசையில் நாளைக்குப் பேசுவார்கள்; இன்றைக்குப் பின்வரிசையில் பேசுவார்கள் என்று சொன்னோம். ஆகையினால், இரண்டு நாளையும் விட்டுவிட்டு எங்களுக்கு எடுத்துவிட்டு—சரி, நாளைக்கு பதில் சொல்கிறீர்களா நீங்கள்? நாளைக்கு எல்லோரும் பேசியவுடன் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் பேசியவுடன், are you ready to start giving reply? உங்களுக்கு மட்டும் நாளைக்கு, நாளை மறுதினம் வேண்டுமா? என்ன Sir அக்கிரமம். It is unfair on the part of the Business Advisory. I am sorry. ஏனென்றால், இது unfair. அதற்குப் பிறகு, இன்னும் சொல்லப் போனால், ஒரு நாள் கொடுக்கமாட்டேன் என்றார்கள். முதலமைச்சரிடம் போய்க் கேட்டு விட்டு வாருங்கள், பரவாயில்லை, ஒத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, பிறகு முதலமைச்சரே அங்கேயிருந்து சொல்லி அனுப்பி, ஒரு நாள் extra வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் அதையெல்லாம் சொல்ல வேண்டுமா, Business Advisory Committee–யிலே?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று சொன்னார். (குறுக்கீடு) இருங்கள். இல்லை, இல்லை. நான் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு துரைமுருகன் பேசுகின்றபோது, இதில் இரண்டு நாளைக்கு என்ன இருக்கிறது, தேவையே இல்லையே, ஒரு நாளிலேயே முடித்திருக்கலாமே, ஒரு நாளிலேயே முடிக்கலாமே என்று அவரே சொன்னார். சொன்னாரா, இல்லையா என்று கேளுங்கள். (சிரிப்பு) அது பிரச்சினையல்ல. எந்தக் காலத்திலும், இதுகாறும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர் அவர்கள், இல்லை, அதை ஒரு கேலியாகச் சொல்லி விட்டுப் போனார். வேறு ஒன்றுமல்ல.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அலுவல் ஆய்வுக் குழு பேசி முடித்த பிறகு, அவர் lighter vein–ல், தமாஷாக, கடைசியாகச் சொன்னாரே தவிர, அதை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் நான்கு நாட்கள் கேட்டோம். மூன்றாவது நாள்தான் தலைவர்கள் பேச வேண்டுமென்றுகூட சொன்னோம். அதுவுமில்லை. இரண்டு நாட்கள், இரண்டு பேர் பேசிவிடுங்கள் என்று சொன்ன பிறகுதான், மூன்றாவது நாள் பதில் சொல்வதாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு பெரிய சிக்கல் என்னவென்றால், துரைமுருகன் பேசுவதில் எது தமாஷ், எது serious என்பதே தெரியவில்லை. (சிரிப்பு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதாவது, இன்று பேசுபவர்கள்—ஏற்கெனவே சில நண்பர்கள் சொன்னது போல, இன்று பேசுபவர்கள்—காலத்தை சிறிது குறைவாக எடுத்துக்கொள்ளட்டும். குறைந்த நேரத்தில் பேசி முடிக்கட்டும். நாளை பேசுகிற முன்வரிசைத் தலைவர்கள் கொஞ்சம் அதிக நேரம் பேசலாம். அந்த மாதிரியாவது ஒத்துக்கொண்டால் கொஞ்சம் நன்றாக இருக்கும். ஏனென்று சொன்னால், விவாதம் என்பது அனைவரும் பங்கேற்கின்ற வகையிலே இருக்க வேண்டும். எவ்வளவு குறைக்க முடியுமோ, அவ்வளவு குறைப்பது என்பது சரியல்ல. இன்று பேசுபவர்கள் நேரத்தைக் குறைத்துவிடுங்கள். நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். நாளை கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கலாம். அதை யோசித்துப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இப்போது நாம் இரண்டு நாட்கள் விவாதத்திற்கு என்று ஒதுக்கியிருக்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக் குழுவில் இரண்டு நாட்கள் இரண்டு பேர் பேசுவது என்று முடிவு செய்தோம். அவையினுடைய முன்னவர், நிதி அமைச்சர் சொன்னதற்குப் பிறகு, நாம் அதற்குப் பிறகுதான் இரண்டு நாட்கள் என்று முடிவு எடுத்தோம். இரண்டு நாட்கள் பேசலாம், இரண்டு பேர் பேசலாம் என்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, எல்லாக் கட்சியிலும் இரண்டு பேர் பேசுவது என்பது ரொம்ப சிக்கல். எஸ்.ஆர்.பி.–க்கு அது



ஒரு இக்கட்டான நிலைமை. காங்கிரசில் இரண்டு பேர் பேச வேண்டுமென்று கேட்கிறார் அவர். (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை, அப்படியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி எல்லாம் ஒத்துக்கொண்டார். (குறுக்கீடு) மணி, நீங்கள் தலைவர்கள் பேசுங்கள், போதுமான நேரம் எடுத்துக்கொண்டு பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வரலாற்றிலேயே (குறுக்கீடு) இல்லை, எங்களுக்குத் துறையிலே தந்திருக்கின்றது, முதல் துணை மதிப்பீட்டிலே இரண்டு நாட்கள் விவாதம் நடந்தாலும், கட்சிக்கு ஒருவர்தான் பேசியிருக்கிறார்கள். கட்சிக்கு இருவர் அல்ல. பிரதான எதிர்க்கட்சிக்கு இரண்டு பேர் பேசியிருக்கிறார்கள். போன ஆட்சியிலேயிருந்து பேரவையினுடைய செயலாளர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்போது நேரம் குறைக்கப்படவில்லை. இரண்டு நாட்கள் என்ற நேரம் குறைக்கப்படவேயில்லை. உங்களில் இருவர் பேசுகின்ற நேரத்தில் ஒருவரே, தலைவரே பேச வேண்டுமென்று உங்களுக்குத்தான் அதிக வாய்ப்புத் தரப்படுகிறது, நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இப்போது திரு. பொன்முடி, உங்கள் விவாதத்தை ஆரம்பியுங்கள். (குறுக்கீடுகள்) என்ன? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியில் கொடுக்கக்கூடிய நேரத்தைப் பிரித்துக்கொள்வது எங்களுடைய உரிமை. ஆகவே, இருவரா, ஒருவரா என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும். ஆகவே, நீங்கள் எங்கள் C.P.M.–க்கு இரண்டு பேர் பேசுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர்களுக்கு ஒதுக்கப்படுகிற நேரத்தில் அவர்கள் முடித்துக்கொள்வதே இல்லை என்பதும், அவையினுடைய மரபாக இருந்து வருகிற காரணத்தால், ஏற்கெனவே எடுத்த முடிவை நாம் மேற்கொள்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சமரசமாக, நாங்கள் நாளை பேசி விடுகிறோம். பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும், அல்லது துணைத் தலைவர் ஆற்காடு வீராசாமி அவர்கள் பேசினாலும்கூட, யார் பேசினாலும், நாளை மறுதினம் பேசட்டும். பிறகு நிதி அமைச்சர் பதில் சொல்லட்டும்; அது முறையாக இருக்கும். நாளைக்கு நீங்கள் கொஞ்சம் அதிக நேரம் பேசுங்கள். ஆனால், நாளைக்கு நான் பேசி விடுகிறேன். நாளை மறுதினம் நான் பேசவில்லை. நாளைக்கு நான் பேசிவிடுகிறேன். நாளைய மறுதினம் அவர் பேசட்டும். அதற்குப் பிறகு அவர்கள் பதில் சொல்லட்டும். அப்படி ஒரு சமரசமாக வைத்துக்கொள்வோம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில், இரு தினங்கள் எதிர்க்கட்சிகளுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு என்று முடிவு செய்யப்பட்டது. அதை நீட்டிக்க வேண்டாம். எடுக்கப்பட்ட முடிவை ஈடேற்றவேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்களை வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, ஆரம்பியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துகளை எடுத்து வைப்பதற்காக எனக்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்ச்சிலே அறிவிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைக்குப் பிறகு தொடர்ந்து தினசரி பல்வேறு அறிக்கைகள் வெளியாகிக்கொண்டு இருக்கின்றன. அவைகளெல்லாம், தேர்தல் கால அறிவிப்புகளைப்போல பல்வேறு அறிவிப்புகள் வெளியாகிக்கொண்டு இருந்தாலும், அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு இதிலே இருக்கும் என்ற ஆவலோடுதான் இதைப் புரட்டிப் பார்த்தோம். ஆனால், இதிலே பெரும்பாலும் வெறும் கையால் முழம் போடுகிற அறிவிப்புகளாகத்தான் இவை இருக்கின்றனவே தவிர, சரியான நிதி ஒதுக்கீடுகள் இதிலே காட்டப்படவில்லை என்பதை நான் எடுத்துக்காட்டுகளோடு சொல்ல விரும்புகிறேன்.



குறிப்பாக, நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற விரிவான துணை மதிப்பீடுகள்—அந்தப் புத்தகத்தில் பக்கம் 52–ல், இனம் எண்கள் 9 மற்றும் 10, 2005–2006 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலை அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ரூ.820 கோடி அனுமதித்துள்ளது. இது குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் 11–7–2005–ல் 920 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்று அறிவித்ததற்குப் பிறகு, இதிலே ரூ.820 கோடி அனுமதித்து உள்ளது என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. அது மட்டுமின்றி, இது புது துணைப் பணி குறித்த செலவாகும். துணை மதிப்பீடுகளில் ரூ.2,000 சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்தில் இருந்து மறு நிதி ஒதுக்கத்தின்மூலம் செலவிடப்படும். இது ஒன்று.

அதேபோல, அதே பக்கத்தில், (குறுக்கீடு) தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்–3–ன்கீழ், இரண்டு சாலை மேம்பாலங்கள் கட்டுவது தொடர்பாக அரசு ரூ.27 கோடியே 45 இலட்சம் அனுமதித்துள்ளது. இது புதுப் பணி குறித்த செலவாகும். துணை மதிப்பீடுகளில் ரூ.1,000 சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதி ஒதுக்கம் செய்வதன்மூலம் செலவிடப்படும். இனம் எண் 13—சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிய திட்டங்களுக்கு அரசு ரூ.525 கோடியே 5 இலட்சம் வழங்க முடிவு செய்துள்ளது. துணை மதிப்பீடுகளில் ரூ. 1,000 சேர்க்கப்பட்டுள்ளது. இந்த மூன்றிலுமேயே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருந்தாலும், அடையாளமாக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகைகள் ரூ.2,000, ரூ.1,000. அதிலே சொல்லப்பட்டிருக்கிற காரணம், எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து—820 கோடி ரூபாய்க்குத் திட்டத்திற்கு அனுமதி அளித்து விட்டு—820 கோடி ரூபாய், மானியத்தில் ஏற்படும் மீதத்திலே இருந்து வரும் என்று உண்மையிலேயே நிதி அமைச்சர் நினைக்கிறாரா? அந்த 820 கோடி ரூபாய் மட்டுமல்ல; சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு புதிய திட்டங்கள் அனைத்துக்குமே இதுபோல நிதியை அனுமதித்து இருக்கிறார்கள். Estimate sanction செய்து விடுகிறார்கள், Financial sanction வராது. Financial sanction வராமல் டெண்டர் எடுத்தவன் எந்த வேலையையும் ஆரம்பிக்க மாட்டான். இது எல்லாமே--Financial sanction இல்லாமல் ஒரு Administrative sanction மட்டும் கொடுப்பதனால், இவை எல்லாம் வெறும் அறிவிப்புகளாக மட்டுமேதான் நிற்குமே தவிர, இந்த 4 மாதத்தில், 6 மாதத்தில் செயல்படுத்தக்கூடிய திட்டங்களாக இருக்குமா?

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 1,919.25 கோடிக்கான முதல் துணை மதிப்பீடுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இதுவரையில் முதல் துணை மதிப்பீடுகளிலேயே அதிகபட்சமான ஒதுக்கீடு என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அறிவார் என்று நம்புகிறேன். 2005–2006 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர், அரசால் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்காகவும், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டங்களில் அந்த மதிப்பீடுகளைவிட கூடுதல் செலவினம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படும் இனங்களுக்காகவும் இந்த நிதி ஒதுக்கீட்டைக் கோருவதே இந்தத் துணை மதிப்பீடுகளின் நோக்கம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அறிவார்.

முதலில் சில உண்மைகளை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 820 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்துவிட்டு, இந்த அரசு முதல் துணை மதிப்பீடுகளில் ரூ.2,000/– மட்டுமே ஒதுக்குவது முறையா என்ற வினாவை நீங்களும் கேட்டிருக்கிறீர்கள், அவைக்கு வராமல் கையெழுத்துப் போட்டுவிட்டு, அவைக்கு வெளியிலே கருத்துக் கூறுகிற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மனப்பாங்கைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்ற உங்களது தலைவரும் அறிக்கை விட்டிருக்கிறார். சட்டமன்றத்திற்கு வராமல், அவர் இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிறார்; நீங்கள் சட்டமன்றத்திற்கு வந்து எழுப்புகிறீர்கள். 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இதற்காக 650 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை, 2005–2006 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தை நீங்கள் படிக்க வேண்டும். அதைப் படித்திருந்தால் இந்த வினாவை நீங்கள் எழுப்பியிருக்கமாட்டீர்கள். அதைப் படித்திருந்தால் உங்கள் தலைவரும் இந்த வினாவைப் பத்திரிகையில் எழுப்பியிருக்க மாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

அத்தோடு, 2005–2006–க்காக ஒட்டுமொத்தம் ரூ.2,991.47 கோடி. ஒதுக்கியிருப்பதையும் உங்கள் தலைவரும் படிக்கவில்லை; பரவாயில்லை, அவருக்குப் படிக்க முடியாது. நீங்கள் பேராசிரியர், நீங்களும் படிக்கத் தவறிவிட்டீர்களோ என்றுதான் நான் எண்ணுகிறேன். அதுமட்டுமல்ல. இவ்வாண்டில் மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான ஒதுக்கீடுகள் உள்ள நிலையில், மேலும் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினங்கள் மட்டுமே சட்டமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ரூபாய் 820 கோடி என்ற உயரளவிலான



இத்தகைய சாலை மேம்பாட்டுத் திட்டத்தை இந்நிதியாண்டில் செயல்படுத்தப் போதிய நிதியை இவ்வரசு ஏற்கெனவே ஒதுக்கியுள்ளதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படித்திருந்தால் இந்தப் பிரச்சினையை நீங்கள் இங்கே எழுப்பியிருக்கமாட்டீர்கள் என்று நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து, சென்னை மாநகர வளர்ச்சித் திட்டம். சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஒரு அடையாள ஒதுக்கீடு மட்டுமே வழங்கியுள்ளதாக நீங்கள் கூறுகிறீர்கள். வரவு–செலவுத் திட்ட ஆவணங்களைப் படித்துப் புரிந்துகொள்வது இயலாத ஒன்று என்றாலும்கூட, நீங்கள் ஒட்டுமொத்தமாக இவற்றை அவையில் பேசுகின்றபோது, நீங்கள் படித்திருக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 வருட காலத்தில் சென்னை மாநகரப் பகுதிகளை மேம்படுத்த மாபெரும் திட்டம் ஒன்றை அறிவித்ததை நீங்கள் சுலபமாக மறந்துவிட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இத்திட்டத்தின் பல பகுதிகளுக்கான ஒதுக்கீடுகள்--சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம்— ஒருவேளை அதிலே உங்கள் control இல்லாததால், அந்த ஞானம், அல்லது தகவல் உங்களுக்குத் தரப்படவில்லை என்று கருதுகிறேன். இத்திட்டத்தின் பல பகுதிகளுக்கான ஒதுக்கீடுகள், சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகராட்சி, சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு மின் வாரியம் போன்றவற்றின் வரவு–செலவுத் திட்டங்களிலும், மாநில வரவு–செலவுத் திட்டத்திலும் ஏற்கெனவே அவை ஒதுக்கப்பட்டுள்ளன, வழிவகை செய்யப்பட்டுள்ளன என்பதை நீங்கள் படித்து மறந்து விட்டீர்களோ, அல்லது படிக்காமல் அவையில் வந்து ஏதேனும் குழப்பத்தைக் கூற வேண்டுமென்று கூறுகிறீர்களோ, தெரியவில்லை. தற்போதேனும் அதை நீங்கள் படித்துப் பார்க்க வேண்டும். இவற்றிலிருந்து, சென்னை மாநகர வளர்ச்சித் திட்டத்திற்கு இந்நிதியாண்டில் ஏற்கெனவே 148 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

*முற்பகல் 11–35*

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் கொடுத்த நிதிநிலை அறிக்கையையும் நான் படித்திருக்கிறேன். அவர் சொன்னார், நிதிநிலை அறிக்கையிலேயே ஒதுக்கியிருக்கிறேன் என்று. அப்படி ஒதுக்கியிருக்கப்படுமானால் இங்கே எதற்காக புது துணைப் பணி என்று அறிவிக்க வேண்டும்? நீங்கள்தான்

ஒதுக்கிவிட்டீர்கள். அப்புறம் ஏன் புது துணைப் பணி என்று போட்டிருக்கிறீர்கள்? என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களது தலைவர் திரு. கருணாநிதி அவர்கள்கூட பல ஆண்டுகள் நிதி அமைச்சராக இருந்தவர். எல்லாத் துணை மதிப்பீடுகளிலும் இதே நிலையைக் கடைப்பிடிப்பது மரபு, முறை என்பதை அவர் மறந்து விட்டார், வயதான காரணத்தால். இளைஞர் நீங்கள் ஏன் அதைப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்? எனக்கு அது புரியவில்லை. அது மட்டுமல்ல. (குறுக்கீடு) இல்லை, அது மட்டுமல்ல. ஏன் என்றால், அவர் நேற்று அறிக்கை விட்டுவிட்டார் இல்லையா? நான் பதில் சொல்ல வேண்டும். He has issued a statement yesterday. Mr. Karunanidhi has issued a statement yesterday. So, I am bound to give a reply therefor. அது மட்டுமல்ல. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். முதல் துணை மதிப்பீட்டில் (குறுக்கீடு) சொல்கிறேன். முதல் துணை மதிப்பீட்டில் அடையாள ஒதுக்கீடு சேர்க்கப்படுவதன் நோக்கமே, இத்திட்டங்களைச் சட்டமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பதுதான். அவையில், நிதித் துறையில் ஆண்டு பலவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற நடைமுறை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அது மட்டுமல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ரூ.920 கோடி அறிவித்ததில், 100 கோடி ரூபாய் ஊரகச் சாலைகளுக்கான ஒதுக்கீடாகும். எனவே, நெடுஞ்சாலைத் துறைக்கான அனுமதி 820 கோடி ரூபாய் ஆகும்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரேயொரு நிமிஷம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப் பணியாக இருந்தால்தான், அது புதுப் பணி என்று சொல்லப்படுமே தவிர, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட, ஏற்கெனவே பட்ஜெட்டிலே வந்து விட்ட எந்தப் பணியாக இருந்தாலும், அதைப் புதுப் பணி என்று சொல்வதில்லை. அதற்கு அதிகமாக நிதி தேவைப்பட்டால்கூட, மதிப்பீடுகள் தவறாகி விட்டால், மதிப்பீடுகள் குறைந்து விட்டது, இதற்குப் புதிதாக மீண்டும் நிதி ஒதுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது, எனவே ஒதுக்குகிறோம் என்று சொல்வதில் தவறில்லை. அது புதுப் பணி ஆகாது. புதிதாக, அன்றையதினம் எதிர்பார்க்காத எந்தப் பணியாக இருந்தாலும் அது புதிய பணியாகும். நீங்கள் பட்ஜெட் சமர்ப்பித்தபோது இருந்த பணிகள் புதிய பணியாக நிச்சயமாக இருக்க முடியாது.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்டடத்திற்கு 9 படிக்கட்டுகள் வைக்கின்றபோது, அதை 10–ஆக உயர்த்தும்போது, ஒரு படி சேர்ந்து வந்தாலும் புதுப் பணியாகவே அது ஆகிவிடும். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இருங்கள், கொஞ்சம் என்னைப் பேச விடுங்கள், பேசிவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சருக்கு, புள்ளிவிவரங்களுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லையென்றால், வெளியிலே இருக்கிறவர்களையெல்லாம் இழுத்துக்கொள்கிறார். அது எப்படியோ போகட்டும். அது அரசியல். நான் கேட்கின்றது, புள்ளிவிவரங்களோடு என்னைப் பேசுவதற்குத் தயவுசெய்து அனுமதிக்க வேண்டும். அவர் சொன்னார். நான் வைத்திருப்பது 2000–2001–லே கடந்த கால கலைஞர் ஆட்சியிலே கொடுக்கப்பட்ட துணை மதிப்பீடு. (ஒரு புத்தகத்தை அவையில் காண்பித்தார்) இதிலே எங்கேயாவது புதுத் திட்டம் என்று இருக்கிறதா என்று பாருங்கள். எல்லாக் காலத்திலேயும் கொடுத்தார்கள் என்று சொன்னீர்களே, கிடையாது. ஒரு துணை மானியம் என்றாலே, முதலிலே சொல்லியிருக்கிற பட்ஜெட்டில் விட்டுப் போன நிதிகள், இடையிலே ஏற்படுகிற, அவசியமாக ஏற்படுகிறவைதான் துணை மானியமே தவிர, புதிய திட்டங்களைப் பல—ஒன்றிரண்டு அறிவிக்கலாம். அதுகூட எல்லா மானியங்களிலும் அங்கங்கே நடைபெறுவது உண்டு. ஆனால், புதிய திட்டங்களாகவே அறிவித்து விட்டு, ஏன் அதற்குப் பணம் ஒதுக்கவில்லை என்றால், நாங்கள் அதற்கு பட்ஜெட்டிலே சொல்லிவிட்டோம் என்று சொன்னால், அதற்குப் பெயர் புதிய திட்டம் கிடையாது. அதைத்தான் முதலிலேயே நிதி அமைச்சர் தெரிந்துகொள்வார் என்று நானும் நினைக்கிறேன். அவர்கள் நான் பேராசிரியர் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நன்றி. அதனாலேயேதான் இதையும் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமும் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய திட்டங்கள் ஒன்றிரண்டை அறிவிக்கலாம் என்று சொல்கிறார். ஒன்றிரண்டை அறிவிக்கின்றபோது. 4, 5 திட்டங்களை அறிவிப்பதைச் சரியானது என்று மறைமுகமாக நீங்களே ஒத்துக்கொள்கிறீர்களே?

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, விதி என்பது வேறு, விதிவிலக்கு என்பது வேறு. ஒரு நிதிநிலை அறிக்கையிலே, விதி என்பது, புதிய திட்டங்களை அறிவிக்கலாம். அதற்காக token announcement பண்ணுவது என்பது நிதிநிலை அறிக்கையிலே இருக்கிற விதி. விதிவிலக்குகள் என்பது இதுபோன்ற துணை மானியங்கள் அறிவிக்கிறபோது, ஒரு சில, காலத்தின் அருமை கருதி சிலவற்றை அறிவிக்க வேண்டுமென்று வந்தால் அது விதிவிலக்காக இருக்கும். தாங்கள் விதிவிலக்குகளையே விதியாக எடுத்துக்கொண்டு இதை உருவாக்கியிருக்கிறீர்கள். இது துணை மதிப்பீடு என்பதைவிட, ஒரு 'Mini Budget'-ஐப்போல உருவாக்கியிருக்கிறீர்கள். 'Mini Budget'-ஐ உருவாக்கியிருந்தாலும் கவலையில்லை. ஆனால் நிதி ஒதுக்கீடுகள் சரியாகச் செய்யப்படவில்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு சரியாகச் செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பதனை Fiscal Responsibility Act-க்காகத் தரப்பட்டிருக்கிற ஆய்வு அவைக்குத் தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் அதைப் படித்துப் பார்த்தால் அது சரி என்ற உண்மையைப் புரிந்துகொள்வார்கள்; இப்படிப் பேசமாட்டார்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றையெல்லாம் நாங்கள் படித்துவிட்டுத்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்தான் விஷயம் இல்லாததால், எதையோ சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறார். அதைப் பற்றிக் கவலையில்லை.

மேலும், அவர் கொடுத்த அறிக்கையிலேயே, பக்கம் 4-லே, "ரூபாய் 400.80 கோடி மொத்தச் செலவில் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகளை வலுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக அரசு, மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும், ரூபாய் 75.00 கோடி மானியம் அனுமதித்துள்ளது."

அதிலேயே 8-வது இனமாக, "ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளை வலுப்படுத்துவதற்கு 400.00 கோடி ரூபாய்; அதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை 115 கோடி ரூபாய்." இப்படித் திட்டங்களை அதிக அளவோடு அறிவித்துவிட்டு, அதற்கு நீங்கள் முதலிலேயே 115 கோடி ரூபாய்க்கு நாங்கள் செய்யப் போகிறோம் என்று நீங்கள் announce பண்ணி விட்டு இதிலே finance-லே போட வேண்டியதுதானே? எதற்காக 400 கோடி ரூபாய் என்று announce பண்ணி விட்டு, 115 கோடி ரூபாய் மட்டும்



ஒதுக்குகிறீர்கள்? ஆக, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இது சும்மா. வெள்ளை அறிக்கை கலைஞர் கேட்டார் என்கிற காரணத்திற்காக ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக இதை ஒரு dodge, botch பண்ணியிருக்கிறீர்களே தவிர...

*முற்பகல் 11-40*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் நிதிநிலையைச் சீரழித்து, அரசால் ஏழை எளியவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத் திட்ட உதவிகளைத் தொடர இயலாத நிலையை கடந்த தி.மு.க. அரசு ஏற்படுத்தியது. எனது அரசு இதனை ஒரு மாபெரும் சவாலாக ஏற்றுக்கொண்டு, நிதிநிலையைச் சீரமைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு, அதில் வெற்றியும் பெற்றுள்ளது.

நிதிநிலையைச் சீர் செய்த பின்னர்தான், ஏழை எளியோருக்குப் பயன் அளிக்கும் வகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ள இயலும். இதைத்தான் நாங்கள் செய்தோம். எப்பொழுதுமே ஏழை எளியவர்களுக்காகப் பாடுபட்டு வரும் எனது அரசு, அவர்களுக்கு உண்மையான பயன் கிட்டுவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நிதிநிலைக் கட்டுப்பாட்டைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, மக்கள் நலனுக்காகத் திட்டங்களை அறிமுகப்படுத்துவது போன்ற பாசாங்கு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) பின்னர் எத்திட்டத்தையும் தொடர இயலாத ஒரு நிலையை உருவாக்கிய முந்தைய தி.மு.க. ஆட்சிபோல் இல்லாமல், எப்போதும் போதிய நிதிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து எனது அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நான் அறிவித்த அனைத்துத் திட்டங்களும் பட்டியலிடப்பட்டு, இத்திட்டங்களை வேகமாகச் செயல்படுத்தும் வகையில், நிதி ஒதுக்கீடு தேவையுள்ள திட்டங்கள் அனைத்தும் முதல் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தத் துணை மதிப்பீடுகளில் கோரப்பட்டுள்ள கூடுதல் நிதிக்கான மொத்தத் தொகை சுமார் 1,900 கோடி ரூபாய் ஆகும்.

2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்படி எதிர்பார்க்கப்படும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை 260.41 கோடி ரூபாய் ஆகும். துணை மதிப்பீட்டுக் கோரிக்கைகளுடன் சேர்த்து மொத்தப் பற்றாக்குறை சுமார் 2,160 கோடி ரூபாயாக உயரும் என்ற ஐயப்பாடு ஏற்படக்கூடும்.

எனது அரசு கடைப்பிடித்து வரும் நிதிக் கொள்கைகளின் காரணமாக அரசின் வருவாய் கணிசமாக உயர்ந்துள்ளது. அரசின் செம்மையான நிருவாகத்தால் விற்பனை வரி, முத்திரைக் கட்டணம், ஆயத்தீர்வை போன்ற வரி வருவாய் இனங்களில் கணிசமான அளவு கூடுதல் வருவாய் கிடைத்து வருகிறது.

எனவே, நடப்பாண்டில் அரசின் வருவாய், வரவு–செலவு மதிப்பீட்டைவிட 1,500 கோடி ரூபாய்க்கு மேல் கூடுதலாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசின் நிதி நிருவாகத்தைச் செம்மையாக நடத்துவதன்மூலமும், வட்டிச் சுமையைக் குறைத்ததன்மூலமும் 500 கோடி ரூபாய்க்கு மேல் சேமிப்பு ஏற்படும். எனவே, அரசின் புதிய திட்டங்களுக்கான அனைத்துச் செலவினங்களுக்கும் தேவையான ஒதுக்கீடு, தேவையான நிதி ஒதுக்கீடு செய்த பின்னரும், எனது அரசின் சிறப்பான நிதி மேலாண்மை காரணமாக, நடப்பாண்டில் இறுதி நிதிநிலை, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைவிட நன்றாகவே இருக்கும் என்பது உறுதி.

முதல் துணை மதிப்பீட்டில் தேவையான கூடுதல் செலவினங்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கைக்கான அவசியம் எதுவும் எழவில்லை. புதிய திட்டங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்க இயலாத நிலை உருவாகி, அரசின் நிதிநிலை மோசம் அடைந்து வருவதாகக் கூறப்படுவது முற்றிலும் அடிப்படையற்ற குற்றச்சாட்டு ஆகும்.

இச்சட்டமன்றத் தொடரில் விரிவான துணை மதிப்பீடுகளைத் தாக்கல் செய்ததுடன், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின்கீழ் அளிக்கப்பட வேண்டிய நிதிநிலை குறித்த ஆய்வு அறிக்கையும் இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அரசின் உண்மையான நிதிநிலை குறித்த இந்த ஆய்வு அறிக்கை, அரசின் நிதி நலம் எவ்வாறு இருக்கின்றது என்பது குறித்தும், புதிய திட்டங்களுக்கான செலவினங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது குறித்தும், தெளிவாகவும், உறுதியாகவும் எடுத்துரைக்கிறது.

மக்கள் நலனில் எப்போதுமே அக்கறை கொண்டுள்ள எனது அரசு, மக்கள் நலனுக்காக அடுக்கடுக்காகப் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருவதைக் காணப் பொறுக்கமாட்டாமல், இதற்கெல்லாம் எங்கே பணம், வெள்ளை அறிக்கையை வையுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மனம் போன போக்கில் அவதூறு பேசி வருகின்றனர்.



2003 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின்கீழ் 2003–2004 ஆம் நிதி ஆண்டிலிருந்து வரவு–செலவுத் திட்டத்தை ஒட்டிய வரவு மற்றும் செலவு நிலை குறித்த ஆய்வு அறிக்கைகளை எனது அரசு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்து வருகிறது.

தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் துணை மதிப்பீடுகளுடன், இந்த அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கே இடம் இல்லை. மக்களுக்கு நாங்கள் செய்கின்ற நல்ல திட்டங்களைப் பார்த்து, மக்கள் பயன் அடைவதைப் பார்த்து, இப்படி வயிற்றெரிச்சலைக் கொட்டாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–45*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசினுடைய நிதிநிலையை, financial stability எப்படி இருக்கிறது என்று சொன்னார்கள். மகிழ்ச்சி. Financial stability இருந்தால்தான் திட்டங்களை start பண்ண முடியும். ஆனால் அவர்களுடைய கருத்துக்கு ஒன்று சொல்லுகிறேன். எப்படியெல்லாம் அவர் நிதிகளைப் பெருக்கினார் என்று சொன்னார். இன்னொன்றும் இருக்கிறது. 11th Finance Commission-ல், முன்னேறிய மாநிலங்களுக்குப் பணம் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள் மத்திய அரசு. இப்போது 12th Finance Commission–ல் அந்த bar–ஐ எடுத்து விட்டார்கள். அதனுடைய விளைவு என்னவென்று கேட்டால், இப்போது நாம் Central Government-னுடைய பட்ஜெட்டுக்கு முன்னால் நாம் போடும்போது 4,672 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கும் என்று பார்த்தோம், மத்திய அரசு வரியிலிருந்து. ஆனால், அவர்கள் போட்டதிலிருந்து பார்த்தீர்கள் என்றால், இவர் சொன்னதைப் பார்த்தீர்களென்றால், நிதி அமைச்சருடைய கணக்குப்படி 5,041 கோடி ரூபாய் நமக்கு வந்திருக்கிறது. அது எப்போது? பட்ஜெட்டில். அதிலும் R.E.–ல் வரும்போது இதுவே 6,000 கோடிகூட போகும். எனவே, மத்திய அரசு, அதாவது கூரையைப் பிச்சிக்கிட்டு கொட்டுது இங்கே நிதியை. அதனுடைய விளைவு உங்களுக்கு ஏறியிருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களே. டெல்லியிலே பல ஆண்டு காலம் ஆட்சி இயந்திரத்தில் இருக்கின்ற நீங்கள் மாநில அதிகாரத்தை நீங்கள் விட்டுவிட்டுத் தமிழகத்தைக் காட்டிக் கொடுத்து, தமிழகத்திற்குத் துரோகம் செய்துவிட்டீர்கள் என்பதற்கு உதாரணம், மத்திய அரசினுடைய devolution–ஐப் பொறுத்தவரைக்கும் ஏதோ நமக்குப் பிச்சை கொடுக்கவில்லை அவர்கள். It is the constitutional mandate on the part of the Government of India to devolve funds. தமிழகத்திலிருந்து ஒட்டுமொத்தமாக மைய அரசுக்குக் கிடைத்திருக்கிற வருமானம், சென்ற ஆண்டு 27,000 கோடி ரூபாய். ஆனால், 27,000 கோடி ரூபாய் நமது பணத்தை எடுத்துக்கொண்டு சென்று விட்டு, திருப்பி 5,000 கோடி ரூபாய்தான் தந்தார்கள் என்று பேசுவது நம் அண்ணாவினுடைய கொள்கையை, அதிக உரிமை மாநிலத்திற்கு வேண்டும் என்ற கொள்கையைக் காற்றில் பறக்க விடும் கொள்கையை டெல்லியிலே நீங்கள் கடைப்பிடித்து இங்கே மக்களை ஏமாற்றுகிறீர்களே, இது முறையல்ல. ஒட்டுமொத்தமாக இந்த devolution தவறான முறை, நமது உரிமையைப் பறிக்கின்ற முறையை அவர்கள் கடைப்பிடிக்கின்ற காரணத்தால் இதுகாறும் தமிழகத்திற்கு 2001–லிருந்து 2005 வரை 3,832.1 கோடி ரூபாய் நமக்கு வரவேண்டிய பணத்தை, இல்லை என்று ஒதுக்கி விட்டு, இந்தப் பணத்தை, வளராத மாநிலம் என்று சொல்லுகிற, நாம் வெறுக்கின்ற, நம்மை ஈட்டியெனத் தாக்குகிற இந்தி மொழி பேசுகிற மாநிலங்களையெல்லாம் மிகவும் பின்தங்கிய மாநிலங்கள் என்று, அங்கு ஒதுக்கி விடுகிறார்கள். அதைத் தட்டிக் கேட்பதில்லை நீங்கள். டெல்லியிலே நீங்கள், (குறுக்கீடு) முடிந்துவிட்டது. விட்டுவிட்டீர்களே; 12th Finance Commission–லேயும் நமக்கு இழப்புத்தான், இலாபம் இல்லை. அங்கு நீங்கள் கோரிக்கையைக் கேட்கவில்லை; பதவி சுகம் வேண்டும் என்பதற்காக மாநில உரிமையை விட்டுக் கொடுக்கின்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றவர்கள் நீங்கள் என்பதனைத் தமிழக மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், கூரையைப் பிச்சிக்கிட்டுக் கொட்டுது என்று சொன்னீர்கள். அமைச்சர் என்ன சொல்கிறார் என்றால், கூரையைத்தான் பிய்க்குதே தவிர, ஒன்றும் கொட்டவில்லை என்று. (சிரிப்பு)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, நாங்கள் ஏதோ வயிற்றெரிச்சலில் பேசுகிறோம் என்று சொன்னார்கள். ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற முறையில், சொல்லியிருக்கின்ற திட்டங்களுக்கு நிதி எங்கே இருக்கிறது என்று கேட்கிற கடமை, உரிமை



இருக்கிற காரணத்தினால், இவற்றையெல்லாம் புள்ளிவிவரங்களோடு கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அதேபோல, 10–7–2005–லே ரூ.44.82 கோடியில் 14 நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவோம் என்று அறிவிப்பு வந்திருந்தது. (குறுக்கீடு) சார், நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் குறித்துக்கொண்டு அப்புறம் சொல்லுங்கள். அதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு இல்லை. 16–7–2005–ல் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளுக்காக, 416 விடுதிகள், 131 கோடி ரூபாய் செலவிலே கட்டப்படும் என்று அறிவிப்பு வந்திருந்தது. அதற்கான நிதி ஒதுக்கீடும் இதிலே இருப்பதாகத் தெரியவில்லை. 2001 முதல் 4 ஆண்டுகளில் தமிழகத்தில் கட்டப்பட்டிருக்கிற விடுதிகளினுடைய எண்ணிக்கை, 345 விடுதிகள்; அதற்கான செலவு 103.95 கோடி ரூபாய். 4 வருடத்தில் 345 விடுதிகளைக் கட்டிய நீங்கள், 6 மாதத்தில் 416 விடுதிகளைக் கட்டுவோம் 131 கோடி ரூபாய் செலவில் என்று சொல்கிறீர்களே, இது உண்மையிலேயே நீங்கள் செய்யப் போகிற திட்டமா? தேர்தலுக்காக அறிவித்திருக்கிற அறிவிப்பா? இதைக் கேட்டால் உங்களுக்குக் கோபம் வருகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தை ஈடேற்ற நிதியும் எங்களிடம் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் விளக்கிவிட்டார்கள். அதைச் செயல்படுத்த, திறமை மிக்க Engineers-களும் அரசிடம் இருக்கிறார்கள். அதுவும் உங்களுக்குத் தெரியும். திட்டம் ஈடேறும். நிதி இல்லாமல் திட்டங்களை அறிவித்தது உங்கள் கால ஆட்சி. நிதியைக் கையிலே வைத்துக் கொண்டு, நல்ல அதிகாரிகளை வைத்துக் கொண்டு திட்டங்களை அறிவிப்பது, செயல் வடிவிலே சாதனை செய்கின்ற ஆட்சி புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் அப்போதிலிருந்தே கேட்கிறார்.

முற்பகல் 11–50

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் சென்ற ஆண்டு நடைபெற்ற ஒரு விவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அறிவித்துவிட்டு, அறிவித்த அந்த திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு

[திரு. இரா. விசுவநாதன்] [2005 செப்டம்பர் 26

எங்கே என்று கேட்டபோது, அவர்கள் சொன்னார்கள்; அன்றைக்கு இதே அவையில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு வீராசாமி அவர்கள் சொன்னார்கள். நாங்கள் திட்டங்களை அறிவித்திருக்கிறோம், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல், முதலில் திட்டங்களை அறிவித்துவிட்டு, பிறகு நிதி ஒதுக்கீட்டைப் பற்றி ஏற்பாடு செய்வது சகஜம் என்றுதான் பதில் அளித்தார். அதோடு மட்டுமல்ல. ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் என்று திட்டத்தை அறிவித்து விட்டு, நிதி ஒதுக்கீட்டில் வெறும் 10 கோடி ரூபாய்தானே ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று சுட்டிக்காட்டியபோது, எந்த ஒரு திட்டத்திற்கும், token–ஆக, முன்னேற்பாடாக குறைந்த அளவு நிதிதான் ஒதுக்குவது வழக்கம், அப்படித்தான் நாங்கள் ஒதுக்கினோம் என்று பதில் அளித்தார்கள். அதேபோல, அன்றைக்குக்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதில் அளித்தார்கள்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் திட்டங்களை அறிவிப்பார்கள், ஆனால் நிதியை ஒதுக்குவதேயில்லை. ஆனால், நாங்கள் அப்படி அல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அறிவிக்கின்ற திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதுதான் எங்களுடைய ஆட்சி என்று அன்றைக்கே பதில் அளித்தார்கள். அதைப்போல, அறிவித்த திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருப்பது அம்மா அவர்களுடைய ஆட்சி. வெறும் அறிவிப்புகளோடு, உங்களுடைய அறிவிப்புகளை அப்படியே விட்டுவிடுவது உங்களுடைய பழக்கம். அதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள்.

***திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாமல் என்னுடைய பெயரை, மாண்புமிகு அமைச்சர் சொன்ன காரணத்தினால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவையில்லாமல் இல்லை. அவசியம் என்று கருதித்தான் சொல்லியிருக்கிறார்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** விளக்கம் சொல்ல விரும்புகிறேன். எந்தக் காலத்திலேயும் நான், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு நாங்கள் நிதி ஒதுக்கவில்லை என்று சொல்லவில்லை. ஒவ்வொரு தொகுதியிலேயும் ஒரு வேலையெடுப்பது என்றும், அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, அந்தப் பணிகளை மேற்கொள்வது என்றும் தி.மு.க. ஆட்சியிலே திட்டமிட்டோம் என்றுதான் நான் சொன்னேன்.



2005 செப்டம்பர் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவர் token–ஆக ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று சொன்னார். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** பல்வேறு துறைகளிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் விளக்கம் சொல்லிவிட்டார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கிறது; நாங்கள் திட்டத்தை அறிவித்திருக்கிறோம், ஆனால் அதற்கு நிதி ஒதுக்கீடு பின்னால் ஏற்பாடு செய்வோம் என்றுதான் சொன்னாரே தவிர, அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லவேயில்லை. திட்டங்களை அறிவித்திருக்கிறோம், ஆனால் நிதி ஒதுக்கவில்லை என்று நீங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அம்மா அவர்கள் சொன்னார்கள், நாங்கள் திட்டங்களை அறிவித்தால், நிதி ஒதுக்காமல் திட்டங்களை அறிவிக்கவேமாட்டோம் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அதையே இன்றைக்கு நிதியை ஒதுக்கீடு செய்து திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள் என்பதைத்தான் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதும் அதுதான். கோடிக்கணக்கிலே, 800 கோடி, 900 கோடி ரூபாய் என்று அறிவித்து விட்டு, 2,000, 1,000 ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறீர்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினைப் பொறுத்தவரையிலே, அன்றைக்கு ஆற்காட்டார் சொன்னது, பல்வேறு துறைகளின்மூலமாக அவைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று. நீங்கள்கூட பண்ணியிருக்கிறீர்கள். இப்போது, ஊரக வளர்ச்சித் துறைக்கு, சாலைகள் போடுவதற்கு என்று சொல்லிவிட்டு, நெடுஞ்சாலைத் துறைக்கு அந்தப் பணத்தை கொடுத்திருக்கிறீர்கள். அதை எப்படிச் செய்தீர்கள்? பண ஒதுக்கீடு ஊரகத் துறையில் வருகிறது. நெடுஞ்சாலைத் துறைக்கு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தமிழகத்தில்தான் இருக்கிறார் என்று கருதுகிறேன். Executing authority is the Highways Department.

**டாக்டர் க. பொன்முடி:** இதுகூட நிதி அமைச்சருக்குத் தெரியாது என்று நான் நினைக்கவில்லை. சாலைப் பணிகளைச் செய்வதற்கு,

உள்ளாட்சித் துறையிலேயே engineers எல்லாம் இதுவரையில் செய்து கொண்டிருந்தார்கள். அதுகூட நிதி அமைச்சருக்குத் தெரியாதா? இப்போது...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட திட்டங்கள் தற்போது நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிற உண்மை உங்களுக்குத் தெரியவில்லையே? அதைத்தான் சொல்லுகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** உள்ளாட்சித் துறை நீண்ட காலமாகச் செய்து வந்த பணியை அவர்களிடமிருந்து பிடுங்கி, நெடுஞ்சாலைத் துறையிலே செய்வதற்குக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த மாதிரிதான்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, அதற்குக் காரணம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்பில் இருந்த பணி நெடுஞ்சாலைத் துறைக்குக் கொடுக்கப்பட்ட காரணம், நெடுஞ்சாலைத் துறையிலே engineer-கள் அதிகமாக இருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்தில் வேலையைச் செய்யக்கூடிய திறமை மிக்க engineer-கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. They are having more equipments and infrastructure.

**டாக்டர் க. பொன்முடி:** அதற்கான காரணங்கள் மக்களுக்குத் தெரியும். அதை விடுங்கள், right. அடுத்து, அதேபோல, 2001-2005-லே 150 சார் பதிவகங்களைக் கணினிமயமாக்க 19.21 கோடி ரூபாய் 7-8-2005-ல் முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு. இதிலே துணை மதிப்பீட்டிலே பத்திரப் பதிவுத் துறைக்கே 50 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். சரி, கணினியில் ஏதாவது ஒதுக்கியிருப்பீர்கள், தொழில்நுட்பத் துறை என்று பார்த்தால், அதற்கும் 85 இலட்சம் ரூபாய்தான் இருக்கிறது. மொத்தமே 135 இலட்சம்தான். இதிலே எப்படி 19.21 கோடி ரூபாய்க்கு 150 சார் பதிவகங்களைக் கணினிமயமாக்கப் போகிறீர்கள்? இது நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு, நிதி ஒதுக்கவில்லை, அதைத்தான் சொல்கிறேன். அறிவிப்புகள் வந்திருக்கின்றன. நிதிநிலை அறிக்கையிலே இவையெல்லாம் பற்றிச் சொல்லப்படாமல் இருக்கிறது.

கால்நடைகளைப் பேணிக் காக்க 59.79 கோடி ரூபாய், 22-8-2005 அன்று அறிவிக்கப்பட்ட செய்தி. அதிலே ரூ.17 கோடிதான் ஒதுக்கப்பட்டுள்ளது. NABARD உதவியோடு அறிவிப்புத் திட்டம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதுவும் போகட்டும். கால்நடைகளைப் பேணிக் காப்பதற்கு இவ்வளவு கவனம் செலுத்துகிற நீங்கள்,—ஏன் இங்கே எல்லாம் புகழ்ந்தார்கள்—ஆடுகளைக்கூட கண்டால் இரக்கப்படுகிற முதலமைச்சர் அவர்கள்—71 பேர் தற்கொலை செய்து கொண்டு, சாலைப் பணியாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்—இந்தக் கால்நடைகள் மீதெல்லாம் பரிவு காட்டுகிற முதலமைச்சர் அவர்கள், அந்தச் சாலைப் பணியாளர்கள்மீதும் பரிவு காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*முற்பகல் 11-55*

அது மட்டுமல்ல. 131 கோடி ரூபாய் செலவில் 540 முறைசாரா சிறு பாசன ஏரிகளைத் தூர்வாரிப் புனரமைக்க 24-8-2005-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக 68 கோடி ரூபாய் மட்டுமே அனுமதி அளித்திருப்பதாகக் கூறிவிட்டு, ஒதுக்கீடு 1,000 ரூபாய் மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது. சொன்ன scheme, அறிவித்தது 131 கோடி ரூபாய்; Administrative sanction 68 கோடி ரூபாய்; financial sanction only Rs.1,000/- இது, இந்த அறிவிப்புகளை எல்லாம் ஏதோ செயல்படுத்துகிற நம்பிக்கையா? எல்லாம் சொல்லி விட்டு, இதிலிருந்து...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படுகின்ற சிக்கன நடவடிக்கைகள் காரணமாக, சேமிப்பு ஏற்கெனவே உருவாகியிருக்கிறது. அந்தச் சிக்கன நடவடிக்கையினால் உருவாக்குகின்ற சேமிப்பைக் கொண்டு அது ஈடுகட்டப்படும் என்பதும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, சீக்கிரம், இன்னும் 4 மணித்துளிகளில் பேச்சை முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள். குறுக்கீடுகள் நிறைய இருந்திருக்கின்றன. நான் இன்னும் பேசவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுக்கீடுகள் போகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளின் காரணமாக பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் மூடப்பட்டு, பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை

ஏற்பட்டுள்ளது. ஆனால், சாலைப் பணியாளர்களிடத்திலே அன்றையதினம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கையூட்டாகப் பல தொகைகளைப் பெற்றுக்கொண்டு அவர்களை எல்லாம் பணியிலே அமர்த்திய காரணத்தினாலேதான், அவர்களுக்காக மட்டும் இவர்கள் வருந்திக் கொண்டு, கூட்டுறவு நூற்பாலைகளிலே வேலையிழந்த, (குறுக்கீடு) கொஞ்சம் பேச விடுங்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மூடப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளிலே வேலையிழந்த தொழிலாளர்களுக்காக எல்லாம் வருத்தப்படாத நீங்கள், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே முறைகேடாகப் பணியமர்த்தப்பட்ட சாலைப் பணியாளர்களுக்காக மட்டும் வருந்திக் கொண்டு, வேதனைக் கண்ணீர் வடிப்பது ஏன் என்கின்ற கேள்வியைக் கேட்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ஜெயராமன் அவர்கள் இந்த அமைச்சரவை அமைந்தபோது அமைச்சராக இருந்தார்கள். இடையிலே கொஞ்ச நாள் அமைச்சராக இல்லை. மீண்டும் அமைச்சராக இருக்கிறார்கள். **

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அமைச்சரை அமைச்சரவையில் சேர்ப்பதும், நீக்குவதும் முதலமைச்சரின் உரிமை. என்ன காரணம் என்பது முதலமைச்சருக்குத்தான் தெரியும். அந்தக் காரணத்தைப் பற்றி திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேச முடியாது. அவர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலே உங்களுக்கு மாறுபாடு இருக்கிறபோது அந்தக் கருத்தைப் பற்றி நீங்கள் சொல்ல வேண்டுமே தவிர, அமைச்சரை நேரடியாக அப்படிச் சொல்வது முறையற்றது; கண்ணியமற்றது. தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அமைச்சர் அவர்களைப் பற்றி துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்ட கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும். அதைப் பற்றி ஒன்றும் அல்ல. (குறுக்கீடு) அதைக் கேளுங்கள். அப்படிப் பேசுங்கள். அமைச்சர் சொன்ன அந்தக் கருத்துக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். அதைப் பற்றி ஒன்றுமில்லை. நேரடியாக அமைச்சரைப் பற்றிச் சொல்வது முறையற்றது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பல்வேறு கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து அவர்கள் குடும்பங்கள் பட்டினியாகக் கிடப்பதற்குக் காரணமாக இருந்தது கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கேளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அப்போது வேலையிழந்த கூட்டுறவு நூற்பாலையினுடைய தொழிலாளர்களுக்கெல்லாம் வேதனைக் கண்ணீர் வடிக்காத இவர்கள், இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே முறைகேடாகப் பணியமர்த்தப்பட்ட சாலைப் பணியாளர்களுக்காக மட்டும் ஏன் வருந்தி வருந்தி, இப்போது ஒவ்வொரு முறையும் இவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள், அதனுடைய உள்நோக்கம் என்ன என்பதுதான் எங்கள் கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாலைப் பணியாளர்கள் பற்றி அவர் குறிப்பிட்ட அந்தக் கருத்துக்கு உங்களுக்கு மாறுபட்ட கருத்து இருக்கிறபோது, நீங்கள் அது பற்றிச் சொல்லலாம். அது பற்றி ஒன்றுமில்லை. (குறுக்கீடு) அதைக் கேளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மற்றவர்கள்மீது இல்லாத கருணை ஏன் உங்களுக்கு சாலைப் பணியாளர்களுக்கு மட்டும் என்று சொல்கிறார்கள்; மற்றவர்களும் வேலையில்லாமல் இருக்கிறார்களே, அதைப் பற்றிப் பேசக்கூடாதா என்று அவர் சொல்லட்டும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால்...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும்போது இலட்சக்கணக்கான ரூபாயை இவர்கள் கையூட்டாகப் பெற்றுக்கொண்ட காரணத்தினால்தான் இன்றைக்கு அந்த சாலைப் பணியாளர்கள் வேலையிழந்து தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேராசிரியர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) பொன்முடி (குறுக்கீடு) பொன்முடி, உட்காருங்கள். பேராசிரியர் பேசுகிற வரைக்கும் இருங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஓர் அமைச்சர் முறைகேடாக, ஏற்கெனவே பணியில் நியமிக்கப்பட்ட சாலைப் பணியாளர்களிடம் இலட்சக்கணக்கான ரூபாய் இலஞ்சம் பெற்றுக்கொண்டு, என்று பேசினார். ஏற்கெனவே பணியில் நியமிக்கப்பட்டவர்கள்மீது, அப்படி இலஞ்சம் வாங்கியிருந்தால் அதை நிரூபிக்க வேண்டும். ஆளுங் கட்சியாக இருந்துகொண்டு, நிரூபிக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து, நிரூபித்து, குற்றம் சாட்டினால் அந்தக் குற்றச்சாட்டை நான் குறை சொல்ல முடியாது. ஆனால், ஓர் அமைச்சர் எந்தக் குற்றச்சாட்டை வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற எண்ணத்தில் இப்படி அவர் பேசுவாரேயானால், அமைச்சர்களைப் பற்றி வெளியிலே வருகிற செய்திகளை எல்லாம் நாங்கள் பேசுவதற்கு இந்த அவையிலே இடம் உண்டா? பேசினால் நீங்கள் அனுமதிப்பீர்களா? **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள் இப்படிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) பேராசிரியர் அவர்கள், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேராசிரியர் அவர்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இதற்கு நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) பேராசிரியர், நான் சொல்லிவிடுகிறேன். இல்லை, நான் சொல்லிவிடுகிறேன், சொல்லிவிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேராசிரியர் அவர்கள் தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) பேராசிரியர், நான் சொல்லிவிடுகிறேன். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) சொல்லிவிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) பேராசிரியர், தயவுசெய்து உட்காருங்கள். பேராசிரியர் அவர்கள் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) பேராசிரியர், தயவுசெய்து உட்காருங்கள். பேராசிரியர் அவர்கள் தயவுசெய்து உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். நான் சொன்ன பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். நான் அதைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். சொல்கிறபோது துரைமுருகன் எழுந்து விளக்கம் கேட்கலாம். அதைப் பற்றி ஒன்றும் இல்லை. ** அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டது. பேராசிரியர் அவர்கள், எப்போதுமே கண்ணியமாகப் பேசக்கூடிய பேராசிரியர் அவர்கள், (குறுக்கீடுகள்) இப்படி முறைகேடாகச் சொல்வது சரியல்ல. (குறுக்கீடுகள்) பேராசிரியர் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) அதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) கேளுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்கள் பிரச்சினை தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் உள்ளதால், அரசு இப்பொழுது எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** முதலமைச்சர் சொன்னது correct. நான் ஒத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) துரைமுருகன், உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** முதலமைச்சர் சொன்ன பதில் இந்த அவையில் எங்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் ஜெயராமன் அவர்கள் குற்றச்சாட்டாகப் பேசியது இந்த அவையில் இடம் பெறுமானால் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டிய இடத்திலே இருப்பது ஆளுங்கட்சி; நிரூபிக்க நடவடிக்கை எடுக்கலாம். நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எல்லாம் இன்னும்கூட முடிவு எடுக்கப்படாமல் காத்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே, நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளே முடிவு எடுக்கப்படாமல் இருக்கிறபோது, இதுவரையில் நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டை ஒரு மாண்புமிகு அமைச்சர் இந்த அவையில் நேரடியாகச் சொல்கிறபோது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதை அனுமதிக்கக் கூடாது. அதை நீங்கள் அனுமதிப்பேன் என்று சொன்னால், எங்களுக்கு இந்த அவையில் இன்றைக்கு இடம் இல்லை என்று அர்த்தம். ஆகவே, நாங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விளக்கம் சொல்லட்டும்.



*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே பல்வேறு சாலைப் பணியாளர்கள், வேலையிழந்தவர்கள் சொன்ன முறையீடு என்னவென்று சொன்னால், நாங்கள் எல்லாம் கடந்த கால ஆட்சியாளர்களிடத்திலே காசு கொடுத்துத்தான் வேலை வாங்கினோம். இப்போது எங்களுக்கு மிகவும் வேதனையான சூழ்நிலையிலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் எங்களிடத்திலே அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடுகள்) அது மட்டுமல்ல; இதே அவையில் மாண்புமிகு முதலமைச்சர் (குறுக்கீடுகள்) இதே அவையில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடன் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த நஞ்சே கௌடா, தாட்சாயிணி ஆகிய இரண்டு பேரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தை விடுதலைப் புலிகளோடு சேர்ந்து எடுக்கப்பட்ட புகைப்படம் என்று சொன்னார்கள் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, அவர் விளக்கம் சொல்லி விடட்டும், அமைச்சர் விளக்கம் சொல்லி விடட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கிற வகையில் முதலமைச்சர் பதில் சொன்ன பிறகும், அமைச்சர் என்ன சொல்கிறார் என்று கேட்டால், சாலைப் பணியாளர்கள், பணம் கொடுத்தவர்கள் எல்லாம் என்னிடத்திலே வந்து சொன்னார்கள், அதுதான் ஆதாரம் என்கிறார். அதைத்தான் நான் சொல்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பிரச்சினையை விட்டுவிட்டு ஏன் எங்கேயோ போகிறீர்கள்? அதற்கு விளக்கத்தைக் கேட்பதானால் கேளுங்கள். விளக்கத்தைத்தான் அமைச்சர் சொல்கிறார். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. துரைமுருகன் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கொஞ்சம் விளக்கம் கேட்டு விட்டு, பிறகு பேசுங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் ஒரு விளக்கம் சொல்லி விடட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்பாக அமைச்சர் விளக்கம் சொல்ல இருக்கிறார். அவருடைய விளக்கத்தைக் கேட்டு விட்டுப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேராசிரியர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இது தொடர்பாக ஒரு விளக்கம் சொல்லவிருக்கிறார்கள். விளக்கத்தைச் சொல்லிய பிறகு என்னவென்று கேட்டு விட்டு அதற்குப் பிறகு போகலாம். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரைக் கொஞ்சம் பேசவிடுங்கள், என்னவென்று கேட்போம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசிவிடுகிறேன், பதில் சொல்லிவிடுகிறேன். திரு. பொன்முடிக்கு பதில் சொல்லிவிடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பொதுப் பணித் துறை அமைச்சர் ஒரு விளக்கம் சொல்லிவிடட்டும். திரு. எஸ்.ஆர்.பி. உட்காருங்கள். (குறுக்கீடு) விளக்கமே வேண்டாம் என்று சொன்னால் எப்படி?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அது என்னுடைய கடமை. (குறுக்கீடு) விளக்கம் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அது தொடர்பாக ஒரு விளக்கம் சொல்ல எழுகிறார். (குறுக்கீடுகள்) இல்லை, அவருடைய விளக்கத்தைக் கேட்டு விட்டுப் பேசுங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவருக்கு விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடு) அவர் சொன்னதற்கு விளக்கம் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. நீங்கள் என்னை உட்காரச் சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், தயவுசெய்து உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, திரு. கணேசன், உட்காருங்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறார். அந்த விளக்கத்தைக் கேட்டு விட்டு, அதற்குப் பிறகு பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் விளக்கம் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் விளக்கம் சொல்லி விடட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் இங்கே கூறுகின்றபோது, முறைசாரா சிறு பாசனக் குளங்களை (குறுக்கீடுகள்) என்ன இது? (குறுக்கீடுகள்) இல்லை, குற்றச்சாட்டுச் சொன்னால், அதற்கு விளக்கம் சொல்ல வேண்டாமா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விளக்கத்தைக் கேட்டு விட்டு, அதற்குப் பிறகு பேசுங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். விளக்கம் சொன்னால், முடியாது என்று சொன்னால், பிறகு எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள்,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) அவர் சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அவர் சொல்லி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் குற்றச்சாட்டைச் சொல்லிக்கொண்டே போகிறீர்களே? பதில் சொல்லக் கூடாதா நாங்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னதற்கு நான் பதில் சொல்கிறேன். அப்புறம் நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேராசிரியர் அவர்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேராசிரியர், பேசுங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) பேராசிரியர், சொல்லுங்கள்.



**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ஜெயராமன் அவர்கள் இங்கே பேசுகிறபோது, ஆதாரம் இல்லாமலும், சான்று இல்லாமலும் ஒரு குற்றச்சாட்டை எங்கள்மீது சொன்ன காரணத்தால், அதற்குப் பதிலாக, நாங்களும் அதேபோலப் பேச முடியும் என்று இங்கே நான் பேசினேன். நான் பேசியதைத் தாங்கள் எடுத்துவிட்டீர்கள். தங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. அவையை நடத்துவதற்கு, ஒரு குற்றச்சாட்டை ஒருவர் சொல்லி, அது இந்த அவையிலே இருக்கக் கூடாது என்று தாங்கள் எடுத்துவிட்டீர்கள். அதேபோல, அமைச்சர் சொன்னதையும் தாங்கள் எடுத்தால், இந்த அவையை முறையாக நடத்துவதிலே தாங்கள் அக்கறையாக இருக்கிறீர்கள் என்று நாங்கள் உணர்ந்து, கட்டுப்பட்டு நடக்கத் தயாராக இருக்கிறோம். அமைச்சர் சொன்னதை எடுக்கமாட்டேன் என்ற முறையில் சபாநாயகர் அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய நிலைமை இருக்குமானால், அப்படித் தாங்கள் நடந்து கொள்வீர்களேயானால், தாங்கள் அப்படித் தெரிவித்துவிட்டால், இந்த அவையில் எங்களுக்கு நியாயமில்லை என்ற காரணத்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய விளக்கத்தைச் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டுக்கு என்ன காரணம் என்று விளக்கத்தைச் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**பேராசிரியர் க. அன்பழகன்:** அது தேவையில்லை, என் பேச்சை எடுப்பதற்கு அது தேவையில்லை. (குறுக்கீடுகள்) விளக்கம் தேவையில்லை. (குறுக்கீடுகள்) விளக்கம் தேவையில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பிடிவாதமாக இருக்கிற காரணத்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக, கையூட்டு என்கிற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இரண்டாவது முறையாக, காசு பெற்றுக்கொண்டனர் என்கிற வார்த்தையைச் சொன்னார். இவை அவைக் குறிப்பில் இருப்பது முறையாக இருக்க

முடியாது. அவர்கள் பேசியது—திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து அகற்றியிருக்கிறீர்கள். அதைப்போலவே, அமைச்சர் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து அகற்ற வேண்டும். அவைக் குறிப்பிலேயிருந்து அகற்றினாலொழிய, இது முறையாக இருக்காது. எந்தக் குற்றச்சாட்டை வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் சொல்லலாம் என்கிற நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே, அமைச்சர் சொல்லிய அந்த இரண்டு குற்றச்சாட்டுகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லையென்று சொன்னால், நாங்களும் அதே வழியில்தான் போக வேண்டியிருக்கும், வெளிநடப்புச் செய்துதான் ஆகவேண்டும். வேறு வழியில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுக்கான ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. சாலைப் பணியாளர்கள் நியமனம் தொடர்பான அந்தக் குற்றச்சாட்டுக்கு என்ன காரணம் என்பதற்கு அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே மாதிரி, திரு. துரைமுருகன் அவர்கள் காரணத்தைச் சொன்னார், என்னிடத்திலே வந்து சொன்னார்கள் என்று. (குறுக்கீடுகள்) அதை ஏற்றுக்கொள்ளுங்கள். அவ்வளவு தெளிவாக,...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒரு பொறுப்புள்ள அமைச்சர் (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒரு பொறுப்புள்ள அமைச்சர் அதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு பொறுப்புள்ள அமைச்சர் அந்தக் குற்றச்சாட்டை, அவர் எந்த அடிப்படையிலே அந்தக் குற்றச்சாட்டு வந்தது என்பதற்கான காரணத்தை அவர்கள் இங்கே விளக்கமாகச் சொல்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவரும்தான் காரணம் சொன்னாரே! திரு. துரைமுருகன் அவர்களும் காரணம் சொன்னாரே!



தன்னிடத்தில் பொறுப்புள்ள சிலர் வந்து, சில பேர் இதைப்போல் சொன்ன காரணத்தினாலே, நான் அதே குற்றச்சாட்டை மீண்டும் சொல்கிறேன் என்று திரு. துரைமுருகன் சொன்னாரே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அரசுத் தரப்பிலே சொல்வதற்கும், எதிர்க்கட்சித் தரப்பிலே போகிற போக்கிலே சொல்வதற்கும் வேறுபாடு உண்டு. அரசுத் தரப்பு என்பது அமைச்சருடைய தரப்பு என்பது, அதற்குரிய ஆதாரங்களைக் கையிலே வைத்துக்கொண்டு பேசக்கூடிய தரப்பு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் பொறுப்பு என்றிருக்கிறது. பொறுப்புணர்ச்சியில்லாமல், அப்படிப் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுப்பில்லையென்று சொல்லவில்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நாங்கள் பொறுப்புணர்ச்சியோடு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னால், அதை நீங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அது நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டு என்றால், அதை நான் தவறு என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுப்பு என்பதை நான் பதவிப் பொறுப்பு என்று குறிப்பிடுகிறேனே தவிர,...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அதேபோல, ஆளுங்கட்சி சார்பிலே அமைச்சராக இருந்தாலும்கூட, நிரூபிக்கப்படாத ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துவது முறையாக இருக்குமா? கையூட்டு என்று சொல்லலாமா? காசு வாங்கினார் என்று சொல்லலாமா? காசு வாங்கினார் என்று சொல்லி விட்டு, அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலே இருக்கலாமா? இருப்பது முறைதானா என்றுதான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உங்களிடத்திலே தீர்ப்பை எதிர்பார்க்கிறேன். நீங்கள் சொல்கிற தீர்ப்பைப் பொறுத்துத்தான், நாங்கள் இந்த அவை நிகழ்ச்சிகளிலே தொடர்ந்து இருப்பது பற்றி நாங்கள் முடிவு செய்ய முடியும். தெளிவான தீர்ப்பாக இருக்கட்டும். இது முறையல்ல. எந்தக் காரணத்தைக் கொண்டும், அவர்கள் லஞ்சம் வாங்கினார்கள், கையூட்டு வாங்கினார்கள் என்று சொல்வதும், காசு வாங்கிக் கொண்டார்கள் என்று சொல்வதும் எப்படி முறையாக இருக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சாலைப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்ட நேரத்தில் சில பேருக்குக் காசு கொடுத்து, அந்தப் பதவியை வாங்கியிருக்கிறார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆதாரம் என்ன? அதற்கு என்ன ஆதாரம்?

*(தி.மு.க. உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி அவைக்குள் வந்தார்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதிக்கு எதிராக, வெளிநடப்பைப் புறக்கணித்து விட்டு அவைக்கு வந்த பொன்முடிக்கு வாழ்த்துக்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்துவிட்டு நாங்கள் வெளியிலே உட்கார்ந்து பேசிவிட்டு, எல்லோரும் வந்து கொண்டிருக்கிறார்கள். வந்து பேசப் போகிறோம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பது, (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் எங்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று, அந்தச் சொற்றொடரை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீக்குவீர்கள் என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடுகள்) அவர்கள் வந்தால் வந்து விட்டுப் போகிறார்கள். எங்களுக்குக் கடமையில்லையா? எங்களுக்கும் கடமையிருக்கிறது. தாங்கள் எதிர்க்கட்சிகள்மீது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நிலைமை அதையெல்லாம் தாண்டிப் போய்விட்டது. அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. அவர்கள் வெளிநடப்பு பண்ணினால், நாங்களும் வெளிநடப்பு பண்ணுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புச் செய்து விட்டுப் போங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. அது முறையல்ல. அதுதான் உங்கள் தீர்ப்பு என்று சொன்னால், நாங்கள் வெளிநடப்புதான் செய்யவேண்டும். நாங்கள் வெளிநடப்புச் செய்ய வேண்டி வரும். நாங்கள் நிச்சயமாக வெளிநடப்புச் செய்வோம்.



ஏனென்றால், இதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாளைக்கு யாரைப் பற்றி வேண்டுமானாலும் சொல்வார் அவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், அமைச்சர் சொன்னார், அதற்கு விளக்கம் சொன்னார். அதற்குப் பேராசிரியர் அவர்களும் பதில் சொன்னார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவர் சொன்னது ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கமல்ல. ஏற்றுக்கொள்ளத்தக்க விளக்கமாக இருந்தால் நானும் ஏற்றுக்கொள்வேன். ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் எந்த விளக்கமும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இப்போது நேரமில்லை. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சில பேர் வந்து, தன்னிடத்திலே சொன்னதாகச் சொன்னார்கள். அது விளக்கமாகாது. அதுபோல யார் வேண்டுமானாலும் சொல்ல முடியும். இது பகிரங்கமான, தெளிவான ஒரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முடிந்துவிட்ட பிரச்சினை. (குறுக்கீடு) திரு. பொன்முடி, பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இது முடிந்த பிரச்சினை அல்ல. எனவே, நீங்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், நாங்கள், காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, மூன்று நிமிடங்களில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களை நாங்கள் நம்புகிறோம். உங்களுடைய தீர்ப்பு என்பது நடுநிலையோடு இருக்க வேண்டும். எதிர்க்கட்சி வரிசையிலே எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மரியாதைக்குரிய திரு. துரைமுருகன் அவர்களும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிய நீங்கள், அமைச்சர் சொன்ன கையூட்டு என்ற

அந்த வார்த்தையை கட்டாயம் நீக்க வேண்டும். நீக்குகிற அந்தத் தீர்ப்புதான், நடுநிலையான தீர்ப்பாக இருக்கும். இல்லையென்று சொன்னால், இந்தத் தீர்ப்பிலே எதிர்க்கட்சிகளுக்கு நம்பிக்கையில்லாமல் போய்விடுகிறது. ஆகவே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம். தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கிறோம். அமைச்சர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேராசிரியருக்கும், திரு. எஸ்.ஆர்.பி.க்கும் சொன்ன பதிலைத்தான் உங்களுக்கும் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, பேசுங்கள். பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) தாங்கள் இப்போது பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**டாக்டர் க. பொன்முடி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) திரு. சந்தானம். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பு என்பது ஒருதலைப்பட்சமானது. எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடியவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. ஆளுங்கட்சிக்கு முழுமையாக சாதகமாக இருக்கின்ற காரணத்தினாலே, பாட்டாளி மக்கள் கட்சி இதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறது.

(திருமதி வி. சிவகாமி, திரு. க. முருகவேல் ராஜன் ஆகியோரைத் தவிர, ஏனைய பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடுகள்) திரு. சந்தானம், நீங்கள் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் குறிப்பிட்ட குற்றச்சாட்டை நீக்கம் செய்யாததைக் கண்டித்து, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்க வேண்டும். நீக்காததைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளிலே எங்களுடைய அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய உள்ளப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத் தொடரானது, பல்வேறு விதத்திலே இந்த அரசினுடைய சாதனைகளை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் கூட்டப்பட்டிருக்கின்ற கூட்டத் தொடர். இந்தக் கூட்டத் தொடர் குளிர் காலக் கூட்டத் தொடர். இன்றைக்கு அவையிலே கடுமையான, சூடான விவாதங்கள் நடந்து கொண்டிருந்தாலும், இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கின்ற அந்த நல்ல அறிவிப்புகளால், தொழிலாளர்களும் சரி, விவசாயிகளும் சரி, பல்வேறு தரப்பைச் சார்ந்த மக்களும் இன்றைக்குக் குளிர்வான இதயத்தோடு இருக்கின்ற ஒரு நிலை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் உள்ளங்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கின்ற நிலை, அந்த மகிழ்ச்சியினை இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்றவர்கள் எல்லாம் தெரிந்துகொண்டிருக்கிற நிலையின் காரணமாகத்தான் மக்களுடைய எண்ணங்கள், மக்களுடைய சிந்தனைகள் எல்லாம் இன்றைக்கு ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்

பக்கம் சாய்ந்துவிட்டதே என்கின்ற அந்த ஆதங்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வெறும் அறிவிப்புகள் என்று சொல்லுகிறார்கள்; நிதி ஒதுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். எதை இந்த அரசு சொல்லியதைச் சாதிக்காமல் இருக்கிறது, செய்யாமல் இருக்கிறது என்பதை இன்றைக்கு மக்கள் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் காஞ்சிபுரத்தில் நடந்த இடைத் தேர்தலிலும், கும்மிடிப்பூண்டியில் நடந்த இடைத் தேர்தலிலும் மக்கள் அளித்திருக்கின்ற தீர்ப்பு தமிழகத்தைப் பொறுத்தளவிலே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களினுடைய எண்ணங்களிலே, தமிழக ஆட்சியிலே வீற்றிருக்கக்கூடிய அந்தத் தகுதி இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் இருக்கின்ற ஆட்சிக்குத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ நாடாளுமன்றத் தேர்தலிலே மத்தியிலே ஒரு ஆட்சியை நம்பி வாக்களித்து விட்டு, இன்றைக்கு அதிலும் மக்கள் ஏமாந்துவிட்டோமோ என்கின்ற நிலையை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12–20*

இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து, ஓராண்டு நிறைவு பெற்ற நிலையில், எத்தனை முறை, மக்கள் பயன்படுத்துகின்ற டீசல், பெட்ரோலுக்கு விலை உயர்த்தப்பட்டிருக்கிறது? அவற்றையெல்லாம் நியாயப்படுத்துகின்ற எதிர்க்கட்சி, இங்கே தமிழகத்திலே. இது சாதாரண மக்களைப் பாதிக்காதா? அன்றாடம் பயன்படுத்துகின்ற சமையல் எரிவாயுவிற்கு விலையை உயர்த்தவில்லையே என்று மக்கள் மகிழ்ச்சி கொள்ள வேண்டுமென்று வேறு தெரிவித்துக்கொள்கிறார்கள். பெட்ரோல், டீசல் விலை உயர்வினால் எத்தனை ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் இன்றைக்கு? தமிழகத்திலே இருக்கிற நல்லாட்சி நடத்துகின்ற ஒரு தலைமை இருக்கின்ற காரணத்தினால்தான், இத்தனையையும் தாங்கிக் கொண்டு, பேருந்துக் கட்டணங்களை உயர்த்தாமல் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி உயர்த்துகின்ற ஒரு சூழ்நிலை வருமேயானால், எத்தனை ஏழையெளிய மக்கள், தங்களுடைய பணிக்காகப் பேருந்துகளிலே செல்கின்றவர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதுபோல, இன்றைக்கு ஆட்டோ ஓட்டுகின்ற தொழிலாளர்களெல்லாம், எவ்வளவு நலிந்த நிலையிலே தங்களுடைய தொழிலை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்? அரசுப் பணிகளுக்குச் செல்கின்ற ஊழியர்களெல்லாம், இரு சக்கர



வாகனங்களிலே செல்ல முடியாத அளவிற்கு, இன்றைக்கு சைக்கிளிலே செல்கின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தைச் சிதைத்துக் கொண்டிருப்பவர்கள், தமிழக அரசு இன்றைக்கு நல்லவிதத்திலே மக்களுக்கு நிதி ஒதுக்கவில்லை என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், அது மிகுந்த வியப்பாகத்தான் இருக்கிறது. ஐந்தாண்டு காலம் போக்குவரத்துத் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து, இதுவரை சரித்திரத்தில் நடந்திராத அளவிற்கு, ஒரு முதலமைச்சர் அவர்களே நேரில் அமர்ந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொழிலாளர்களை அழைத்து வைத்துப் பேசி, அவர்கள் உள்ளமெல்லாம் மகிழ்கின்ற அளவிற்கு, இவ்வளவு பொருளாதாரச் சுமை இருந்தும்—பேருந்துக் கழகங்கள் கடந்த காலத்திலே எத்தனை கோடி நட்டத்திலே இயங்கின என்பதை இன்றைக்கு நாடறியும். அவற்றையெல்லாம் தீர்த்து வைத்து, அந்தத் தொழிலாளர்களெல்லாம் மகிழ்ச்சி அடைகின்ற அளவிலே—தீபாவளி நெருங்கிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், ஒவ்வொரு தொழிலாளியும் உச்சபட்சமாக 20 ஆயிரம் ரூபாய் பெறுகின்ற அளவிற்கு, அவர்கள் இன்றைக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதை நாடு அறிந்தவர்கள், அந்தத் தொழிலாளர்களுடைய எண்ணங்களை அறிந்தவர்கள் நிச்சயமாகத் தெரிந்துகொள்வார்கள். அந்த அளவிற்கு இந்த அரசு செயல்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக ஒரு திட்டத்தை அறிவித்து, அதற்கு நிதி ஒதுக்கவில்லையா? இந்தத் துணை மதிப்பீட்டிலே 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை விவசாயிகள் அறியமாட்டார்களா? தொழிலாளர்கள் அறியமாட்டார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு செய்திருக்கின்ற காரியங்கள் அவர்களுக்கு எட்டாதா? இதையெல்லாம் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு நல்ல பல கேள்விகளை முதலமைச்சர் முன்னால் எழுப்பி, அதற்கு நல்ல விடைகளைப் பெற வேண்டும்; அந்த விடைகளை இன்றைக்கு எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கின்ற நேரத்திலே, அவர்கள் இங்கில்லை என்றாலும், வெளியிலே இருந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தத்துவமாகிய, மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்பார்கள். இன்றைக்கு மத்தியிலே கூட்டாட்சியிலே இருக்கின்றவர்கள், மாநிலத்திலே இருக்கின்ற சுயாட்சியை நொறுக்க வேண்டுமென்கின்ற

[திரு. லா. சந்தானம்] [2005 செப்டம்பர் 26

எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இங்கிருக்கின்ற முதன்மை, எப்படிப்பட்ட முதன்மை?

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்பதுபோல, (மேசையைத் தட்டும் ஒலி) எண்ணிய காரியத்தை, யார் எதிர்த்து நின்றாலும் சாதித்துக் காட்டக்கூடிய ஒரு முதன்மை இங்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முதன்மை நிச்சயமாக இந்த மாநில சுயாட்சியை, அண்ணாவினுடைய அந்தத் திட்டத்தை நிறைவு செய்து கொண்டிருக்கிறது.

இன்றைக்கு சேது சமுத்திரத் திட்டம். தாங்கள் ஏதோ சாதித்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டத்தினாலே, மீனவர்களாகிய நாங்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம், எங்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். தமிழக அரசும் அந்தக் கருத்தைத்தான் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை மீனவ மக்களெல்லாம் எதிர்ப்பார்கள் என்கின்ற நோக்கத்தோடுதான், அங்கு இராமேஸ்வரத்திலோ, கன்னியாகுமரியிலேயோ, கடல் சார்ந்த பகுதியிலேகூட அந்த விழாவை நடத்தாமல், மதுரையிலே கொண்டு வந்து நடத்தியிருக்கிறார்கள். எனவே, இப்படியிருக்கின்ற ஒரு நிகழ்ச்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கு அந்த மீனவ மக்களுக்கு எப்படி எல்லாம் அந்தத் திட்டத்தின்மூலமாகப் பாதிப்பு வருகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அதை நான் அவர்களுடைய சிந்தனைக்கு எடுத்து வைக்கிறேன். தெளிவுபடுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குப் பயனுள்ள திட்டங்களை, மக்கள் நலனை முன்னிறுத்தி, இயற்றப்படும் திட்டங்களைச் செயல்படுத்துவதில், நானும், எனது அரசும் எப்போதும் முன் நிற்கிறோம் என்பது நாடறிந்த உண்மை. பொது மக்கள் விருப்பத்திற்கு இம்மியளவு மாறானது என்று தெரிந்தால்கூட, உடனே அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய நான் தயங்கியதில்லை. இதைப் பின்வாங்கும் நடவடிக்கை என்று கொச்சைப்படுத்திய கோமாளிகளும் உண்டு. ஆனால், மக்கள் நலனே எமது இலக்கு என்று நிர்ணயித்துச் செயல்படும் அரசே எனது அரசு



2005 செப்டம்பர் 26] [செல்வி ஜெ ஜெயலலிதா]

என்பதால்; உள்ளத்தில் உறுதியோடும், இலட்சியத் தெளிவோடும் வடிவமைக்கப்படும் எனது அரசின் திட்டங்கள் சாதனைகளாக உருவெடுத்து சகலருடைய பாராட்டுகளையும் பெற்று வருகின்றன.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களாலும், தொடர்ந்து என்னாலும், மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்பட்ட திட்டம்தான்! ஆனாலும், அந்தத் திட்டம் அவசர கதியில் நிறைவேற்றப்படுவதை நான் எதிர்க்கிறேன். சேதுக் கால்வாய் தோண்டுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று உறுதியாகக் கூறுகிறேன். ஏன்?

சேதுக் கால்வாய்த் திட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்பது நிபுணர்களின் கருத்து. சுற்றுச்சூழல் அறிஞர்களின் கருத்து. எல்லாவற்றிற்கும் மேலாக இது இலட்சக்கணக்கான மீனவப் பெருமக்களின் கருத்து. ஆகவேதான், சேதுக் கால்வாய்த் திட்டம் தற்போது செயல்படுத்தப்படும் விதத்தை நான் எதிர்க்கிறேன்.

எந்த எதிர்ப்பைப் பற்றியும் கவலையில்லை. எவர் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை, எப்படியும் நாங்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று விடாப்பிடியாக இருக்கிறது மத்திய அரசு. அந்த விபரீதச் செயலுக்குக் காரணமாக இருக்கிறார்கள் சில மக்கள் விரோதிகள். குறிப்பாக, தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியும், தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலுவும் காட்டுகின்ற அவசரத்தைப் பார்க்கும்போது, தமிழகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தங்களது வளத்தைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருக்கும் தன்னல மனிதர்களின் தவறான நடவடிக்கையாகவே இன்றைய சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் காட்சியளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு குறித்த நியாயமான கவலைகளுக்குத் தீர்வு கண்ட பின்பும், மீனவர்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பிற்கு வழிவகை செய்யப்பட்ட பின்னரும்தான், இத்திட்டம் துவக்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்தி வருகிறேன்.

தற்போது செயல்படுத்தப்படும் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் ஒரு அரைகுறைத் திட்டம். அவசரக் கோலத்தில் தொடங்கப்பட்ட திட்டம். அப்பாவி மீனவர்களை நிர்க்கதியாக்கத் துடிக்கும் திட்டம்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தும் முகமையின் தலைவர் என்ற முறையில் தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 செப்டம்பர் 26

கழகத்தின் தலைவர் இத்திட்டத்திற்கு சட்டப்படி பெற வேண்டிய தடையில்லாச் சான்றிதழ் வழங்கக் கோரி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் 9-6-2004 அன்று விண்ணப்பித்தார். விதிமுறைப்படி நடத்தப்பட்ட பொதுமக்கள் கருத்துக் கேட்புரைக் கூட்டங்களில் இத்திட்டத்திற்குப் பொது மக்கள் தெரிவித்த எதிர்ப்பினையும், அவர்களது கருத்துகளையும் பரிசீலனை செய்யும் முன், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை 2-3-2005 நாளிட்ட தனது கடிதத்தின் வாயிலாக, மேற்படி பொது மக்கள் கேட்புரைக் கூட்டங்களின் அறிக்கையை ஏழு நாட்களுக்குள் அனுப்பி வைக்கும்படி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு ஆணை பிறப்பித்தது. தவறினால் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986, பிரிவு 15-ன்கீழ் தண்டனைக்குரிய பிரிவுகள் செயல்படுத்தப்படும் எனவும் அது அச்சுறுத்தியது. மாநில அரசைச் சட்டத்திற்குப் புறம்பாக மிரட்டிப் பணிய வைப்பதுதான் மாநில சுயாட்சித் தத்துவமா?

பொது மக்கள் கேட்புரைக் கூட்டங்களில் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் பொது மக்களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது மட்டுமல்லாமல், தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI) தயாரித்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் அதிக அளவிலான முரண்பாடுகள் இருப்பதும் கண்டறியப்பட்டது.

பிற்பகல் 12-30

உத்தேசிக்கப்பட்டுள்ள சேது சமுத்திரக் கால்வாய் செல்கின்ற மன்னார் வளைகுடாப் பகுதி பத்தாயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட, கடல்வாழ் உயிரின வளம் மிகுந்த பகுதியாகும். மன்னார் வளைகுடாப் பகுதியில், ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவன நிதியுதவியுடன், கடல்வாழ் உயிரினப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை அமல்படுத்துவதற்கென மன்னார் வளைகுடாப் பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள், சேது சமுத்திரக் கால்வாய் அமைந்திட அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளும் இடத்தில், 3,600-க்கும் மேற்பட்ட கடல் உயிரினங்கள் மற்றும் கடல் தாவரங்கள் உள்ளன என்றும், மறைந்துவிடும் நிலையிலுள்ள 'டுகாங்' (Dugong) உயிரினங்கள் இங்குதான் உள்ளன என்றும் தெரிவித்துள்ளனர். மேலும், 37 வகைப்பாடுகள் அடங்கிய 17 வகை மாங்குரோவ் தாவர வகைகள், டால்பின்கள், திமிங்கிலங்கள், 117 வகைக்கும் மேற்பட்ட பவழப் பாறை



2005 செப்டம்பர் 26] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வகைகள் ஆகியவையும் இங்கு காணப்படுகின்றன என்றும் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். இத்திட்டம் செயல்படுத்தப்படும் விதத்தில், இவை அழிந்துவிடும் என்ற அச்சம் சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளிடையே நிலவுகிறது.

மும்பை இயற்கை வரலாறு குழுமம், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்த அறிக்கையில் முரண்பாடுகள் இருப்பதாகத் தெரிவித்து, இதனால் ஏற்படும் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பினை மேற்கோள் காட்டியுள்ளது. மேலும், சென்னையிலுள்ள எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தைச் சார்ந்த அறிஞர்கள், இத்திட்டத்தினால் ஏற்படும் தாக்கம் தொடர்பான தங்களது வருத்தத்தையும், சந்தேகத்தையும் எழுப்பியுள்ளனர். இது தவிர, இத்திட்டம் குறித்து, மீனவர் சமுதாயமும், அரசு சாரா நிறுவனங்களும் பெருமளவில் ஆட்சேபனைகளையும், எதிர்ப்பினையும் தெரிவித்துள்ளன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்ட, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இத்திட்டத்தினால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு குறித்து ஆராய, தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் இயக்குநரான பேராசிரியர் திரு. எம். ரவீந்திரன் அவர்களைத் தலைவராகக் கொண்டு, தொழில்நுட்ப வல்லுநர் குழு ஒன்றினை 4-3-2005 அன்று அமைத்தது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் தடையில்லாச் சான்றிதழ் மற்றும் மாநில அரசின் அறிக்கை ஏதும் பெறாமல், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, 31-3-2005 நாளிட்ட கடிதத்தில், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு அவசர கதியில் அதிரடியாக சுற்றுச்சூழல் அனுமதியை வழங்கியது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு, 30-5-2005 அன்று சமர்ப்பித்த தனது அறிக்கையில் NEERI-யின் அறிக்கை வெவ்வேறு நிறுவனங்களால், பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு தேவைகளுக்காகச் சேகரிக்கப்பட்ட இரண்டாம் நிலைப் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது என்பதையும், மேற்குறிப்பிட்ட திட்டத்திற்காகச் சேகரிக்கப்பட்ட முதன்மைப் புள்ளிவிவரங்கள் மிக மிகக் குறைவு என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

- இப்பகுதியில் சுமார் 82.5 மில்லியன் கன மீட்டர் அளவிலான கடலின் தரைப் பகுதி தோண்டப்பட வேண்டியுள்ளது. இப்பகுதி, பவழப் பாறைகள் நிறைந்த கடல் உயிரின வளப் பகுதியாகும்.

- கடல் தளம் சரியான முறையில் ஆய்வு செய்யப்படாமல் தோண்டப்படுவதாலும், தோண்டிய மண்ணைக் கொட்டுவதற்கான இடத்தை உரிய முறையில் தேர்ந்தெடுக்காமல் செயல்படுவதாலும், கடலோர மக்களுக்கும், மீனவர்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.
- கப்பல் போக்குவரத்தின்போதும், விபத்து நேரிடும்போதும், வெளியாகும் எண்ணெய்க் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புக் குறித்து ஆராயப்படவில்லை.
- சேது சமுத்திரத் திட்டக் கால்வாய்ப் பகுதி, வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவ காலங்களுக்குட்பட்டது. மேலும், இது கடுமையான புயலாலும், வேகமாக வீசும் காற்றாலும், அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் பகுதியாகும். மூன்று பருவ காலங்களுக்கும் உரிய அம்சங்களின் அடிப்படை ஆராயப்படவில்லை.
- இம்மாதிரியான திட்டங்களுக்குரிய முறையான படிப்படியான வழிமுறைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை.

என்று வல்லுநர் குழு தெரிவித்தது.

இத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து முழுமையாக அறிய,

1. நீரோட்டம் குறித்த அறிவியல், இரசாயனம், பௌதீகம் மற்றும் கடல் ஆராய்ச்சி அளவுகோல்கள்

2. உயிரி வள ஆதாரங்கள்

3. கடல் அடிமட்டத் தரையின் தன்மைகள்

4. கால்வாயில் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்து

5. அபாயம் குறித்த ஆய்வு மற்றும் எண்ணெய்க் கசிவுகளைக் கையாளுதல்

ஆகியவை குறித்து மேலும் கூடுதலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கென தயாரிக்கப்பட்ட அறிக்கையானது, திட்டத்தின் நோக்கம் மற்றும் சுற்றுச்சூழல்



மேலாண்மைத் திட்டம் போன்ற அடிப்படை ஆய்வுகள் குறித்த ஏராளமான குறைபாடுகளைக் கொண்டுள்ளது. உதாரணமாக, இரு வழிப் போக்குவரத்திற்கான 300 மீட்டர் அகலமுள்ள இக்கால்வாயின் ஆழம் 12 மீட்டர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆழமானது, இயற்கைச் சீற்றங்களுக்கு உட்படாத பகுதிக்கே பொருத்தமானதாகும். ஆனால், இப்பகுதி அடிக்கடி இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்படுவதும், அப்போது 3 மீட்டர் உயரத்திற்கு அலைகள் உயர்வதும், காற்று மணிக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில் வீசுவதும், அறியப்பட்ட உண்மைகளாகும். எனவே, இத்திட்டத்தினால் ஏற்படவிருக்கிற சுற்றுச்சூழல் தாக்கத்தினை முழுமையாகக் கண்டறிய நவீன அறிவியல் விவரங்கள் மற்றும் மாதிரிகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், அந்தத் தாக்கத்தினைக் கையாளுவதற்கு உரிய வழிமுறைகள் பரிந்துரை செய்யப்பட வேண்டும் எனவும் வல்லுநர் குழு தெரிவித்துள்ளது. ஆகவே, குறைபாடுகள் அனைத்தையும் நிவர்த்தி செய்யும் வகையில், ஒரு விரிவான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையினைத் தயாரிக்க, மேற்கண்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வல்லுநர் குழு பரிந்துரை செய்துள்ளது. ஆகவே, மேலே குறிப்பிட்டபடி முழுமையான அறிக்கை தயாரித்தால்தான் இத்திட்டத்தைப் புரிந்துகொண்டு, இதனைச் செயல்படுத்துவது குறித்து உரிய முடிவிற்கு வர முடியும்.

தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் அறிக்கையில் தெளிவாக்கப்பட்ட குறைபாடுகள் காரணமாக, இத்திட்டத்திற்குத் தடையில்லாச் சான்றிதழை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் வழங்க இயலவில்லை. ஆனால், எதைப் பற்றியும் சிந்தனை செய்யாமல், யாரைப் பற்றியும் கவலைப்படாமல், பாதகங்களைச் சரி செய்திட எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், பாதிக்கப்படுவோருக்கு மறுவாழ்வு அளித்திட எந்த ஒரு ஆக்கபூர்வமான செயல்பாடும் இல்லாமல், சற்றும் பொறுப்பற்ற முறையில், அவசர கதியில் சேது சமுத்திரக் கால்வாய் தோண்டும் பணி 2–7–2005 முதல் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக, மீன்வளம் மற்றும் பவழப் பாறைகள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

பிற்பகல் 12–35

பாக் ஜலசந்திப் பகுதியில் அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ள கப்பல்களின் நடமாட்டத்தால், அப்பகுதியில் மீன்களைப் பிடிப்பதற்காக விரிக்கப்பட்டிருந்த பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள வலைகள் சேதமடைந்துள்ளன என்றும், மீன்கள் முட்டையிட்டு, இனப் பெருக்கம்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 செப்டம்பர் 26

செய்யும் இடங்களான கடல் புதர்கள், கடலுக்குள் வளர்கின்ற செடி, கொடி முதலான கடல்வாழ் தாவரங்கள் ஆகியவை அகழ்வுப் பணியால் அழிக்கப்பட்டுக் கடலில் மிதக்கின்றன என்றும், சேது சமுத்திரப் பணிகளின் விளைவாக ஆழ்கடல் பகுதியில் இயற்கைச் சூழலே மாறி, மீன் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், நாள் ஒன்றுக்கு 20 ஆயிரம் கிலோ வரை இறால் மீன்கள் கிடைத்த நிலை மாறி, தற்போது இறால் மீன் கிடைப்பதே இல்லை என்றும், இந்தப் பகுதிகளில் வாழும் டால்ஃபின் போன்ற பெரிய மீன்களும், அரிய வகை மீன்களும், இடம் பெயரத் தொடங்கியுள்ளன என்றும், அப்பகுதிவாழ் மீனவ சமுதாயத்தினரிடமிருந்து முறையீடுகள் வரப்பெற்றுள்ளன.

தேசிய சுற்றுப்புறப் பொறியியல் ஆராய்ச்சி நிலையம் (NEERI), சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தால் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் விளைவுகள் குறித்த மதிப்பீட்டு அறிக்கையில் இத்திட்டம் செயல்படும்போது, மாலுமி ஒருவர் மன்னார் வளைகுடாப் பகுதியிலிருந்து வங்காள விரிகுடா வரை கப்பலைச் செலுத்துவதற்குத் தனியாக இயங்குவார் என்றும், இந்தத் திட்டத்தில் கப்பலைச் செலுத்தக்கூடிய மாலுமிகள் அல்லது சுற்றுப்புறச் சூழலைக் கண்காணிப்பவர், இந்தக் கப்பலில் இருந்துகொண்டு, ஆமை, டால்ஃபின், கடல் பசு போன்ற கடல்வாழ் மிருகங்கள் தென்படுகின்றனவா என்று கண்காணித்து, அவைகளுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாதவாறு கப்பல்களைக் கொண்டு செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இவையெல்லாம் எவ்வாறு சாத்தியமாகும்? இதெல்லாம் நடைமுறையில் சாத்தியமாகுமா? மேலும், சேது சமுத்திரக் கால்வாயில் கப்பல்கள் செல்லும்போது கூடுதல் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். தங்களது சாதாரண வேகத்தில் பாதியளவு வேகத்திலேயே கப்பல்கள் செல்ல முடியும் என்பதை அறிகிறபோது, இந்தத் திட்டம் சரியாக வடிவமைக்கப்பட்டதா என்ற சந்தேகமும் எழத்தான் செய்கிறது.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தியே ஆக வேண்டும் என்பதற்கான காரணங்களை மத்திய அரசு கூறுகிறது. இந்தத் திட்டம் அவசியம் செயல்படுத்த வேண்டும் என்று எதனால் கூறுகிறார்கள்? என்ன காரணம் கூறுகிறார்கள்? இதனால் தமிழகத்தில் பொருளாதாரம் மேம்படும் என்கிறார்கள். அந்தக் கால்வாய் வழியாகக் கப்பல்கள் சென்றால், கப்பல்கள் பயணத்தில் 24 மணி நேரம் முதல் 36 மணி நேரம் வரை நேரம் சேமிக்கப்படும் என்கிறார்கள். இதனால்



2005 செப்டம்பர் 26] [செல்வி ஜெ ஜெயலலிதா]

செலவு குறையும் என்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் உண்மை அல்ல. மாறாக, கப்பல் உரிமையாளர்களுக்கு இந்தக் கால்வாயைப் பயன்படுத்துவதனால் செலவு கூடுமே தவிர, எந்தவிதமான செலவும் குறையாது. அந்தக் கால்வாய் 12 மீட்டர் ஆழம் உள்ள கால்வாயாகத்தான் இருக்கும். ஆகவே, மிகப் பெரிய கப்பல்கள் அந்தக் கால்வாயைப் பயன்படுத்த முடியாது. அந்தக் கால்வாயில் சென்றால் மிகப் பெரிய கப்பல்கள் தரை தட்டிவிடும்.

ஆகவே, எப்படியும் பெரிய கப்பல்கள் சுற்றித்தான் செல்ல வேண்டும், இலங்கை வழியாகத்தான் செல்ல வேண்டும். மேலும், இந்தக் கால்வாயைப் பயன்படுத்துவதற்காக அந்தக் கப்பல் உரிமையாளர் ஒரு கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அப்போதுதான் கால்வாய்க்குள் அனுமதிப்பார்கள். அது மட்டுமின்றி, அந்தக் கப்பலுக்கு என்று ஒரு pilot ship—முன்பு வழிகாட்டுகின்ற ஒரு சிறு படகு செல்லும். அதற்கும் அவர்கள் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக கப்பல்கள் இந்தக் கால்வாய்க்குள் செல்லுகின்றபோது வழக்கமான வேகத்தைவிட பாதி வேகத்தில்தான் செல்ல முடியும். அப்படியானால் வழக்கமாகப் பயன்படுத்துகின்ற எரிபொருளைவிட அவர்கள் 3 மடங்கு, 4 மடங்கு அதிகமாக எரிவாயுவைப் பயன்படுத்த வேண்டியிருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எரிபொருளைப் பயன்படுத்த வேண்டியிருக்கும். அப்படியானால், இதிலே எங்கே சிக்கனம் வந்தது? கப்பல் உரிமையாளர்களுக்கு எங்கிருந்து இலாபம் வந்தது? சாதாரணமாகச் செல்லுகின்ற பாதையில் சென்றால் அவர்களுக்கு என்ன செலவு நேரிடுமோ, இந்தக் கால்வாயைப் பயன்படுத்துவதனால் அதைவிட 3 மடங்கு, 4 மடங்கு கூடுதல் செலவுதான் கப்பல்களுக்கு ஏற்படும். ஆகவே, கப்பல் உரிமையாளர்கள் இந்தக் கால்வாயைப் பயன்படுத்தமாட்டார்கள். ஆகவே, தமிழகத்திற்குப் பொருளாதார இலாபம் எங்கிருந்து வரும்? நிச்சயமாக வராது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தத் திட்டத்தினால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுமே தவிர, தமிழ்நாட்டிற்கு எந்தவிதமான இலாபமும் இருக்கப்போவதில்லை, எந்தவிதமான அபிவிருத்தியும் ஏற்படப் போவதில்லை. மாறாக, இலட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்க்கையே அழிந்துவிடும். இதனால்தான் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–40*

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னமேயே, சுற்றுச்சூழலுக்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கும்

ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், தற்போது கால்வாய் அகழ்வுப் பணியை ஆரம்பித்த பின்னர், சுற்றுச்சூழல் கண்காணிப்புக் குழு ஒன்றை மத்திய அரசு நியமித்திருப்பது இந்தத் திட்டத்தினால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் தற்போது அவர்களிடம் ஏற்பட்டுள்ளது என்பதையே தெளிவாக்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிலையில், முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் உண்மை நிலையை முற்றிலும் மூடி மறைத்துப் பேசியிருக்கிறார், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி. தமிழகத்திற்கு மத்தியிலே இருக்கின்ற அரசு செய்கின்ற உதவிகளைக்கூட ஏற்றுக்கொள்கின்ற நிலையிலே இங்கே ஒரு அரசு இல்லை என்பது அவரது அங்கலாய்ப்பு. அவருக்கு நான் சொல்லிக்கொள்வேன், அது தமிழகத்திற்குச் செய்யப்படுகிற உதவியாக இருந்தால் ஏற்றுக்கொண்டிருப்போம், அது தமிழகத்திற்கு செய்யப்படுகின்ற உதவியாக இருந்தால் ஏற்றுக்கொண்டிருப்போம், உபத்திரவமாக இருந்தால் எப்படி ஏற்றுக்கொள்வது? (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திற்குத் தேவையானவற்றைப் பெறுவதில் மத்திய அரசோடு இணக்கமான உறவையே எனது அரசு எப்போதும் கொண்டு வந்திருக்கிறது. புது டெல்லி மற்றும் மும்பை விமான நிலையங்களை உலகத் தரம் வாய்ந்த விமான நிலையங்களாக மேம்படுத்திட மத்திய அரசு அறிவித்துள்ள திட்டங்களை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றைப்போலவே சென்னை விமான நிலையத்தையும் உலகத் தரம் வாய்ந்த விமான நிலையமாக மேம்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தினேன். இந்தப் புதிய சர்வதேச விமான நிலையத்தை அமைக்க நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஒப்புதல் அளித்தவுடன், அதற்காக 14.57.5 ஏக்கர் நிலத்தைத் தற்போதைய சென்னை விமான நிலையத்தின் வடபுறத்தில் இலவசமாக வழங்க ஆணையிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னைக்கு அருகே அதிநவீன மோட்டார் வாகனச் சோதனை மையம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் கோரிக்கை விடுத்ததன் பயனாக, இன்று ஓரகடத்தில், மோட்டார் வாகனச் சோதனை மையம் அமைக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)



நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் தூத்துக்குடியில் கூடுதலாக ஆயிரம் மெகாவாட் திறனுடைய ஓர் அனல் மின் நிலையத்தை நிறுவவும், தேசிய அனல் மின் கழகத்தோடு கூட்டு முயற்சியில் வடசென்னையில் ஆயிரம் மெகாவாட் திறனுடைய அனல் மின் நிலையத்தை நிறுவவும் திட்டமிட்டு, எனது அரசு இந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருக்கிறது.

ஜெயங்கொண்டத்தில் ஆயிரம் மெகாவாட் உற்பத்தித் திறனுடைய அனல் மின் நிலையத்தை நிறுவுவதில் பங்கேற்க வேண்டுமென்று எனது அரசு நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் துரிதமாக நிறைவேற்றப்படுவதற்கு எனது அரசு கொடுத்து வரும் ஒத்துழைப்புதான் முக்கியக் காரணமாகும். தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்துவதற்கென்றே 40 சிறப்பு அலகுகள் எனது அரசால் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. தூத்துக்குடி துறைமுகம் மையத் துறைமுகமாக, Hub Port-ஆக மேம்படுத்தப்பட வேண்டுமென்று 27-6-2005 அன்று புது டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் வலியுறுத்தினேன். இந்த நோக்கத்துடன் தூத்துக்குடி துறைமுகம் பெரிய கப்பல்களைக் கையாளும் வகையில், 680 கோடி ரூபாய் செலவில், தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்த மைய அரசு உத்தேசித்துள்ளது. இதற்கான பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் 21-9-2005 அன்று நடத்தியுள்ளார். இருப்பினும், வேண்டுமென்றே, மத்திய கப்பல் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர், மாநில அரசு கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்துவதில் தாமதம் ஏற்படுத்துவதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளார்.

பிற்பகல் 12-45

தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டம் அப்பகுதிப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என்பதனால், அதனை நாங்கள் எதற்காக எதிர்க்கப் போகிறோம்? வேண்டுமென்றே, மாநில அரசு மைய அரசின் திட்டங்கள் அனைத்தையும் எதிர்க்கிறது என்ற ஒரு

உண்மைக்குப் புறம்பான தோற்றத்தை உருவாக்குவதற்காகவே இதைப்போன்ற நடவடிக்கைகளை தி.மு.க. எடுத்து வருகிறது. மைய அரசின் ஆக்கப்பூர்வமான திட்டங்களை நாங்கள் எப்பொழுதும் வரவேற்கிறோம். மீனவர் வாழ்வாதாரங்களைப் பறிக்கும் வகையில் வகுக்கப்பட்டுள்ள சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைத்தான் எதிர்க்கிறோம்.

சுனாமி நிவாரணம், வறட்சி நிவாரணம் ஆகியவற்றிற்கு உதவி வழங்க வேண்டும் என்று கோரிக்கை மனுக்கள் அளித்து மத்திய அரசின் நிதி உதவியைக் கோரிப் பெற்றுள்ளது எனது அரசு. எனவே மக்களுக்குப் பயன்படும் திட்டங்களை மத்திய அரசிடம் வேண்டிப் பெறுவதில் எனது அரசு எப்போதுமே முன் நிற்கிறது. மக்களின் நன்மையைக் கருத்தில் கொள்ளும் திட்டங்களுக்கு மத்திய அரசிற்கு முழு ஒத்துழைப்பையும் நல்கி வரும் அதே நேரத்தில், மக்களுக்கு விரோதமான திட்டம் என்றால், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் எனது அரசு தயங்குவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அவசர கதியில் நிறைவேற்றப்படும் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்—

இயற்கைக்கு இழைக்கப்படும் வன்கொடுமை!

தமிழகக் கடற்கரையின் பாதுகாப்புக்கு அடிக்கப்படும் சாவு மணி!

கடலோர மீனவர் வாழ்வாதாரத்திற்கு--கடலோர மீனவர் வாழ்வாதாரத்திற்குக் கட்டப்படும் கல்லறை! (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லறைக்கும், சாவு மணிக்கும், வன்கொடுமைக்கும் உதவி என்ற ஒரு பெயர் இருக்கிறதா?

யாருடைய அகராதியில்?

மீனவர்கள் சாமானியர்கள்தான், ஆனால் அவர்கள் ஏமாளிகள் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுவார்:-

"சாமானியன் தனக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியை உணரத் தலைப்பட்டு விட்டான்! அக்கிரமத்தைத் தெரிந்துகொண்டு விட்டான்!"

"சமுதாயத்தில் தனக்கு இழைக்கப்படும் பொல்லாங்கினைப் பூரணமாக உய்த்துணர முடிகிறது அவனால்.



நேர்மைக் கேடான போக்கினை, முறையற்ற செயல்களை, தீங்கிழைப்புகளை உணர்கிறான்; விழிப்புணர்ச்சியின் முனைப்பு—எண்ணத் தெளிவின் எழுச்சி மேலோங்கி விட்டது சாமானியர்களிடம்!"

பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த மணிவாசகத்தை மனதில் கொள்ளுங்கள். சாமானியனை அலட்சியம் செய்து விடாதீர்கள் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நான் அங்கலாய்ப்புக்காரர்களைக் (மேசையைத் தட்டும் ஒலி) கேட்டுக்கொள்கிறேன்.

இது சாமானியனின் சகாப்தம். டெல்லி தர்பார் நடத்தும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் சாமானியர்களின் வயிற்றில் அடிக்கும் வல்லடி வழக்கர்களாக மாறிவிடக் கூடாது. ஏற்கெனவே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் கடலோர மீனவர்கள். அவர்களை சில சுயநலச் சுனாமிகள் சின்னாபின்னப்படுத்தத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் ஒரு நாளும் சம்மதிக்கமாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழை சொல் அம்பலம் ஏறாது என்பார்கள். அது, சுயநலச் சுனாமிகள் ஆட்சி நடத்திய காலத்தில்!

இப்போது, ஏழை சொல் அம்பலம் ஏறும்! (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை என்னும் இந்த அம்பலத்தில் நிச்சயம் ஏறும்! காரணம், நடந்துகொண்டிருப்பது, ஏழை, எளியவர்களின் ஆட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) சாமானியர்களின் ஆட்சி, (மேசையைத் தட்டும் ஒலி) சராசரி மனிதர்களின் ஆட்சி! (மேசையைத் தட்டும் ஒலி)

சராசரி மக்களின் வாழ்வாதாரங்களைக் கொள்ளையடித்து தங்களது சட்டைப் பைகளை நிரப்பிக்கொள்வதற்காகவா சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்? (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களின் விலா எலும்புகள்மீது எழுப்பப்படும் எந்தத் திட்டமும் வெற்றி பெறாது; (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குத் தமிழ்நாடு அரசு என்றைக்கும் உடந்தையாக இருக்காது என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தினைப் பற்றி மிகத் தெளிவான அறிக்கை ஒன்றினை முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் வாயிலாகத் தமிழக மக்களைச் சென்றடைகின்ற அளவிலே

தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் இங்கு குறிப்பிடுகின்றபோது, ஏற்கெனவே அந்தக் கடல் பகுதியிலே கடல் சீற்றம் இருக்கின்றது. அப்படி இருக்கின்ற நிலையில், அங்கு இந்தக் கால்வாய் தோண்டுகின்ற பணியினால் மீண்டும் மக்களுக்கு ஆபத்து ஏற்படும் என்கின்ற நிலையை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் சொல்லும்போது, 12 மீட்டர் ஆழம்தான் தோண்டப்படுகின்றது, அதிலே பெரிய கப்பல்களெல்லாம் செல்ல முடியாது என்கின்ற ஒரு நிலையை எடுத்துச் சொன்னார்கள். அதுகூட இல்லை. இன்றைக்குப் பத்திரிகையிலே பார்க்கின்றபோது, அதைத் தோண்டுகின்ற அந்த நிறுவனத்தினுடைய தலைவர் சொல்லியிருக்கின்றார், 12 மீட்டர் ஆழம்கூட தோண்டவில்லை. 10 மீட்டர் ஆழம்தான் தோண்டப் போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கின்றார். எனவே, 12 மீட்டர் ஆழத்திலேயே, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பெரிய கப்பல்கள் செல்ல முடியவில்லை என்கின்றபோது, 10 மீட்டர் ஆழம் தோண்டினால் எந்தக் கப்பல் செல்லும் என்பதை மக்கள் நன்றாகவே உணர்வார்கள், தெரிந்துகொள்வார்கள்.

பிற்பகல் 12–50

அதுபோலத்தான் ஆக்கபூர்வமான நிதிகளை மத்திய அரசு வழங்குகின்றபோது—இங்கேகூட இன்றைக்கு மத்திய அரசு கொட்டுகிறது என்று சொன்னார்கள்—அதைத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்வதிலே எந்தத் தயக்கமும் காட்டவில்லை என்பதை மிகத் தெளிவாகவே சொன்னார்கள். நெய்வேலி பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டத்திற்கு இந்த அரசு ஒத்துழைப்புத் தருகின்றது. அதுபோல, விமான நிலையம், சென்னையிலே விரிவாக்கம் செய்வதற்கு ஒத்துழைப்புத் தருகின்றோம். ஆனால் மக்களுக்குத் தேவையில்லாமல், அவர்கள் அவதிப்படுகின்ற திட்டத்தை மட்டும்தான் எதிர்க்கின்றோம் என்கின்ற நிலையை, இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து கொண்டு சொல்லுகின்ற கருணாநிதி அவர்களுக்குத் திட்டவட்டமான பதிலாக இங்கே அறிவித்திருக்கின்றார்கள். அதுபோல தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தைப் பற்றியும் அவர்கள் சொல்கின்றார்கள், ஏதோ தமிழக அரசு ஒத்துழைப்புத் தரவில்லை என்று சொல்கின்றார்கள். அதற்கும் ஒரு ஆக்கபூர்வமான விடையினை இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



இன்றைக்கு இந்தத் துணை மதிப்பீடுகளின் வாயிலாக, பல காலங்களில், கடந்த கால ஆட்சியில், கடன்பட்டவர்களெல்லாம் பல்வேறு துன்பங்களிலே விவசாயிகள் ஆட்பட்டிருந்த நேரத்தில், இங்கிருக்கின்ற அத்தனை அரசியல் கட்சிகளும், நாங்களெல்லாம் அதற்குக் குரல் கொடுத்துப் பார்த்தோம். வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யுங்கள், விவசாயிகள் நிமிர முடியாத நிலையிலே வளைந்திருக்கின்றார்கள். அவர்களைக் கொஞ்சம் நிமிர்த்துங்கள் என்று குரல் கொடுத்தபோது, அதற்குச் செவி சாய்க்காத அவர்களோடுதான் இன்றைக்கு நம்முடைய நண்பர்கள் எல்லாம் கூட்டுச் சேர்ந்து சென்றிருக்கின்றார்கள் என்கின்றபோது வருத்தமாக இருக்கின்றது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடனே 310 கோடி ரூபாய் அளவுக்கு ஏழை எளிய விவசாயிகள் பட்டிருந்த கடனைத் தள்ளுபடி செய்தது. அதற்குப் பின்னால் ஏற்பட்ட கடுமையான வறட்சியின் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் எப்படியெல்லாம் உதவி செய்தார்கள் என்கின்ற உதாரணங்கள் எல்லாம் உண்டு. நான்கூட முதலமைச்சரிடத்திலே ஒரு நேரத்தில் சொன்னேன். நாங்களெல்லாம் எதிர்பார்க்க முடியவில்லை; தஞ்சாவூர் பகுதியிலேயும் மற்ற எல்லாப் பகுதிகளிலேயும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு அரிசி வழங்க வேண்டுமென்று சொல்லுகின்றபோது, ஒரு குடும்ப அட்டைக்குக்கூட ஒரு மாதத்திற்கு 20 கிலோ அரிசிதான் வழங்குகின்றார்கள். ஆனால், நாங்கள் அந்த ஏழை எளிய மக்களுக்கு, வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீங்கள் அரிசி வழங்க வேண்டுமென்று சொன்னபோது, யாரும் எதிர்பார்க்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் 30 கிலோ அரிசியை வழங்குகின்றேன் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி வழங்கிக்கொண்டிருந்தபோது, வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களைக் காப்பாற்ற வேண்டும், அந்த ஏழை எளிய மக்களுடைய இல்லங்களிலே மகிழ்ச்சி பொங்க வேண்டுமென்பதற்காக, 30 கிலோ அரிசி வழங்கினார்கள். அவர்கள் செலவு செய்வதற்கான தொகையும் வழங்கினார்கள், ஒரு மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று நினைக்கின்றேன். அவர்கள் குடும்பச் செலவுகளைச் செய்வதற்கு, மளிகைச் சாமான்களை வாங்குவதற்குக்கூட ஒரு தொகையை அவர்களுக்காக வழங்கினார்கள். அதுபோல, இன்றைக்குக் கடனே இல்லையென்ற அளவிற்கு விவசாயிகளெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். இந்த வறட்சியையெல்லாம் தாண்டி, 2006–க்குப் பின்னால்தான் நீங்கள் கட்டவேண்டும், அதற்கும் சேர்த்து

நான் அந்த வட்டி, அபராத வட்டியையெல்லாம் தள்ளுபடி செய்கின்றேன், 645 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்கின்றேன் என்று சொல்லியிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முதலமைச்சரைப் பார்த்து, அந்த மக்கள், அவர்களை ஏற்றுக்கொள்வார்களா? பல காலங்கள், எல்லாக் கட்சிகளும் சொல்லி, அது ஏதோ NABARD வங்கியிலே ஒரு ஒப்பந்தம் இருக்கிறது, தள்ளுபடி செய்தால் NABARD வங்கிக்கு நாங்கள் பதில் சொல்ல முடியாது என்கின்ற பதிலையே திருப்பித் திருப்பிச் சொன்னவர்களை ஏற்றுக்கொள்வார்களா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-55*

கரும்பு விவசாயிகள்—நானும்தான் இந்த அவையிலே இருந்தேன். போகாத ஊருக்கு இல்லாத வழியைக் காட்டினார்கள். 10 சதவீதம் சர்க்கரைத் திறன் இருந்தால் ஆயிரம் ரூபாய். நானும் ஒவ்வொரு ஆண்டிலே வருகின்ற அந்த மானியக் கோரிக்கைகளிலே பார்ப்பேன். ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் இந்த சர்க்கரைத் திறன் எப்படி இருக்கிறது என்பதை ஒவ்வொரு ஆண்டிலும் அறிக்கையிலே காட்டுவார்கள். தமிழகத்திலே இருக்கின்ற எந்த ஆலையிலும் அந்த 10 சதவீதம் வந்ததாக நான் பார்த்ததே இல்லை. அப்படி இல்லாத ஊருக்கு, போகாத வழியைக் காட்டியவர்கள்தான், இன்றைக்கு, 1,014 ரூபாய் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அந்த விவசாயிகள் யார் பக்கத்திலே இருக்கப் போகிறார்கள் என்ற ஏக்கம், அந்த பீதி, அவர்களை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிற ஒரு சூழல் இன்றைக்கு வந்திருக்கிறது.

நேற்றைக்குக்கூட எங்களது மதுரை மாவட்டத்திலே அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை—அதை ஓட்ட வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு, மிகப் பெருமனதோடு 7 கோடி ரூபாய்க்கு அரசாணை இன்று வழங்கியிருக்கிறார்கள். அந்த ஆணைகூட என்னிடத்திலே இருக்கிறது. அந்த அளவிற்கு இன்று அந்தப் பகுதி விவசாயிகள் எல்லாம்—மதுரை, திண்டுக்கல், தேனி போன்ற மாவட்டங்கள், இராமநாதபுரம், சிவகங்கை போன்ற அனைத்து மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகளும் இன்றைக்கு முதலமைச்சருக்கு நன்றி பாராட்டி, அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருக்கிறார்கள். அதைக்கூட நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த அதிகாரிகள், உரிய முறையிலே கரும்பு பயிரிடப்படவில்லை என்று ஒரு தவறான செய்தியைச் சொல்லி, அடுத்த ஆண்டு ஓட்ட வேண்டும் என்று



சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே ஓட்ட வேண்டும். இந்த டிசம்பர் மாதத்தில் அதற்குப் போதிய கரும்பு விவசாயம் இருக்கின்றது என்பதைப் புள்ளிவிவரமாக, அந்த வயல்களினுடைய survey number-உடன் அந்த விவசாயிகள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அதை ஓட்டினால் இந்த ஆண்டு அவர்கள் பயன்பெறுவார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைக்கு, அந்தப் பகுதியினுடைய கரும்பு விவசாயிகளுடைய எண்ணத்தை ஏற்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த ஆலையை, மூடிய ஆலையைத் திறப்பதற்கு உத்தரவிட்டு, அதற்காகப் பணத்தையும் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது G.O. போடப்பட்டுள்ளதில், அரைவைப் பருவத்தை அடுத்த ஆண்டு ஆரம்பிக்கலாம் என்று போடப்பட்டிருக்கிறது. ஆலையை ஏற்பதற்கு இன்னும் இரண்டு, மூன்று மாதங்கள் இருக்கும் என்பதன் காரணமாகத்தான் அந்த ஆணை அப்பொழுது பிறப்பிக்கப்பட்டது. என்றாலும்கூட, ஆலையை overhaul பண்ணி முடித்த உடனே மூன்று மாதங்கள் கழித்து ஆலையை ஓட்டுவதற்குத் தயார் நிலையில் இருக்கின்றபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்த ஆலையை உடனடியாக இயக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதேபோல, இன்றைக்குப் பள்ளியிலே படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்குகின்ற திட்டம். அதிலே ஆதி திராவிடர், பழங்குடியினர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருந்த ஒரு நிலையில், மிகவும் பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், அவர்களும் ஏழைக் குடும்பத்திலே இருக்கிறார்கள் என்று பல முறை நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். ஆனால், இன்றைக்குப் புரட்சித் தலைவியினுடைய அரசுதான் அதைச் செய்திருக்கிறது என்கின்ற முறையில், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு அதற்காக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, இந்த ஏழை மாணவ, மாணவிகளுக்குப் புத்தகம் வழங்குகிற திட்டம். நாங்கள் எல்லாம் ஒரு காலத்திலே பள்ளியிலே படித்து வந்தவர்கள்தான். அப்பொழுது புத்தகம் வாங்குகின்ற நிலை

வருகின்றபோது, ஒவ்வொரு கடையாக ஏறி, இறங்குவோம். ஒரு கடையிலே கணிதப் புத்தகம் இருக்கிறது என்பார்கள், விஞ்ஞானம் இல்லையென்று சொல்வார்கள், தமிழ்ப் புத்தகம் இல்லையென்று சொல்வார்கள். அடுத்த கடைக்குச் சென்றால், கணிதம் மட்டும் இருக்கிறது, தமிழ் இல்லையென்று சொல்வார்கள், Social Studies இல்லையென்று சொல்வார்கள். ஒவ்வொரு புத்தகத்திற்கும் ஒவ்வொரு கடையாக ஏறி, இறங்குகின்ற ஒரு நிலை இருந்தது. அதையெல்லாம் மாற்றி, ஒரு காலத்திலே அரசு சார்பிலே புத்தகங்கள்கூட முறையாக அச்சிட்டு வழங்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டுக்கூட இருந்தது பழைய காலத்திலே. ஆனால், இன்றைக்கு அந்த ஏழையெளிய மாணவர்களுக்கு, அவர்களுடைய பள்ளிகளைத் தேடி வந்து ஆசிரியர்கள் வழங்குகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தக் குழந்தைகளினுடைய பெற்றோர்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் வருகின்ற காலத்தில்? (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தைகளுடைய உள்ளத்தை மட்டுமா கவர்ந்திருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள்? அந்தப் புத்தகம வாங்குகின்ற சுமையை ஏற்றிருக்கின்ற பெற்றோர்களுடைய உள்ளத்திலும் அல்லவா இன்றைக்கு முதலமைச்சருடைய எண்ணங்கள் இருந்து கொண்டிருக்கின்றன? (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-00*

அதோடுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறிய விண்ணப்பத்தை நான் சமர்ப்பிக்க விரும்புகின்றேன். பல பேர் சுய நிதியிலே பள்ளி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சுய நிதியிலே பள்ளி நடத்திக் கொண்டு இருக்கின்றவர்களிடம் நமது பிள்ளைகள்தான். ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான் அங்கு பயிலுகிறார்கள். இது ஒன்றும் பெரிய சுமையாக இருந்துவிடாது. அந்த மாணவ, மாணவிகளும் பயன்படுகின்ற அளவிற்கு, புத்தகத்தை இலவசமாக வழங்க வேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை என்னிடத்திலே கொடுத்தார்கள். நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன், அவர்கள் சுய நிதிப் பள்ளி நடத்தினாலும்கூட அந்த மாணவ, மாணவிகளும் நமது தமிழகத்தைச் சேர்ந்த, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் என்கின்ற முறையில், அதைப் பரிசீலிப்பார்கள், நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.



இப்படிப் பல்வேறு நல்ல காரியங்கள், இன்றைக்கு சாலைக் கட்டமைப்பு வசதியா, கடந்த காலங்களிலே அந்தச் சாலைகள் எல்லாம் சீர்கெட்டிருந்த காரணத்தினால், அரசு சார்பிலே இயங்குகின்ற போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எல்லாம் அன்றாடம் ஒரு இடத்திலே போய் காட்சிப் பொருட்களாக நின்று கொண்டிருக்கும்., அந்தப் பள்ளம், மேட்டிலே ஏறும்போது அந்த வண்டியினுடைய பட்டை உடைந்து போய்விட்டது என்று சொல்லி நிறுத்தி இருப்பார்கள். நாங்கள் எல்லாம் ஒரு நேரத்திலே பஸ்ஸிலே போகும்போது இறங்கி, 2, 3 கிலோ மீட்டர் நடந்து செல்வோம். அந்த ஒரு பஸ்தான் அந்த வழித்தடத்திலே போகும், அடுத்த வண்டி வந்தால் ஏறிக்கொண்டு போகலாம். அந்த ஒரு வண்டி போகின்ற வழித்தடத்திலே வேறு என்ன செய்வது? அடுத்த வண்டியைப் பிடிக்க வேண்டுமென்றால், 2, 3 கிலோ மீட்டர் நடந்து போய் அடுத்த வண்டியைப் பிடிக்கின்ற நிலை. இன்றைக்கு அந்த நிலை இல்லை. காரணம், சாலைகள் எல்லாம் மிக நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்டிருக்கின்றன. அதைத்தான் உள் கட்டமைப்பு வசதி என்பதிலே, நகராட்சிகளாக இருந்தாலும் சரி, பேரூராட்சிகளாக இருந்தாலும், மாநகராட்சிகளாக இருந்தாலும், அத்தனை இடங்களிலேயும் இருக்கின்ற அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

அதுபோல, நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கின்ற சாலைகளையும் பராமரிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் பயன்படுகின்ற அளவிலே இலவச bus pass-க்காக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. எந்த நலத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கவில்லை என்று நமது நண்பர்கள் சொல்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை, எனக்குப் புரியவில்லை. நானும் பல ஆண்டுகளாக சட்டமன்றத்திலே பேசியிருக்கின்றேன். இதை எல்லாம் பார்த்து, கவனித்துத்தான் பேசியிருக்கின்றேன். அவர்களுடைய கூற்று என்னவென்றே புரியாத நிலையிலே, இன்றைக்கு எதையாவது சொல்ல வேண்டும், சொல்லிவிட்டு அதற்கு மறுப்பு வருகின்றபோது, தங்களுடைய கடமையைத் தட்டிக் கழித்துவிட்டு வெளியிலே செல்ல வேண்டும். அதுதான் அவர்களுடைய தலையாய பணியாக இருந்து கொண்டிருக்கிறதே தவிர, இருந்து, இந்த மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையினை ஆற்ற வேண்டும், அவர்களுக்கு ஒன்றிரண்டு விட்டுப்போன நிலைகளைக்கூட அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும், அதன்மூலமாக தமிழகத்தினுடைய மக்கள் பயன்பட வேண்டும் என்கின்ற ஆக்கபூர்வமான சிந்தனை இருக்க வேண்டும் என்கின்ற முறையில், இந்த நிதிநிலை அறிக்கையைப்

பொறுத்தளவிலே பல தரப்பட்ட மக்களும் பயன்படுகின்ற அளவிற்கு அளிக்கப்பட்டிருக்கின்ற ஒரு துணை மதிப்பீடாக அமைந்திருக்கிறது. இதை நான் வரவேற்கின்றேன் என்று சொல்லி, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அன்வர் ராஜா, என்ன திரு. ராஜாங்கம்? அலங்காநல்லூர் ஆலைக்கு நன்றி சொல்வார் என நினைக்கின்றேன்.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் ஆலையை மீண்டும் திறக்க ஆணையிட்ட தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உண்மை என்னவென்றால், அந்த அலங்காநல்லூர் ஆலையை மூடியது திராவிட முன்னேற்றக் கழகத்துக் கட்சிக்காரர்கள். முரசொலி மாறன் பினாமி கட்சியைச் சேர்ந்த ஒரு பினாமி 250 ரூபாய்க்குக் கழிவு நீரை வாங்கி கேரளாவிற்கு இதைக் கொண்டு சென்று, 1,200 ரூபாய்க்கு விற்று, அதைக் கொள்ளையடித்ததனால்தான் ஆலை மூடப்பட்டது. திண்டுக்கல்லில் பேசியபோது அம்மா அவர்கள் அதைத் தெளிவாக, அறிக்கையாக விட்டிருக்கிறார்கள். சபாநாயகராக இருக்கின்ற எங்கள் அருமை அண்ணன் அவர்களும் இதைப் பற்றிப் பேசியிருக்கிறீர்கள். ஆகவே, மூடிய ஆலையை மீண்டும் திறந்ததற்காக அம்மா அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றியினை எங்கள் தொகுதியின் சார்பில் அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், என்ன?

***திரு. ப. அரசன்:** சொல்லுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் சந்தானம் அவர்கள், சுய நிதிப் பள்ளிகளிலே படிக்கிற மாணவ, மாணவியர்களுக்கும் இலவசப் புத்தகங்கள் வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். அதையே நானும் வலியுறுத்துகிறேன். குறைந்தபட்சம் சிறுபான்மையினர் நடத்துகிற சுய நிதிப் பள்ளிகளிலே பயிலுகிற மாணவ, மாணவிகளுக்காவது இலவசப் புத்தகம் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்வர் ராஜா. (குறுக்கீடு) பொன்னம்பலம், என்ன? சொல்லுங்கள்.

***திரு. டி.பி. பொன்னம்பலம்:** நெல் பயிரிடுதல் மட்டுமே தொழிலாக உள்ள சமயநல்லூர் தொகுதி அருகிலுள்ள சர்க்கரை ஆலை தி.மு.க. அரசால் மூடப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இன்று திறக்கப்பட்ட செய்தியைக் கேட்டு, மூன்று, நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெருமகிழ்ச்சி அடைவார்கள் என்று தெரிவித்துக்கொண்டு, இதில் என்னிடத்தில் கட்சி வேறுபாடின்றி, தி.மு.க.–வைச் சேர்ந்தவர்களும்கூட வந்து, இந்த ஆலையை ஓட்டச் சொல்லுங்கள், எங்கள் ஆட்சி செய்த தவறு என்று எங்களிடத்திலேகூட சொன்னார்கள். அதன் சார்பாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆலையை ஓட்டுவதற்கு உத்தரவிட்டு, அந்தப் பெரு மகிழ்ச்சியில் நானும் ஒருவன் என்பதை என்னை அறியாமல் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த ஆண்டே ஓட்டுவார்கள் என்று உத்தரவிட்டதற்கு நன்றி சொல்லி, கோடானுகோடி நன்றியினைச் சொல்லி, சமயநல்லூர் தொகுதியும் அந்தச் சர்க்கரை ஆலையைச் சேர்ந்ததுதான் என்பதைக் கூறிக்கொண்டு, நான் மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலூர், மேலூர் சாமியா?

**திரு. ஆர். சாமி:** அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய சார்பாகவும் சொல்லிவிடுங்கள்.

**திரு. ஆர். சாமி:** ஆம் அண்ணே! சர்க்கரை ஆலையைத் திறப்பதற்கு, திறந்து, அதற்கு நிதியையும் ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும், மேலூர் தொகுதி விவசாயிகளின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஏனென்றால், அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த ஆலை கடந்த ஆட்சியாளர்களால் மூடப்பட்டதை மாண்புமிகு அமைச்சரிடம் சென்று, அங்குள்ள விவசாயிகளை எல்லாம் அழைத்து வந்து, அமைச்சரிடம் நாங்கள் கூறிய கோரிக்கையை, இதை அம்மாவிடம் எடுத்துச் சொல்லி, மதுரை மாவட்டத்திலேயே இருக்கின்ற கூட்டுறவு சர்க்கரை ஆலை இது ஒன்றுதான், இதையும் கடந்த ஆட்சியாளர்கள்

மூடிவிட்டார்கள், எப்படியாவது தாயுள்ளம் கொண்ட, விவசாயிகள் மேல் அக்கறையுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவிடம், அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்லி, எங்கள் சர்க்கரை ஆலையைத் திறக்க வேண்டுமென்று சொல்லி நாங்கள் வலியுறுத்தியபோது, அதை அமைச்சர் அவர்களும், அம்மாவிடம் எடுத்துச் சொல்லி இந்தச் சர்க்கரை ஆலையை நாங்கள் திறப்பதற்கு முதலமைச்சர் அம்மா அவர்களிடம் எடுத்துக் கூறி வகை செய்கின்றோம் என்று கூறினார்கள். அந்த அடிப்படையிலே, நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று, பல கோடிக்கணக்கில் நஷ்டத்தை ஏற்படுத்திய, கடந்த ஆட்சியாளர்கள் நஷ்டப்படுத்திய அந்த நஷ்டத்தை ஈடுகட்டி, நிதியை ஒதுக்கிக் கொடுத்து, திறந்து கொடுத்ததற்கு, அந்த மக்கள் என்றும் அம்மாவிற்கு, அம்மாவினுடைய பின்னால் என்றும் துணை நிற்பார்கள் என்று கூறி, சர்க்கரை ஆலையைத் திறந்ததற்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலங்காநல்லூர் இப்பொழுதுதான் அலங்கார நல்லூராக நிச்சயமாக மாறியிருக்கிறது. அந்த விவசாயப் பெருமக்கள் சார்பாக நானும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. அன்வர் ராஜா.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் உயிரினும் மேலாக நாங்கள் நேசிக்கின்ற, எங்கள் உள்ளங்களில் வைத்து பூஜிக்கின்ற, ஒப்பாரும், மிக்காரும் இல்லாத மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு...

பிற்பகல் *1-10*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. அன்வர் ராஜா அவர்கள் நாளைக்குப் பேசலாம். இன்று பி.ஜே.பி. மற்றும் தமிழரசன் பேசவிருக்கிறார்கள். பி.ஜே.பி. சார்பிலோ அல்லது அவரையோ பேச அழைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்வர் ராஜா, நாளைக்குப் பேசுங்கள். முனைவர் செ.கு. தமிழரசன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவைக்கு அளித்துள்ள துணை நிதிநிலை அறிக்கையின்மீது எங்களது கருத்துகளை



எடுத்து வைக்கிற ஒரு பெரிய வாய்ப்பை வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துணை நிதிநிலை அறிக்கையின் பேரிலே எனது கருத்துகளை வைப்பதற்கு முன்னால், கடந்த பல மாதங்களாகத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் தமிழகத்திலே கிராமப்புற மக்களுக்கு, நலிந்த மக்களுக்கு, அடித்தளத்து மக்களுக்கு, விவசாய மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, மாணவர்களுக்கு, பெண்களுக்கு, தலித் சமுதாயத்திற்கு, அரசு ஊழியர்களுக்கு என, ஒவ்வொரு மக்கள் பிரிவாய் வகைப்படுத்தி, ஒவ்வொரு பிரிவும் உள்ளம் குளிருகிற வகையிலே, ஒவ்வொரு நாளும், புதிய நலத் திட்டங்களை, புதிய அறிவிப்புகளை (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் வாழ்க்கையிலே ஒளியேற்றுகிற வகையிலே அறிவித்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வருக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்கள் இதயபூர்வமான வாழ்த்துக்களை முதலிலே நான் உரித்தாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு கடந்த *2001*-லே பதவியேற்றபோது, வாங்கிய கடன்களுக்கு ஒரு நாளைக்கு *11* கோடி ரூபாய் வட்டி கட்டுகிற வகையிலே பொறுப்பேற்றது. ஒரு நாளைக்கு *11* கோடி ரூபாய் வட்டி கட்டுகிற வகையிலே பொறுப்பேற்றிருந்த அரசு, கடந்த நான்கு ஆண்டுகளாய் நம்முடைய தமிழக முதல்வர், போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய தலைமையின்கீழ் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு, இன்றைக்கு ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான கோடிகளை இந்த நாட்டின் ஏழை எளிய மக்களுக்கு வாரி வழங்குகிற அளவிற்கு வள்ளல் தன்மை படைத்த அரசாக மாறுகிற வகையிலே உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டமே போற்றி, வியந்து பாராட்டிக்கொண்டிருக்கிறது. நான்கு ஆண்டு காலத்திலே தட்டுத் தடுமாறிய இந்த அரசை இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டமே வியக்கின்ற அளவிற்கு, நிதி நிலைமையிலே பற்றாக்குறையில்லை, வேறு எந்த மாநிலத்தையும்விட இந்த மாநிலம் சளைத்தது இல்லை என்கிற வகையிலே, தன்னுடைய நிர்வாகத் திறமையால், இந்த அரசைத் தூக்கி நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், பொருளாதார நிபுணர்கள், உண்மையில் அரசு வல்லுநர்கள், அரசியலாளர்கள் இதைக் கூர்ந்து கவனித்து, வியந்து, பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், முதலிலே என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே பல ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆதி திராவிட மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்குவதற்காக, பெரிய நிதி நெருக்கடியிலேகூட அந்தத் திட்டத்தை அவர்கள் அறிமுகப்படுத்தி, இன்றைக்கு அதைப் படிப்படியாக விரிவுபடுத்தி, மேல்நிலை வகுப்பு மாணவிகளுக்கு என்று இருந்ததை, மேல்நிலை வகுப்பு ஆதி திராவிட மாணவர்களுக்கும் என்று விரிவுபடுத்தி, அதற்குப் பின்னாலே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் விரிவுபடுத்தி, இன்றைக்கு அதற்கு 80 கோடி ரூபாயை இந்தத் துணை நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்து, ஏறக்குறைய தமிழ்நாட்டிலே தங்கள் குழந்தைகளுக்கு தங்களால் வாங்க முடிகிறதோ, அல்லவோ, தங்களது குழந்தைகளால் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கரங்களால் வழங்கப்பட்ட அந்த மிதி வண்டியைப் பெறாத ஆதி திராவிடக் குடும்பமே இனி இல்லை என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவக் குடும்பங்களுக்கு இன்றைக்கு இந்த இலவச மிதி வண்டி வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது வரலாற்றிலே ஒரு மிகப் பெரிய திருப்புமுனை. ஒடுக்கப்பட்ட நீண்ட வரலாற்றிலே அது ஒரு மிகப் பெரிய திருப்புமுனை அவர்களுக்கு. ஒரு காலத்திலே ஒடுக்கப்பட்ட மக்களை, தாழ்ந்த மக்களை செருப்பு அணியக் கூடாது என்று சொன்ன காலம் உண்டு. அவர்கள் செருப்பு அணிந்து போனால், அவர்களுக்குத் தடை, மேல்தட்டு மக்கள் வீதிகளிலே. ஆனால், அப்படித் தடை விதித்த காலம் இன்றைக்கு உடைபட்டு இந்தப் பெண்களும்கூட மிதி வண்டிகளிலே அந்தப் பாதைகளிலே போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. இந்த வாரம் முழுமையாகச் செய்தித்தாள்களைப் படித்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். வடமாநிலத்திலே, அரியானாவிலே ஒரு கிராமத்திலே, ஒரு தலித் பெண்மணி, பள்ளிக்கூடம் செல்வதற்காக, மிதி வண்டியிலே ஒரு தெருவில் போனாள் என்பதற்காகத் தடை விதிக்கப்பட்டு, அங்கே பெரிய கலவரம் நிகழ்ந்து, ஒவ்வொரு நாளும் அந்த மிதி வண்டியிலே போகிற பெண்மணிக்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டர் துணையாக போய்க்கொண்டு இருக்கிறார். இது வடமாநிலத்திலே, இந்த வாரத்திலே நடந்த நிகழ்ச்சியைப் பத்திரிகையிலே படம் பிடித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிற ஒரு செய்தி. ஒவ்வொரு நாளும் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் துணைக்குப் போய்க்கொண்டிருக்கிறார். அந்தக் குடும்பத்திலே சொந்த மிதிவண்டியிலே போவதற்கு அந்த நிலைமை.



பிற்பகல் 1-15

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இலட்சக்கணக்கான ஆதி திராவிடப் பெண்கள், அழகுப் பதுமைகளாய், இலவசப் புத்தகக் கட்டுகளைப் பின்னால் வைத்துக்கொண்டு மிதிவண்டியிலே போகிறார்கள் என்று சொன்னால், அந்தச் சூழலை உருவாக்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு ஆண் கல்வி பெற்றால், அது ஆணுக்கு மட்டும் தன்னிறைவு. ஒரு பெண் கல்வி பெற்றால், அடுத்த தலைமுறையே விழிப்புணர்வு பெறும். ஏனென்றால், ஒரு புதிய தலைமுறையை உருவாக்குகிற பெரும் பொறுப்பு பெண் சமுதாயத்திற்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விடுதிகளுக்குக் கடந்த காலங்களிலே எப்போதுமே இல்லாத வகையிலே, தமிழ்நாட்டிலே இருக்கிற ஆதி திராவிட மாணவ விடுதிகள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கான மாணவ விடுதிகள், முழுக்க, முழுக்கக் கட்டடங்களாய் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிற ஆலோசனையை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி, இன்றைக்கு நூற்றுக்கணக்கிலே, இனி ஆதி திராவிட மாணவ விடுதிகளோ, அல்லது பிற்படுத்தப்பட்ட மாணவ விடுதிகளோ, நிதி கட்டடம் கட்டுவதற்கு இடமில்லை என்கிற வகையிலே, அந்த உருவாகியும் இடம் இல்லை என்கின்ற வகையிலே, கட்டி அளவிற்கு தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலே நான் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே வாடகைக் கட்டடங்களாக இருந்தபோது, பழைய கட்டடங்களாக இருந்தபோது, அவை இடிந்து விழுகிற கட்டடங்களாக இருந்தபோது, அப்போது, ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு எண்ணிக்கை இருந்தது. இன்றைக்கு இவ்வளவு சதவிகிதம்தான் சேர்க்கப்பட வேண்டும் என்று. புதிய கட்டடங்களாக, தாராளமான கட்டடங்களாக மலர்ந்து இருக்கின்றன. அம்மாவின் பெரும் கருணையால் அவையெல்லாம் இருக்கின்றனவே, அதை 20 சதவிகிதம் உயர்த்துவீர்களேயானால்—இடம் இருக்கிறது தாராளமாக, அவ்வளவு விடுதிகளை நீங்கள் கட்டித் தந்திருக்கிறீர்கள். 200-க்கும் மேற்பட்ட விடுதிகள் இப்போது கட்டித் ஆகவே, அந்த விடுதிகளிலே சேர்க்கப்படுகிற எண்ணிக்கை

தரப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் எழுந்திருக்கின்றன. ஆகவே, 20 சதவிகிதமோ அல்லது 25 சதவிகிதமோ, சேர்க்கப்படுவதன் எண்ணிக்கையிலே நீங்கள் உயர்த்தித் தருவீர்களேயானால்—இன்னமும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் அங்கே தங்கிப் படிப்பதற்கு வசதியும், வாய்ப்பும் கிடைத்துவிடும். அதை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

அதேபோல, விவசாயிகளுக்காக, கரும்புக்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ. 1,014 என்கிற ஒரு அற்புதமான அறிவிப்பை இன்றைக்குத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பல ஆண்டு காலமாக இதை விவசாயிகள் கோரி வந்தார்கள். ஒரு மெட்ரிக் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுங்கள் என்று பல ஆண்டு காலமாக இதை வலியுறுத்தி வந்தார்கள். நீண்ட காலக் கோரிக்கை இந்தக் கோரிக்கை. இந்தக் கோரிக்கையை வலியுறுத்திய காலத்தில் எல்லாம், அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு விதவிதமாக ஏமாற்றியது. பல்வேறு காரணங்களைச் சொல்லி ஏமாற்றியது. சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சந்தானம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 10 சதவிகித சத்து இருக்க வேண்டும். 10 சதவிகிதச் சத்து எங்கேயும் இருந்ததில்லை, எப்போதும் இருந்ததில்லை. எப்போதோ ஆச்சரியப்படும் வகையில் இருக்கும், அவர்களுக்குத் தருவோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு அப்படி இல்லாமல், எல்லா வகையான விவசாயக் கரும்புகளுக்கும் 1,014 ரூபாய் ஒரு மெட்ரிக் டன்னுக்கு வழங்குவதாகப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறாரே, (மேசையைத் தட்டும் ஒலி) இது கரும்பு விவசாயிகளுடைய வயிற்றிலே பால் வார்த்த விதமாக இருக்கிறது. அதிலேயும் ஒரு பெரிய பிரச்சினையை எதிர்க்கட்சிகள் வழக்கம்போல எழுப்புகிறார்கள், அரசாங்கக் கூட்டுறவு ஆலைகளிலே தரலாம், தனியார் ஆலைகளிலே தர முடியுமா, தனியார் ஆலைகளிலே தருவதற்கு அரசு வலியுறுத்துமா, அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று, வழக்கம்போல திசை திருப்புவதையும், குழப்புவதையும், அதிலே ஏதாவது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சந்தேகத்தை எதிர்க்கட்சிகள் தொடர்ந்து எழுப்பிக்கொண்டு இருப்பதால், அதற்கு விளக்கம் கூறுவது நல்லது என்று கருதுகிறேன். விவசாயிகள் நலன் மற்றும் மேம்பாட்டைப் பேணிக் காத்திட, என்னுடைய அரசு எப்போதுமே மிக உயரிய முன்னுரிமையை



அளித்து வருகிறது. விவசாயப் பணியில் ஈடுபட்டு, கடுமையாகப் பாடுபட்டு வரும் விவசாயிகளுக்கு, அவர்களது உழைப்பிற்கு ஏற்ற ஆதாயமான விலைகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பது எனது அரசின் எண்ணம் ஆகும். இதனை நிறைவேற்றும் வகையில், பல்வேறு பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஆதாய விலை கிடைப்பதை உறுதி செய்திட முனைப்பான நடவடிக்கைகள் பலவற்றை எனது அரசு எடுத்து வந்துள்ளது. இதே அடிப்படையில்தான் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள், தாங்கள் சாகுபடி செய்யும் கரும்புக்கு ஆதாயமான விலை பெற்றிடும் வகையில் மாநில அரசின் பரிந்துரை விலையை, State Advised Price–ஐ 16–9–2005 அன்று நான் அறிவித்தேன்.

பிற்பகல் 1–20

சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கும் கரும்புக்கு ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்க வேண்டும் என்பது கரும்பு விவசாயிகளின் நீண்ட நாள் கனவாகும். இதனை மெய்ப்பிக்கும் வகையில், 2004 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக அளித்த தீர்ப்பின் அடிப்படையில், கரும்புக்குக் குறைந்தபட்ச விலையாக டன் ஒன்றுக்கு 1,014 ரூபாய் என்றும், சராசரி 9 சதவீதப் பிழிதிறனுக்கு மேற்படும் ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்கும் ஊக்கத் தொகையாக ரூபாய் 8.80 வீதம் கூடுதலாக வழங்கப்படும் என்றும் எனது அரசு தனது பரிந்துரை விலையாக நிர்ணயித்தது. மத்திய அரசு, சராசரி 9 சதவீதப் பிழிதிறன் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு 795 ரூபாய் மட்டுமே நிர்ணயித்துள்ளபோதிலும், தமிழகக் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 1,014 ரூபாய் என்ற உயரளவில் எனது அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது.

எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, சர்க்கரைத் தொழிலைச் சீரமைக்க மிகக் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது. Ethanol உள்ளிட்ட மதிப்புக் கூட்டப்பட்ட உப பொருட்களை (Value added by-products) உற்பத்தி செய்தல், சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின் மூலமாக சர்க்கரைத் தொழிலைச் சீரமைப்பதில் எனது அரசு தனிக் கவனம் செலுத்தியது. இதன்படி, சர்க்கரை ஆலைகள் தங்களது செயல் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டதால், கரும்பு விவசாயிகளுக்குத் தமிழக அரசு அறிவித்துள்ள பரிந்துரை விலை வழங்கும் நிலையை எட்டியுள்ளது. சர்க்கரை ஆலைகளின் திறம்பட்ட செயல் திறன் மற்றும் கரும்பு

விவசாயிகளுக்கான ஆதாய விலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நடப்பு அரைவைப் பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து வாங்கப்படும் கரும்பின் விலை நிர்ணயம் செய்தல் குறித்து, கரும்பு விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலை நிருவாகத்தினருடன் எனது அரசு ஒன்றரை மாத காலம் ஆலோசனை நடத்தியது. Ethanol உள்ளிட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய சர்க்கரை ஆலைகளுக்கு அரசு வழங்கியுள்ள அனுமதி, இணை மின் உற்பத்தி (Co-generation of power) செய்வதற்கான அனுமதி, சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சர்க்கரை ஆலைகளால் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கரும்புக்கான ஆதாய விலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எனது அரசு, கரும்புக்கு டன் ஒன்றுக்குக் 'குறைந்தபட்சம் 1,014 ரூபாய் என்ற விலையைப் பரிந்துரை செய்தது. கரும்பு விவசாயிகள் அனைவரும் இந்தப் பரிந்துரை விலையால் மகிழ்ச்சி வெள்ளத்தில் இருக்கும் இத்தருணத்தில், இதனைக் கண்டு பொறுக்க முடியாத எதிர்க்கட்சிகள். அதிலும் குறிப்பாக, பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. முதலில் தங்கள் ஆட்சிக் காலத்திலேயே கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வழங்கியது என்ற உண்மைக்கு மாறான வாதத்தை வைத்தது. அது உண்மை அல்ல என்பதை ஆணித்தரமாக சட்டமன்றப் பேரவையில் நான் எடுத்துக் கூறிய பின், தற்போது தனியார் சர்க்கரை ஆலைகள் அரசால் அறிவிக்கப்பட்ட பரிந்துரை விலையை வழங்குவதை எவ்வாறு உறுதி செய்ய முடியும் என்ற ஒரு குதர்க்கவாதத்தை எழுப்புகின்றனர். இந்தத் தேவையற்ற வாதத்தை வைப்பவர்களிடம் நான் ஒரே ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். நீங்கள் தயவுசெய்து உச்ச நீதிமன்றத்தின் ஆணையைத் தெளிவாகப் படித்துப் பார்த்தும், புரிந்துகொண்டும், அதன் பிறகு பேச வேண்டும். உச்ச நீதிமன்றம் தனது 5–5–2004 ஆம் நாளிட்ட ஆணையில் கூறியிருப்பது இதுதான்:

"Although the State Advised Price has no sanction of law, the action of the State Government in notifying the State Advised Price and advising the sugar factories to comply with the same is not ***per se*** illegal. The State Advised Price can serve as the framework within which the agreement as to price can be reached between the cane growers and the sugar producers. Therefore, the orders issued by the State Government/Cane Commissioner communicating the fixation of State Advised Price need not be set aside.

There is no legal taboo against the State Government machinery playing a role in evolving an agreement between the cane growers and the sugar producers as to the price, without adopting any coercive methods.



Once the occupier of sugar factory reaches an agreement with the cane grower may be on the persuation of the State authorities, to pay the price equivalent to State Adivsed Price either by executing a formal agreement in this behalf or otherwise, the occupier of the factory is bound to pay such price and in case of default, it can be recovered by the State authorities by coercive process laid down in the Statute."

*பிற்பகல் 1–25*

அதாவது, "மாநில அரசு பரிந்துரை விலைக்கு சட்ட அதிகாரம் இல்லை என்றாலும்கூட, மாநில அரசு தனது பரிந்துரை விலையை அறிவித்து, அதனைப் பின்பற்றுமாறு சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுரை கூறும் செயல் சட்ட விரோதமானது ஆகாது. அரசு பரிந்துரை விலை, கரும்பு சாகுபடியாளர்களுக்கும், சர்க்கரை உற்பத்தியாளர்களுக்கும் இடையே, விலை தொடர்பாக ஓர் உடன்படிக்கை ஏற்படுவதற்கான வரைத் திட்டமாகப் பயன்படலாம். ஆகவே, அரசு பரிந்துரை விலையை நிர்ணயம் செய்து, மாநில அரசு அல்லது சர்க்கரை ஆணையாளர் பிறப்பித்த ஆணைகளை நீக்கரவு செய்ய வேண்டியதில்லை. வலுக்கட்டாய முறை எதையும் பின்பற்றாமல் கரும்புச் சாகுபடியாளர்களுக்கும், சர்க்கரை உற்பத்தியாளர்களுக்கும் இடையே, விலை தொடர்பாக உடன்படிக்கை ஏற்பட அரசு இயந்திரம் ஒரு கருவியாக இருப்பதற்கு சட்டத் தடை எதுவும் இல்லை. சர்க்கரை ஆலை அனுபோகதாரர் ஒருவர் முறைப்படியான உடன்படிக்கையின் வாயிலாகவோ, அல்லது வேறு வகையிலோ அரசு பரிந்துரை விலைக்குச் சமமான விலையை அளிப்பது தொடர்பாக—இது அரசு அதிகாரிகள் அறிவுறுத்தி, இணங்க வைப்பதன் பேரில்கூட இருக்கலாம்—கரும்பு சாகுபடியாளர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்வாரேயானால், அந்த அனுபோகதாரர், அந்த விலையைக் கொடுக்கக் கடமைப்பட்டவர் ஆவார். அவ்வாறு அவர் கொடுக்கத் தவறினால், மாநில அரசு அதிகாரிகள் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள கட்டாய நடவடிக்கைகள்மூலம் அத்தொகையை வசூலிக்கலாம்" என உச்ச நீதிமன்ற ஆணையில் தெளிவாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

எனது அரசால் அறிவிக்கப்பட்ட பரிந்துரை விலையை வழங்குவது மற்றும் கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய உரிய தொகையைக் குறித்த காலத்தில் வழங்குவது ஆகியவை தொடர்பான வழிமுறைகளை வகுக்க, தனியார் சர்க்கரை ஆலை நிருவாகிகளுடன் 6–10–2005 அன்று அமைச்சர்கள் நிலையில் கூட்டம் ஒன்று கூட்டப்படவும் ஏற்பாடு

செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியாவது கரும்பு விவசாயிகளை மாண்புமிகு புரட்சித் தலைவிக்கு எதிராகத் திருப்பி விடமாட்டோமா, அதிலே அந்தக் குழப்பத்திலே மீன் பிடிக்க மாட்டோமா, அந்தக் குழம்பிய குட்டையிலே மீன் பிடிக்க மாட்டோமா என்றெல்லாம் ஏங்கிய எதிர்க்கட்சிக்காரர்களுக்கு, மிகத் தெளிவான பதிலைத் தருகிற வகையிலே, எங்கள் ஐயத்தைத் தீர்த்து வைக்கிற வகையிலே, இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே, இந்த மாநில அரசின் பரிந்துரையை ஏற்க மறுத்தால் என்ன நடவடிக்கைகள் நிகழக்கூடும் என்பதை மிகத் தெளிவாகப் பதிலுரைத்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கரும்பு விவசாயிகள் சார்பிலே எனது நெஞ்சார்ந்த நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற நாளிலேயிருந்து இன்று வரையிலே, அவர்கள் துணை நின்ற, அவர்கள் கண்ணீர் விட்டபோதெல்லாம் அந்தக் கண்ணீரைத் துடைத்த பாங்கு இருக்கிறதே அதைப் படிப்படியாகச் சொல்லலாம். இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனே முதல் நாளிலேயே, முதல் கையெழுத்திட்ட அந்த முதல் அறிவிப்பு, முதல் ஆணை, விவசாயிகளுக்கு 310 கோடி ரூபாயை, அந்த அபராத வட்டியை ரத்துச் செய்த அந்த முதல் கையெழுத்தைப் போட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் அவர்கள் முதலிலே போட்ட கையெழுத்து. தன்னை அடையாளம் காட்டிக்கொள்கிறபோதுகூட, தனது தொழில் விவசாயம் என்று அடையாளம் காட்டிய தமிழகத்து முதலமைச்சர்களிலெல்லாம் ஒரே முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். என் occupation என்று சொன்னால், agriculture என்று அவர்கள், தன்னை அடையாளப்படுத்திக்கொள்கிறபோது அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். ஆக, அப்படி தன்னையே ஒரு விவசாயியாக அவர்கள் கருதியதால்தான், விவசாயிகளின் கண்ணீரைப் புரிந்துகொண்டு— தமிழ்நாட்டிலே அமைச்சரவை சென்னையைத் தவிர வேறு ஒரு பகுதியிலே முதலிலே கூடியிருக்கிறது என்றாலே, அது தஞ்சாவூரிலே கூடியது. எதற்காக என்றால், விவசாயிகளினுடைய,



தஞ்சை மாவட்டத்துப் பிரச்சினையை, மக்களுடைய அந்தப் பிரச்சினைகளை நேரடியாக ஆராய்ந்து—இப்படியொரு வரலாறே தமிழகத்திலே இருந்தது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அமைச்சரவையே சென்னையைத் தவிர்த்து இன்னொரு மாவட்டத் தலைநகரிலே நடந்தது கிடையாது— அப்படித் தஞ்சையிலே அனைத்து அமைச்சர்களையும் கூட்டி, அங்கே விவசாயிகளையும் கூட்டி, ஆலோசனைக் கூட்டம் நடத்தி, அங்கேயே முடிவுகளை அறிவித்து, அந்த மக்களுக்குத் துணை நின்றவர். அவர்கள் வாடியபோது, பொங்கலுக்கு அவர்கள் வாடியபோது, மஞ்சளோடு, பருப்போடு, அவர்களுக்கு அரிசியோடு பொங்கலிடுவதற்கு மிகப் பெரிய ஒரு ஊக்க சிறப்புத் தொகையை, பரிசை அளித்தவர்கள் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்த அறிவிப்பு கரும்பு விவசாயிகளுக்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** இதற்கெல்லாம் ஒரு படி மேலே போய், விவசாயிகளுடைய வரலாற்றிலே புரட்சித் தலைவி அவர்கள் தந்திருக்கிற இந்த உழவர் பாதுகாப்புத் திட்டம் இருக்கிறதே—இந்த உழவர் பாதுகாப்புத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அற்புதமான திட்டம் விவசாயிகளுடைய வரலாற்றிலே ஒரு மறக்க முடியாத திட்டம். அது எல்லோருக்கும் மேற்பட்ட—அது ஒரு கட்டடத் தொழிலாளர் ஆனாலும், அல்லது வேறு பணியாளர்கள் ஆனாலும், அந்தப் பணியாளர்கள் எல்லாம் இப்படிப்பட்ட insurance திட்டத்திலே சேருகிறபோது, அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை உறுப்பினர் கட்டணமாகத் தந்து சேர வேண்டும். ஒரு கட்டடத் தொழிலாளரானால், அவர்கள் 100 ரூபாய் அளவிலே அந்த உறுப்பினர் கட்டணத்தைத் தந்துதான் அந்த Group insurance-லே சேர முடியும். அதைக்கூட இந்த அரசு, விவசாயிகள் நலனிலே அக்கறையுள்ள அரசு, அந்த உறுப்பினர் கட்டணத்தைக்கூட தாய் அன்போடு உழவர்களுக்கு நாங்களே தந்து சேர்க்கிறோம், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தர வேண்டிய அவசியம் இல்லை, நாங்கள் தந்து சேர்க்கிறோம் என்கின்ற வகையிலே இன்றைக்கு உழவர் பாதுகாப்புத் திட்டமென்கிற ஒரு அற்புதமான திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். இனி அவர்கள் தற்செயலாக விபத்திற்குள்ளாகி இறந்து போனால், 1 இலட்சம் ரூபாய்

வரையிலே அவர்களுக்கு நிதி கிடைக்கும். அவர்கள் பாதிக்கப்படுகிறபோது, அந்தப் பாதிப்பிற்குத் தகுந்தவாறு அவர்களுக்கு வேண்டிய வாய்ப்பும், வசதியும் உருவாகிறது. இப்படி உழவர் பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதையெல்லாம் மிஞ்சுகிற வகையிலே, இன்றைக்குக் கரும்பு ஆலைகளுக்கான—தனியார் கரும்பு ஆலைகள்கூட இதைத் தர வேண்டும் என்கிற அந்த பதிலுக்கு உண்மையாகவே நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இன்னொன்றை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களை, தலித் மக்களைத் தொழிலதிபர்களாக உருவாக்க வேண்டும் என்பதற்காக 1994-லே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராக இருந்தபோது இந்தியாவிலே வேறு எங்கும் இல்லாத வகையிலே, திருப்பூரிலும், ஈரோட்டிலும், அவர்களுக்காகத் தனி தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்காக, அவர்களையெல்லாம் தொழிலதிபர்களாக்குவதற்காக ஒரு மிகப் பெரிய பரிசோதனையான திட்டத்தை அவர்கள் உருவாக்கி அடிக்கல் நாட்டினார்கள். அவர்கள் காலத்திலே ஒரு பகுதி வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை அப்படியே கிடப்பிலே போட்டது. ஒரு தொழிற்கூடத்திற்கு ஏறக்குறைய 25 இலட்சம் ரூபாய் வரையிலே அன்றைக்கு அரசு முதலீடு செய்து, அதைத் தொடங்கியது. அந்த முதலீடு செய்யப்பட்ட தொழிற்சாலைகள், பின்னாலே 5 ஆண்டு காலமாக அப்படியே கிடப்பிலே போடப்பட்டு, அது அப்படியே கிடக்கிற நிலைமை இன்றைக்கு வரைக்கும் இருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு அரை மணி நேரம் அதற்காக ஒதுக்கி ஒரு review நடத்தி, அங்கு என்ன நிலைமை, அது ஏதோ ஒரு வகையிலே பயன்பட வேண்டும், பல கோடி ரூபாய் ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் தொகை அங்கே முடங்கிக் கிடக்கிறது. பல கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் அளவிலே அங்கே முடங்கிக் கிடக்கிறது. அதை அவர்கள் ஒரு review செய்து அதற்கு மீண்டும் புத்துயிர் தந்து...

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டினுடைய ஆட்சிக் காலத்தில் ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்காகத் தொழிற்பேட்டையை உருவாக்கினார்கள். அதில் ஈரோடு



முதலிப்பாளையத்தில் இந்தத் தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டது. பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் தொடர்ந்து அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது உண்மைதான். இருந்தாலும், சில பேர்கள் தவறான முறையில் அந்தத் தொழிற்கூடங்களை பயன்படுத்தியதன் விளைவாகவும், சில பேர்கள் பணத்தைச் சரிவரக் கட்ட முடியாமலும் பினாமி பெயரில் இருந்ததன் விளைவாக, அது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட முடியவில்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் அதில் சில கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அது தனிப்பட்ட முறையிலே பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை முடங்கிக் கிடக்க விடக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மாவினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்குப் பல நலத் திட்டங்களைத் தமிழக மக்களுடைய எதிர்காலத்தைக் கருத்திலே கொண்டு, அவர்களுடைய வளமான வாழ்க்கையைக் கருத்திலே கொண்டு, நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தினந்தோறும் அறிவித்து வருகிறார்கள். ஆனால் மத்திய அரசு பொறுப்பற்ற வகையிலே 4–வது முறையாக பெட்ரோல், டீசல் விலையை ஏற்றியிருக்கிறது. (குறுக்கீடு) 5–வது முறையாக பெட்ரோல், டீசல் விலையை ஏற்றியிருக்கிறது. இன்றைக்கு நாம் பேசிக் கொண்டிருக்கிற இந்தக் கட்டத்திலேகூட ஒருவேளை வெளியே ஏதாவது அறிவிப்பு வந்திருக்கலாம், இன்றைக்குக்கூட உயர்ந்திருக்கலாம். அப்படி மனம் போன விதத்திலே, நினைக்கிறபோதெல்லாம் மத்திய அரசு பெட்ரோல் விலையை, டீசல் விலையை தான்தோன்றித்தனமாக ஏற்றிக்கொண்டு இருக்கிறது. என்னதான் அதனால் மற்றவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு நேரடிப் பாதிப்பு இல்லை என்று சொன்னாலும், முழுக்க, முழுக்க, பெட்ரோலின் விலையையும், டீசலின் விலையையும் பொறுத்துத்தான் விலைவாசியினுடைய உயர்வே இருக்கிறது. ஆக, புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவிற்கு இந்த விலையேற்றத்தை அவர்கள் கருத்திலே பார்க்கிறார்கள் என்றால், வேறு யாரும் இதைப் பற்றிச் சொல்லாத வகையிலே பெட்ரோல் விலை, டீசல் விலையை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன், இதைத் தெரிந்துகொண்டுதான் அம்மா சைக்கிள் கொடுக்கிறார்கள். (சிரிப்பு)

*பிற்பகல் 1–35*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு எத்தனை முறை ஏற்றினாலும் நான் தமிழ்நாட்டில் பேருந்துக் கட்டணத்தை–நான் இருக்கிற வரை ஏற்றமாட்டேன், உயர்த்தமாட்டேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மிகத் துணிவான ஒரு நடவடிக்கையை புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அதை எத்தனை முறை ஏற்றினாலும் இந்த மக்களுக்குப் பேருந்துக் கட்டணத்தை ஏற்றமாட்டேன், அவர்களுடைய தலையிலே அந்தச் சுமையை நான் திணிக்கமாட்டேன் என்றிருக்கிற, இந்தத் துணிச்சலான நடவடிக்கையை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும்கூட, பொருட்களினுடைய விலைவாசியெல்லாம் ஏறத்தான் போகிறது. அதை யாராலும் தடுக்க முடியாது. நம்முடைய நிதி அமைச்சர் எவ்வளவோ தாராளமாக நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளைத் தந்தாலும்கூட, மத்திய அரசினுடைய இந்தப் போக்கால் நிச்சயம் விலைவாசி உயரும். ஆக, அதைத் தடுப்பதற்கு ஏதாவது பரிசீலனை–நான் ஒரு கோரிக்கையைக்கூட முன் வைக்க விரும்புகிறேன். நம்முடைய பெட்ரோல்மீது இருக்கிற விற்பனை வரி—மத்திய அரசு இந்த மக்களுக்கு இந்தச் சுமையைச் சுமத்தினாலும் சுமத்தட்டும், ஏதாவது விற்பனை வரியைக் கொஞ்சம் குறைத்து மாண்புமிகு அம்மா அவர்கள் விற்பனை வரியைக் குறைத்து நீ உயர்த்தினாலும், தமிழ்நாட்டிலே நான் இதைக் கட்டுப்படுத்துவேன் என்கிற வகையிலே ஏதேனும் ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சுய நிதிக் கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு பிரச்சினை, இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பை ஏற்படுத்தி... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கோரிக்கைக்குப் பதில் சொல்லப் போகிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் மத்திய அரசு கடுமையாக பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி இருக்கிறது; ஆட்சிக்கு வந்த பிறகு 15 மாத காலத்திற்குள் 5 முறை ஏற்றி இருக்கிறது. மத்திய அரசை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், மாநில அரசில் விற்பனை வரியைக் குறைக்க முடியாதா என்று கேட்டார். இந்த வாதத்தைத்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்



எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு விளக்கம் கூறுவது அவசியம் என்று கருதுகிறேன்.

இந்த அவையில் எதிர்க்கட்சிகளாக விளங்கும் தி.மு.க., பா.ம.க., அங்கம் வகித்தும், கம்யூனிஸ்ட்கள் ஆதரவு அளித்தும் மத்தியில் நடைபெறும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 15 மாத காலத்திற்குள்ளாக, 5 முறை பெட்ரோல் மற்றும் டீசல் விலையை உயர்த்திவிட்டது. இவ்வாறு விலை உயர்த்துவதில் கின்னஸ் சாதனையைப் படைக்க வேண்டும் என்று மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு (மேசையைத் தட்டும் ஒலி) முயற்சி மேற்கொண்டுள்ளதுபோலும்! ஏழையெளிய நடுத்தர மக்களின் தலையில் பெரும் சுமையாய் இவ்வாறு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்துவது நியாயமா என்று கேட்டால், இங்கே உள்ளவர்கள் நீங்கள் வசூலிக்கின்ற விற்பனை வரியைக் குறைக்க வேண்டியதுதானே என்று எகத்தாளம் பேசுகிறார்கள். திரு. தமிழரசன் அவர்கள் எகத்தாளம் பேசினார் என்று நான் கூறவில்லை. ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அந்தத் தோரணையில் பேசுகிறார்கள். தமிழகத்தில் டீசலுக்கு 25 சதவீதமும், பெட்ரோலுக்கு 30 சதவீதமும் விற்பனை வரியாக வசூலிக்கப்படுகிறது. அநேகமாக, எல்லா மாநிலங்களுமே இதையொத்த அளவிலான விற்பனை வரி வீதங்களைத்தான் பின்பற்றி வருகின்றன. இன்னும் சொல்லப் போனால், சில மாநிலங்களில் இதைவிட அதிகமாகத்தான் விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. இந்தப் பிரச்சினையில் மாநில அரசு தனது விற்பனை வரியைக் குறைத்திட வேண்டும் என்று கூறுவதன்மூலம் இவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள்? பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தாமல் இருக்க மத்திய அரசுக்கு வகைதொகையில்லை. ஆகவே, மாநில அரசு மத்திய அரசுக்கு உதவ வேண்டும் என்பதுதான் இவர்களது கோரிக்கையின் பொருள். மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிதி ஆதாரங்களை மத்திய அரசுடன் ஒப்பிடும்போது, மாநில அரசுகள் மத்திய அரசை கைதூக்கிவிட வேண்டும் என எதிர்பார்ப்பது ஏற்புடையது அல்ல. மத்திய அரசு பெட்ரோல் மற்றும் டீசல்மீது விதிக்கின்ற ஆயத்தீர்வை, சுங்கத்தீர்வை, செஸ் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களின் இலாபம் ஆகியவற்றில் சரியான மாற்றங்களைச் செய்வதன்மூலமே சர்வதேசச் சந்தையின் எண்ணெய் விலை உயர்வுகளை ஈடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால்தான் எண்ணெய் விலை ஏற்ற, இறக்கங்களினால் ஏற்படும் பொருளாதாரத் தாக்கங்களிலிருந்து சாதாரணக் குடிமக்களைப் பாதுகாத்திட முடியும். மத்திய அரசு தேவையான மாற்றங்களை தான் விரும்பிய வண்ணம் செய்ய மிகப்

பெரும் அளவிலான வரி மற்றும் வரி அல்லாத வருவாய் ஆதாரங்கள் அதற்கு உள்ளன. இந்த வசதி மாநில அரசுகளுக்கு உள்ளனவா? இல்லையே! மாநில அரசுகளைப்போல் அல்லாமல் வருவாய் ஆதாரங்களைத் திரட்டுவதற்கு மத்திய அரசிடம் அளவிட முடியாத அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன. மத்திய வரிகளில் பெரும் பங்கு மத்திய அரசால் வசூலிக்கப்பட்டு, மத்திய அரசின் செலவினங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றன. வளர்ச்சிப் பணிகளை நடைமுறைப்படுத்துவதில் மாநில அரசுகளின் பொறுப்பு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளபோதிலும், அப்பணிகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு உரிய அதிகாரங்கள் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன. ஆனால், மாநில அரசுகளோ அவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவையான செலவினத்தை எதிர்கொள்ள, உரிய நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது.

*பிற்பகல் 1–40*

மத்திய அரசு 6–9–2005 அன்று ஐந்தாவது தடவையாக பெட்ரோல் விலையை ரூபாய் 44.26–லிருந்து ரூபாய் 47.49 ஆகவும், டீசல் விலையை ரூபாய் 31.51–லிருந்து ரூபாய் 33.72 ஆகவும் உயர்த்தி அறிவித்துள்ளது. மத்தியில் ஆளுகின்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, கடந்த 15 மாத காலத்தில் பெட்ரோல் விலையை 30 சதவீத அளவிற்கும், டீசல் விலையை 40 சதவீத அளவிற்கும் உயர்த்தியுள்ளது. டீசல் என்பது வெறும் எண்ணெய் மட்டுமல்ல. அதுதான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான அச்சாணி. டீசல் விலை உயர்ந்தால் நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் பாதிக்கப்படும். டீசல் விலை உயர்வு எல்லா வகைப் பொருட்களின் விலை உயர்வுக்குக் காரணமாவதுடன், சாதாரண மக்களை நசுக்கும் கடும் சுமையாகும். டீசல் விலை உயர்வால், பாசனத்திற்காக டீசல் பம்பு செட்டுகளைப் பயன்படுத்தும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கிராமப்புற சிறிய கைவினைக் கலைஞர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். டீசல் என்ஜின்களைப் பயன்படுத்தும் மக்கள் அனைவரும் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் போக்குவரத்துத் துறைக்கு டீசல் உயிர்நாடியாகும். ஆனால், கடந்த ஓராண்டு காலத்தில் டீசல் விலையை 40 விழுக்காடு அளவிற்கு உயர்த்தியது பொருளாதார மேம்பாட்டைப் பின்னடையச் செய்கின்ற ஒரு பிற்போக்கு நடவடிக்கையாகும்.

6–9–2005 அன்று டீசல் விலை உயர்த்தப்பட்ட வகையில் மட்டும் மாநில அரசின். அதாவது தமிழக அரசின் போக்குவரத்துக்



கழகங்களுக்கு ஆண்டொன்றுக்கு 122.50 கோடி ரூபாய் அதிகப்படியான செலவினச் சுமை ஏற்பட்டுள்ளது. ஆனாலும், எனது அரசு பஸ் கட்டணங்களை அதிகப்படுத்தாமல், பொது மக்களின் நலன் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்துள்ளது. நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் பேருந்துக் கட்டணங்கள் மிகவும் குறைவாக உள்ளன. இவ்வாறு மத்திய அரசு மிகக் கடுமையாக டீசல் விலையை உயர்த்தியபோதிலும், அண்மையில் மாநிலப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு சலுகையினை பெருந்தன்மையுடன் எனது அரசு வழங்கியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஏழையெளிய, நலிந்த பிரிவு மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும் தங்களது போக்குவரத்துக்குப் பேருந்துகளையே நம்பி, அவற்றைத்தான் பயன்படுத்துகின்றனர். எனவேதான், டீசல் விலை உயர்வால் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், எனது அரசு அந்தப் பிரச்சினையை தனது தோள்மீது தாங்கிக்கொண்டு, ஏழையெளிய மக்களுக்குச் சுமை ஏற்படக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், பஸ் கட்டணத்தை உயர்த்துவது இல்லை என்ற திடமான முடிவுடன் செயல்பட்டு வருகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோலத்தான், டீசல் விலை ஏற்றத்தால் விசைப் படகுகளைப் பயன்படுத்தி, தங்கள் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்திக்கொள்ளும் மீனவ சமுதாயம் கடும் துன்பத்தைச் சந்தித்த நேரத்தில், உடனடியாக உதவிக் கரம் நீட்டி, மீனவர்கள் வாங்குகின்ற டீசலுக்கான விற்பனை வரியை ரத்துச் செய்து 25–10–2004 அன்று நான் அறிவித்தேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ஏற்படுகின்ற விற்பனை வரி இழப்பு 63.5 கோடி ரூபாயாக இருக்கும். ஆக, மத்திய அரசால் உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல் விலை உயர்வின் பாதிப்பிலிருந்து, ஏழையெளிய, நலிந்த பிரிவினரைப் பாதுகாக்கும் அதிர்ச்சித் தாங்கியாக, அதாவது, shock absorber–ஆக எனது அரசு விளங்குகிறது.

உள்நாட்டு எரிபொருட்களின் விலையை உயர்த்தும்பொழுதெல்லாம் மத்திய அரசு உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏற்றம் என்ற வாதத்தை அடிக்கடி தொடர்ந்து கூறி, விலையேற்றத்திற்கான காரணத்தை நியாயப்படுத்தி வருகிறது. விலையேற்றத்தைத் தடுக்க பிற வழிகள் இருக்கும் நிலையிலும், அவற்றை மத்திய அரசு ஆய்வு செய்யவில்லை. கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களை உற்பத்தி செய்யும் பொதுத் துறை மற்றும் தனியார்

துறையில் உள்ள உள்நாட்டு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளின் இலாபப் பங்கினை, margin--ஐ ஓரளவு குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலைகள் barrel ஒன்றுக்கு ஒவ்வொரு டாலர் உயரும்போது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளின் இலாபப் பங்கும் உயருகிறது. மத்திய அரசு இந்த இலாபத் தொகையினைக் குறைக்க முன்வராததால் ஏழையெளிய மக்களின் பணத்தின்மூலம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் இலாபம் அடைகின்றன. தனியார் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளும் இலாபம் அடைகின்றன.

*பிற்பகல் 1–45*

மத்திய அரசு இதுவரையில் ஆயத்தீர்வை, சுங்கத்தீர்வை மற்றும் பெட்ரோலியத்தின்மீது விதிக்கப்படும் செஸ் வரி ஆகியவற்றைப் பெருமளவில் குறைக்க முன்வரவில்லை. அதைச் செய்திருந்தால் உள் நாட்டு பெட்ரோல் மற்றும் டீசல் விலைகளின் உயர்வைத் தடுத்திருக்க உதவியாக இருந்திருக்கும். மேலும், நாட்டின் மொத்த கச்சா எண்ணெய்த் தேவைகளும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதில்லை. உள்நாட்டிலேயே பெறப்படும் கச்சா எண்ணெய்க்கும் சர்வதேசச் சந்தை விலையை ஏன் பின்பற்ற வேண்டும்? *(மேசையைத் தட்டும் ஒலி)* இதற்கு மத்திய அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)* கடுமையான விலை உயர்வுக்குக் காரணமாக அமைந்து விட்டு, மத்திய அரசால் உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்க மாநில அரசு விற்பனை வரியைக் குறைக்க வேண்டுமென்று, மத்திய அரசை வழி நடத்துபவர்கள் கோருவது சிறிதும் நியாயம் அற்றது. பெட்ரோல், டீசல் விலைகளை உயர்த்தாமல் எப்படிச் சமாளிப்பது என்பதற்கு, மத்திய அரசை வெளியிலிருந்து ஆதரிக்கும் கம்யூனிஸ்டு கட்சிகள் திட்டம் தீட்டிக் கொடுத்திருக்கின்றனவே, அவற்றை ஏன் நடைமுறைப்படுத்தக் கூடாது? நிர்வாகத்தில் திறனும் இல்லை, திறமையும் இல்லை. மக்கள் கண்ணோட்டம் என்பதோ கிஞ்சித்தும் இல்லை. பெட்ரோல், டீசல் விலையை இனி உயர்த்த மாட்டார்கள் என்று எண்ணவும் வழியில்லை. இனி உயர்த்த மாட்டோம் என்று சொல்லவும் ஆள் இல்லை. தங்களுக்கு உதவுவார்கள் என்று நம்பி ஏழையெளிய, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்களால் நாடாள அனுப்பப்பட்டவர்கள் multi-crore, அதாவது, பல கோடி ரூபாய் எண்ணெய் நிறுவனங்களுக்கு அடிதாங்கிகளாய், ஆலவட்டம் சுற்றுபவர்களாய் *(மேசையைத் தட்டும் ஒலி)* மாறிவிட்டதைக் கண்டு, தமிழக மக்கள் மனம் கொதிக்கிறார்கள்.



அந்த மனக் கொதிப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல், மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றிட ஏதுவாக வசூலிக்கப்படுகின்ற மாநில விற்பனை வரியைக் குறைக்க வேண்டுமென்று விதண்டாவாதம் பேசுவதைக் கேட்டு, மனம் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். தமிழக மக்களின் மனக்கொதிப்புக்கும், உள்ளக் குமுறலுக்கும், அவர்கள் விரைவில் பதில் சொல்லியே ஆக வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இப்போது நான் சொன்ன முக்கியமான உண்மையை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும், கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவின் ஒட்டுமொத்த எண்ணெய்த் தேவைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது இல்லை. இந்தியாவிலேயே நிறைய எண்ணெய் கிடைக்கிறது. அதையும்தான் விற்கிறார்கள். ஆனால், வெளிநாட்டுச் சந்தையில் எண்ணெயின் விலை, பெட்ரோலியத்தின் விலை உயர்ந்து விட்டது என்று சொல்லி, உள்நாட்டிலேயே கிடைக்கின்ற எண்ணெய்க்கு ஏன் அதே விலையை விற்கின்றார்கள்? *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த விலையைக் குறைத்தாலே பெட்ரோல், டீசல் விலையைக் கணிசமாகக் குறைக்க முடியும். இதை மத்திய அரசுதான் நிச்சயமாகச் செய்ய வேண்டும். ஆகவே, மாநில அரசு தனது விற்பனை வரியைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுவதில் எந்த நியாயமுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொறுப்பற்ற வகையிலே மத்திய அரசு பெட்ரோல் டீசல் விலையை மனம் போன போக்கில் ஏற்றினாலும்கூட, பொறுப்புள்ள ஒரு மாநில அரசின் தலைமை நிர்வாகியாய் நம்முடைய தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிகத் தெளிவான தன்னுடைய நிலையை, பதிலை இங்கே தந்திருப்பதற்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் ஒரே ஒரு பிரச்சினையை மட்டும் பேசி முடிக்கலாம் என்று கருதுகிறேன். இது ஒடுக்கப்பட்ட மக்களிடையே இன்றைக்கு எரிந்து கொண்டிருக்கிற பிரச்சினை. உச்ச நீதிமன்றத்திலே சுய நிதிக் கல்லூரிகளிலே மாணவர் சேர்க்கை குறித்த ஒரு வழக்கின் தீர்ப்பு, சுய நிதிக் கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு அவசியமில்லாமல் போகலாம், அதைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்ற வகையில் வந்து, அதன்மூலம் இன்றைக்குத் தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கிற நலிந்த மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் நாளைக்கு, நாளை

எதிர்காலத்திலே தங்கள் குழந்தைகளின் மேற்படிப்பு உறுதிப்படுமோ, கிடைக்குமோ என்கிற அப்படிப்பட்ட ஒரு வருத்தத்திலே ஆதங்கத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு வந்த சில நாட்களிலேயே நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்திலே அப்படிப்பட்ட ஒரு தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கான அவசியமுமில்லை, அதை இந்தத் தமிழக அரசு மேற்கொள்ளப் போவதும் இல்லை, நாங்கள் சுய நிதிக் கல்லூரிகளிலே இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுகிற வகையிலே உரிய சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்துவோம் என்கிற ஒரு மிகப் பெரிய உறுதியை ஒடுக்கப்பட்ட, நலிந்த மக்களுக்குத் தந்திருக்கிறார்கள். நாங்கள் இதயபூர்வமான பாராட்டுக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறோம். ஆனாலும், அடுத்த ஆண்டுக்குள் இந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அப்படியே இருந்து நடைமுறைப்படுத்துவோமானால், அடுத்த ஆண்டு சுய நிதிக் கல்லூரிகளிலே தலித் மக்களுக்கு இட ஒதுக்கீடு என்பது ஒரு மிகப் பெரிய கேள்விக்குறியாக மாறிவிடும். ஆகவே, இந்த மன்றத்திலே இதுகுறித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியோ, அல்லது மத்திய அரசை வலியுறுத்தியோ, எந்த வகையிலோ பாராளுமன்றத்திலே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், வழக்கம்போல் ஒடுக்கப்பட்ட மக்களின் காவலராக இருக்கிற அவர்கள், முன்வர வேண்டுமென்கிற அந்தக் கோரிக்கையை நான் முன் வைக்கிறேன்.

ஒரு சில கோரிக்கைகளை மட்டும் சொல்கிறேன். தாத்தா இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம் கட்டுவதற்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிற அதே வேளையிலே, அதை எவ்வளவு விரைவாகக் கட்டித் தர முடியுமோ, அவ்வளவு விரைவாகக் கட்டுவதற்கான எங்களுடைய வேண்டுகோளை வைத்து, அதேபோல், ஆதி திராவிடர்களுடைய நலத் திட்டங்களைக் கண்காணிப்பதற்காக ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்கிற அந்த ஒரு கோரிக்கையையும் முன்வைக்கிறேன்.

*பிற்பகல் 1–50*

மேல்நிலை வகுப்பு மாணவர்களைப்போல, ஆதி திராவிட வகுப்பு மாணவர்கள், I.T.I. மாணவர்கள் இருந்தால்—அந்த I.T.I.–யும் மேல்நிலை வகுப்பைப்போலவே—ஆகவே, அந்த I.T.I. மாணவர்களுக்கும் இந்த மிதி வண்டித் திட்டத்தை விரிவுபடுத்த முடியுமா என்பதையும் பரிசீலிக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)* 10th முடித்ததும், அதைத்தான் சொல்கிறேன்.



அது மேல்நிலை வகுப்பிற்கு நிகரான ஒரு படிப்பு. 10th முடித்துவிட்டு மேல்நிலை வகுப்பிற்குப் போவதைப் போல, 10th முடித்துவிட்டு I.T.I. படிக்கிற ஒடுக்கப்பட்ட, நலிந்த மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும்— மேல்நிலை வகுப்புக் கல்வியைப்போலவே அது ஒரு கல்வி. ஆகவே அந்த I.T.I. பட்டயப் படிப்பு படிப்பவர்களுக்கு, Diploma Course படிப்பவர்களுக்கு, அல்லது அந்த Certificate Course படிப்பவர்களுக்கு அந்த மிதி வண்டி தருவதை விரிவுபடுத்த முடியுமா என்கிற அந்தக் கோரிக்கையினையும் வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(27–9–2005)* செவ்வாய்க்கிழமை காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1–51 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*25. 2002–2003* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை. *[1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*26. 2003–2004* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை. *[1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*27. 2003–2004* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. *[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*28. 2002–2003* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. *[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

[2005 செப்டம்பர் 26

22. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

23. 2005–2006 ஆம் ஆண்டுக்கான "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

24. 2005–2006 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

25. 2005–2006 ஆம் ஆண்டின் முதலாவது துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

26. மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2003–2006)

27. மனுக்கள் குழுவின் நூற்று இருபத்து இரண்டாவது அறிக்கை. (2003–2006)

28. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

29. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

❖❖❖❖

D
V211, 31 P05
P05.85.1
185242
சென்னை-600 008